FORMULA HONDA
உங்களுக்கான வாகனத்தை தேர்வு செய்ய...
ATHEESAN (SHAN) SARVANANTHAN
CELL 416-720-1184
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4.
TEL: 416-754-455 EXT.2705, FAX: 416-754-9465

தாய் வீடு
THAIVEEDU | மே 2010 | HOME & LIVING

FREE REAL ESTATE CLASSES
வீடு வாங்க, விற்க மற்றும் வருமான வரி, அடமானக் கடன் சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301
Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®




RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8

THE LAW OFFICE OF
Gary Anandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000

DIGITAL VIP CABLE | HI-SPEED INTERNET | HOME PHONE
6 MONTHS FREE
தமிழில் உரையாடி சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்
Norbert Benedict (ரஜீவ்)
416-446-7043
ROGERS

PMCI Property Mortgage Canada Inc.
PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலத்திற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Markham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

வீடும் வீடுசார் விடயங்களுக்குமான பத்திரிகை



"MAKING YOUR DREAM HOME COME TRUE"

HOMELIFE HIGHER STANDARDS

மனம் விரும்பியது போல் வீடு வாங்க, விற்க அழையுங்கள்"



# HomeLife Today Realty Ltd., Brokerage*

*Independently Owned and Operated

31 Progress Avenue Suite 210 ★ Toronto, Ontario, M1P 4S6

Phone: 416-298-3200 Fax: 416-298-3440

Vasanthy Niranjan
Direct:416-845-8272
Broker
vasanthyne@gmail.com

Kirew Kanagasabai
Office:416-298-3200
Broker of Record
Kirewk@yahoo.com

## Finch/Morningside



**$444,900**

4 Bedrooms, 3 Washroom Detached Location! Location!, Brazillian Cherry Hardwood Floors, Central Vac Fenced Yard & Dishwasher.

## Markham/Lawrance



**$315,000**

3+1 Bedrooms, 2 Washroom Spacious Raised Bungalow,Large Living W/Walk-Out To Balcony, Hardwood,Carpet,Eate-In Kitch, Finish Bsmt,Large Veg-Garden.


## Markham/Denison



**$329,900**

3+1 Bedrooms, 2 Washrooms Laminated Flooring ,Cabinets,Den Incl -1 Locker, 2 Parking Spaces Ttc At Doorstep, Shopping & 5 Major Banks & Costco

## Markham/14th Avenue



**$25 / Sq.Ft**

Excellent Opportunity! New Town Square Super High Density Area Surrounded By Commercial & Residential Areas! In Brand New Plaza.

## Birchmount/Ellesmere



**$349,000**

4 Bedrooms, 3 Washrooms,Quiet Neighbourhood, Eat-In Kitchen Walk-Out To Large DeckCloseTo Ttc, Highway, Shopping, School, Library&Church. 2-Yr Old Roof.

## Port Union/S.Of 401



**$354,900**

3 Bedrooms, 2 Washrooms Stunning&Spacious Living&Dining, Finished Bsmt W/ Rec Room! Backyard,Extensive Decking Steps To Ttc&Waterfront.

## Markham/Ellesmere



**$359,000**

5 Bedrooms,3 Washrooms Well Maintained, Fabulous . CloseTo Amenities: Brick House With Wood Stairs.Garage. Freshly Painted, Move-In Condt.

## Kennedy / Steeles



**$379,900**

3 Bedrooms, 3 Washrooms, Well Maintained&Updated, Close To Hwy 407,401& 404. 4 Car DrivewayConcrete Patio, Finished Basement.

## Brimley/Steeles



**$359,900**

3+1 Bedrooms, 3 Washrooms Excellent Loc.Well Maintained! Marble Fireplace,Parquet Floor, Oak Cabinets,Deck,Fin.Basmt, Semi-Ensuite,Fresh Painting.

## Birchmount/Steeles



**$398,900**

3+2 Bedrooms, 3 Washroom Basement W/2Bed,kitchen,Bath. Sep Entrance.W/WalkOut to Patio.Driveway W/Half interlock. Walk to Ttc,Parks,Daycare

## Kennedy/Sheppard



**$399,000**

3+1Bedrooms, 3 Washrooms Very Bright&Spacious, Close To School,Shopping Mall And Park, Finishd Basement W/3Kitchens &3 Baths. Great Investment!

## Denison/Middlefield



**$399,900**

3+2 Bedrooms, 4 Washrooms Gorgeous Home In High Demand Area. Front Porch Double Entry. Close To Schools & Park. Eat In Kitchen, Family Room

## Birchmount/Ellesmere



**$269,000**

2+1 Bedrooms, 2 Washroom Well maintained Condo Close to schools, Shopping, Restaurants, and Very Close to highway, TTC at doorstep,

## Steeles/Mccowan



**$409,800**

3 Bedrooms, 3 Washrooms Well Maintained, Upgraded In Excellent Location!Enclosed Porch Extra Pantries In Kitchen Open Concept Basement.

## Kennedy/Stratton



**$359,900**

3+1 Bedrooms, 2 Washrooms Bungalow In Quiet Neighbourhd. Fin.Bsmt,Dry Bar&Workshop. Lr & Dr Just Painted,Walk to Ttc, Close To Everything.

## Steeles/Mccowan



**$499,000**

4+2 Bedrooms, 2 Kitchen Seprate EntranceNew roof, New washrooms, New kitchens, New Hard Wood floor, Totally Renovated House.

## Middlefield/Steeles



**$379,000**

3 Bedrooms, 2 Washrooms Finishd Basemt, Freshly Painted! New Carpet Throughout! New Kitchen/Bathroom, Foyer. Tiled Floors..Great Location.

## Meadowvale/Sheppard



**$269,000**

3+1Bedrooms, 2 Washrooms Townhouse. Finished Basement *Private Drive* Freshly painted New Hardwood floor, Tiles in kitchen & Washroom. lots of upg

## Middlefield/Denison




**$359,000**

Sold for $369,000

## Church/Ninth Line



**$420,000**

3+1 Bedrooms, 3 Washrooms Fully Detached Home In Orig, 3 Bedrms Plus Fin. Bsmt, Sunny Master Bedroom, Close To School, Hospital, Viva Bus.

* 5% Down, 2.10%(Variable) Interest 35 years Amortization

Thinking of a career change?
Or just starting out in Real Estate?



www.Homelifetoday.com

HomeLife Today Realty Ltd., Brokerage* Wants to Talk to YOU

Contact: Kirew Kanagasabai - Broker of Record Tel: 416-298-3200 E: kirewk@yahoo.com

**VN Financial Service** Vasanthy Niranjan ★ Mortgage Broker ★ Lic. # M08010387 ★ Phone: 905-415-1676
Residential - First & Second Mortgages ★ First time Buyers ★ New Immigrants ★ Self Employed ★ Refinancing & Switching

# வரலாறாகிப்போன ஈழத் தமிழினப்படுகொலைகள்

- அ. கணபதிப்பிள்ளை -

இனத்தின் வரலாறு என்பது அது நடந்துவந்த வழி. நிகழ்காலத்தின் அரசியலையும் கடந்தகால அரசியலையும் தொகுத்து ஒருசேரப் பார்க்கின்ற ஒரு ஆய்வு முறையிது. அரசியல் என்பது நிகழ்காலத்திலும் கடந்தகாலத்திலும் மனிதகுலப் பண்பாட்டுக்கோலங்களின் பிரதிபலிப்பு. மனித இனங்களுக்கிடையிலும் ஒரு இனத்துள்ளும் காணப்படும் தனிமனித விருப்பு வெறுப்புக்களுக்கும் சமூகக் கட்டுக்கோப்புக்கும் இடையில் நிகழ்த்தப்படும் போராட்டங்களின் வெளிப்பாடு.

இலங்கையில் இனப்பிரச்சினையானது இனங்களுக்கிடையிலான வேறுபாடு என வெளிப்படையாக வர்ணிக்கப்பட்டாலும் தனிமனித விருப்பு வெறுப்புக்களின் ஒன்றுபட்ட வடிவம் இது. இனவெறுப்பு இனப்போட்டி இனஒதுக்கு இனஅழிப்பு இனஅடக்குமுறை என்று ஒருபக்கமும் இனவிளிப்பு இனப்போராட்டம் இனத்தின் அழிவு இனத்தின்அமைதி என்று மறுபக்கமுமாக சரித்திரம் படைத்தவர்களுக்கும் சரித்திரத்தால் கொடுமை அனுபவிப்பவர்களுக்கும் இடையிலான இணைந்த செயற்பாடுதான் இனங்களின் வாழ்க்கை வட்டம். இதில் கடந்த அறுபத்திரெண்டு வருடங்களாக அனுபவித்து வந்த கொடுமைகளில் தமிழினத்தின் வரலாறாகிப்போன படுகொலைகள் தான் சுதந்திரவேட்கையில் எஞ்சியிருக்கும் எச்சசொச்சங்கள்.

இனங்களுக்குள்ளும் இனங்களுக்கிடையேயும் தனிமனிதர்களாலும் அரசியற் குழுக்களினாலும் அரசநிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்பட்ட கொலைகள் அரசியற் படுகொலைகள் என வர்ணிக்கப்படடிருந்தாலும் ஆட்சியைக்கைப்பற்றுவதற்கும் அதனை நிலையாக வைத்திருப்பதற்கும் அதனைத் தமது எதிர்காலச் சந்ததியினருக்குக் கையளிப்பதற்கும் எடுத்துவந்த நடவடிக்கைகளின் வெளிப்பாடுதான் அவை. இத்தகையதொரு போராட்டம் உயிரினத்தின் வாழ்க்கைப் போராட்டத்தினை ஒத்ததாகக் கொள்ளலாம்.

கூர்ப்பு என்பதனை வரலாறு என்று குறிப்பிடுதல் தவறாக முடியாது. இதில் தப்பிப்பிழைத்தல் என்பதும் வலியன வாழும் என்பதும் தெளிவாக எடுத்துக்காட்டப்படுகிறது. டார்வின் போன்ற அறிஞர்கள் தப்பிப்பிழைத்தலென்பது உலகில் வாழக்கூடிய வலிமையினைப்பெறுவதிலேயே தங்கியுள்ளது எனக்குறிப்பிடுகிறார்கள். இந்த வலிமை இயற்கையை எதிர்த்து நின்று போராடும் வலிமை என்பதனைவிட இயற்கையுடன் ஒன்றிப்போகும் வலிமையிலேயே தங்கியிருப்பதாக எடுத்துக்காட்டப்பட்டது. எத்திப்பிழைக்கத்தெரிந்தவர்களும் இந்தவகையான நிலைமைகளுடன் ஒத்துப்

> “ முள்ளிவாய்க்காலின் பரந்த மணற்பரப்பில்
> பரவிக்கிடந்த பச்சை இரத்தமும்
> அவயவங்களை இழந்தவர்களின் அவலக்குரலும்
> குண்டு பட்டவர்களின் மரண ஓலங்களும்
> தமிழர்களின் நினைவைச்
> சிதறடித்துக்கொண்டேயிருக்கின்றன.
> இன்னமும்,
> மனஅழுத்தத்தினால் தன் மரணத்தைத் தழுவும்
> மாணவர்கள் எத்தனைபேர். ”

போகிறவர்கள்தான். சூழ்நிலைகளுக்கேற்பத் தங்களை மாற்றிக் கொள்பவர்களை நாணற்புல்லுக்கு உதாரணப்படுத்தப்படுவார்கள். நீர் வேகமாக ஓடும்பொழுதில் அதற்கு வளைந்து கொடுத்துத் தன்னையே சுதாகரித்துக்கொள்ளும் பக்குவநிலையது.


அரசியலிலும் அராஜகங்களைத் தட்டிக்கேட்காது, அடங்கிப்போகின்ற அரசியற் தலைவர்கள் அடக்கப்படுவதற்குப்பதில் அரவணைக்கப்படுகிறார்கள். கடும்புயலுக்கும் மரமென நிமிர்ந்து நின்றவர்கள் அழிக்கப்பட்டு வருகிறார்கள். ஆட்சியாளர்களும் ஆட்சிக்கு ஊன்றுகோலானவர்களும் நிலைமைக்கேற்பத் தங்களை மாற்றிக்கொள்பவர்கள் இராஜதந்திரம் என்ற போர்வைக்குள் தங்களைமூடிக்கொள்ளுகிறார்கள். மாறிவரும் பூகோள நிலைமைகளில் இராஜதந்திரமென்பது பலபடிகளிலும் உணரப்படுகிறது. பலநாடுகளினதும் பல நாட்டுத்தலைவர்களினதும் பலகட்டத்தீர்மானமெடுத்தலுடன் இணைந்த செயற்பாடாகிறது. இதனால் இராஜதந்திரம் தோற்றுப்போவதும் திசைமாறுவதும் தவிர்க்க முடியாததொன்று. இதுவே நாணலுக்கும் மரங்களுக்கும் நிகழும் இயற்கையின் விநோத விளையாட்டு.

அரசியற்புவியியலில் நாட்டையோ கட்சியையோ இயக்கத்தையோ அரசியற்தலைவர்களையோ உயிரினத்துக்கு ஒப்பிட்டு நோக்கும் டார்வின் கொள்கையாளர்கள் இருந்திருக்கிறார்கள். நாடு தன் பசியைத்தீர்ப்பதற்கு அயல் நாடுகளைக் கைப்பற்றுவதும், தன்னைப்பாதுகாக்க எதிரிகளை அழிப்பதும், தலைவர்களைப் பிரிப்பதும், இயக்கங்கள் ஒன்றையொன்று அழிப்பதும் தப்பிப்பிழைத்தலின் செயற்பாடென்பதும் பிறப்பும் வளர்ச்சியும் அழிவும் உயிரினத்தைப்போன்று அவைக்குண்டென்று குறிப்பிடுவதும் உயிரினக்கோட்பாட்டாளர்களின் கருத்தாகிறது. இத்தகைய கோட்பாடுகள் எல்லா நாடுகளுக்கும் எல்லாச்சந்தர்ப்பங்களுக்கும் பொருந்தாத காரணத்தினால் சமூகவியலில் பலகோட்பாடுகள் மூலம் நிகழ்வுகளை விளக்குவதும் புதிய புதிய கோட்பாடுகளை உருவாக்குவதும் நிகழ்ந்த வண்ணமுள்ளன. நேற்றுப் போல் இன்றில்லை இன்று போல் நாளை இருக்கப்போவதில்லை. இதனால் வரலாறு மாறிவிடப்போகிறதா என்றால் இல்லை. மனித குலம் நடந்து செல்லும் பாதை ஒன்றுதான் ஆனால் அது காணும் காட்சிகள்தான் வேறுபட்டவை. சிந்தனையும் செயல் வடிவமும் நாகரிகத்தினால் முலாம்பூசப்படுவதுதான் வரலாற்றில் நாம் காணுகின்ற, மாறுகின்ற செயற்பாடு.

இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணத்தக்க அரசியற்கோட்பாட்டு வடிவங்களை அனுசரித்துப்போகாத அரசியல் வாதிகளின் முரண்பாடு ஒரு இனத்துக்குச் சாதகமாகவும் மற்ற இனத்துக்குப் பாதகமாகவும் அமையக்கூடும். பெரும்பான்மைச் சமூகம் அனுபவிக்கும் ஏகபோக உரிமை என்பது அரசியற் தீர்வினால் கட்டுப்பாட்டுக்குட் கொண்டுவரப்படலாம். இனங்களுக்கிடையிலான உரிமைகளையும் சுதந்திரத்தினையும் வழங்க எடுக்கப்படும் முயற்சிதான் அரசியற் தீர்வு. அதனை நோக்கி பயணிக்கும் அரசாங்கத்தினால் மட்டுமே சமூகத்தின் அங்கத்துவமான சிறுபான்மைக்கும் பெரும்பான்மைக்கும் இடையிலான முரண்பாடுகளான இனக்குரோதம் இனப்பகைமையும் அதனால் உருவாகும் இனப்போர் இனஅழிப்பு ஆகியவற்றைத் தடுத்து நிறுத்தமுடியும்.

அரசியல் ரீதியிலான தீர்வு என்பது இனத்தினதோ குழுவினருடையதோ பாதுகாப்பினை முன்னிலைப்படுத்துவதாக இருக்கவேண்டும். அதற்காகத்தான் அகிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் போராட்டம் நடாத்தப்படுகிறது. ஆகிம்சா மூர்த்தி மகாத்மா காந்தி அடிகள் இந்தியாவின் பலகோடி மக்களுக்குப் பிரித்தானிய கலாசாரத்தளையிலிருந்து பாதுகாப்புக்கிடைப்பதற்காக போராடி வெற்றிபெற்றார். மாவோ சே துங்கின் சீனப்புரட்சி சீனாவுக்குப் பாதுகாப்பைக் கொடுத்தது. பிரஞ்சுப்புரட்சி இரஷ்யப்புரட்சி அமெரிக்க சுதந்திரப்போர் போன்றன அடக்குமுறையிலிருந்து விடிவைத்தேட மேற்கொண்ட பலவகைப் போராட்ட வடிவங்களின் விளைவுகளாகும்.

பலஆண்டுகளாக இலங்கையில் தமிழர்கள் நடாத்திய சத்தியாக்கிரகங்களும் அதனுடனிணைந்து நடைபோட்ட ஒத்துழையாமைச்செயற்பாடுகளும் இறுதியில் வந்த நான்கு ஈழப்போர்களும் நடாத்தப்பட்டிருந்த வேளைகளிற் கூட பலபாகங்களில் இனங்கள் ஒற்றுமையாக வாழ்ந்திருக்கிறார்கள் ஏனெனில் தமிழர்கள் நடாத்திய சத்தியாக்கிரகமோ போரோ இனங்களுக்கெதிராக நடாத்தப்படவில்லை. அரசாங்கத்துக்கெதிராகவும் அதன் கொள்கைக் கெதிராகவும் நடாத்தப்பட்டவை. பெரும்பான்மை மக்கள் நினைத்திருந்தால் பிரச்சினையைத் தீர்த்திருக்கலாம் அதை ஏன் செய்யவில்லை என்ற ஆதங்கம் எழுவதியற்கையே. பெரும்பான்மை மக்கள் பலதடவை




தொடர்தல் 5ம் பக்கம்

களில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைக் கொடுத்திருக்கிறார்கள் அவை தம்மையும் தமது கட்சியையும் பலப்படுத்தவே பயன்படுத்தப்பட்டன. அரசாங்கத்தினதும் எதிர்க்கட்சியினதும் தூண்டுதலின் பேரிலனறி மக்கள் சிறுபான்மையினருக்கெதிராகக் குரலெழுப்பவில்லை. அவ்வாறாயின் இவை யார் தவறு என்பது தெளிவாகத்தெரிகிறது.

உறவு நட்பு என்பவற்றுக்கு அப்பாற்பட்டது இனத்தின் பாதுகாப்பு. உறவையும் நட்பையும் விட்டுப்பிரிந்த பொழுதிலும் நாட்டைவிட்டு வேறுநாடு சென்ற பொழுதிலும் கிடைப்பதுதான் இனங்கொடுக்கும் பாதுகாப்பு அதற்கு மேலாக நாடு கொடுக்கும் பாதுகாப்பு. இப்படியான பாதுகாப்பு கிடைக்கின்ற பொழுதிற்தான் அந்த நாட்டிலுள்ள எல்லா மக்களும் சுதந்திரமானவர்கள் என்ற முடிவு பெறப்படுகிறது.

இத்தகைய சுதந்திர உணர்வு கிடைக்கப்பெறாத வேளைகளிற்றான் போராட்டங்களும் புரட்சிகளும் எழிச்சி பெறுகின்றன. அத்தகையதொரு போராட்டந்தான் கடந்த அறுபது வருடங்களாக இலங்கையில் நடந்து வந்தது. கடந்த முப்பது வருடங்களில் உக்கிரமடைந்தது. இவைநடந்த எல்லாக் காலங்களிலும் அரசாங்கத்தின் அடக்குமுறைகள் சட்டங்களாகவும் அதன்வழி கைதுகளும் கொலைகளும் மலிந்து கிடந்தன. அடக்குவதும் பழி வாங்குவதும் என்ற போர்வையில் கைது கடத்தல் பாலியற் பலாத்காரம் கொலை என மனித உரிமை மீறுதல்கள் அதிகரித்துக் கொண்டே போயின.

கடந்த வருடம் மே மாதம் பத்தொன்பதாந் திகதியுடன் முடிவடைந்த இலங்கையின் பயங்கரவாதத்துக்கெதிரான போரும் விடுதலைப் புலிகளை அடக்கும் நடவடிக்கைகளும் புதியதொரு அத்தியாயத்துக்குத் தமிழரை இழுத்துச்சென்றுள்ளது. போர்முடிவடைவதற்கு முன்னைய ஆறு மாதங்களிலும் வன்னியின் குடியானவர்கள் பட்ட துயரங்கள் சொல்லுந் தரமன்று. உடைமைகளை இழந்து தெருவுக்கு வந்தவர்கள் அரசுகொடுத்த பாதுகாப்பு வலையத்தினுள்ளும் பாதுகாப்பின்றி கண்முன்னே உறவுகளை அவர்களின் உடல் அவயவங்களை இழக்கக் கண்டும் தாங்களனுபவித்தும் முள்ளிவாய்க்காலுக்குள் உணவின்றி உயிருக்கஞ்சி முடங்கிக் கிடந்த நாட்களை நினைத்து இன்னமும் அழுதுகொண்டிருக்கிறார்கள். அந்தஆறுமாதத்தில் மட்டும் 97,500 பேர் கொல்லப்பட்டிருந்ததாக மருத்துவர்களின் குறிப்புத்தெரிவித்திருந்தது. ஐ.நா வின் செய்மதிமூலத் தரவுகளை ஆதாரப்படுத்திய குறிப்பொன்று முள்ளிவாய்க்காலில் மட்டும் 40,000க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. நாலாம்ஈழப்போரில் பன்னாட்டு ஊடகங்கள் அனுமதிக்கப்படாததைச்சாதகமாக்கிய அரசாங்கம் உள்ளூருடகங்களின் நம்பகத்தன்மையைப்புறக்கணித்து ஆதாரங்களை அழித்துவந்தது. ஆயினும் இராணுவ அதிகாரிகள் விட்ட அறிக்கைகளும் யாரோ பிடித்த புகைப்படங்களும் நிழற் படங்களும் ஒளிப்படங்களும் நடந்தது என்ன என்பதை வெளிக்கொணர்ந்தன. இவையே அரசாங்கத்தின் மனித உரிமைமீறுதலுக்கான குற்றச்சாட்டுகளுக்கும் போர்க்குற்றங்களுக்கும் ஆதாரமானவை எனச் சொல்லப்படபட்டன. இவற்றையெல்லாம் இலங்கையரசு இயற்கை அனர்த்தமாகப் பார்க்கிறதா, தனது குற்றமாகப்பார்க்கிறதா அல்லது கட்டுக்கடங்கா இராணுவத்தில் பழிபோடுமா என்பது புரியாத புதிர்.

போர் நடந்துகொண்டிருக்கையில் விடுதலைப் புலிகள் குடியானவர்களை மனிதக்கேடயங்களாகப் பயன்படுத்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டு சர்வதேசத்துக்கு மிகைப்படுத்திக்காட்டப்பட்டதே தவிர அரசாங்கம் பயன்படுத்திய கொத்தணி எறிகுண்டுகள் எரிதிராவகங்கள் வைத்தியசாலைகளில் வீசப்பட்ட குண்டுகள் மக்கள் வாழ் பகுதிகள் பாதுகாப்பு வலயங்களில் வீசப்பட்ட குண்டுகள் எல்லாம் ஆதாரத்துடன் இருப்பதாகவே காட்டிக்கொள்ளப்படவில்லை. அரசாங்கத்தின் தவறுகள் வெண்ணை திரண்டுவருகையிற் தாழியை உடைப்பதா என்ற நன்நோக்குடன் சர்வசேத்தின் பார்வையிலிருந்து விலகிக்கொண்டே வருகின்றன.

முனிதஉரிமை மீறுதல்கள் தொடர்பான இன்னும் எத்தனையோ முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டிருந்த பொழுதிலும் கூட இலங்கை அரசு ஜனநாயக முறையில் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் என்ற எதிர்பார்ப்பும் உறுதிமொழியும் கலந்ததாலான எதிர்நோக்கு எல்லாத்தமிழர்களிடையேயுமிருக்கிறது. ஏல்லா இழப்புகளின் பின்பாகவும் இது நடக்காதா என்ற ஆதங்கத்தின் பிரதிபலிப்புத்தான் இந்த மௌனங்கள்.

மனித உரிமைக்குப்போராடிய சட்டத்தரணி. தாய்க்குலத்தின் அவலத்தைத் தீர்க்கக் கதிர்காமம் வரை கால்நடை போன மனிதஉரிமை ஆர்வலர் இளவயதிலே பாராளுமன்றம் சென்றனுபவம் பெற்றவர் கடந்த எண்பது வருடகால அரசியற் பாரம்பரியத்தின் வாரிசு என்றெல்லாம் கூறப்படும் மகிந்த ராஜபக்ச இரண்டு அரசியற்கட்சிகளினாலும் அடுத்தடுத்து ஏற்படுத்திய சட்டங்களிலிருந்தும் அரசியற் திட்டங்களிலிருந்தும் விடுதலை பெற்றுத்தருவார் என்ற எதிர்பார்ப்பு எல்லாவற்றையும் மறக்கும்படி செய்துவிட்டது போன்ற தோற்றத்தைக் கொடுக்கிறது.

இழப்பவையெல்லாம் இழந்துவிட்டோம் இனி இழக்க எதுவுமில்லை என்ற மன அழுத்தம் ஒவ்வொரு பாதிக்கப்பட்ட தமிழரிடமும் உள்ளது. அதனை எப்படி வெளிக்காட்ட முடியுமோ அதன் வழி தேர்தலைப் புறக்கணிப்பதும் தமிழர் ஒற்றுமைப்பட்டிருக்கிறோம் என்பதை வெளியுலகுக்குக் காட்டுவதும் ஆகிய எதிரும் புதிருமான இரண்டு நிகழ்வுகளும் நடந்தேறிவிட்டன.

நடந்தவைகளை நெட்டுருப்போட்டு நாளைக்கடத்துவது ஒரு சமூகத்தின் விடிவுக்கு எந்த விதத்திலும் உதவிசெய்யப்போவதில்லை. ஆயினும் இழப்புக்களை நினைவுகூருவதும் மறைந்த உறவுகளுக்கு ஆட்டைத்திவசம் செய்வதும் தமிழர்களின் வழக்காயிற்றே.

முள்ளிவாய்க்கால் பேரழிவின் பின் உயிர்தப்பிய 35,0000 பேரும் முட்கம்பிகளிடையே வாழ்ந்த வாழ்க்கையும் மீள் குடியேற்றத்தினால் ஏற்பட்ட தனிமையும் மீள்குடியேற்றமேயில்லாத அனாதைகளான தவிப்பும் சொந்த வீட்டுக்கே போகமுடியாத சுதந்திர மறுப்பும் எத்தனையாண்டுகளாக அனுபவிக்கும் துன்பங்களவை.

முள்ளிவாய்க்காலின் பரந்த மணற்பரப்பில் பரவிக்கிடந்த பச்சை இரத்தமும் அவயவங்களை இழந்தவர்களின் அவலக்குரலும் குண்டு பட்டவர்களின் மரணஓலங்களும் தமிழர்களின் நினைவைச் சிதறடித்துக்கொண்டேயிருக்கின்றன. இன்னமும் மனஅழுத்தத்தினால் தன்மரணத்தைத் தழுவும் மாணவர்கள் எத்தனைபேர்.

ஈழத்தின் ஒவ்வெரு கிராமமும் ஏதோ ஒரு வகையில் அழுதுகொண்டுதானிருக்கிறது. செம்மணியின் புதைகுழிக்குள்ளே இனங்காணமுடியாத இனத்தவர்கள் அவர்களை நினைத்து எங்கோ அழுதுகொண்டிருக்கும் தாய், தந்தை, மனைவி, பிள்ளைகள், சகோதரங்கள், உறவுகளின் கண்ணீர்க்கதைகள் எத்தனையோ. சத்துருக்கொண்டான் கொக்கட்டிச்சோலை வீரமுனை அரச அட்டூழியத்தின் நினைவுகளை இன்னும் சுமக்கின்ற கிராமங்கள். ஆழ்கடலுக்குள் குமுதினியில் வைத்துப் பலியாக்கப்பட்ட நெடுந்தீவின் மக்களின் உறவுகளின் கண்ணீர் வற்றிவிடவில்லை. இவ்வாறு தரையிலும் கடலிலும் கலந்த சோகம்தான் தமிழருடையது. இவை போன்று இன்னும் பல வரலாறாகிப்போன படுகொலைகள் தமிழர்களின் விடுதலைக்கு வித்திட்டவை.

kanapathipillai.a@thaiveedu.com

■ ■ ■


தமிழ் கூறு நல்லுலகங்களில் பன்மைத்துவம், ஒடுக்குமுறை, சிந்தனைச் சுற்றோட்டங்கள்

**ஐந்தாவது தமிழியல் மாநாடு**

**மே 13-15, 2010**

**தொறொன்ரோப் பல்கலைக் கழகம்.**

தொறொன்ரோப் பல்கலைக் கழகத்தின் தென்னாசியாக் கற்கைகளுக்கான நிறுவனமும் வின்சர் பல்கலைக் கழகமும் இணைந்து ஆண்டுதோறும் நடத்தும் தமிழியல் மாநாடு இந்த ஆண்டும் மே மாதம் 13-15 தேதிகளில் நடைபெற உள்ளது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்தக் காலகட்டம் மிகவும் நெருக்கடிகளையும் சவால்களையும் அள்ளி எறிகிற காலகட்டமாக அமைகிறது. தென்னாசிய நாடுகளிலும் இது ஒரு சிக்கல் மிகுந்த காலமாகவே இருக்கிறது. இந்த நிலையில் "தமிழ்கூறும் நல்லுலகங்களைக் கட்டி எழுப்புதல்: பன்மைப்பாடு, ஒடுக்குமுறை, சிந்தனைச் சுற்றோட்டங்கள்" என்னும் பொருளில் ஐந்தாவது தமிழியல் மாநாடு இடம் பெறுவது மிகவும் பொருத்தமானதும் தேவையானதுமாகும். புலமையாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள் போன்றோர் ஆய்வுத் தளத்தில் ஒன்றுகூடும் அரங்காகவும் இது அமைகிறது. தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாகப் பல்வேறு தமிழ்ச் சமூக அமைப்புக்களும் பல்கலைக் கழக சமூகமும் ஒன்றிணைந்து இந்த மாநாட்டை நடத்தி வருகின்றனர்.

தமிழ் உலகங்களைக் கட்டியமைப்பதில் பன்முகப்பாடு அல்லது பன்மைத்துவத்தின் வகிபாகம் என்ன பல்வேறுபட்ட ஒடுக்குமுறைகள் தமிழ் உலகங்களில் எவ்வாறு தொழிற்படுகின்றன இவற்றின் அகப், புறப் பரிமாணங்கள் யாவை சிந்தனைகள், பண்டங்கள், மனிதர்கள் நாடு விட்டு நாடு மாறி மாறிச் சுற்றோடி வருகிறமையும் புலம் பெயர்வும் எத்தகைய தாக்கங்களை நமது அடையாளங்களிலும் உலகங்களிலும் ஏற்படுத்துகின்றன ஆகிய கேள்விகளை முன்னிலைப்படுத்துகிறது இந்த மாநாடு.

சமூகவியல், நுண்கலைகள், வரலாறு, மானுடவியல்,அரசியல், புலம்பெயர்வியல், பெண்ணியம், இலக்கியம் போன்ற பல்வேறு துறைகள் சார்ந்து மாநாட்டில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட உள்ளன. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் அறுபதுக்கு மேற்பட்ட புலமையாளர்களும் கலைஞர்களும் பங்கேற்கிறார்கள். சிறப்புப் பேருரைகளையாற்றப் பேராசிரியர் சஞ்சே சுப்பிரமணியம் (வரலாற்றுத்துறை, கலிபோர்னியாப் பல்கலைக் கழகம், லொஸ் ஏஞ்சலிஸ்), பேராசிரியர் ராஜ் கௌதமன் (மேல் நிலைப் பட்டப் படிப்புகள் நிறுவனம், பாண்டிச்சேரி) ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

விவரமான தகவல்களுக்கு எங்களுடைய இணையத்தளத்துக்கு வருகை தாருங்கள்:
www.tamilstudiesconference.ca


**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**


***E-mail:thaiveedu@gmail.com***

***Fax: 416-849-0594***

***Tel: 416-646-3422***


# வீட்டினுள்ளே இன்னும் வருபவை...


**வயிற்று வலி**
கந்தையா செந்தில்நாதன் 09

**நீங்களும் - நாங்களும்**
கருணா கோபாலபிள்ளை 11

**விரைவில்... முப்பரிமாணத் தொலைக்காட்சி**
மாறன் செல்லையா 21

**பெரிய மாற்றங்களும் சின்னக் காரணங்களும்**
சிவவதனி பிரபாகரன் 24

**உங்கள் வீட்டை விற்பது எப்படி?**
*S.K.* பாலேஸ் 27

**மருத்துவக் கேள்வி பதில்**
இராஜசேகர் ஆத்தியப்பன் 28

**உடலுளவுணர்வுச்சோர்வு**
கந்தையா பரநிருபசிங்கம் 30

**வீட்டு வாடகையும் கைகொடுக்கும் அரசின் திட்டமும்**
சிவ பஞ்சலிங்கம் 38

**காப்புறுதியில் ஏற்படும் குழப்பங்கள்**
சக்திவேல் 41

**வரி வழிகாட்டிகளும் அதன் பயன்பாடுகளும்**
ராகுலன் 44

**அன்னை வடிவினில்...**
உதயணன் 58

**நம்பிக்கை**
குமார் புனிதவேல் 61

**மண்ணாய்ப் போன ஏரி**
குரு அரவிந்தன் 70

**எப்பவும், எவரையும், எப்படியும் திட்டித்தீர்க்கலாம்?**
கதிர் துரைசிங்கம் 76

**எங்கள் வேலியடி வேப்பமரம்**
பொ. கனகசபாபதி 79

**அவர் சிரித்துக்கொண்டே அழுதார்**
கே.எஸ்.பாலச்சந்திரன் 82

**இருந்தால் மனைவி! போனால் பரத்தை!**
தேவகாந்தன் 87


**விட்டுப்போச்சுது**
அ.முத்துலிங்கம் 89

**மயக்குறு மக்கள்**
வி. கந்தவனம் 92

**மெல்லிசை - திரையிசைப் பாடகர் முத்தழகு** 94

**நாடகக் கலைஞன் பிரான்சிஸ் ஜெனம்**
ப.ஸ்ரீஸ்கந்தன் 97

**கொடிய நோய்களுக்கான காப்புறுதி**
சிறீதரன் துரைராஜா 98


HOMELIFE TODAY REALTY LTD., BROKERAGE*
Independently owned and Operated REALTOR ™
31 Progress Avenue Suite 210 ★ Toronto, ON M1P4S6
Phone: 416-298-3200
HOMELIFE
HIGHER STANDARDS
"Making your dream home come true"
VALLIKKANNAN MARUTHAPPAN
Salesperson
DIRECT:
416-623-4989/416-880-6051
Promotional Offer 2010!
For all my Buyers & Sellers I will pay
Your Lawyer Fee & Moving Expense*
ALPHAWEB SOLUTIONS.CA / PHONE: (416) 238-7288
* 5% Down, Current Variable Rate and 35 years Amortization
* Some conditions apply - Offer ends at December 31, 2010.
** Not intended to solicit buyers or sellers already under contract


RBC MORTGAGE SPECIALIST
• 1st Time Home Buyers, Pre-Approvals & Refinances
• Switch your mortgage to RBC and save
• We will pay your legal & Switch fees on Switches*
• Builder rate hold up to 18 months
• Cash back options available*
• New Immigrants Programs
• Self-Employed? No income verification*
• Consolidate your debts to one low monthly payment
As you RBC Mortgage Specialist and trusted member of our community, I can advise you on your options and give you the confidence you need to make the right decisions. And, I can meet with you at the time and place that is convenient for you.
Ram Krish
Mobile Mortgage Specialist
Tel: 416-526-4996
Email: ram.krish@rbc.com
* Some conditions apply.
RBC
- digi Media -

# கலைந்து போன கனடாவின் கனவு



நிமால் நாகராஜா

1958ம் ஆண்டு மார்ச் மாதம் 25ம் திகதி. காலை 9:52 மணி, இடம்: Malton நகரம்

ஆயிரக்கணக்கானோர் படபடக்கும் இதயத்துடன் வானை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கனடாவின் புதிய அதி வேக போர் விமான திட்டமான Arrowஇன் முதலாவது பரிசோதனை விமானம் விண்ணைக் கிழித்துக் கொண்டு விரைவாக மேலெழுகின்றது. எதிரி விமானங்களை இடைவழியில் மறித்து முற்றாக தாக்கியழிக்கும் வல்லமை கொண்ட Arrowஇன் பாய்ச்சலில் கனடியர்கள் பெருமிதம் கொள்கிறார்கள். இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னாலான வல்லரசுப் போட்டியால், இராணுவ ரீதியாக பூதமாக வளர்ந்து வரும் சோவியத்தின் எந்த தாக்குதலையும் முறியடிக்க கனடா தனது ஆயுதமான Arrowஐ வானில் ஏவி மார் தட்டுகிறது.

1959ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ம் திகதி காலை 11:00 மணி, இடம்: **Ottawa** நகரம்

பின்னாளில், "கனடாவின் கறுப்பு வெள்ளி" என வருணிக்கப்படப் போகின்ற இந்த நாளில், அப்போதைய கனடா பிரதமர் John Diefenbaker பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்காக எழுகின்றார். அதே நேரம் இங்கே Malton நகரின் Avro கனடா தொழிற்சாலையினுள் Iroquois என்றழைக்கப்படும், இராட்சத என்ஜின்கள் இரண்டை தாங்கிய வண்ணம் புதிய Arrow விமானம் உறுமிக் கொண்டிருக்கிறது. இன்னும் இரண்டு வாரங்களில் தனது முதல் பறப்பிற்கு தயாராகிக் கொண்டிருக்கும் Arrow, உலகின் அத்தனை விமான வேக சாதனைகளையும் தவிடு பொடியாக்கி விடும் வல்லமை கொண்டது. இது இப்படி இருக்க, அங்கே பாராளுமன்றில் பிரதமரின் வாயிலிருந்து நிதானமாக வார்த்தைகள் வெளிவருகின்றன. கனடிய தொழில்நுட்ப வரலாற்றின் வெற்றிப் பக்கங்களில் முத்திரை பதிக்கத் தயாராகிக் கொண்டிருக்கும் Arrow திட்டம் உடனடியாக நிறுத்தப்படுவதாக பிரதமர் அறிவிக்கின்றார். முற்றிலும் எதிர்பாராத இந்த அறிவிப்பால் பாராளுமன்றம் உறைந்து போகின்றது. அத்துடன் அத்தனை Arrow விமானங்களும், சகல வடிவமைப்பு தரவுகளும் உடனடியாக உருத்தெரியாமல் அழிக்கப்பட வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகின்றது. Arrow திட்டத்தில் பங்காற்றிய 14,000 தொழில்துறை வல்லுநர்களும் அதே நாளில் வேலை நீக்கம் செய்யப்படுகின்றார்கள். கவலை தாங்க முடியாத சில வல்லுநர்கள் தற்கொலை செய்து இறந்து போகின்றார்கள். மேலும் சில பேர் மதுப்பழக்கத்திற்கு அடிமையாகி சில வருடங்களில் மரணத்தை தழுவுகின்றார்கள். 400 மில்லியன் டொலர்கள் செலவில், ஆறு வருட உழைப்பில் எழுந்த அத்தனை Arrow விமானங்களும், அதை உருவாக்க பயன்பட்ட அத்தனை உபகரணங்களும் முற்றாக அழிக்கப்பட்டு, வெறும் 3 இலட்சம் டொலர்களுக்கு Hamilton நகரிலுள்ள பழைய இரும்புக் கடையொன்றிற்கு விற்கப்படுகின்றன.

"கனடாவின் காவலன்" என்று போற்றப்பட்ட Arrow திட்டம் என்ன காரணத்திற்காக முற்றாக நிறுத்தப்பட்டது? தடயம் கூட விடப்படாமல் ஏன் முற்றாக அழிக்கப்பட்டது? இந்தக் கேள்விகளுக்கு விடை காண நாங்கள் ஐம்பது வருடங்கள் பின்னோக்கி பயணிக்க வேண்டும். அது கனடாவின் ஒரு கண்ணீர் கதை. இன்னும் பல கனடியர்களின் மனங்களில் மறைந்து போகாமல் இருக்கும் ஒரு துயரத்தின் வடு.

அது இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த காலம். தொடர்ச்சியான யுத்தத்தினால் பாரிய இராணுவ வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கிடையே வல்லரசுப் போட்டிகள் தொடங்கிய காலம். இருபெரும் வல்லரசுகளான அமெரிக்கா, சோவியத் யூனியன்இற்கு பின்னால் நாடுகள் எல்லாம் அணிவகுத்து நின்ற காலம். இரு நாடுகளும் அணுவாயுதங்களையும், ஏவுகணைகளையும், யுத்த விமானங்களையும் ஒருவருக்கொருவர் போட்டியாக உற்பத்தி செய்யத் தொடங்கினர். சோவியத்தினுடைய அணு ஆயுத போர் விமானங்கள் மிக இலகுவாக வடதுருவத்தினூடாக கனடா, அமெரிக்க வான் வெளிகளுக்குள் ஊடுருவலாம் என்ற அச்சம் அதிகரிக்கத் தொடங்கியது. அப்போது உலகின் மூன்றாவது பலம் வாய்ந்த வான்படையான கனடிய வான்துறைக்கு அதி சக்தி படைத்த, ஊடுருவுகின்ற சோவியத் விமானங்களை நடுவானிலேயே அழிக்கும் வல்லமை கொண்ட புதிய போர் விமானங்கள் தேவைப்பட்டன. அப்போது சந்தையிலிருந்த எந்த விமானங்களிலும் திருப்தியடையாத கனடிய வான்படை, தனக்கு எப்படிப்பட்ட விமானங்கள் தேவை என்பதை ஓர் அறிக்கையாக தயாரித்தது. "AIR-7-3" என்றழைக்கப்பட்ட அந்த அறிக்கையை வாசித்தவர்கள் தலை சுற்றிப் போனார்கள். ஏவுகணைகளை சுமந்தபடி, தரையிலிருந்து 50,000 அடி உயரத்தில், மணிக்கு 2,000km வேகத்தில் விண்ணைக் கிழித்துக் கொண்டு விரையக் கூடிய விமானங்களை வேண்டி நின்றது கனடிய வான்படை. அப்போது இருந்த தொழில்நுட்பத்தால் மட்டுமல்ல, இன்னும் ஒரு பத்து வருடத்தால் வரப்போகின்ற தொழில்நுட்பத்தால் கூட அவ்வளவு வல்லமை கொண்ட விமானத்தை வடிவமைப்பது சாத்தியமில்லை என்றே தோன்றியது. அந்த நேரத்தில் கனடாவின் புகழ்பூத்த தொழில்துறை விற்பன்னரான Crawford Gordon தலைவராக கொண்டதும், Toronto நகரிற்கு அருகாமையில் இருக்கின்ற Malton நகரில் அமைந்திருந்ததுமான Avro நிறுவனம் இந்த விமானத்தை நாங்கள் செய்கிறோம் என்று செய்ய முன்வந்தது.



Gordon இன் தலைமையின் கீழ் கனடாவின் தலைசிறந்த மூளைசாலிகள் தேர்ந்தெடுக்கப் படுகின்றர்கள். உலகின் நம்பிக்கையான பாகங்களிலும் இருந்து வல்லுநர்கள் வரவழைக்கப்படுகின்றர்கள். மொத்தம் 14,000 தொழில்துறை வல்லுநர்கள் இரவு பகலாக உழைக்கத் தொடங்குகின்றார்கள். மிகவும் அசுர சக்தி வாய்ந்த விமான என்ஜினை வடிவமைக்கும் வேலை ஆரம்பிக்கப்படுகின்றது. Iroquois என பெயர் சூட்டப்பட்ட இந்த என்ஜின், விமானத்தை மணிக்கு 2,000 km வேகத்தில் உந்தித் தள்ளும் வண்ணம் வடிவமைக்கப் படுகிறது. இதனிடையே விமானத்தை வடிவமைக்கும் பணிகளும் துரிதமாக நடக்கின்றது. 50,000 அடி உயரத்தில் பறக்கின்ற போது ஏற்படுகின்ற எதிர் விசைகளை சமாளிப்பதற்காக, விமானத்தின் சிறகுகள் முக்கோண வடிவில் அமைக்கப்படுகின்றன. விமானத்திற்கு Arrow என பெயர் சூட்டப்படுகின்றது.

நான்கு வருட கடின உழைப்பின் பின் முதலாவது பரிசோதனை Arrow விமானம் தயாராகுகின்றது. ஆயினும் Iroquois என்ஜினுடைய முழு வேலைகளும் முடிவடையவில்லை. முதலாவது Arrow விமானத்திற்கு அப்போது சந்தையிலிருந்த பலம் வாய்ந்த J75 என்ஜின்கள் பொருத்தப்பட்டன. விமானக் கட்டமைப்பினை பரிசோதிப்பதற்கு விமானம் பல பறப்புகளை செய்ய வேண்டிருந்தது. முதல் பறப்பிற்கு சில மாதங்களுக்கு முன்னதாக Arrow விமானத்தை வெளியுலகிற்கு அறிமுகம் செய்ய Avro நிறுவனம் திட்டமிட்டது. 1957ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4ம் திகதி, Avro நிறுவன ஊழியர்கள், நிருபர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் முன்னிலையில் Arrow விமானம் தொழிற்சாலையிலிருந்து வெளியே வருகின்றது. வெள்ளை நிற அசுரனைப் போல் வெளியே வந்த Arrow இனைப் பார்த்து எல்லோரும் ஆச்சரியம் அடைகின்றனர். பெருமிதம் கொள்கின்றனர். அட்டகாசமான Arrowஇன் அறிமுகம் அடுத்த நாள் அமெரிக்க, கனடிய தகவல் சாதனங்களில் தலைப்புச் செய்தியாக இடம் பெறப் போகின்றது. ஆனால் Arrowஇன் அறிமுகத்தின் முக்கியத்துவத்தை முற்றிலும் இல்லாமல் செய்யக்கூடிய இன்னொரு நிகழ்ச்சி உலகின் மறுகோடியில் அதே நாளில் நடந்தேறுகின்றது. 83 Kg நிறையுடைய, ஒரு கூடைப்பந்து அளவுள்ள சிறிய பொருள் ஒன்று சோவியத் யூனியனின் ஒரு மூலையிலிருந்து விண்வெளிக்கு பாய்கின்றது.

> "கனடிய விமானத் தொழில்நுட்பதுறை *Arrow*இன் அழிவின் பின் செயலிழந்து போனதுடன் அதன் எதிர்கால வளர்ச்சியும் இல்லாமல் போய்விட்டது. அசுர சாதனைகள் செய்ய தோள் நிமிர்ந்து புறப்பட்ட *Arrow* தடயம் கூட இல்லாமல் கலைந்து போனது. கூடவே கனடியர்களின் கனவும் தான்."

மனிதகுல விஞ்ஞான வரலாற்றின் புதியதோர் அத்தியாயத்தின் தொடக்கமாய் விண்வெளியில் பாய்ந்து கொண்டிருந்த அந்தப் பொருள் "ஸ்புட்னிக்" என்று அழைப்பட்ட உலகின் முதலாவது செயற்கைகோள். உலகம் அதிர்ந்து போனது. அமெரிக்கா கதிகலங்கி நின்றது. சோவியத் யூனியன் திடீரென விண் வெளியின் ராஜாவாய் விசுவரூபம் எடுத்து நின்றது. பல மாதங்களாக பத்திரிகைகளை, தொலைக்காட்சிகளை "ஸ்புட்னிக்" ஆக்ரமித்தது. Arrowஇன் அறிமுகம் அமுங்கிப் போனது. இருந்த போதிலும் ஆரம்ப அறிமுகத்தின் பின்

32ம் பக்கம் பார்க்க...

ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices

Sales - Service - Installations
Custom Made
Wood & Vinyl Shutters: California Style Shutters, Plantation Style Shutters, Traditional Style Shutters, Arches
(We Do Any Colour Of Paint & Stain)
Blinds: Vertical Blinds, Venetian Blinds, Wood Blinds, Bamboo Shades, Roller Shades, And More
Draperies: Swags, Sheers, Valance, Curtains, And More
உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்

Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:
தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed


To Buy, Sell & Lease Home, Business & Investment Properties
முதல் பரிசு BMW 300 SERIES CAR
இரண்டாம் பரிசு 2 TICKETS TO CUBA FOR COUPLE
மூன்றாம் பரிசு 42" LCD TV
மற்றும் 10 ஆறுதல் பரிசுகள்
நீங்கள் அதிஷ்டசாலி வாடிக்கையாளரா?
எங்களிடம் நீங்கள் வீடு வாங்கி அல்லது விற்றிருந்தால் பெறுமதிமிக்க அதிஷ்ட பரிசுகள் உங்களுக்காக காத்திருக்கின்றன
அதிஷ்ட குலுக்கல் August 29, 2010
Morningside / Staines
$449,000
Detached 2 Storey Brick Home Well Maintained 4 Bedroom with 2 full Washroom. 2 Bedroom Basement Apt with Sep. Entrance Location.. Location... Location...
Markham / Highglen
$499,000
Detached 2 Storey Brick Home Well Maintained 4 Bedroom with 3 Full Washroom & ½ Washroom Basement Apt with 3 Bedroom Location.. Location... Location...
Midland / Ellesmere
Gas Station
$2.2 Mil
Good Investment Property Corner of Midland & Ellesm Gas Station lease until 2025 Great Investment for User Investment
Brimley / Brimorton
$419,000
Detached Bungalow house 3 bedroom and 2full W/Rs Ravine WALK OUT Basement apt with separate entrance, Modern Upgrades
Markham / Passmore
$396,800
Semi Detached 2 storey Brick Home 3 bedroom with 2 full washrooms Approx 5 Yrs New Lots of upgrades. Convenient location. Step to school
McCowan / Highglen
$485,000
Detached 2 Storey Brick Home Well Maintained 4 Bedroom with 2 Full Washroom & ½ Washroom Basement Apt with Sep. Entrance Location.. Location... Location...
Neilson/Finch
$179,900
3 storey condo Town house with 3bedrooms and 2 washrooms walk out basement, Totally Reno.. Renovated Townhome Top to Bot.. kitchen step to TTC and school convenient location
Oshawa Uoit
$289,900
Brand New Detached brick 2 Storey 4 bedrooms/ 2 full washrooms 5 Mins walk to UOIT Durham College Approx 2000 square feet Close to all Amenities
Middlefield / Finch
$184,900
Middlefield & Finch Condo 2 Bedrooms with 1 Full washroom Laminated floors , Great Layouts Step to GTA square Mall, Temple and TTC bus stop
Markham / Steeles
Building 'A'
$349,900
For sale or lease. Brand new 2 retail stores available High traffic area, Many Usage Facing Markham Road Exterior and interior entrances
Kennedy / Ellesmere
$159,900
3 Bedroom Condo 2 Full washrooms Location Location Location...... Step TTc, school & shopping, Minute to 401 Highland Farm., Rona, Metro, One Bus to Eglinton Station...
Scarboro Town Centre
Condo For Lease
$1300
1+1 Bedroom Condo 1 Full washrooms Location Location Location...... Step TTc, school & shopping, Minute to 401 Tridel Condo, Superb View Pool., Gym., Party Room.. and more
Markham / Steeles
$359,900
Detached 2 Storey Brick Home Well Maintained 3 Bedroom with Full Washroom & ½ Washroom Basement Partially Finished Location.. Location... Location...
Denison / Old Kennedy
$549,900
Detached 2 Storey Brick Home Well Maintained 4 Bedroom with 4 full Washroom. 2 Bedroom Basement Apt with Sep. Entrance Location.. Location... Location...
McCowan / Finch
$359,900
Semi Detached 2 storey Brick Home 3 bedroom with 2 full washrooms 2 Half Washroom Lots of upgrades. Convenient location.
McCowan/ Brimorton
$409,900
Detached Bungalow house 3 bedroom and 2full W/Rs Finished Basement apt with separate Ent. Totally Renovated Bungalow A+++
Midland / Lawrence
$389,900
2storey Newer Town house with 3bedrooms and 3 washrooms walk out basement with 1 Bedroom Convenient Location TTC, RT School, Shopping and all other amenities
Markham / Eglinton
$579,800
Detached 2 Storey Brick Home Well Maintained 4 Bedroom with 2 full W/room and Library Room Over 3000 Sft on 57 Frontage Lot Location.. Location... Location...
Gnan & Judy
REAL ESTATE
HOMELIFE
HIGHER STANDARDS
Gnanendran Narasingham
Sales Representative
CELL: 416.937.8090
Judy Gnanendran
Sales Representative
CELL: 416.629.9797
HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3
OFFICE: 416.321.6969

# வயிற்று வலி
# (Abdominal Pain)

வயிற்றுக்குத்து, வயிற்று வேதனை, குடல் வலி, வயிற்று நோ என்று பலவிதமாக அழைக்கப்படும் வயிற்று வலிக்கு பல காரணங்கள் உண்டு.

எமது உடலின் முண்டப்பகுதியை நெஞ்சறை, வயிறு, இடுப்புப் பகுதி எனப்பிரிக்கலாம். இதில் வயிற்று வேதனையானது வயிற்றுப் பகுதியினுள் இருக்கும் உறுப்புகளில் ஏற்படும் பிரச்சினைகளால் ஏற்பட்டாலும், நெஞ்சறை, இடுப்புப் பகுதிகளில் உள்ள உறுப்புகளும் வயிற்றுப் பகுதியில் ஏற்படும் வேதனைகளுக்குக் காரணமாகின்றன என்பதனை மறக்கக் கூடாது.

உணவுக்கால்வாயை எடுத்துக்கொண்டால் களம் இரைப்பை, இரைப்பைக் கழுத்து, சிறுகுடல், பெருங்குடல், நேர்குடல், குதம் போன்ற உறுப்புக்களுடே உணவு உட்சென்று பின்பு கழிவடைகின்றது.

பொதுவாக அதிகமாக உண்ணுதல், சமிபாட்டுக்குறைபாடு, அதிகளவு காரமான உணவு வகைகள், எண்ணைப்பதார்த்தங்கள், வயிற்றில் வாய்வு, நெஞ்செரிவு, வயிற்றோட்டம், மலச்சிக்கல், வாந்தி, உணவு நஞ்சாதல், உணவு ஒவ்வாமை என்பனவே சாதாரண வயிற்று வலிக்குக் காரணமாக அமைகின்றன.

வாயில் இருந்து வயிற்றுப்பகுதிக்கு உணவைக் கொண்டு செல்வது களம் என்னும் குழாயாகும், களத்தின் உட்பகுதியில் உள்ள மேலணிக்கலங்கள் வீங்கும் பொழுது களவீக்கம் ஏற்படுகின்றது. உணவு விழுங்கும் பொழுது மிகவும் வேதனையாக இருக்கும். மிகவும் சூடான பதார்த்தங்கள், மதுசாரம், காரமான உணவுப் பொருட்கள், சில வகையான சத்துக் குறைபாடுகள், கிருமித் தொற்றுக்கள் என்பனவற்றில் ஒன்றோ, பலவோ காரணமாகலாம்.

வயிற்றுப் பகுதியில் உள்ள இரைப்பையின் உட்பகுதி மேலணிக்கலங்கள் வீங்கும் பொழுது வயிற்று வலி உருவாகும். மேற்கூறிய காரணங்களுடன் பட்டினி, மனவிரக்தி போன்ற காரணங்களால் இரைப்பையில் சுரக்கப்படும் ஐதரொகுளோரிக் கமிலத்தின் அளவு கூடலாம் அல்லது வயிற்றினுட்பகுதியைப் போர்த்தியிருக்கும் பாதுகாப்பு மேலணிக்கலம் சிதைவடையலாம். அப்பொழுது இரைப்பையின் தசைப்பகுதி அமிலத்தினால் தாக்கப்பட்டு இரைப்பை வீக்கம், புண், மிதமிஞ்சிப் போகும் பொழுது இரைப்பையில் துவாரம் என்பன ஏற்பட்டுவிடும். நீண்ட காலமாக இருக்கும் வயிற்று வலிக்கு மேற்கூறிய வற்றுடன் இரைப்பைப் புற்று நோய், மற்றும் Helicobacter Pylori என்னும் பக்ரீரியா கிருமியின் தாக்கமும் காரணமாகலாம். பக்ரீரியா கிருமிக்கு மருந்துகள் உண்டு. வைத்தியரின் ஆலோசனைப்படி மருந்துகள் எடுத்தல் அவசியம்.

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் இன்சுலின் என்ற பதார்த்தத்தைச் சுரக்கும் சதையியில் ஏற்படும் வீக்கம் வயிற்று வலியைத்தரும்.

## இதயம் மலர்கிறது - 21

பித்தத்தைச் சுரக்கும் பித்தப்பையில் ஏற்படும் வீக்கம் பிறிதொரு காரணமாகும்.

வயிற்றினுள் உள்ள அமிலத்துடன் கலந்த உணவு இரைப்பையின் மேற்பகுதி யூடாக மீளவும் களத்தினுள் புகும்பொழுது களத்தில் வீக்கம் ஏற்படுகின்றது.

ஈரலில் ஏற்படும் அழற்சி அதைத்தொடர்ந்து காணப்படும் வீக்கம் வயிற்று வலியுடன் வலது தோள்முட்டில் ஒருவித வேதனையையும் தரும். இவ்வேதனையை ஈரலில் இருந்து தோளுக்கு நரம்பு ஒன்று கடத்துகின்றது.

வயிற்றில் இரைப்பை, சிறுகுடல் போன்ற பகுதிகளைச் சுற்றி சுற்றுவிரி காணப்படுகின்றது. இச்சுற்றுவிரி வீங்கும் பொழுது வயிற்று வலி ஏற்படும்.

சிறுகுடலில் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ ஏற்படும் தடங்கல் நிலையும் ஒரு காரணமாகும். சில சமயங்களில் சிறுகுடலின் குழாய்களில் சிறிய பைகள் போன்ற அமைப்புக்கள் சிலரிற்குக் காணப்படலாம். இச்சிறிய பை போன்ற அமைப்புக்கள் வீங்கும் பொழுது வேதனை ஏற்படும்.

சிலரது உணவுக்கால்வாய் சில உணவுப் பதார்த்தங்களை சமிபாடடையச் செய்யவோ அல்லது சில சத்துக்களை உள்ளூறிஞ்ச முடியாமலோ இருக்கும். இதற்கு உதாரணமாக லக்ரோஸ் சமிபாடின்மை, குளுட்டன் சமிபாடு அடையாமை என்பவைற்றைக் கொள்ளலாம்.

பித்தப்பைக் கற்கள், சிறுநீரகக் கற்கள், சிறுநீர்க் கால்வாய்க் கற்கள், சலப்பைக் கற்கள் போன்றவை வயிற்று வேதனையை ஏற்படுத்தும்.

குடல் வளரி நோய் மிகவும் பாரியதாக இருந்தால் அடுத்த கட்டமாக அது வெடித்து விடலாம்.

சிறுநீரகப் பகுதியில் ஏற்படும் சாதாரண கிருமித் தொற்று, பாலியல் நோய்க் கிருமித் தொற்று, உக்கிரமான தொண்டைப்புண், நெஞ்சுச் சுரம் போன்ற கிருமித் தொற்றுக்களும் வயிற்று வேதனையைத் தரலாம்.



உள்ளுடல் பிதுங்குதல் பற்றி ஏற்கனவே கட்டுரை வெளிவந்துள்ளது. வயிற்றுச் சுவர்களினூடே உள்ளுடல்கள் பிதுங்க முற்படும் பொழுது வேதனை உருவாகின்றது. பிரிமென்தகட்டினூடே இரைப்பை ஏறுதல், சிறு பிள்ளைகளில் தொப்புளினூடாக உள்ளுடல் பிதுங்குதல் என்பனவற்றைக் குறிப்பிடலாம். விபரமாக அறிந்து கொள்வதற்கு உள்ளுடல் பிதுங்குதல் கட்டுரையை வாசிக்கவும்.

இருதயத்தாக்கு நெஞ்சு, தோள் மூட்டு கழுத்துப் பகுதி, முதுகு போன்ற இடங்களில் மட்டும் உணரப்படுவதில்லை. வயிற்றுப் பகுதியிலும் இது வேதனையாக உணரப்படுகின்றது. பெரும்பாலும் பெண்களுக்கு இருதயத்தாக்கு வயிற்றுப் பகுதியில் வேதனையாக உணரப்படுகின்றது.

இரைப்பை, சதையி, குடல், பித்தப்பை போன்ற பகுதிகளில் ஏற்படும் புற்றுநோயை புறக்கணித்து விடக்கூடாது. வயிற்று நோய்க்கு



கந்தையா செந்தில்நாதன்
- Echo - Cardiographer -

பல காரணங்கள் இருப்பதால் நோயாளி கூறும் குணங்குறிகள், நாட்பட்டதன்மை என்பனவற்றை ஆராய்ந்து படிப்படியாக அதற்குரிய ஆய்வுகள் செய்து நோயானது கண்டு பிடிக்கப்படும்.

வயிற்றுப் பகுதிக்கு ஏதோவொரு காரணத்தால் குருதி வினியோகத்தடங்கல் ஏற்படும் பொழுது அப்பகுதியில் வேதனை உருவாகும். அரிவாள் உரு செங்குருதிச் சிறு துணிக்கைகள் இதனை உருவாக்கலாம்.

குடற்பெருனாடியில் ஏற்படும் உட்பக்கமான கிழிவு அல்லது வெடிப்பின் பொழுது வயிற்று வலி ஏற்படும்.

குடற்புழுக்களின் பெருக்கமும் அவற்றினால் குடலில் ஏற்படும் தடங்கலும் ஒரு காரணம். போதை மருந்துகள் வயிறு, இருதயம் போன்ற பகுதிகளைத் தாக்கி நோவை ஏற்படுத்துவதுடன் இளவயதினர் போதை மயக்கதில் தகாது உறவுகள் மூலம் பல நோய்களுக்கு ஆளாகலாம்.

பெருங்குடலின் உட்பகுதிகளில் தோன்றும் கட்டிகள் அனேகமாக குணங்குறிகளை ஏற்படுத்துவதில்லை. ஆனால் அவை வளர்ந்து தடங்கலை ஏற்படுத்தும் பொழுது நோவு ஏற்படலாம்.

மலம் தங்கி நிற்கும் நேர்குடலில் கிழிவு அல்லது மலவாசலில் ஏற்படும் வெடிப்பு என்பன வேதனையைத் தரும்.

குழந்தைகளில் ஏற்படும் குடலேறுதல் நோய் அதாவது சிறுகுடலின் ஒரு பகுதி மற்றதினுள் மடிந்து செருகுதல். இதனால் வேதனை ஏற்படும்.

நீண்ட நாட்பட்ட நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் இல்லாத பொழுது உடற் சக்தி பெறுவதற்காக குளுக்கோசிற்குப் பதிலாக உடம்பு கொழுப்பை அதிகம் பாவிக்கும். அப்பொழுது மிகுதியாக உண்டாகும் 'கீற்றோன்' என்ற பொருள் உடம்புக்கு நஞ்சாகி வயிற்று வலி, மயக்கம் என்பனவற்றைத் தோற்றுவிக்கும்.

பெண்களில் மாதவிடாய்க்காலங்களில், கற்ப காலங்களில் கருச் சிதைவு நிலை ஏற்படும் பொழுது இடம் மாறிய கருத்தங்கலின் பொழுது, கற்பப்பைகளில் கட்டிகள், சூலகங்களில் கட்டிகள் என்பன ஏற்படும் பொழுது வேதனை ஏற்படுகின்றது.

சூலகங்கள், கருப்பை என்பனவற்றில் ஏற்படும் புற்றுநோய், இடுப்புப் பகுதியில் ஏற்படும் பலவித தொற்றுநோய்கள் பலோப்பியன் குழாய்கள், சூலகங்கள் என்பனவற்றைத் தாக்குவதால் உருவாகும் வீக்கங்கள் என்பனவும் அடிவயிறு, வயிற்றுப்பகுதிகளில் வயிற்று வலியை எற்படுத்தும்.

வயிற்று வலிக்கு மேலும் பல காரணங்கள் உண்டு. அவற்றை விளக்குவதற்கு அதிகளவு விளக்கங்கள் கொடுக்கப்படுதல் வேண்டும்.

வயிற்று வலிக்கென்று வைத்தியரை அணுகும் பொழுது அதற்குரிய சரியான காரணங்கள் குணக்குறிகள், பரிசோதனைகள் மூலம் தீர்மானிக்கபட்டு மருந்துகள் வழங்கப்படும். அதற்குரிய அனுமானங்களும் வழங்கப்படும்.

senthilnathan.kandiah@thaiveedu.com

■ ■ ■

**TO LEARN FIRST AID & CPR IN ENGLISH AND TAMIL**
தமிழிலும் ஆங்கிலத்திலும் முதலுதவி பயிற்சி
**Dr. Kandiah Senthilathan**
- Standard First Aid & CPR Level "C" - 2 Days Program
- Emergency First Aid & CPR Level "A" - 1 Day Program
- CPR Level "A" - 4 Hours Program (Adult)
- CPR Level "C" - 8 Hours Program (Adult, Child, Infant)
- CPR Level "C" - 4 Hours Program - Renewal (Adult, Child, Infant)

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
Registered Medical Officer (SLMC), Acupuncturist (MAcF), First Aid & CPR Instructor (Certified in Canada)
647-801-9252
416-502-9252
ஆறு மாணவர்களுக்கு மேல் சேருமிடத்தில், உங்கள் இடத்திற்கு வந்து கற்பிக்கப்படும்.

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

# வீடு வாங்க விற்க



Kuga Raveendrarajah
Broker
Direct: 416-843-8585





Brimley & Denison
3+1 Bedrooms 4 Washroom



Mathan Selvendarakumaran
Sales Representative
Direct: 416-625-2870




Morningside & Finch
4 Bedrooms 3 Washroom




HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200

*Independently Owned and Operated, Realtor

# எமக்கென்று ஒரு தனிக்குடில்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்



TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS
UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT

MAILVAGANAM (MIKE) AHILAN
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
416-220-1184

VINCE SINNADURAI
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
416-917-9462

416.438.1688
Fax: 416 438 1612

RBC Financial Group

1421 Kennedy Rd,
Scarborough, ON. M1P 2L6

# நீங்களும் - நாங்களும்

**கருணா கோபாலபிள்ளை**
- வீடு விற்பனை முகவர் -



இன்றைய தகவல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி அளப்பரியது. அன்றாடம் எமது நடவடிக்கைகளை கூட நாம் மாற்றிக்கொள் வதற்கு திண்டாட்டமாக அபார வளர்ச்சியில் இத்தொழில் நுட்பம் வளர்ந்து செல்கிறது. புதுமைகளை விரும்பியோ அன்றி வேறு வழியின்றியோ நாம் ஏற்றுகொள்ள வேண்டிய கட்டாயத்திலுள்ளோம். பலருக்கு நன்மையும், சிலருக்கு நன்மையற்றும் காணப்படும் புதுமைகள், நல்லவையாகவே கருதப்படும். இவற்றில் சில ஆரம்பத்தில் அர்த்தமற்றதாக காணப்பட்டாலும் நாளடைவில் ஏற்றுக்கொள்ளக் கூடியனவாக காணப்படுகின்றது. உலகம் உருண்டை என்று கூறியதைக் கூட அந்த வேளையில் சமுதாயம் ஏற்றுக்கொள்ளவில்லை தானே. அந்த வகையில் அண்மையில் வீடு விற்பனை துறை பற்றிய பல சர்ச்சைகளை நீங்கள் யாவரும் அறிந்திருப்பீர்கள். அதாவது ஆரம்ப காலங்களில் இவ்விற்பனை முறையானது மிகவும் குறுகிய பார்வையில் (காதும் காதும் வைப்பது போன்று) இடம்பெற்றது. பின்னர் வளர்ச்சி கண்டு சற்று வெளிப்படையானது, பின்னர் ‘MLS’ முறை மூலம் சற்று பரவலாக்கப்பட்டது. அதன் தகவல்கள் யாவும் பதிவுசெய்யப்பட்ட முகவர்களுக்கு வழங்கப் பட்ட வேளையில் பொதுமக்கள் பார்வையிடுவதற்காக அதன் ஒரு பகுதி மட்டும் வழங்கப்பட்டது (சில சட்ட அமைவுகளுக்கு கட்டுப்பட்டது). தற்போது பொதுமக்களுக்கு கூடிய சலுகைகள் வழங்கும் நோக்கோடு சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளது. அதற்கமைய வீடு விற்பனை துறையினரும் செயற்படலாம்.

இவ்வாறு பரிணாம வளர்ச்சி பெற்றுவரும் இத்துறைசார் தகவல்கள் பொதுமக்கள் சார்பில் எவ்வாறான கண்ணோட்டத்தினை பெற்றிருக்கின்றது. அல்லது எவ்வாறான மாற்றங்களை நாம் எதிர் நோக்குகின்றோம் என்பதனையும், இத்துறை சார்பினர் (என் போன்றோர்) கொண்டுள்ள கருத்துக்களையும் ஆராய்ந்து கொள்வதே “நீங்களும் - நாங்களும்.”

வீடு பரிமாற்றம் ஒன்றினை மேற்கொள்வதற்கு வீடு விற்பனைத் துறையில் பணியாற்றும் முகவர்கள் எவ்வாறான சேவைகளை செய்ய கடமைப்பட்டிருக்கின்றனர் என்பதனையும் அதற்காக அவர்கள் எவ்வாறு தயார் படுத்தப்பட்டுள்ளனர், எவ்வாறான தகவல்களைப் பெற்றுள்ளனர் என்பதும், நடைமுறை சட்ட விதிகளுக்கு கட்டுப்பட்டு இயங்கும் அமைப்புக்களுடன் சேர்ந்து இயங்குகிறார்களா என்பதும் அவசியம். அந்த வகையில் இத்தகவல்களை இரண்டு பிரிவுகளாக பார்ப்போம்.

முதலாவது ஒரு வீட்டினை சந்தையிலிட்டு படிப்படியான சேவைகள் மூலம் அதற்கான கொடுக்கல் வாங்கல்களை நிரைப்படுத்தி வாடிக்கையாளரின் தேவையை பூர்த்தி செய்வது.

இரண்டாவது, வீடொன்றினை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் அதன் நன்மை தீமைகளை அறிந்து விரும்பிய பகுதியில் விரும்பிய முறையில் சட்ட விதிகளுக்கமைவாகவும் அதே வேளை தேவைகளைப் பூர்த்திசெய்ய வல்லனவாகவும் மட்டுமன்றி ஓர் தரமான முதலீடாகவும் உங்கள் வீட்டினை தெரிந்தெடுப்பதற்கு துணைபோதல்.

## வீடு விற்பனை முகவர் உங்கள் வீட்டினை விற்பதற்கு எவ்வாறு செயற்படுகின்றார்?

குறிப்பிட்ட பகுதியில் அமைந்திருக்கும் உங்கள் வீட்டினை பார்வையிட்டு அதிலுள்ள குறைகளை கண்டறிந்து தெரியப்படுத்துதல், உங்கள் உதவியுடன் அவற்றினை சீர் செய்து சந்தைப்படுத்துவதற்கு தயார்படுத்துதல். பின்னர் ஒழுங்குபடுத்துதல் அதாவது பார்வைக்கு ஏற்ப சீர்செய்தல். உரியவர்களை கொண்டு படம்பிடித்தல் மற்றும் சந்தைப்படுத்துவதற்கு ஏற்ற வழிமுறைகளை கையாண்டு உங்கள் வீட்டினை பலர் பார்வையிடுவதற்கு ஏற்ப வெளிக் கொணருதல், போன்ற ஆரம்ப செயற்பாடுகளின் பின்னர் உங்கள் வீடானது இன்றைய போட்டிச் சந்தையில் அறிமுகப்படுத்தப்படுகின்றது. இத்தகவல்களை கண்டறிவதற்காக நாம் பல தகவல் களஞ்சியங்களை உபயோகிக்கின்றோம். அதாவது அண்மையில் உங்கள் பகுதியில் விற்கப்பட்ட வீடுகளின் தரம், விலை மற்றும் உங்கள் வீட்டின் தரம், அருகிலுள்ள சலுகைகள், வசதிகள். இன்னும் பல. இவ்வாறு சந்தைப்படுத்தப்பட்ட வீட்டினை வாங்குவதற்காக வருபவர்களிடம் நாம் படிமுறையாக பின்வருமாறு செயற்படுகின்றோம்.

## ஒப்பந்தத்தில் பேரம் பேசுதல்:

- உங்களுக்கு வந்திருக்கும் வாய்பினை விளக்கி உங்கள் கேள்விகளுக்கு பதில் அளித்தல்.
- உங்களுக்கு வந்திருக்கும் வாய்ப்பின் சாதக மற்றும் பாதகங்களை அலசி ஆராந்து உங்களுக்கு வேண்டிய விருப்ப மாற்றங்களை தெரிவித்தல்.
- வரையறுக்கப்பட்ட விலைப் பட்டியலின் மூலம் உத்தேசமாக சொத்தின் மதிப்பை கணிப்பிடல்.
- உங்கள் நன்மை கருதி சாதகமாக செயற் பட்டு, வாங்கும் முகவரிடம் பேரம் பேசுதல், அதுமட்டுமல்லாது இறுதி ஒப்பந்தம் வரையில் உங்களுக்கு தகுந்தவாறு உங்கள் சார்பில் செயற்படுதல்.

## விற்பனையினை செய்து முடித்தல்:

- ஒரு வெற்றிகரமான விற்பனை என்பது அதன் முடிவுவரை நீடிக்கும். அதுவரை உங்கள் எல்லா கேள்விகளுக்கும் தகுந்த விடைகாணுதல்.
- வாங்குபவரின் முகவர், Mortgage முகவர், சட்ட நிபுணர் மற்றும் இக்கொடுக்கல் வாங்கலில் சம்பந்தப்படும் அனைத்துத் தரப்பினரதும் கேள்விகள் சந்தேகங்களை உரிய முறையில் அணுகி இப்பரிமாற்றத்தின் அங்கமாக செயற்படுதல்
- வாங்குபவர் சம்பந்தப்பட்ட நிதி நிலைமைகள், அவரது கடன் நிர்ணய அளவு வரப்போகின்ற பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகள் குறித்து விளக்குதல். அனுசரனையாக இருப்பது மட்டுமன்றி சரியான நேரத்தில் முடித்தல்.
- வாங்குபவரையும் அவரது முகவரையும் இறுதியாக விட்டினை பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கி எதிர் காலத்தில்வரும் ஏமாற்றங்களை தவிர்த்துக் கொள்ளல்.
- ஓர் முழுமையான கொடுக்கல் வாங்கல் நடைபெறுவதற்கு உங்களுக்கு எல்லா விதத்திலும் உதவியாக இருந்தல்.
- சரியான இடைவெளிகளில் உங்களைத் தொடர்புகொண்டு, வீடு விற்று முடிப்பதற்கு இடையேயான செயற்பாடுகளை சட்டமுறைகளுக்கு அமைவாக செய்து முடித்தல்.

## விற்பனையின் பின்னர்:

- தற்போது சந்தையிலிடப்பட்ட தரமான வீடுகள் பற்றிய தகவல்களை வழங்குதல்.
- மீண்டும் விற்பனை மற்றும் கொள்வனவுகளில் துணைநின்று உங்கள் தேவைகளையும், சந்தேகங்களையும் அறிந்து உங்களில் ஒருவராக செயற்படுதல்.

மேற்கூறியவாறு ஒரு வீடு விற்பனை முகவர் தமது தகைமையினையும், அனுபவத்தினையும் உங்களுக்கு சேவையாக வழங்க கடமைப்பட்டுள்ளார்கள். சாதாரணமாக சில ஆயிரம் டொலர் பொறுமதியான பொருட்கள் சேவை கள் பெறுவதற்கே அனுபவஸ்தர்களையும், அத்துறை சார் நிபுணர்களையும் அணுகுகின்றோம். ஏனெனில், எதிர்காலத்தில் ஏற்படும்



ஏமாற்றத்தினை தவிர்த்துக் கொள்வதற்காகவும் முறைப்படி காரியம் ஆற்றுவதற்காகவும். இவ்வாறிருக்கையில் ஓர் பாரிய முதலீடு, எமது வாழ்க்கையின் பெரும் பகுதியினை கழிக்கும் இடம் எனும் போது முன்கூட்டியே உரியவர்களை அணுகிக் கொள்வது புத்திசாலித்தனம்.

மேலே கூறியது போன்று வீடொன்றினை நீங்கள் பெற்றுக்கொள்வதற்கு வேண்டிய ஒழுங்குகளை ஓர் முகவர் எவ்வாறு மேற்கொள்கின்றார் என்று பார்ப்போம்.

உங்கள் கனவு இல்லத்திற்கான தேர்வின் முதற்படி, நீங்கள் உங்களுக்கென ஓர் முக வரை தெரிவு செய்வதே. அவருடன் மனம் திறந்து நீங்கள் வழங்கும் உங்கள் தகைமைகள், விருப்பங்கள், தேவைகள், ஆசைகளைப் பொறுத்து அவர் தனது சேவையினை வழங்குவார். பொதுவாக ஓர் முகவரை தெரிவு செய்வது என்பது வேலைக்கு நேர்காணல் செய்தல் போன்றது. இதற்காக நீங்கள் ஒன்றிற்கு மேற்பட்டவரை அணுகி அவர்களிடம் கேள்விகள் கேட்பதன் மூலம் உங்களுக்கு சேவை செய்வதற்கு தகுதியானவரா என்பதனை தெரிந்து கொள்ளலாம். அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர் பின்வருமாறு செயற்படுகிறார்.


Pre qualifying or Pre approval என்று சொல்லக்கூடிய உங்களைத் தகைமைப்படுத்துதல். அதற்காக உங்களின் வருமானம், செலவு, சேமிப்பு போன்றவற்றின் அடிப்படையிலும் உங்கள் Credit தகைமையின் அடிப்படையிலும் மோட்கேஜ் அல்லது வங்கி முகவரின் உதவியுடன் நீங்கள் எவ்வளவு கடன் பெறும் தகுதியிலுள்ளீர்கள் என்பதனை கண்டறிந்து சொல்லுவார். அதற்கமைவாக நீங்கள் ஏற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் உங்கள் விருப்பத்திற்கு ஏற்றபகுதியில் நீங்கள் குறிப்பிட்ட வசதிகள் பொருந்திய வீடுகளை தேர்ந்தெடுத்து வழங்குவார். அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்ட வீடுகளில் மீண்டும் சுமார் 5-6 வீடுகள் மீள்தெரிவு செய்யப்பட்டு அவற்றினை நேரடியாக சென்று பார்வையிட உதவுவார். ஒவ்வொரு வீட்டினையும் பார்வையிடும் வேளைகளில் உங்கள் கேள்விகளுக்கு தகுந்த விளக்கங்கள் அளிப்பது மட்டுமன்றி அவ்வீடுகளிலுள்ள குறை நிறைகளையும் தெரியப்படுத்துவார். இச்செயற்பாடானது சுமார் இரண்டு வாரம் தொடக்கம் இரண்டு மாதம் வரை கூட செல்லலாம். Pre qualifying இல்லாமல் வீணே உங்கள் பொன்னான நேரத்தினை விரயம் செய்பவர்களை நீங்கள் தெரிந்தெடுத்தால் உங்கள் இருவரது நேரமும் வீணடிக்கப்பட்டுவிடும்.

அடுத்தாக நீங்கள் தெரிவு செய்த வீட்டினை வாங்குவதற்கு உரிய ஆயத்தங்களை மேற்கொள்ளல். சட்ட விதிகளுக்கு அமைவாக உங்களையும் உங்கள் விருப்பங்களையும் பாதுகாக்கும் வண்ணம் முறையான Offer இனை தயார் செய்து அவ்வீட்டின் விற்பனை பிரதிநிதியுடன் பேரம் பேசி சந்தையில் அவ் வீட்டின் மதிப்பினை கணிப்பிட்டு அவ்விலைக்கு மேற்படாதவாறு வாங்கி கொள்ளலாம். அது மட்டுமன்றி தகைமையுள்ள வீடு பரிசோதகர்களை நியமித்து அவரின் உதவியுடன் அவ்வீட்டினை நன்றாக பரிசோதித்து முடியுமெனின் விற்பனையாளர்களின் உதவியுடன் திருத்த வேலைகளை மேற்கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
இவ்வாறு முடிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அவ்வீட்டினை வாங்குவதற்கு இடைப்பட்ட காலங்களில் வழக்கறிஞருடன் தொடர்பு கொள்ளல் மற்றும் மோட்கோஜ் ஒழுங்குகள் செய்வதற்கு துணைபோதல், மீண்டும் அவ்வீட்டினை பார்ப்பதற்கு அழைத்துச் செல்லுதல் போன்ற செயற்பாடுகளிலும் உங்களுடன் ஒத்துளைப்பார்.

ஆரம்பத்தில் கூறியது போன்று இன்றைய தகவல் பரிமாற்ற வளர்ச்சியானது மொத்தத்தில் எமக்கு அளப்பரிய நன்மைகளை புகுத்தியுள்ளது. அதன் அடிப்படையில் இன்று தெரிவுகள் என்பது இலகுவாகிவிட்டது. இருப்பினும் உங்கள் தெரிவுகள் சரியானதா என்பதற்கு அனுபவஸ்தர்களின் ஆலோசனைகள் அவசியம். அதன் மூலம் எதிர்கால ஏமாற்றங்களில் இருந்து விடுபடலாம். “இதனை இவன் நன்று ஆற்றுமென கண்டு அதனை அவன் கண் விடல்” எனும் கூற்றிற்கு இணங்க எத்தொழில் ஆயினும் அதனை திறம்பட செய்பவர்களின் சேவையினை அறிந்து பெற்றுக் கொள்ளுங்கள். மீண்டும் மீண்டும் வரும் இதழ்களில் இணைந்து கொள்வோம்.

karunagopalapillai@thaiveedu.com

■ ■ ■





**Full-time Real Estate Agent**

# Nada G. Nadarajah B.V.Sc

Sales Representative

**Call Me @ 416 616 8751**

"An award-winning realtor with 14 years experiance".




**Markham & Sheppard**
Condo. Apartment
2 Bedrooms - 2 Washrooms
Close to Schools & Major Plazas




**McCowan & Highglen**
2-Storey Detached
4+1 Bedrooms - 5 Washrooms
Newly Finished Basement




**McClevin & Neilson**
Condo. Apartment
2 Bedroom - 2 Washroom
Approx. 1000 Sq. Ft

HomeLife
Landmark Realty Inc., brokerage
*5200 Finch Ave. E, Suite 106*
*Toronto, ON M1S 4Z4*
*Bus: 416 293 5093*
*nanadarajah@trebnet.com*

HOMELIFE HIGHER STANDARDS





**Derry & Rexwood**
2 Storey Condo. Townhouse
3+1 Bedrooms - 4 Washrooms
Basement Apartment




**McLaughlin & Sandlewood**
2 Storey Detached
3 Bedrooms - 2 Washrooms
5 Years Old.




**McCowan & McNicoll**
2 Storey Detached
3+1 Bedrooms - 3 Washrooms
Basement Apartment



416 803.7344 JUSTIN WILLIAM *



416 817.8479 RAVI Raveendran *



416 858.4828 SASI Chelvaratnam **

**Warden & Steeles $379,000**



*Semi Detached *3 Bedrooms *Totally Renovated House. *Huge Back Yard. *Basement Apartment With Sep Entrance

**Mccowan/Bur Oak $484,900**



*Detached House *4 Bedrooms *Super Clean * Approx. 2200 sq ft *Family Size Kitchen

**Middlefield & Finch $199,900**



*2 Bedroom & 2 Full Baths *2 Full Baths Ensuite Laundry * Lots Of Upgrades *Steps To Ttc *Shops And GTA Square

**Lucky Draw On August 29, 2010 at GTA Square**



First Prize



Second Prize



Third Prize

*Some condition may Apply*

**1st Prize: Brand New BMW 2010 Model 3 series**
**2nd Prize: Vacation Package to CUBA for a week for 2**
**3rd Prize" 42" LCD TV**
**10 Consolation Prizes.**

*Our way to say thanks to our clients...*

*Lucky draw is Absolutely Free For Our Valuable Clients.*

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife GTA Realty Inc. Brokerage*
1711 McCowan Rd. Suite 206
Scarborough Ont.
**Office: 416-321-6969**

This is not intended to Solicit seller or Buyer currently Under Contract with Brokers

Independently Owned and Operated*
* Broker ** Sales Representative

# உணவுப் பழக்கமும் தெரிவும்

(தொடர்ச்சி)

உணவு என்பது ஒரு முடிவற்ற வாதம். உணவுத் தேடுதலும் தெரிவும் தற்போது பலருக்கும் பெரும் பிரச்சினையாகி நிற்கின்றது. கடைகளில் மரக்கறித் தட்டிலேயே சாதாரண மரக்கறி என்றும் Organic food என்றும் வித்தியாசமான தட்டுக்கள் உண்டு. இந்த Organic food என்றால் என்ன? செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட இரசாயன உரம், பூச்சி கொல்லி மருந்து போன்றவைகளை பயன்படுத்தாமல், இயற்கையான முறையில் உற்பத்தி செய்யப்பட்டும் அதே சமயம் இரசாயனப் பொருட்கள் பாவிக்கப்படாது பாதுகாக்கப்படும் மரக்கறி, தானிய வகைகள் தான் இந்த Organic food ஆகும். வட அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் செயற்கை உரங்களைப் பயன்படுத்தாமல் இயற்கை உரங்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யும் இம் மரக்கறி, தானியங்களுக்கு வரவேற்பு அதிகரித்துக் கொண்டு வருகிறது.

போலாந்தில் வருடத்திற்கு 45 மில்லியன் டாலர் மதிப்பிற்கு Organic food என்று அழைக்கப்படும் இயற்கை உணவு தானியங்கள், பழம், காய்கறி போன்றவை விற்பனை ஆகின்றன. இதன் தேவை வருடத்திற்கு 20 விழுக்காடு அதிகரித்து வருகிறது என ஒரு ஆய்வு கூறுகின்றது. கனடாவில் மாத்திரம் கிட்டத்தட்ட 53,000 hectares நிலத்தில் இரசாயன உரங்கள் பாவிக்கப்படாத உணவு (Organic food) தயாராகின்றது. இதன் உற்பத்தி வருடத்திற்கு வருடம் அதிகரித்துக் கொண்டே போகின்றது என கனடாவின் உணவு உற்பத்தித் திணைக்களம் அறிவித்திருக்கின்றது.

## ஏன் Organic food சிறந்தது எனக் கொள்ளப் படுகின்றது?


செயற்கை முறையில் இரசாயனப் பொருட்கள் பாவித்து உற்பத்தியாக்கும் தானியங்கள், மரக்கறி வகைகளை விட Organic food சுவை மிகுந்தது. Organic food கனிமங்கள் கூடியதாகக் கூறப்படுகின்றது ஆனால் இதற்கு முழுமையாக நிரூபிக்கக் கூடியவகையில் ஆதாரங்கள் இல்லை. உடல் நலவியலைக் கருத்திற் கொண்டால் பயிரிடுதலுக்கு உபயோகிக்கப்படும் இரசாயனப் பொருட்களானது சுற்றுச் சூழல், நீர், போன்றவற்றை மாசுபடுத்துவது மட்டுமல்லாது மனிதனுக்கும் விலங்குகளுக்கும் கூட வெவ்வேறு வகையான உடல் நலக் குறைவினை உண்டாக்குகின்றன. ஆனால் இந்த Organic food தயாரிப்பிற்கு இரசாயனப் பொருட்கள் பாவிக்கப்படாததால் இவ் உணவுப் பொருட்கள் உடல் நலத்திற்கு உகந்ததாகக் கூறப்படுகின்றன. அதுமட்டுமல்ல மிகவும் முக்கியமாகக் கூறப்போனால் இவ் உணவுவகை செயற்கை முறையில் மரபணு (genetically modified) மாற்றம் செய்யப்படாதவை ஆகும்.

## Genetically modified food (மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவு)

மரபணு என்றால் என்ன? ஒரு சந்ததியிலிருந்து மறு சந்ததிக்கு இயல்புகளை எடுத்துச் செல்லும் அணுக்கள் மரபணுக்கள் (DNA) எனப்படும். இம் மரபணுக்கள் சம்பந்தமான ஆய்வுகள் இன்னமும் தொடர்ந்து செல்கின்றன. மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவு எனப்படுவது மனித அல்லது மிருகங்களின் உணவுத் தேவையினை நிவர்த்திப்பதற்காகவும் சுலபமாக்குவதற்காகவும் தாவரங்களின் இயற்கையான செயற்பாடுகள் மாற்றம் செய்யப்படுவதாகும். பொதுவாக எந்த ஒரு செயற்பாட்டிலும் நன்மையும் அதேசமயம் தீமையும் காணப்படும். அதேபோல் தான் விவசாய ரீதியில் இந்த மரபணு மாற்றத்திலும் சில நன்மைகளும் தீமைகளும் காணப்படுகின்றன.

மரபணு மாற்றம் செய்வதால் விவசாயத் துறையில் சில நன்மைகள் ஏற்படுகின்றன. இவ்வாறு மரபணு மாற்றம் செய்வதால் சில தாவரங்கள் கடும் குளிரினையும் அதேசமயம் கடும் வரட்சியைத் தாங்கக் கூடியனவாகவும், மேலதிக விளைச்சலைத் தரக் கூடியதாயும் சில நோய்களிலிருந்து பாதுகாக்கப்படக் கூடியவையாகவும் அல்லது நோய்களை எதிர்க்கக் கூடியவையாகவும், மேலும் வேண்டிய விதத்தில் அந்த தாவரங்களின் குணாதிசயங்களை மாற்றக் கூடியதாயும், அரிசி போன்ற கனிமங்கள் குறைந்த உணவுப் பொருட்களை கனிமங்கள் கூடியவையாக மாற்றவும், உதவுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இதில் மிகவும் பரிச்சயமானது "golden rice" எனப்படும் அரிசியாகும். இந்த மரபணு மாற்றம் ஒரு தாவரத்திலிருந்து இன்னொரு தாவரத்திற்கு மட்டும் செய்யக் கூடியது மட்டுமல்ல தாவரமற்ற ஒரு உயிரினத்திலிருந்து தாவரத்திற்கு கூட இம் மரபணு மாற்றம் செய்யலாம். இதற்கு மிகவும் சிறந்த உதாரணமாக இயற்கையாக வளரும் Bacillus thuringiensis என்னும் பற்றீரியம் சோளத்தில் மாற்றிடு செய்யப்படுகின்றது. இந்த பற்றீரியாக்கள் ஒரு வகையான பளிங்கு புரதத்தினை உருவாக்கும். இப் புரதமானது பூச்சிகளைக் கொல்லக் கூடியதாகும். அதாவது அந்தத் தாவரமே தனக்குரிய கிருமி நாசினிகளை உருவாக்கும்.

## மரபணு மாற்றம் செய்த உணவுப் பொருட்கள் ஏன தீங்கானவை




எதிலும் மனிதன் சுலபமான வழிகளைத் தேட ஆரம்பித்து விட்டான். இது உணவுத் தெரிவில் கூட புலனாகின்றது. பொதுவாக பலர் விதையற்ற தோடம்பழம், முந்திரிகைப் பழம் போன்றவற்றை வாங்குவதே அதிகம். விதையினை எடுத்து சாப்பிடுவதற்கு எமக்கு நேரமும் பொறுமையும் இருப்பதில்லை. இயற்கைக்கு முரணாக மரபணு மாற்றம் செய்யப்பட்ட பழவகையினை வாங்குவதைத் தவிர்த்து இயற்கை வழியில் விளைவதினை வாங்குவதே சாலச் சிறந்தது. தற்போது பல சிறார்களுக்கு நிலக்கடலை, முட்டை, போன்ற சில வகை உணவுப் பொருட்களுக்குரிய ஒவ்வாமை உண்டு. இவ் ஒவ்வாமை சில சமயங்களில் உயிராபத்தினை விளைவிக்கக் கூடியதாக அமைந்து விடுகின்றது. இவ்வாறு ஒவ்வாமை உடையவர்கள் மரபணு மாற்றம் செய்த உணவினை உண்பது தவிர்க்கப்பட வேண்டிய ஒரு செயலாகும். ஒரு தாவரத்தில் மரபணு மாற்றம் செய்யும் போது அது சில சமயங்களில் இவ் ஒவ்வாமைக்கு உரிய allergen (ஒரு வகைப் புரதம்) காரணிகளை உருவாக்குவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## என்ன வகையான தாதுப் பொருட்கள் எமது நாளாந்த செயற்பாடுகளை குழப்புகின்றன அல்லது ஊக்குவிக்கின்றன.

சில உணவு வகைகள் கூட நித்திரையினைத் தூண்டக் கூடியவை எனவும் சில உணவுகள் நித்திரையினைக் குழப்பக் கூடியன எனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ் உணவு வகைகள் sleepers and wakers என அழைக்கப்படும். எமது மூளையானது அமைதி நிலையில் இருந்தால் தான் தூக்கம் வரும். இவ்வாறு மூளையின் sleepers எனப்படுபவை tryptophan என்னும் அமினோ அமிலத்தினைக் கொண்ட உணவுகளாகும். இந்த அமினோ அமிலம் உடலில் செரிரோனினின் உற்பத்தியினை அதிகரிக்கும்.

## நித்திரையினைத் தூண்டக் கூடிய உணவு வகைகள்

உணவு எவ்வாறு நித்திரையினைத் தூண்டக் கூடியது எனப் பார்த்தால் நாம் உணவினை உட்கொள்ளும் போது நான்கு மிக முக்கியமான மூலக் கூறுகள் உள்ளெடுக்கப் படுகின்றன. அவையாவன கொழுப்பு, புரதம், காபோவைதரேற்று சில வகையான அமிலங்கள். இதில் கொழுப்பும் மாச்சத்து எனப்படும் காபோவைதரேற்றும் உடலுக்கு சக்தியினைக் கொடுக்கக் கூடியவை. இந்த சக்தியானது பாவிக்கப் படாது விடின் இது வெப்பமாக மாற்றப்படும். மாச்சத்தானது எமது உடலில் செரிரோனின் (serotonin) அளவை அதிகரிக்கச் செய்யும். இந்த செரிரோனின் என்பது நித்திரையினைத் தூண்டக் கூடிய ஓமோன் ஆகும். இரவில் நிறைய உணவு உட்கொள்ளும் போது அது சமிபாடடைய நீண்ட நேரம் எடுக்கும். இதேபோல் படுக்கைக்கு போகுமுன் கிட்டத்தட்ட இரண்டு மணிநேரத்திற்குள் உணவு அருந்தி இருந்தால் அது உடலின் வெப்பநிலையினை அதிகரிக்கும். இவ்வதிகரிப்பு தூக்கத்தினை குழப்பும். இதனால் தான் பகலில் பெரிய பகுதி உணவினையும் இரவில் சிறிய அளவிலான உணவினையும் உள்ளெடுக்க வேண்டும் என வைத்தியர்கள் ஆலோசனை கூறுவார்கள்.

கொழுப்புச் சத்துக் கூடிய உணவு நித்திரையினைக் குழப்பக் கூடியதாக இருந்த போதிலும் ஒவ்வொரு நாளும் போதியளவு omega-3 fatty acids உங்களுக்கு கிடைக்கின்றதா எனப் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். Tuna, salmon, trout போன்ற மீன்வகைகளில் இருக்கும் ஒருவகையான omega-3 fatty acid ஆனது எமது மூளையில் நித்திரையினைத் தூண்டக் கூடிய தன்மையுடையது.

சிவாஜினி பாலராஜன்



செரிப்பழங்கள் (cherry) மிகவும் கூடிய கனிமங்களைக் கொண்டிருப்பது மட்டுமன்றி melatonin என்னும் ஒரு பொருளையும் கொண்டிருக்கும். இந்த மெலரோனின் மனித உடலுக்குத் தேவையானது மட்டுமல்லாது தூக்கத்தினையும் கட்டுப் படுத்தக் கூடியது. மேலும் மாச்சத்துள்ள உணவினை இரவில் உட் கொள்வதும் நித்திரையினை ஏற்படுத்தும். ஆனால் மேலதிக மாச்சத்தினை இரவில் உட்கொள்வதால் உடல் நிறை அதிகரித்து விடும். அது மட்டுமல்ல நீரிழிவு நோயுள்ளவர்களுக்கு குருதியில் சர்க்கரையின் அளவு அதிகரித்து விடும்.

ஒரு கப் மெல்லிய சூடான பால் குடித்து விட்டு படுக்கைக்குச் செல்வது நித்திரையினத் தூண்டுவதாக கூறப்படுகின்றது. பாலில் உள்ள கல்சியம் நரம்புகளை ஓய்வாகச் செய்கின்றது. இரவில் வாழைப்பழம் சாப்பிடுவது கூட நித்திரையினைத் தூண்டக்கூடியது. ஏனெனில் வாழைப்பழம் மெதுவாகத் தான் சமிபாடடையும். இவ்வாறு மெதுவாக சமிபாடடையும்போது மெதுவாக செரிரோனின் சுரக்கப்படும். chamomile tea அருந்தினால் அது உடலையும் மூளையினையும் ஓய்வுக்கு கொண்டு வருவதால் தூக்கம் சுலபமாக வரும்.

## நித்திரையினைக் குழப்பக் கூடிய உணவுகள்:

### Caffeine

நித்திரைக் குறைபாடு உள்ளவர்கள் இரவில் கோப்பி, தேநீர், சோடா, சொக்லேட் போன்ற Caffeine உள்ள பொருட்களை இரவில் அருந்துவதை முற்றாக நிற்பாட்ட வேண்டும். கோப்பி குடிக்கும் பழக்கத்திலிருந்து விடுபடுவது என்பது மிகவும் கடினமான காரியம். இதிலிருந்து விடுபடுவது கூட ஒருவிதமான withdrawal symptomsஇனை உருவாக்கும். இவ்வாறான அறிகுறிகளாவன தலைவலி, சோர்வு, சுரம் இருப்பது போன்ற உணர்வு, மேலும் எதிலும் முழுமையாகக் கவனம் செலுத்த முடியாமை போன்றவையாகும். ஏரேயடியாக Caffeine எடுப்பதை நிற்பாட்டாது மெல்ல மெல்லமாக நிற்பாட்டினால் இவ்வாறான withdrawal symptoms ஏற்படாது தடுக்கலாம்.

### Spicy foods, மதுபானம், மேலதிக கொழுப்பு உணவு:

இரவில் வாசனைத் திரவியங்கள் அல்லது உறைப்பு கூடிய உணவுப் பொருட்கள், கொழுப்புக் கூடிய உணவு, எண்ணெயில் பொரித்த உணவு உண்ணுதல், மதுபானம் அருந்துதல் என்பவையும் தூக்கத்தினைக் குழப்பும்.

தொடரும் ......

sivagini.bala@thaiveedu.com

■ ■ ■

**போர்க்குற்றங்கள், இனப்படுகொலை பற்றிய பேரரங்கு**

போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மனித உரிமைகளுக்குமான நடுவத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வில் பங்கு கொள்ள அழைக்கின்றோம்

**மே 15, 2010**

சனிக்கிழமை காலை 9.30 தொடக்கம் மாலை 4.00 மணி வரை


Sheraton Parkway Hotel
600 Highway 7 East, Richmond Hill, On L4B 1B2

www.cwvhr.org or, info@cwvhr.org, 416 628 1408.

# அழகிய பூஞ்செடிகள்

# கிளெமற்றிஸ்
# (Clematis)

வீட்டுத் தோட்டம் - 27



செல்லையா சந்திரசேகரி

### அறிமுகம்:

கிளெமற்றிஸ் குடும்பம் றனன்குலேசியேயைச் (Family Ranunculaceae) சேர்ந்தது. இவ்வர்க்கம் ஆயிரத்திற்கும் மேலான இனங்களைக் கொண்டது. இருந்தும் ஏறக்குறைய 200 இனங்களையே பிரியர்கள் வழமையாகத்



தெரிவுசெய்து பயிரிடுவார்கள். எந்தத் தோட்டத்திலும் அழகு, தோற்றம், தகுந்த இடம் போன்றவற்றைக் கவனத்தில் வைத்து பல வழிகளில் செடிகளை வளர்ப்பார்கள். இது, பற்றிப் படரும் செடியாக இருப்பதால் குறிப்பாக படர்ந்து ஏறுவதற்குப் பல வடிவுகளில் ஆதரவுகள் கொடுக்க வேண்டியிருக்கின்றன. சொற்பதம் 'Clematis' Greek ஆரம்பமாக 'Vine' என குறிக்கப்படும்.

### தெரிவும், வளர்க்கும் முறைகளும்:

இச்செடியானது அமெரிக்க நாடுகளில் மிகவும் பிரபல்லியமாகப் பூக்கின்ற பற்றிப் படரும் செடியாகும். செடியினை வளர்ப்பதர்க்குத் தெரிவு செய்யும் போது விற்பனை நிலையங்களில் நல்ல ஆரோக்கியமும் குளிர்ச்சியும் நிறைந்த ஒன்றினை வாங்க வேண்டும். வருடத்தில் எந்தக் காலமும் சாடிகளில் வைப்பதற்காக தெரிவு செய்யலாம். ஆனால், இளவேனீர்க் காலத்தில் தெரிவு செய்வது மென்மையானதும் பச்சைநிறமானதும் உகந்ததாகவும் இருக்கும். செடிகள் போசாக்கு நிறைந்த பசளையை விரும்பும். அளவான ஈரத்தன்மை போதுமானது. அமிலமற்ற தன்மையான மண்ணில் நன்கு விருத்தியடைந்தாலும் (7க்கு மேற்பட்ட pH), நடுத்தர, அமிலத்தன்மைகளிலும் வளர்வதை நாம் அவதானிக்கின்றோம். நடும்போது குழிகள், செடியின் குமிழ்கள் நில மட்டத்திற்கு கீழாக இருக்குமாறு தோண்டப்பட வேண்டும். வேரின் குமிழ் சுற்றி இலைப்பசளை போட்டு நன்கு நீர் விடவேண்டும். செடியானது நீர்த்தன்மையை ஓரளவு வைத்திருப்பதற்காக நிழலான இடங்களில் செடிகளை வளர்ப்பார்கள். இச்செடி நட்டு உடனடியாகக் கூடிய பூக்களைத் தரமாட்டா. ஏறக்குறைய மூன்று ஆண்டுகளில் நிறைமையான அளவு பூக்கள் கிடைக்கும். ஆரோக்கியமான செடிகள் நட்டு மறு ஆண்டுகளில் நன்கு பூக்களைக் கொடுக்கும்.

### பலதரப்பட்ட இனங்கள்:

சிறிய செடிகள், பெரிய செடிகள். தரைகளில் படர்பவை, மரங்களில் படர்பவை. வேலிகள், தூண்கள், வளைவுகள், பலவகையான ஆதரவுகள் படர்வதற்கு உபயோகிக்கப்படும். சிறிய, பெரிய சாடிகளில் வளர்க்கப்படும். சிவப்பு, மஞ்சள், நீலம், வெள்ளை, ஊதா, செம்மஞ்சள் நிறப்பூக்களையுடைய செடிகள் வளர்ப்பதற்குத் தெரிவுசெய்யப்படும்.

### கத்தரித்தல்:

செடியைக் கத்தரித்தல் செய்வது ஒரு வடிவான வெளித் தோற்றத்தை எடுத்துக் காட்டுவதற்கும் எழுந்தவாரியான வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் அவசியமாகிறது. அநேக புதிய செடிகள் நிலத்திலிருந்து ஒரு அடி தூரம் மேலே இளவேனிற் காலத்தில் வெட்ட வேண்டும். பூக்கள் இரு தடவைகளில் உண்டாகலாம். ஆரம்பத்தில் பழைய முதிர்ந்த தண்டுகளிலிருந்து பூக்கள் உண்டாகும். பின்னர், புதிதாக உண்டாகிய தண்டுகளிலிருந்தும் பூக்கள் வருகின்றன. கத்தரிக்கும் போது ஆரம்பத்தில் கீழ்த் தண்டுகளிலிருந்து தொடங்கி மேல் நோக்கிச் செல்வது சுலபமாக இருக்கும். முளைகளைக் கிள்ளுதல் பக்கக் கிளை விருத்திக்குச் சாதகமாக இருக்கும். ஆனால் இத்தகைய கிள்ளுதல் பூக்கின்ற காலம் குறைந்தது ஆறு கிழமையென்றாலும் இருக்க வேண்டும்.

### பூச்சிகளின் தாக்கமும் நோய்களும்:

நத்தை வகைகள் இலைகளில் ஓட்டைகள் ஏற்படுத்தல், பூமொட்டுகளை அரித்தல், மெல்லிய தண்டுகளை வெட்டுதல் சாதாரணமாக காணக்கூடியதாக இருக்கும். ஏப்பிட்ஸ் பூச்சிகள் கூடுதலாக இலைகளின் கீழ்ப்புறம் மொட்டுகள், தண்டுகள் போன்றவற்றில் காணப்படும். இதனால் இலைகள் தண்டுகள் கருகுகின்றன. சவர்க்காரம், நீராவி உபயோகிக்கலாம். பங்கசுவின் தாக்கமும் நிகழும். வெள்ளை நிறமாக பவுடர் போன்று இலைகள், தண்டுகள் தாக்கப்படும். இலைகள் மஞ்சள் நிறமாகும்.

### சில இனங்கள்:

- Clematis alba (White),
- C.armandii (White),
- C.corona (Red),
- C.hania (Red),
- C.alpina (Blue),
- C.babara (pink),
- C.viola (purple),
- C.helios) (yellow).

sekari.s@thaiveedu.com

■ ■ ■



**Family: Sapindaceae**

# றம்புட்டான்

**(Botanical Name: Nephelium lappaceum: Eng.Name: Rambutan)**

றம்புட்டான் (Rambutan), ஓரளவு வெப்பமான காலநிலையில் வளரும் ஒரு சாதாரண உயரமான மரமாகும். இது குடும்பம் (Sapindaceae) சாப்பிண்டேசியேயைச் சேர்ந்தது. இனத்தின் பெயர் (Nephelium lappaceum) நெப்பேலியம் லாப்பாசியம் ஆகும். இது மலேசியா, இந்தோனேசியா, மத்திய இலங்கை, தென்கிழக்கு ஆசியா போன்ற நாடுகளின் பூர்வீக மரமாக இருந்து வருகின்றது. பின்னர், பிலிப்பையின்ஸ், பனாமா, கொஸ்கோறிக்கா, ஆபிரிக்கா, கம்போடியா போன்ற நாடுகளிலும் வளர்க்கப்படுகின்றன. அதிகூடிய பசளையுள்ள ஆழமான, நீரோட்டமுள்ள மண்வளம் வளர்ச்சியைத் திறமையாக வளம்படுத்தும். மரமானது வருடத்தில் இரு முறைகள் பழங்களைக் தருபவை.

பழங்கள் வட்டம் அல்லது ஓரளவு முட்டை வடிவானவை. மிகவும் ருசியானவை. பஞ்சு போன்ற இதனது தோல் சிவப்பு நிறமான மென்மையான முட்களையுடையது. (Malay) மலே மொழியில் 'rambut' என்றால் மயிர்கள் என்பது. பழங்கள் வியாபாரச் சந்தையில் பிரபல்லியமடைந்தன. பழங்களின் தோலை நீக்கியவுடன் ருசியான நொங்கு போன்ற பகுதியினைச் சுவைக்கலாம். எனவே, இம்மரங்களைத் தற்போது எல்லா வெப்ப மண்டலங்களிலும் பயிரிடுகின்றார்கள்.




இம்மரங்கள், இலங்கையில் மலைப் பிரதேசங்களில் நன்கு வளர்க்கப் படுகின்றன. பழங்களின் நொங்கு போன்ற பகுதிகளிலிருந்து யாயம், பழச்சாறு போன்றவை தயாரிக்கின்றனர் பழங்கள் தகரங்களில் அடைக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப் படும். வித்துக்கள் ஒருவித கொழுப் புக்களைக் கொண்டிருப்பதால் எண்ணைய், சவர்க்காரம் போன்ற வை செய்வதற்குப் பயன்படுகின்றன.

■ ■ ■




$89,000.00



**Finch / Driftwood**

Condo Apt, 1 Bedroom, 1 Washroom, Recently Renovated Kitchen, Washroom, New Appliances, Absolute Move-In Condition, Steps To TTC, Schools, Shopping Malls

$124,000.00



**Finch / Driftwood**

Condo Apt, 2 Bedrooms, 2 Washrooms, Recently Renovated Kitchen, Washroom And Bedrooms, New Appliances, Absolute Move-In Condition. Steps To TTC, Schools, Malls

$489,000.00



**9th Line/ Reeves Way**

Ditached 2 Storey, 4 Bedrooms, 3 Washrooms, No Words To Describe, Viewing Is Essential With A Premium Ravine Wooded Lot. Simply Outstanding Property Containing 4 Brms And Upgraded Hardwood Floorings On The Main Floor

$329,900.00



**Northgate/Roughley**


Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms, Beautiful Family Home In Quiet Neighbourhood. Close To Grocery, Schools, Parks, Go Transit, Shopping. Fully Fenced Backyard Oasis. Best 3 Bedroom Value In Bradford

**உங்கள் கனவு**
**இல்லத்தை**
**நனவு முகவரியாக்க...**

**குணசேகர் நாகலிங்கம்**
Sales Representative
Direct: **416-402-4545**

**சுஜாதா குணசேகர்**
Sales Representative
Direct: **416-569-5086**





**HomeLife Today Realty Ltd.,** Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6,
Bus: 416-298-3200, Fax: 416-298-3440
E-mail: sujatha.homelife@gmail.com
*Independently Owned and Operated.

We do not intent to solicit currently listed properties.

---

# இலகுவாக மோட்கேஜ்

**கடினமான இலக்குகளையும் நாம் இலகுவாக்குவோம்**



## Mortgages

- First Time Buyers
- Refinaning
- Renewal
- Self Employed
- Pre-Aproval
- Bankruptcies
- Bad Credit
- Debt Consultant
- Non-verifiable Income
- New immigrant

### *We Will*

- Simplify the entire process of mortgage financing
- Save you money and time
- Get you the most competitive rates
- Offer you the widest selection of mortgage options including variable rate, fixed rate, capped variable rate, step, secured lines etc. for all situations including self-employed, no down payment ....
- Counsel you on credit and mortgage qualifications
- Provide maximum flexibility in financing choices
- Assist you every step of the way

***Best Rates***

We can get you a mortgage in most situations regardless of your circumstances. Where traditional financial institutions have given the answer "No", We routinely says "Yes" and gets you a product that suits your needs at an extremely competitive rate.

**VERICO TMP**

**Siva Ratnasingam**

*Lic: M08002133*
*Brokerage # 11156*

SENIOR MORTGAGE CONSULTANT

***2005,2006,2007,2008 Diamond Award Winner***

**416.520.1214**



# Nanthini Singarajah, AMP

**VERICO** THE MORTGAGE PRACTICE INC.

MORTGAGE AGENT
License #: M08005294

Brokerage #: 11156

TMP
THE MORTGAGE PRACTICE

*"Quick and easy answer to your lending needs"*

Tel: (905) 787-2027
Fax: (866) 903-4664
Cell: (416) 704-4006
Email: nsingarajah@vtmp.ca

30 Via Renzo Drive,
Suite 200, Richmond Hill,
ON L4S 0B8
**(Leslie/Elgin Mills)**

**HO:** 2425 Matheson Blvd E.,
8th Floor,
Mississauga,
ON L4W 5K4.

**Other Services**

- Income Tax
  - Personal
  - Business
  - Corporate
- Life Insurance
- RRSP
- RESP

**Specialize In**

- Residential Mortgage
- 1st Mortgage
- 2nd Mortgage
- Refinancing
- HELO (home equity line of credit)

Services available all over Canada

Alphaweb 416-2387222

# RAPID SECURITY

WE PROTECT YOU

"We'll Beat any Quote"

Indoor & Outdoor Guard for
Commercial
Residential
Retail
Healthcare
Finance Institution



S101-880 Ellesmere Rd, Toronto ON M1P 2W6 **Office:** (416) 321-6777 **Tel:** (416) 841-1415

# New Midwest auto collision

"Quality & service First"

- Specialized in insurance claims
- FULL Service All-in-One Body Shop
- Free Estimate Available
- We repair all makes & models
- Free towing Available
- Customer Satisfaction Guaranteed

**(416) 751-9280**
260 Midwest Rd, Unit 8,
Scarborough, ON, M1P 3B4
newmidwestauto@gmail.com



Contact Person:
**Ruban or Shan**



Alphaweb 416-238 7222


Sesan Flooring Centre
உங்கள் அனைத்து
Hardwood, Laminate, Stairs, Tiles, Natural Stones & Kitchen
தேவைகளுக்கு
HARDWOOD
RED OAK (S&B)
FROM
$4.19
MAPLE
(S&B)
FROM
$3.97
LAMINATE
8.3mm .79¢
12.3MM $1.29
TILES .99¢
எங்கள் காட்சியறைக்கு ஒரு முறை வாருங்கள் !!!
WE ARE THE OFFICIAL DEALER FOR
Muskoka
Satin Finish
Sunca
COSWICK
Solid Hardwood Floors
MOSAIC
GLASS $7.99
CRYSTAL $13.99
STAINLESS $24.99
TILES .99¢
WE ARE SPECIALIZED IN MOSAIC STONES
9909 Highway 48, Unit #10. Markham. L6E 0B7
Tel: 905-554-9199 | www.sesanflooring.com


வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...
$178,000
Keele & Finch
4 Bedrooms 2 Washroom
$238,500
25th Siderd & Rose Ln
3 Bedrooms 2 Washroom
$294,900
Victoria Park & St Clair
2 Bedrooms 3 Washroom
$319,900
Midland & St Clair
3+2 Bedrooms 3 Washroom
$379,900
Taunton & Garden
4 Bedrooms 3 Washroom
$394,900
Taunton & Garden
3 Bedrooms 3 Washroom
$399,999
Brimley & Denison
3+1 Bedrooms 4 Washroom
$429,900
Middlefield & Elson
3+2 Bedrooms 4 Washroom
$429,900
Morningside & Finch
4+2 Bedrooms 4 Washroom
Finished & Sep Ent. Basement
$444,900
Morningside & Finch
4 Bedrooms 3 Washroom
$459,900
McCowan & Steeles
4 Bedrooms 3 Washroom
$499,900
McCowan & Highglen
4 Bedrooms 3 Washroom
Please Contact Us...
Ravi Logarajah B.Sc
Tharsi Rajenthiram B.B.A
*Sales Representative
Call: 416-843-7474
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
*Independently Owned and Operated, Realtor
BUS: 416-298-3200 / FAX: 416-298-3440

# வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க...



4+2 Bedrooms, 4 Washrooms
Basement Finished With 2 Br



3+3 Bedrooms, 3 Washrooms
High Demand Area! Close To 401



4 Bedrooms, 3 Washrooms
Less 5 Years 2475 Sq.Ft.

***Need New Listing at Scarborough, Markham, Mississauga***

"List your Home with a Professional & Save Money"



5+1 Bedrooms, 4 Washrooms
Luxurious & Gorgeous 3200 Sq Ft



**Hariharan Nadarajah**
*Sales Representative*
**Direct: 416-856-4276**
**Office: 416-298-3200**
E-Mail: harisells@gmail.com

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife Today Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

*Call Hariharan Nadarajah for information on homes available in area of your choice*






# from bad credit to Creating Wealth

- 90% வரை இரண்டாம் அடமானம் பெற்றுத் தருகிறோம்
- அதி குறைந்த வட்டி வகிதத்தில் மோட்கேச் எடுக்கும் வசதி.
- கடன் அனைத்துக்கும் ஒரு சுமுகமான தீர்வு!.
- கிறடிற் ஸ்கோர் குறைவானாலும் மோட்கேச் தருகிறோம்.

CMP Canadian Mortgage Awards 2010





*for the best rate & only the best rate!*

**SUGANTHAN THAVARAJASINGAM**
**Business Development Manager**

**416-283-2377 Ext 216**

OBSIDIAN MORTGAGE CORPORATION

35 GRAND MARSHALL DRIVE, SCARBOROUGH ON M1B 5W9 MORTGAGE AGENT #M08010501
Some Conditions Apply. Rates may chance without notice. Brokerage Lic # 10473

புதிய வீடுகளுக்கான உத்தரவாதம்

# தாமதமும் நட்ட ஈடும்

**வீடும் விடியலும் - 51**




வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -


## குறிப்பு:

கட்டிட அமைப்பாளர்களின் கட்டுப்பாட்டை மீறிய இயற்கையால் ஏற்படும் வெள்ளம், புயல் போன்ற அழிவுகள், வேலை நிறுத்தம் என்பனவற்றால் தாமதம் ஏற்படுமிடத்து அதற்கு நஷ்ட ஈடு வழங்கப்பட மாட்டாது.

## நஷ்ட ஈடு:

கடந்த அத்தியாயத்தில் குறிப்பிட்டபடி அத்தகைய விதிகளை ஒரு கட்டிட அமைப்பாளர் மீறுமிடத்து அத்தகைய தாமதத்தால் ஏற்படக் கூடிய மேலதிக செலவுகளை கட்டிட அமைப்பாளர்களிடம் இருந்து பெறும் உரிமை வீட்டுக் கொள்வனவாளர்களுக்கு உண்டு.

செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தாமதம் ஏற்படுமிடத்து ஒரு வீட்டுக் கொள்வனவாளர் தாமதமாகும் ஒவ்வொரு நாளுக்கும் $150.00 என்ற அடிப்படையில் தாமதமாகும் நாட்களுக்கு ஒரு மொத்தத் தொகையை வதிவிற்கான செலவு என்ற வகையில் நஷ்ட ஈடாகப் பெற முடியும். அத்துடன் தாமதத்தால் ஏற்படக் கூடிய களஞ்சியச் செலவு, மேலதிக இடமாற்றச் செலவு என்பவற்றுக்காக $7,500.00 டொலர் வரை பெற முடியும்.

## வதிவிற்கான செலவு: (Living Expenses)

வதிவிற்கான செலவு, கொள்வனவு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு கணிக்கப்படும்:

- யூலை 1, 2008ற்கு பிந்திய ஒப்பந்தமாக இருந்தால் 1 நாளுக்கு - 150.00 டொலர்
- யூன் 30, 2008ற்கு முந்திய ஒப்பந்தமாக இருந்தால் 1 நாளுக்கு - 100.00 டொலர்

மேற்குறிப்பிட்ட செலவீனங்களை நஷ்ட ஈடாக பெறுவதற்கு விண்ணப்பிக்கும் போது முடிந்தளவு பற்றுச் சீட்டுக்களையும் இணைத்தல் வேண்டும் என்று அறிவுறுத்தப் படுகிறது.

தாமதப் படுத்தப் பட்டதால் ஏற்பட்ட மேலதிக வதிவிடச் செலவு உட்பட, மேலதிக களஞ்சியப் படுத்தும் செலவு, மேலதிக பொருள் ஏற்றி இறக்கும் செலவு என்பவற்றுக்காக ஆகக் கூடிய தொகையாக முதலாவது பிரிவினர் $7,500.00 டொலரையும், இரண்டாவது பிரிவினர் $5,000.00 டொலரையும் மட்டுமே நஷ்ட ஈடாகப் பெறமுடியும். உண்மைச் செலவு மேற்பட்டதாக இருந்தாலும் குறிப்பிடப்பட்ட தொகை மட்டுமே நஷ்ட ஈடாக வழங்க உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.

ஆத்துடன் கட்டிட அமைப்பாளர்கள் பிற்போடப்பட்ட திகதி பற்றி அறிவிக்கும்போது 10 நாட்கள் கால அவகாசம் தராவிட்டால் மேலதிகமாக $1,500.00 டொலர்களையும் செலுத்தவேண்டி இருக்கும்

## எப்போது இத்தகைய நஷ்ட ஈட்டிற்கு விண்ணப்பிக்கலாம்?

வீட்டு உரிமையாளர்கள் வீட்டைச் சொந்தமாக்கிய நாளிலிருந்து (Date of Possession) ஒரு வருடத்திற்குள் இத்தகைய நஷ்ட ஈட்டிற்கு விண்ணப்பிக்கலாம். முதலில் 180 நாட்களுக்குள் கட்டிட அமைப்பாளர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கும் போது உரிய பற்றுச் சீட்டுக்களுடன், குறிப்பிட்ட படிவத்தில் கட்டிட அமைப்பாளர்களுக்கும், பிரதியை "TARION"க்கும் அனுப்புதல் வேண்டும். இத்தகைய நஷ்ட ஈட்டைப் பெறுவதற்கு முன் வீட்டை சொந்தமாக்க வேண்டியது அவசியமாகும். (Close the sale) அதற்கு கட்டிட அமைப்பாளர் மறுப்புத் தெரிவித்தாலோ அல்லது உரிய படிவத்தை பெற்றுக் கொள்வதற்கோ 1 877 - 9TARION என்னும் இலக்கத்திற்கு அழைக்க முடியும்.

வீட்டு உரிமையாளர் உரிய நேரத்தில் கட்டிட அமைப்பாளர்களால் அறிவுறுத்தப் படாமலோ, அல்லது அனுமதிக்கப்பட்ட எல்லைக்கு மேலாகத் தாமதிக்கப் பட்டுவிட்டாலோ, அத்தகைய காரணங்களால் பாதிக்கப் பட்டிருக்குமிடத்து மேற்குறிப்பிட்ட அடிப்படையில் கட்டிட அமைப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு நஷ்ட ஈட்டைப் பெற முடியும். கட்டிட அமைப்பாளர்கள் பெரும்பாலும் நிராகரிக்கச் சந்தர்ப்பம் இல்லை. அவ்வாறு அவர்கள் நிராகரிக்குமிடத்து "TARION" உடன் தொடர்பு கொண்டு உரிய படிவங்களைப் பெற்று நஷ்ட ஈட்டிற்கு விண்ணப்பிக்கும் உரிமை வீட்டு உரிமையாளர்களுக்கு உண்டு.

## கொண்டோமேனியம்

கொண்டோமேனியங்களுக்குரிய தாமதப்படுத்தப் பட்ட வதிவிற்கான உத்தரவாதம்:- Delayed Occupancy Protection for Condominiums

கொண்டோமேனியத்திற்குரிய விதிமுறைகள் சற்று வேறுபடுவதால் இங்கு அதுபற்றி குறிப்பிடுவது பொருத்தமானது.

கொண்டோமேனியம் வாங்குபவர்களது முடிவு திகதிக்கான நிபந்தனைகள் சாதாரண வீடு வாங்குபவார்களுக்கான நிபந்தனைகளிலிருந்து சற்று வேறுபடுகின்றது. கொண்டோமேனியம் ஒன்று வாங்கும் போது அதற்குரிய கொள்வனவு ஒப்பந்தத்தில் வதிவிற்குரிய தற்காலிக திகதி அல்லது உறுதிப்படுத்தப் பட்ட வதிவு திகதி குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கொள்வனவு ஒப்பந்தத்தில் தற்காலிக திகதி இருக்குமிடத்து அத் திகதியில் இருந்து 90 நாட்களுக்கு முன்னர் உறுதிப் படுத்தப்பட்ட திகதி எழுத்து மூலம் கொள்வனவாளருக்கு கட்டிட அமைப்பாளர்களால் அறிவுறுத்தப்பட வேண்டும். தவறுமிடத்து தற்காலிக திகதி உறுதிப்படுத்தப்பட்ட திகதியாக கருதப்பட்டு அத் திகதியின் அடிப்படையில் தாமதத்திற்கான நஷ்ட ஈடு கணிக்கப்படும்.

உறுதிப்படுத்தப்பட்ட வதிவு திகதி வழங்கப்பட்ட பின்னர் கட்டிட அமைப்பாளர் விரும்பினால் ஒரு தடவை 120 நாள்வரை வதிவு திகதியை தள்ளிப் போடலாம். அவ்வாறாயின் 65 நாட்களுக்கு முன் எழுத்து மூலம் கொள்வனவாளருக்கு அறிவிக்கப்படல் வேண்டும். அத்துடன் 35 நாட்களுக்கு முந்திய எழுத்து மூல அறிவித்தலுடன் மேலும் 15 நாள் வரை தள்ளிப்போடும் உரிமை கட்டிட அமைப்பாளருக்குண்டு. சுருங்கக்கூறின் உரிய விதிகளுக்கமைய முன் கூட்டியே எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டால் 135 நாட்கள் வரை வதிவு திகதியைத் தள்ளிப்போடும் உரிமை கட்டிட அமைப்பாளருக்கு உண்டு.

உறுதிப்படுத்தப்பட்ட வதிவு திகதிக்கு முன்னர், "Earlier Occupancy" வதிவு திகதி கட்டிட அமைப்பாளர்களால் வழங்கப்பட்டால் அவற்றைக் கொள்வனவாளர் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. எழுத்து மூலம் சம்மதம் பெற்றால் மட்டுமே அது நடைமுறைப் படுத்தப்படும்.

## எப்போது நஷ்ட ஈட்டிற்கு விண்ணப்பிக்கலாம்?

கொள்வனவாளர் வாங்கிய கொண்டோமேனியத்தில் வதிவினை ஆரம்பித்த பின்னரே இத்தகைய தாமதங்களுக்கான நஷ்ட ஈட்டிற்கு விண்ணப்பிக்க முடியும்.

## தாமதப்படுத்தப்பட்ட வதிவிற்கான நஷ்ட ஈடு கோரல்.

கொள்வனவாளர் மேற்குறிப்பிட்டவாறு தாமதம் பற்றி உரிய விதிப்படி அறிவுறுத்தப்படாமல் விட்டாலோ அல்லது அனுமதிக்கப்பட்ட எல்லையைத் தாண்டி தாமதித்தாலோ, அதனால் ஏற்படக்கூடிய சிரமங்களுக்கு நஷ்ட ஈடு கோர முடியும். இத்தகைய நஷ்ட ஈட்டை கட்டிட அமைப்பாளர்களுடன் பேசித் தீர்த்துக் கொள்வதே முதற் படியாக சிபார்சு செய்யப் படுகிறது. அதில் பிணக்குகள் ஏற்படுமிடத்து கொள்வனவாளர் 1-877-9TARION என்னும் இலக்கத்தை அழைத்து உரிய படிவங்களைப் பெற்று (Delayed Occupancy Package) நஷ்ட ஈட்டிற்கு விண்ணப்பிக்கலாம்.

தற்போது ஒருவர் தற்காலிக வதிவிடச் செலவாக நாள் ஒன்றிற்கு $150 டொலர் என்ற அடிப்படையில் $7,500 வரை பெற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் வதிவிடச் செலவுக்குப் பற்றுச் சீட்டுக்கள் இணைக்க வேண்டிய அவசியம் கிடையாது. இத்தகைய தாமதத்தால் ஏற்பட்ட நேரடிச் செலவுகளாக களஞ்சியப் படுத்தல், மேலதிக போக்கு வரத்துச் செலவு என்பவற்றுக்கான பற்றுச்சீட்டுகள் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும். யூலை 1ந் திகதி 2008ம் ஆண்டிற்கு முந்திய ஒப்பந்தமாக இருந்தால் தாமதத்தால் ஏற்படும் சிரமத்திற்கு அறவிடக்கூடிய ஒரு நாளுக்கான தொகை 150 டொலரிலும் குறைவானதாக இருக்கும்.

கொண்டோமேனியம் வாங்கும் போது ஏற்படக்கூடிய இத்தகைய பிணக்குகளுக்கு கொண்டோமேனியம் கொள்வனவு செய்யும் போது சட்ட வல்லுநர்களின் உதவியை நாடினால் உரிய முறைப்படி நஷ்ட ஈட்டைப் பெறுதல் இலகுவாக அமையும்.

அடுத்த இதழில் இருந்து ஒரு புதிய வீட்டிற்குள் பிரவேசித்த பின்னர் இருக்கக் கூடிய உத்தரவாதம் பற்றி ஆராய்வோம்.

velasubramaniam@thaiveedu.com

■ ■ ■











# வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க

**Home Life**
GTA Realty Inc., brokerage
206-1711 McCowan Road, Scarborough, ON. M1S 3YS
Bus: 416-321-6969 Fax: 416-321-6963

HOMELIFE HIGHER STANDARDS

**Baskaran Sinnadurai**
Commercial & Residential Sales Representative
**416-880-8585**





**Asking 2.5million**
Well Maintained Corner Location In Downtown Lindsay,
All Brick With 20 Apartments
And 5 Main Floor Comm/Retail Tenants




**1.3 million**
Space Banquet hall ,coin laundry and
7 office units, Scarborough



**Asking 370,000**
Restaurant space with zoning
New Delhi Dr ,markham




**Asking 229,000**
Restaurant in rockwood
50,000 monthly sales

# மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...

வீடு வாங்கவும் விற்க்கவும்
குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்

**Ravi. Paramu**
Broker
**Direct: 416-262-4176**


"The best compliment you can give me
is the referral of your family and friends"
Thank you for your trust







**Neilson / Finch**
4+1 Bedrooms
3 Washroom Finished
Basement




**Mccowan/16th**
4+2 Bedrooms 4 Washroom

CONVENIENCE/VARIETY
$95,000
Plus Stock
IN OSHAWA



**HomeLife Today Realty Ltd., Brokerage***
31 Progress Ave., Suite 210,
Toronto, ON, M1P 4S6
**Bus: 416-298-3200**

*Independently Owned and Operated, Realtor

# விரைவில்... முப்பரிமாணத் தொலைக்காட்சி

- மாறன் செல்லையா -

**முப்பரிமாணத் தொலைக் காட்சி விரைவில் வருகிறது.**

Nicholas Routhier ஒரு பைத்தியம் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறார் ஒரு தீர்க்கதரிசி என்றும் சொல்லப்பட்டுள்ளார். அவருக்கே பலமுறை இதில் எந்தப் பெயர் அவருக்குப் பொருத்தமானது என குழப்பம் இருந்துள்ளது.

ஆனால் கனடிய நுகர்வோர் High Definition தொலைக்காட்சியை முழுமையாக ஏற்றுக் கொள்ளாத நிலையில் உங்களின் தொலைக் காட்சிக்கு முப்பரிமாணப்படத்தை இவரால் கொண்டுவர முடியுமானால் இவரை எப்படி அழைக்கலாம் என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

இவராலும் Richard LaBerge என்பாராலும் ஒரு தசாப்தத்திற்கு முன் நிறுவப்பட்ட Sensio Technologies என்ற நிறுவனம் முப்பரிமாணத் தொலைக்காட்சியை கொண்டு வருவதற்கு ஆயத்தமாகும் போது அது மிகவும் சந்தோச- மான நிகழ்வாகும்.

சந்தைக்கு HD தொலைக்காட்சியைக் கொண்டு வந்தது மிகவும் கடுமையான முயற்ச்சி. தொலைக்காட்சி எப்படி ஒளிபரப்பு செய்யப் பட்டதோ அந்தக் கட்டமைப்பு முழுமையாக மாற்றம் செய்யப்பட வேண்டும். இதற்காக பாரிய முதலீடுகள் செய்யப்பட்டன. அந்த முதலீடுகளை மீள எடுத்துக் கொள்ளாத நிலையில்முப்பரிமாணத் தொலைக்காட்சிக் கான கட்டமைப்பு மாற்றங்களில் முதலிடுவது முட்டாள்தனமானது என்கிறார் திரு. Routhier.

இவருடைய நிறுவனம் தொலைக்காட்சிகளைச் செய்வதோ அல்லது கமராக்களைச் செய்வ- தோ இல்லை. இந்த நிறுவனம் கணினியின் சங்கேத அடையாளங்களையும் (Computer codes) மென்பொருளையும்தான் (software) சந்தைப்படுத்துகிறது (Licensing). இவர்களின் தயாரிப்புகள் தொலைக்காட்சி நிறுவனங்கள் திரையரங்குகளை நடாத்தும் நிறுவனங்கள் தரிசன விளையாட்டு தயாரிப்பாளர்கள் (Video Games manufacturers) ஆகியோரால் முப்பரி- மாணப் படங்களின் சைகைகளை பரிவர்த்தனை செய்வதற்குப் பயன்படுத்தப் படுகின்றன. இப்படிப் பார்த்தால் இந்த நிறுவனத்தை ஒரு IP நிர்வாக நிறுவனம் எனலாம் என்கிறார் திரு. Routhier.

இவர்களுடைய தொழில்நுட்பம் வலது கண் இடது கண் விம்பங்களை இணைத்து ஒருமித்த சைகையாக மாற்றி அந்தச் சைகைகளை ஒழுங்கு படுத்தி இரு பரிமாணத் தொலைக் காட்சிக்காக செய்யப்பட்ட கட்டமைப்புகளினால் கடத்தி தொலைக்காட்சிகளில் அந்தச் சைகை- களை நுகர்வோர் பார்க்கும் வண்ணம் மாற்றுகிறது.

இதில் இலகுவாகச் சொல்லப்பட்ட இந்த விடயத்தில் ஒளித்திருக்கும் கடினமான விடயம் யாதெனில் இந்த விம்பங்களை ஆரம்பிக்கும் இடத்தில் இருந்து நுகர்வோரிடம் தராதரம் குறையாமல் எடுத்துச் செல்வதேயாகும். இங்கு செய்யப்பட்ட பெரும்பாலான ஆய்வுகள் இந்தத் தராதரத்தைக் கடைசி வரையில் தக்க வைப்பது பற்றியே இருந்தது.

இந்த Sencsio தொழில்நுட்பம் Ubisoft's அவதார் (Avatar) படத்தைத் தழுவித் தயா- ரிக்கப்பட்ட தரிசன விளையாட்டில் (Video game) பாவிக்கப்பட்டுள்ளது. பல திரையரங்குகளிலும் நிகழ்ச்சிகளை நேரடியாக ஒளிபரப்பும் விசேட மாக விளையாட்டு நிகழ்வுகளை, NBA all Star Games பாவிக்கப்பட இருக்கிறது.

கடந்த Septemberஇல் ESPN Cable நிறுவனம் Sensioவின் தொழில் நுட்பத்தில் பல பரிசோத- னைகளை மேற்கொண்டது. ESPN நிர்வாகி- களும் விசிறிகளும் ஒரு உதைபந்தாட்ட விளையாட்டை பெரிய தட்டையான தொலைக் காட்சித் திரையில் பார்த்து மகிழ்ந்தார்கள். இந்த ESPN நிறுவனம் அமெரிக்காவில் 24 மணிநேரமும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை ஒளிபரப்பும் நிறுவனமாகும்.

இந்த முப்பரிமாண தொலைக்காட்சிக்கான மாற்றம் ஆரம்பித்துவிட்ட நிலையில் அமெரிக்- காவில் இரண்டு அல்லது மூன்று முப்பரி- மாண தொலைக்காட்சி சானல்கள் ஆரம்பிக்க விருக்கும் நிலையில் எல்லோருடைய கவனமும் தொலைக்காட்சி கருவிகள் தயாரிப்பாளர்க- ளான Sony, Panasonic மீதும் திரையரங்கு- களான Imax போன்ற நிறுவனங்களிலும் இருக்கிறது. ஆனால் முக்கியமான தொழில் நுட்பங்களை வழங்கும் Sensio போன்ற நிறுவனங்களும் வளர்வதற்கு நிறைய இடம் இருப்பது போலத் தெரிகின்றது. இந்த நிறு- வனத்தின் பங்கு கடந்த December மாதம் அடைந்த விலையான 4.16இலிருந்து இறங்கி வந்துவிட்ட போதிலும் ஒரு வருடத்திற்கு முன் இருந்ததைவிட எட்டு மடங்காக தற்போது 2.60 அளவில் கைமாறுகிறது. முப்பரிமாணத் தொலைக்காட்சியின் மீது ஏற்பட்ட ஆர்வம் காரணமாக தற்போது இந்தக் நிறுவனத்தின் பெறுமதி 100 மில்லியன் டொலர்களை அடைந்துள்ளது.

March மாத இறுதியில் இருந்து Future Shop, Best buy போன்ற நிறுவனங்கள் முப்பரிமாணத் தொலைக்காட்சிக் கருவிகளை விற்பனை செய்கின்றன. Avatar , Alice in Wonderland போன்ற திரைப்படங்கள் இந்த முப்பரிமாண படம் பார்ப்பதில் மிகுந்த அளவு ஆர்வத்தை உண்டு பண்ணியுள்ளது.

இந்த ஆண்டிலும் இனிவரும் ஆண்டுகளிலும் முப்பரிமாணப் படங்களும் படங்களைப் பார்த்- தலும் பாரிய வளர்ச்சியை அடைய இருக்கிறது. ஆனால் இந்த வளர்ச்சி முழுமையடைய சில ஆண்டுகள் ஆகலாம் என்கிறார் திரு. Rauthier. அவர் மேலும் கூறுகையில் இந்தத் தொழில்நுட்பங்கள் சில ஆண்டுகளுக்கு முன்பே தயார் நிலை அடைந்து விட்டன. தற்போது தொழில்நுட்பத்தை பாவித்து உள்ளடக்கம் (content) தருவோரும் தயார் நிலையில் இருக்கிறார்கள். இந்த வளர்ச்சி மெதுவாக இருந்தால்கூட இன்னும் ஐந்து ஆண்டுகளில் முப்பரிமாணத் தொலைக்காட்சி எல்லா இடங்களிலும் எல்லா வீடுகளிலும் இருக்கும் என்றார் அவர்.


2010ன் நுகர்வோருக்கான இலத்திர- னியல் கண்காட்சியின் போது ஒரு முப்பரிமாணப் படக் காட்சியும் அதை ஆவலுடன் பார்க்கும் இரசிகர்களும்.

maran.chelliah@thaiveedu.com

■ ■ ■



# வாகன காப்புறுதிக் கட்டண நிர்ணயம்



செந்தூரன் புனிதவேல்
- காப்புறுதி முகவர் -

சென்ற மாத ‘தாய்வீடு’ இதழில் வீட்டுக் காப்புறுதிக் கட்டணம் எப்படி நிர்ணயிக்கப்படுகிறது, அதற்கான காரணிகள் என்ன என்பதைப் பார்த்தோம். இந்த இதழில் வாகன காப்புறுதிக் கட்டணத்துக்கான நிர்ணயிப்புப் பற்றி சற்று விளக்கமாக கவனிப்போம்.

01 வாகனம் என்றவுடன் அதன் காப்புறுதிக்கு வாகனத்தின் வயது, அது எந்த make, எந்த moidel என்பது மிக மிக அவசியம். உதாரணத்திற்கு Honda கம்பனியால் தயாரிக்கப்படும் Accord வாகனத்தின் காப்புறுதிக் கட்டணம் அதே கம்பனியால் தயாரிக்கப்படும் ‘Prelude’ என்ற வாகனத்திற்கு கட்டணத்திலும் குறைவாக இருக்கும். முன்னையது (Accord) குடும்பத்தவர்களுடன் பயனிப்பதற்கு தயாரிக்கப்பட்டது, பின்னையது ‘Sports’ வாகனம் என்னும் விளையாட்டு வாகனமாக தயாரிக்கப்பட்டது. Prelude வேகமாக செலுத்துவதை குறிக்கோளாய் அமைக்கப்பட்டது, Accord குடும்பத்துடன் உல்லாசமாக மெதுவாக செல்ல தயாரிக்கப்பட்டது. எனவே வருடம், Model ஆதியன முக்கிய காரணியாகும்.

02 வாகனம் தானாக இயங்கமாட்டாது. அதை இயக்குபவர் ஒருவர் வேண்டும். அவர் தான் வாகனத்தின் சாரதி. எனவே வாகனச் சாரதியின், வாகனம் செலுத்துவதற்காக பெற்ற அனுமதிப்பத்திரம் எத்தனை வருட அனுபவம் என்று முக்கியமாக கவனிப்பர். வாழ்க்கையில் மட்டுமல்ல வாகனம் செலுத்துவதிலும் அனுபவத்திற்கு ஈடுஇணை எல்லாம் அனுபவமே. எனவே வாகனத்தை செலுத்துவதுபவர் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் பெற்று செலுத்தும் அனுபவம் இரண்டாவது காரணியாகிறது.

03 ஒரு வாகனம் ஏதோ ஒரு தேவைக்காகவே வாங்கப்படுகிறது. அந்தத் தேவை அதன் பாவனையை நிர்ணயிக்கும். பாவனையைப் பொறுத்து கட்டுப்பணம் நிர்ணயிக்கப்படும். உதாரணத்திற்கு உங்கள் வாகனம் வேலைக்குச் சென்றுவர பாவிக்கப்பட்டால் அந்த வாகனம், பாதையில் வாகனம் செறிவாக உள்ள வேளையில் செலுத்தப் படுவதால் அதற்குத்தக்க கட்டணம் அறவிடப்படும். மேலும் சில வாகனங்கள் விநியோகத்திற்கு (Delivery) பாவிக்கப்படும். இவைக்குத்தகுந்தவித்தில் கட்டணம் அறவிடப்படும். இன்னும் சிலர் வானத்தை பொழுதுபோக்குப் பயணத்திற்கு பாவிப்பர். எனவே மூன்றாவது நிர்ணயிக்கும் காரணி பாவிப்பு.

04 ஒரு வருடத்தில் செலுத்தப்படும் தூரமும் ஒரு முக்கிய காரணி என்பதை யாரும் ஏற்றுக்கொள்வர். சில வாகனங்கள் வருடம் ஒன்றிற்கு 60,000 கிலோ மீற்றர் வரை செலுத்தப்படுகிறது. அதேவேளை இன்னும் சில வாகனங்கள் வருடத்திற்கு 6,000 கி.மீட்டர் தூரம் கூடச்செலுத்தப்படுவதில்லை. எனவே முன்னையதற்கு அதிக கட்டணம் வசூலிக்கப் படவேண்டியது தர்மம்தானே.

05 நீங்கள் வதியுமிடம். உதாரணத்திற்கு நகரின் சில பகுதிகளில் கூடிய விபத்துக்கள் நடக்குமானால் அப்பகுதியில் வசிப்பர் வாகனக்காப்புறுதிக் கட்டணம் கெஞ்சம் மிகையாக இருப்பது இயல்புதானே? உதாரணத்திற்கு ரொறன்ரோவில் உள்ள கட்டணத்திலும் பார்க்கக் கமில்டனில் அல்லது கிங்ஸ்டனில் நிச்சயம் மலிவாகத்தானே இருக்கும். எனவே ஐந்தாவது காரணியாகும்.

06 உங்கள் வாகனத்தின் கவர்ச்சி அதாவது சிலவாகனங்கள் அதிகமாக களவு போவதுண்டு. அத்தகைய வாகனங்களுக்கு கட்டும் பணம் மிகையாக இருக்கும்.

07 பிரதான சாரதியின் வயது, வீட்டில் ஒரு வாகனம் இருந்து ஒன்றுக்குமதிகமான சாரதிகள் இருப்பின் அதில் ஒருவர்தான் பிரதான சாரதியாக கணிக்கப்படுவார். மற்றவர்கள் மேலதிக சாரதிகள் (additional drivers) எனக் கொள்ளப்படுவர். இங்கு ஒரு முக்கிய விடயத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். ஒரு சங்கிலியின் பலம் அந்தச் சங்கிலியில் உள்ள மிக இளகின பகுதியை சார்ந்திருக்கும் (strength of a chain is the weakest link) அதுபோல் உங்கள் வீட்டிலும் ஒரு மிகக் கவலையினமான சாரதியிருப்பின் கட்டுப்பணம் கனிசமாக அதிகரிக்கும். இத்தருணங்களில் அவர் கையொப்பமிட்டு தான் அந்த வாகனத்தை செலுத்துவதில்லை என்றும் ஒத்துக்கொண்டால் கட்டுப் பணம் அவர் இல்லாமல் கணிக்கப்பட்டு குறைக்கப்படும். அவர் தவறியும் அந்த வாகனத்தைச் செலுத்தி விபத்துக்குள்ளால் நீங்கள் தான் சகல நட்டத்திற்கும் பொறுப்பாவதுடன் உங்களுக்கு காப்புறுதி பெறுவது கடினமாகிவிடும். எனவே அத்தகைய விலக்குப் பெற்றவர்கள் ஒருபோதும் வாகனத்தைச் செலுத்தலாகாது.

08 சாரதி ஆண் அல்லது பெண் என்பதைப் பொறுத்து கட்டணம் வித்தியாசப்படும். அனுபவத்திலிருந்து குறிப்பிடலாம் கன்னியர்கள், காளையர்களிலும் குறைவாகவே விபத்துக்குள்ளாகிறார்கள். எனவே இளைஞர்களே அங்கும் இங்கும் கண்ணோட்டம் விடாமல் வாகனத்தைச் செலுத்துவதில் அவதானமாயிருங்கள்.

09 திருமணமானவரா இல்லையா என்பதும் ஒரு முக்கிய காரணியாகும். பொதுவாக திருமணமானவர்கள் கூடிய பொறுப்பாக வாகனத்தைச் செலுத்துவார்கள் எனவே திருமணமானவருக்கு கட்டணம் சற்று குறைவாகவே அறவிடப்படும். வாழ்க்கையில் கூட திருமணத்தை ‘கால்கட்டு’ப் போடுவதாகக் குறிப்பிடுவார்கள் அல்லவா?

10 வீட்டில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கையும் சாரதிகளுடைய எண்ணிக்கையும் கட்டனத்தை தீர்மானிக்கும் என்பதில், உங்களுக்கு ஒரு வித ஐயப்பாடும் இருக்கமுடியாது. எனவே அடுத்த காரணியை கவனிக்கச் செல்வோம்.

11 நீங்கள் வாகனம் செலுத்துவதில் ‘டிக்கட்’ பெற்றிருப்பின் அதிலும் புள்ளி இழந்திருப்பின் அதிகம் கட்டணம் கட்டவேண்டிவரும். எனவே வாகனத்தை அவதானமாகச் செலுத்துங்கள். டிக்கட்டுகள் எனும்போது Panking ticket அதில் அடங்கமாட்டாது.

முன்னைய உங்கள் பிழையால் ஏற்பட்ட கொடுப்பனவு பெரிதும் உங்கள் கட்டனத்தைப் பாதிக்கும். அதுவும் குறுகிய இடைவெளியில் இரண்டு விபத்துகள் ஏற்படின் கட்டணத்தில் பரிய அதிகரிப்பு ஏற்படுவதை தவிர்க்க முடியாது. இயன்ற அளவு கவனமாக செலுத்துவதுதான் அறிவுடமை.




தாய்வீட்டிற்காகக் கருத்தோவியம் சிவ.மாமுனி

**மேற்கூறிய அடிப்படை காரணிகளைவிட இன்னும் சில விடயங்களும் அடங்கும்.**

### களிவுத்தொகை:

- அதாவது ஒரு விபத்து அல்லது சேதம் ஏற்பட்டு கொடுப்பனவு தரும்வேளையில் ஒரு தொகை கழித்துக்கொண்டு தரப்படும். பொதுவாக 500 டொலர் கழிவு (Deductable) தான் வைப்பது வழக்கம். ஆனால் அத்தொகையை 1,000 ஆக்குவதனால் கட்டனம் கனிசமாக குறையும். சிலர் 5,000 வரை கழிவுத்தொகையை வைத்து தமது கட்டணத்தை குறைத்து வைத்துள்ளார்கள்.
- எத்தகைய காப்புறுதி வைத்துள்ளீகள் என்பதுவும், உங்கள் கட்டுத்தொகையை நிர்ணயிக்கும். உதாரணத்திற்கு பூரண காப்புறுதி (Comprehensive Coverage) எல்லாவிதமான அனர்த்தனங்களுக்கும் ஈடுசெய்யும் - அதேவேளை One way என்று கூறப்படும் காப்புறுதி உங்கள் தவறால் ஏற்படும் விளைவுகளுக்கு உங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படமாட்டாது. ஆனால் மற்றவர்கள் நஷ்டத்தை ஈடுசெய்யும்.
- ஒரே காப்புறுதி அமைப்புடன் பல காப்புறுதிகளை வைத்திருப்பதுவும் கட்டுப்பணத்தை குறைக்க ஒரு வழியாகும். அனேகமாக 10% கட்டணக் கழிவு தருவார்கள். மேலும், ஒருமுறையும் விபத்தில்லாமல் வாகனம் செலுத்துபவர்களுக்கு கட்டணத்தில் கழிவு வழங்குவதுண்டு. அடுத்த மாத்தில் எப்படி காப்புறுதியிலிருந்து நஷ்டஈட்டை பெறுவது பற்றி விளக்கத்தைத் தருவேன்.

senthuran.punithavel@thaiveedu.com

■ ■ ■



வீடு வாங்கவும், விற்கவும்.......
Listing of the Week!
$459,900
9th Line/North Of 407
4 Bedrooms, 3 Washrooms
Beautiful 4 Years All Brick Home,
Detached Double Garage,
Double Door Entry, 9 Ft Ceiling,
Hardwood Floors, Lot Of Pot Lights,
Newly Painted, Great Location,
Close To Hwy 7/407,
Schools, Shopping.
$579,900
14th And 9th Line
4 Bedrooms, 4 Washrooms
Built Less Than 5 Years By Starlane
$99,900
Nelson / Sheppard
2 Bedrooms, 2 Washrooms
Ideal For First Time Buyers
சகல விதமான
படிவங்களும்
நிரப்பிக்
கொடுக்கப்படும்
இரஞ்சன் or
செல்வா
416.816.1220
$329,999
Markham/Eglinton
2+1 Bedroom, 2 Washrooms
5 Years Old Town Home
$129,900
Kennedy/Hwy 401
1+2 Bedrooms, 2 Washrooms
Ideal For First Time Buyers
RED CARPET
Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
Real Estate Services
RANJAN FRANCIS XAVIER
Sales Representative
Cell: 416.816.1220
Office: 416.284.5555
880 Ellesmere Road. Suite 204, Scarborough, ON.
வளமான வாழ்விற்கு வதிவிடம் வாங்கிட......




முழு நேர வீடு விற்பனை முகவர்
This space for your HOUSE
Neilson & McLevin
$174,900
2+1 Bedroom, 2 Washroom
Neilson & McLevin
$264,900
3+1 Bedroom, 2 Washroom
Midland & Lawrence
$184,900
2+1 Bedroom, 2 Washroom
Middlefield & Finch
$214,900
2 Bedroom, 2 Washroom
100 Wingarden
$99,900
2 Bedroom, 2 Washroom
Alton Tower
$229,900
2+1 Bedroom, 2 Washroom
This space for your HOUSE
பஞ் சொக்கலிங்கம் Broker
BANK INTEREST RATE
WRITTEN GUARANTEED
MORTGAGE
Century 21
Affiliate Realty Inc. Brokerage *
Tel : 416-290-1200
416 PUNCH ME
416.786.2463
Shiamala Ratnasabapathi *
Sales Rep. *

## - பதின்ம முன் வயதினரின் வளர்ச்சிப் படிநிலைகள் -

# பெரிய மாற்றங்களும் சின்னக் காரணங்களும்



சிவவதனி பிரபாகரன்

### அடிப்படைத் தேவைகளில் கவனம் தேவை

ஒரு பயிர் சரியாக வளரவில்லையென்றால் அது பயிரின் குற்றமல்ல. அதற்கு வளரும் நிலம், அப்பயிர் வளர்வதற்கு உள்ள சூழல், வளர்ப்புமுறை என பல காரணிகள் காரணமாக உள்ளன. அதே போன்றே பிள்ளைகளின் வளரச்சியையும் பலகாரணிகள் நிர்ணயிக்கின்றன. அவற்றில் சில எளிமையான அடிப்படைக் காரணிகளை உற்று நோக்குவோமாக.

### உணவு

ஒரு பிள்ளையின் அடிப்படைத் தேவைகளைப் புரிந்து கவனிப்பது பெற்றோரின் தலையாய கடனாகும். குறிப்பாக உணவு முறை ஒரு பிள்ளையின் உடல் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

குறிப்பாக பதின்ம முன், மற்றும் பதின்ம வயதினர் நொறுக்குத்தீனியில் அதிக நாட்டம் உள்ளவர்களாகவும் நேரம் தவறாத உணவு முறையில் அக்கறையற்றவர்களாகவும் இருப்பதைக் காணலாம். வேளாவேளைக்கு ஆரோக்கியமான உணவுகளைச் சாப்பிடும் முறையைப் பெற்றொர் கைக்கொள்ள வேண்டும். அதேபோல் பிள்ளைகளுக்கும் சிறுவயது முதலே அத்தகைய பழக்கங்களைப் பழக்க வேண்டும். குறிப்பாக கள்ளத் தீனிகளை உடலுக்குப் பயன்தராத அல்லது ஊறு விளைவிக்கும் தின்பண்டங்களை வீட்டில் வைத்திருக்கக்கூடாது. மாறாக ஊட்டச்சத்துள்ள சிற்றுண்டிகளை சிறுபசி போக்க உண்ணப் பழக்க வேண்டும்.

### உறக்கம்

பிறந்த குழந்தைக்கு குறைந்தபட்சம் 18 மணி நேர உறக்கம் அவசியம். குழந்தை வளரவளர உறங்கும் நேரம் குறைகிறது. ஒரு வயதில் 10 மணி நேரமாகக் குறைந்து பின் பதின்ம முன் பருவத்தில் குறைந்தது 8 மணி நேர உறக்கம் பிள்ளைகளுக்கு அவசியமாகின்றது. சிறுவர்களுக்குப் போதிய ஓய்வும் உறக்கமும் கிடையாவிடில் அவர்கள் பாடசாலையில் படிப்பில் கவனமிழப்பர். விளையாட்டுக்களில் நாட்டமிழப்பர். எந்நேரம் பார்த்தாலும் உற்சாகம் குன்றிக் காணப்படுவர். வீட்டுவேலைகளைச் செய்யாது புறக்கணிப்பர். இவ்வாறான உறக்கம் போதாத குறையானது அவர்களுக்கு மனதை ஒருமைப்படுத்த முடியாது பாதிப்புறச் செய்கின்றது. இது சிறுவர்களின் வாழ்க்கையை வெகுவாகப் பாதிக்கின்றது.

பாடசாலை செல்லும் இளையவரை முதல் நாள் இரவு நேரம் தாமதிக்காமல் படுக்கைக்கு அனுப்புவது அவசியம். இதில் எக்காரணம் கொண்டும் பெற்றோர் தவறிழைக்கலாகாது. குறிப்பாக பெற்றோரை ஏமாற்றிவிட்டு தொலைக்காட்சியை பின்னிரவுவரை பார்த்துக் கொண்டிருக்கும் பல இளையவர்களை கருத்திற் கொள்ள வேண்டும். சிறுவர்களின் அறைக்குள் தொலைக்காட்சி இருக்கவேண்டும் என்ற பெற்றோரின் தவறான கணிப்பு பிள்ளையின் வாழ்வை வெகுவாக பாதிக்கின்றது என்பதை பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வயதினரின் படுக்கை அறைக்குள் கணினியோ தொலைகாட்சியோ விளையாட்டு உபகரணங்களோ இருக்கக் கூடாது. வேண்டுமானால் உறக்கம் வரும் வரையில் ஏதேனும் பயனுள்ள நூல்களைப் படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கலாம். அதுவும் படுத்தபடி வாசிப்பது கண்ணுக்கு உகந்ததல்ல. அதேபோல் கதைப் புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்ததை விட அறிவூட்டும் நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும்.

### வீடும் வாழ்வும்

சிறுவர்களுக்குக் குறிப்பாக பதின்ம முன் வயதின் பின் அவர்களுக்கென ஒரு தனி அறையோ அல்லது ஒத்த பால் சகோதரருடன் பகிர்ந்துகொள்ளும் ஒரு அறையோ இருப்பது அவசியம். பெரிய வசதியான அறைகள் இருக்கவேண்டுமென்பது முக்கியமல்ல. ஆனால் சுத்தமான ஒழுங்குபடுத்தப்பட்ட அறையோ அல்லது வீட்டின் ஒரு பகுதியோ இருப்பது அவசியம். பிள்ளைகள் தமது பொருட்களை தாமாகவே ஒழுங்குபடுத்தி பேணி வைத்திருக்க பயிற்றுவிக்கப் படவேண்டும். ஒழுங்காக தத்தமது பொருட்களையும் பாடப்புத்தகங்களையும் வைத்தெடுப்பதால் படிப்பிலும் தாம் செய்யும் செயல்களிலும் நாட்டத்தோடும் விருப்போடும் சிறுவர்கள் ஈடுபடுவர். தமது அழகுணர்வை மேம்படுத்தும் வகையில் அறையை அலங்கரிப்பர். பொறுப்புணர்வோடு செயற்படுவர். ஆதலால் பெரிய வீடு சின்ன வீடு என்பதற்கப்பால் அவர்களுக்கென சில பகுதிகளையும் பொறுப்பையும் பிரித்துக் கொடுப்பது அவசியம்.

ஒரு வீடானது, வெறுமனே கற்களால் கட்டி எழுப்பிய கட்டடமாக இருக்கக்கூடாது. உண்மையான அன்பினால் கட்டப்பட்ட கோவிலே உண்மையான வீடாகும். அன்பான குடும்பம் வாழும் வீடு எந்தக் கட்டடத்தையும் ஆலயமாக்கவல்லது. சிறுவர்களோடு பெற்றோர்கள் அன்பாக, ஆதரவாக அரவணைப்போடு நடந்து கொள்வது அவசியம்.

அதேவேளை அதிக கண்டிப்போ அதிக செல்லமோ இருக்காமல் சமநிலையில் அன்பையும் அக்கறையையும் பேணவேண்டும். குடும்பத்தில் குதூகலம் நிலவுவது அவசியம். மகிழ்வான வீடு மகிழ்வான குழந்தைகளை உருவாக்குகின்றது. சிறுவர்களின் உளவியல் பாங்கை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகாக குடும்பம் திகழ்கின்றது. சிறுவர்கள் வளரும் சூழலானது அன்புமயமாக இருப்பதே அவர்கள் உள ஆரோக்கியத்திற்கும் இனிதான வாழ்விற்கும் அத்தியாவசியமாகும்.

### பாராட்டும் ஊக்குவிப்பும்:

பாராட்டின்போது பொய்யுரைத்தலோ பொய் புகழ்ச்சியோ இருக்கலாகாது. பாராட்டினால் குழந்தைகளின் ஒழுங்குணர்வு (morale) வளர்சின்றது. தொடர் வெற்றிகளுக்கு பாராட்டு ஊக்குவிப்பளிக்கின்றது. பாராட்ட வேண்டிய நேரங்களில் நாம் பாராட்டத் தவறினால் பிள்ளைகள் சோர்ந்து விடுவார்கள். தளர்ச்சியும், சோர்வும் வராமல் பெற்றோர் பிள்ளைகளை தட்டிக் கொடுத்தவண்ணமிருக்கவேண்டும். குழந்தைகளின் முதல் கல்விக்கூடம் வீடு. முதல் ஆசான்கள் பெற்றோர். பிள்ளைகளை ஊக்குவிப்பதாக எண்ணிக் கொண்டு இடித்துப் பேசுவது சரியல்ல. மாறாக தட்டிக் கொடுக்க வேண்டும். பதின்ம வயதை அண்மிக்கும் காலத்திலிருந்தே இளையவர்கள் தன்மதிப்பை தமக்குள் முன் மதிப்பளிக்க ஆரம்பிப்பர். பலர் சிறுவர்களாக இருக்கும் போதே தன்மான உணர்வு மிகுந்தவராக இருப்பர். பெற்றோர் உரிமை இருப்பதாக எண்ணி தம் பிள்ளைகளை அவர்கள் நண்பர்கள், வெளியாட்கள் முன்னிலையில் அதட்டித் திட்டுவதை தவிர்க்க வேண்டும். உங்கள் பிள்ளைகளின் தவறுகளை அடுத்தவர்கள் முன்னிலையில் திருத்தாமல் தனியாக வைத்துச் சுட்டிக்காட்ட வேண்டும்.

### தவறுகளை திருத்தும் முறைகள்

தவறுகள் திருத்தப்பட வேண்டும். திருத்தப்படாத தவறுகள் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வரும். எனினும் தவறுகளை திருத்தும் நெறி வன்முறையாக இருப்பதை விட மென்முறையாக இருப்பதே ஆரோக்கியமான மாற்றத்திற்கு வழிவகுக்கும்.

சிறுவர்களை அடித்தும் அச்சுறுத்தியும் திருத்துவது எளிதாக பெற்றோரிற்கு இருக்கும். ஆனால் காலப்போக்கில் இம்முறை பல பாதிப்புகளை உருவாக்கும்.

தேவையற்ற அச்சுறுத்தல்கள் தவிர்க்கப்பட வேண்டியவை. தவறுகள் திருத்தப்படாமல் தொடரப்பட்டால் மட்டும் சிறுவர்களை அச்சுறுத்தலாம். அவ்வாறு அச்சுறுத்தும் போதும் பொய்மை இருக்கக்கூடாது. தவறுகள் தொடருமாயின் தண்டனைகள் வழங்குவது அவசியம். தண்டனைகள் வன்முறையானவையாக இருக்காமல் தவறுகளைத் திருத்த ஊக்குவிப்பனவாக அவர்களுக்கு கிடைக்கவல்ல அவர்களுக்குப் பிடித்த வாய்ப்புகளை சலுகைகளைத் தடைசெய்யும் பாணியிலான தண்டனைகளாக இருப்பது நன்று.

சிறுவரோடு கண்டிப்பாக பேசும்போதும் சரி, இயல்பாக பேசும்போதும் சரி வார்த்தைகளைத் தெரிந்தெடுத்து பக்குவமாய் பேச வேண்டும். 'நாவினால் சுட்ட வடு' ஆறாமல் நிலைத்து நின்று பாதிப்பை உருவாக்கவல்லன.

பதின்ம வயதுச் சிறாருக்கு பழிப்புரை (Sarcasm) வலியூட்டுவதோடு கோபத்தையுமூட்டும். அதனால் எதிர் பேச்சு பேசும் பழக்கம் உருவாகும். மாறாக அழகாக பண்பாக பெற்றோர் பேசுவார்களேயானால் பிள்ளைகளும் அதனையே பின்பற்றுவார்கள்.

சில பெற்றோர் தம் பிள்ளைகள் மீது தாம் கொண்ட அதீத அக்கறையால் எந்நேரமும் பிள்ளைகளைக் குறை கூறிக்கொண்டே இருப்பார்கள். சலித்துப்போன பிள்ளைகளும் பெற்றோரோடு எதிர்த்துச் சண்டையிட்ட வண்ணமேயிருப்பர். இது சரியல்ல. இது பிள்ளைகளின் அடிப்படைப் பண்புகளைப் பாதிப்பதோடு பெற்றோர் பிள்ளைகளிடையேயான உறவையும் வெகுவாகப் பாதிக்கின்றது.

"வீடு என்பது போர்க்களமல்ல
வெட்டிச் சாய்த்து பேசுவதற்கு
வீடு என்பது நந்தவனம் - அங்கே
நறுமண மலர்கள் மலரவேண்டும்"

பெற்றோரில் ஒருவர் கண்டிக்கும்போது மற்றவர் ஒருபோதும் தலையிடக்கூடாது. பெற்றோர்கள் ஒரே நிலைப்பாட்டையே தம்மிடையே கொண்டிருத்தல் வேண்டும். எனின் தான் பிள்ளை தன் தவறுகளை உணர்ந்து திருத்திக்கொள்வதோடு பெற்றோரை வேறுபாடுகளின்றி சமமாக மதித்து அன்புகாட்டும்.

### போட்டிகள்:

போட்டிகள் சிறாரை ஊக்குவிக்கும். ஆரோக்கியமான போட்டிகள் சிறுவரின் திறனை வளர்க்க உதவும். தன்னிலை உயர்வு சிந்தனை, ஆளுமை, தன்மதிப்பு, தன்னம்பிக்கை போன்றவை உருவாக்க போட்டிகள் உதவுகின்றன. சிறுவர்களை ஊக்குவிக்க இத்தகைய போட்டிகளில் அவர்களை ஊக்குவிக்கலாம். ஆனால் எந்நிலையிலும் பிள்ளைகளிடையே பொறாமை மனப்பான்மை வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இல்லையே சமூகத்தையே அழிக்க வல்ல பொறாமைக்குணம் அவர்களுள் வளர்ந்து விடும்.

பிள்ளை நல்ல பிள்ளையாக வளர்வதற்கு இவை போன்ற பல சின்னச் சின்ன புறக் காரணிகள் காரணமாக இருக்கின்றன. பல சமயங்களில் நாம் பெரிய விடயங்களில் காட்டும் அக்கறையை சின்னச்சின்ன விடயங்களில் காட்டுவதில்லை. ஆனால் பல பெரிய மாற்றங்களுக்குக் காரணமாக உள்ளவை பல சின்னச் சின்ன காரணங்களே என்பதை நாம் அறிந்திருப்பது அவசியம்.

எல்லாவற்றிற்கும் மேலாக நம் பிள்ளை எப்படி வாழவேண்டும் என நாம் நினைக்கின்றோமோ முதலில் நாம் அது போல் வாழ வேண்டும் என்பதே மிக எளிதான அடிப்படையான விடயமாகும்.

sivavathani.p@thaiveedu.com

■ ■ ■

இணைந்து
கொள்ளுங்கள்
'தாய்வீடு'
facebookஇல்
www.facebook.com/thaiveedu

ALL YOUR FINANCIAL NEEDS



V.S. Thurairajah
President, Commissioner of Oaths
COMMUNITY
FINANCIAL SERVICE GROUP INC.
Serving You, For Your Secure Future
416-548-7300 / 647-829-4044
2100 Ellesmere Road, Unit 105,
Scarborough, ON. M1H 3B7
@ Markham & Ellesmere (North West Corner)

ALL YOUR MORTGAGE NEEDS
RBC
Royal Bank
Logi Thurairajah
Mobile Mortgage Specialist
Royal Bank of Canada
1761 Victoria Street East,
Whitby, ON L1N 9W4
logi.thurairajah@rbc.com
Cell : 416-278-2972
Fax : 416-548-7865



வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...
RE/MAX
Elaguppillai (Mike) Srinathan B.Sc
Sales Representative
Dir: 416-276-1225
Bus: 905-470-9800
Email: esrinathan@yahoo.com
7800 Woodbine Ave, Penthouse, Markham, On
RE/MAX®
Realtron realty Inc., Brokerage.
Independently Owned and Operated
To Buy or Sell your Home, Business, Investment Property for the Right Price please call me...
Sheppard/Meadowvale
$319,888
3 Bedrooms, 2 Washrooms Beautiful Home, 5 Yr Old, Over 1300 Sq. Ft, Overlooking Pond
Markham/N Of Eglinton
$324,900
3 Bedrooms, 3 Washrooms 3 Yrs New Quality-Built By Conservatory Group
Markham/Lawrence
$334,900
3+1 Bedrooms, 2 Washrooms Newly Painted, Refinished Front Stairs, Newly Tiled Front Foyer
Steeles/Markham
$339,000
3 Bedrooms, 3 Washrooms Lots Of Storage. Private Fenced Yard. Private Drive
Sandlewood / Creditview
$369,900
3 Bedrooms, 3 Washrooms This Open Concept Home Is Less Than 3 Year New
Mccowan/Bur Oak
$394,800
3 Bedrooms, 3 Washrooms Close To Shopping, Schools, Transit & Easy Access To 407
Markham/Steeles
$399,900
3+1 Bedrooms, 3 Washrooms Finished Basement Spaned Shows 10+ Magnificent Kitchen
Denison / Fonda
$414,900
3 Bedrooms, 3 Washrooms New Laminate Fl Thru-Out 2 Nd Floor Hard Wood Fl On Main Floor
Steeles/Brimley
$438,900
4+2 Bedrooms, 5 Washrooms Location!!! Location!! **Excellent Opportunity To Own home
10th Line/19th Ave.
$439,900
4 Bedrooms, 3 Washrooms Fieldgate' Home App. 2079Sf*Just Over 1 Yr New
Morningside/Finch
$447,000
4 Bedrooms, 3 Washrooms Premium Corner Lot!! Close To School, Ttc, Shops & More
Middlefield/Denison
$449,900
4 Bedrooms, 3 Washrooms Good Location! Excellent Condition Direct Access Frm Garage To Home
Markham/14th Avenue
$454,900
3 Bedrooms, 3 Washrooms A1 Home, Beautifully Decorated, 1734 Sq Ft(As Per Mpac Report),
9th Line And 14th Avenue
$469,900
3 Bedrooms, 3 Washrooms Beautiful Detached, Arista Home. Just Move-In. Loaded With Upgrades
9th Line/16th Ave.
$519,990
4 Bedrooms, 3 Washrooms New Home Built By Forest Hill Homes Corner Lot Accross From Park
Kennedy/Major Mac
$539,000
4+1 Bedrooms, 4 Washrooms High Demand Mattamy Home; Close To 404, 407
Markham/14th Ave
$549,000
4 Bedrooms, 3 Washrooms Beatutiful & Immaculate House Builded By Royal Pine Homes
16 Th / W Of 9th
$559,000
4 Bedrooms, 4 Washrooms Just Over 6 Yrs Old Solid House At Demanded Location, 2706 Sft
Markham Rd/Burk Oak
$439,000
3 Bedrooms, 3 Washrooms Premium Location & Overlooking Future Park**$$ Upgrades
E.9th/S.Hwy 7
$449,900
3 Bedrooms, 3 Washrooms Custom Walk-In Closet*Stone Patio* Location-Location-Location
Mccowan/Major Mackenzie
$578,000
4 Bedrooms, 3 Washrooms Immaculate Home,Spacious Layout New Hardwood Floor[2010]
Broadview/ Gerrard
$1,490,000
4 Bedrooms, 3 Washrooms Major China Town. A Wonderful Commercial In Prime Centre Point
Gas Stations
$599,000
Have An Open Mind And Want To Make Money. More Efforts Can Give You More Revenues
Gas Stations
$169,000
Retail Area: 1,200 Sq Ft Call for more info!
I Can also assist you with:
Mortgage, Home Inspection, Real Estate Lawyer

# HomeLife Future Realty

7 Eastvale Dr #205
Markham, Ontario
L3S 4N8

Office: 905-201-9977
Fax: 905-201-9229

BUY OR SELL PROPERTIES!

CALL US FOR PROFESSIONAL ADVICE.

FREE MARKET EVALUATION!

STATE OF THE ART MARKETING IDEAS.

LIST THROUGH US TO HAVE YOUR PROPERTY SOLD IN A FEW DAYS!

HOMELIFE HIGHER STANDARDS



Lokan Sundaram
Broker

Centum MetroCap Financial
*Mortgage Brokers*

Lic. No. M08000182
416-450-3984
lsundaram@trebnet.com

Lic. No. M08009958
416-230-6462
kkathir@trebnet.com



Kathir Kandiah
Broker

# $200,000 Life Insurance

புகை பிடிக்காத 40 வயது ஆணுக்கு

Only $20.52 Monthly

புகை பிடிக்காத 40 வயது பெண்ணுக்கு மாதம் $18.90 மட்டுமே

10 Year Term Life insurance (Renewable and Convertible)



So... Why wait? Call me to get the rate for your age.

KEN KIRUPA
Life Insurance Broker

759 Warden Ave., Toronto, ON
*www.familyprotection.ca*

CELL 416-294-9322
OFFICE 416-759-5453

INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life
Unity Life of Canada
Canada Protection Plan

E&OE

# உங்கள் வீட்டை விற்பது எப்படி?

**'How to sell your Home' என்றும் 'OREA'வின் புத்தகத்தினை மூலமாகக்கொண்டு வாசகர்களின் நன்மை கருதித் தொகுக்கப்பட்ட தொடர் இது.**

அலகு - 7



## S.K. பாலேஸ்

- வீடு விற்பனை முகவர் -

### என்னென்ன பொருட்கள் உங்கள் விட்டுடன் விற்கப்படும் என அடையாளம் காணுதல்.

உங்களுடைய முகவருடன் சேர்ந்து ஓர் விற்பனைப் பட்டியலைத் தயாரிக்கும் போது வீட்டுடன் சேர்த்து விற்க இருக்க இருக்கும் பொருட்களையும் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். வீட்டு விற்பனை முகவர்களின் வார்த்தையில் கூறுவதானால் இந்தப் பொருட்கள் எல்லாம் இரண்டு பெரிய பிரிவுக்குள் அடங்கும். அவையாவன 'Fixtures' மற்றும் 'Chattels'

இதில் Fixtures உங்கள் சொத்துடன் நிரந்தரமாக இணைக்கப்பட்டு விற்கும் பொருட்களின் ஒரு பகுதியாக இருக்கும். இவை வளமையாக வெப்பமாக்கி மற்றும் வெப்பத்தை உண்டாக்கும் உபகரணங்களாகவோ மத்திய குளிரூட்டியாகவோ, வீட்டுக்குள் நிரந்தரமாக வைத்துக் கட்டப்பட்ட மின் உபகரங்களாகவோ அல்லது சுவருக்கு சுவர் விரிக்கப் பட்டு இருக்கும் தரை கம்பளமாகவோ இருக்கலாம்.

இவற்றை விற்பதா இல்லையா என்பதை விற்பனைப் பட்டியல் ஒப்பந்தம் தயாரிக்கும் போது நீங்கள் தெளிவாக குறிப்பிட வேண்டும். Fixture என்றால் எது என்பது தெளிவில்லாமல் இருக்கலாம். சுவரில் பதிக்கப்பட்ட மின் விளக்குகள் Fixtures ஆகக் கருதப்படும் ஆனால் சாப்பாட்டு அறையில் தொங்கவிடப்பட்டிருக்கும் கண்ணாடித் துண்டுகளால் செய்யப்பட்ட சண்டலியர் '(CHANDELIER)' மின் விளக்குகள் விற்பனைப் பட்டியலில் சேர்க்கப் படாமல் இருப்பதை நீங்கள் விரும்புவீர்கள். வீடு வாங்குபவர்களைக் கவர்வதற்காக, வீட்டை விற்பவர்கள் விற்பனை விலைக்குள் ஒரு சில 'Chattels' களையும் சேர்த்துக் கொள்வது உண்டு. ஆனால் இவை பொதுவாக வீட்டில் இருந்து அகற்றப்படக் கூடிய பொருட்களாகும். சொந்தப் பாவிப்புக்கு ஆன வீட்டு விற்பனைப் பட்டியலில் பொதுவாக 'Washers' 'Dryers' சாளரங்களுக்கு மாட்டப்பட்ட திரைகள் (Blinds) Microwave, அடுப்புகள் என்பன அடங்கும்.

உங்களுக்கு வீட்டில் உள்ள ஒரு பொருள் Fixtures, Chatteles சா என்று தெரியாவிடின் அவற்றை விற்பனைப் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டும் அல்லது அவற்றை உங்கள் வீட்டில் இருந்து வீட்டை வாங்குபவர்கள் பார்க்கும் முன் அகற்றிவிட வேண்டும். இதனால் வீடு வாங்கியவர் வீட்டைப் பொறுப்பேர்க்கும் போது பல சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

### என்னென்ன பொருட்கள் வீடு வாங்கும் விலையில் அடங்கும்.

வீட்டிலுள்ள பொருட்களுள் ஒரு சில Fixtures ஆகவும் இன்னும் சில Chatteles ஆகவும் இருக்கலாம். ஆனால் இந்த Chattelesகளை நீங்கள் விற்க விரும்பினால் உங்கள் முகவருக்குச் சொல்லி அவற்றை விற்பனைப் பட்டியலில் சேர்ப்பதன் மூலம் உங்கள் வீட்டின் விலையை அதிகரிக்கச் செய்யலாம்.

என்னென்ன பொருட்கள் வீட்டு விற்பனை விலையில் சேர்க்கப் பட்டுள்ளன. என்ன பொருட்கள் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பதை பின்வரும் பட்டியலில் உள்ளது போல் தயாரிக்கலாம்.

### A list of Items to think about before you put your home up for Sale:

- Area Rugs
- Brass, Gold or Wood Bathroom Hems
- Ceiling fans
- Chandelier & Other light Pictures.
- Draperies, Reputation, Curtains, Blinds and Shutters
- Free Standing Bars Counters and Room dividers
- Wood burning stove, Tools and accessories, cut firewood
- Central Vacuum system and accessories
- Mirrors and permanently attached to Doors and walls.
- Microwave Oven
- Portable Dish washer
- Refrigerator/Freezer
- Free Standing Stove/Oven and Fire place.
- Washer and Dryer
- Rental Equipment such as Hot water Heater, Furnace and Conversion Burner
- Custom fit furniture such as Built-in book shelves.
- Water softener
- Window Air conditioners
- Garage Door openers and Remote Controls
- Pool Equipment and Accessories
- Steerage Shed and out buildings not Mounted on permanent
- Foundations
- Satellite Dish
- Above ground Swimming pool
- Sine sets and other playground Equipment
- Garden Furniture
- Barbecue
- Wall mounted Flat Screen TV
- Wall mounted Speakers
- Screen gazebos
- Hot tubs
- Exterior decorations

### சில சொத்து விற்பனை விபர அறிக்கை.

விற்பனைப் பட்டியல் ஒப்பந்தம் தயாராகியவுடன் உங்கள் விற்பனை முகவர் சொத்து விற்பனை விபர அறிக்கையில் கைஒப்பம் இடும்படி கேட்டுக் கொள்வார். இவற்றுள் நீர் வினியோகம் களிவு நீர் அகற்றல் போக்கு வரத்து உரிமை, மேலும் வீட்டில் உள்ள உபகரணங்களில் காணப்படும் பழுதுகள் முதலியன குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

மேலும் அந்தப் பட்டியலில் வீட்டின் அமைப்பு அவற்றில் உள்ள பழுதுகள், அவற்றில் செய்யப்பட்ட மாற்றங்கள், மற்றும் கூரை, நீர் கொண்டுவரும் குளாய்கள், சுற்றுச் சூழல் பாதுகாக்கக்கூடிய முறையில் அமைத்திருக்க வேண்டும்.

ஒன்ராறியோ வீடு விற்பனை முகவர் சங்கத்தின் (OREA) வெளியீடான "How to sell your Home" என்னும் புத்தகத்திலிருந்த தொகக்கப்பட்டது. (அலகு 7)

skbales@thaiveedu.com

■ ■ ■

J & S ACCOUNTING SERVICE
INCOME TAX SPECIALIST
FOR ALL YOUR PROFESSIONAL ACCOUNTING SERVICE
* CORPORATE TAX
* PERSONAL TAX
* BOOKKEEPING
* HST FILING
* PAYROLL SERVICE
* FINANCIAL STATEMENT PREPARATION
* BUSINESS START UP ASSISTANCE
* BUSINESS REGISTRATION
* INCORPORATING A BUSINESS
* PREPARING BUSINESS PROPOSAL
* BUSINESS VALUATION
* CRA AUDIT REPRESENTATION
* GST / PST / WSIB RETURNS
* CORPORATE TAX PLANING AND PREPARATION
INCOME TAX & RRSP
FREE CONSULTATION WITH APPOINTMENT
J&S ACCOUNTING SERVICE
15 YEARS OF EXPERIENCE
PLEASE CALL:
JEYA PILLAI, CGA
OR SUE SRI, CMA
Excellence! SERVICE
Tel: 416-826-5306
Email: jsaccountingservice@hotmail.com

Condo Townhouse
Victoria Park & N Of St. Clair
2 - Bedrooms,
3 - Washrooms







House for Sale
Church & Delaney
4 Bedrooms,
3 Washrooms

Canadian Home Appraisals Inc.
Residential & Commercial Appraisals
CHAI CANADIAN HOME APPRAISALS INC.
S_K_Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Managing Director
Tel: 905-201-0929
Fax: 905-201-8482
www:chainc.ca
email:.chai@chainc.ca
MY PROFESSIONAL DESIGNATIONS:
CRA (Canadian Residential Appraiser)
Designation with Real Estate division of University of British Columbia and The Appraisal Institute of Canada
Car: ( Certified Appraisal Reviewer)
Designation with Canadian National Association of Real Estate Appraisers.
MVA( Market Value Appraiser-Residential
Designation with The Canadian Real Estate Association
FRI (Fellow of the Real Estate Institute)
Designation with Real Estate Institute of Canada
CRES ( Certified Real Estate Specialist)
Designation with Real Estate Institute of Canada
RESIDENTIAL AND COMMERCIAL REAL ESTATE BROKER
Real Estate Broker licence with Real Estate Council of Ontario.
Century 21.
Affiliate Realty Inc.



S.K.Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Real Estate Broker
Residential & Commercial
TEL: 416-290-1200
CELL: 416-801-3219
Commercial Member

# மருத்துவக் கேள்வி பதில்



இராஜசேகர் ஆத்தியப்பன்

**டாக்டர், குடல்புண் குணமாகுமா?**

**- கனாரன மூர்த்தி.**

மஞ்சளை தணலில் இட்டு, சாம்பல் ஆகும் வரை எரிக்க வேண்டும். மஞ்சள் சாம்பலை தேன் கலந்து சாப்பிட்டால் குடல் புண் ஆறும்.

**டாக்டர், வாயுத் தொல்லைக்கு இயற்கை மருத்துவம் என்ன?**

**- விஜிதா.**

வேப்பம் பூவை உலர்த்தி தூளாக வெந்நீரில் உட்கொள்வதினால் வாயுத்தொல்லை நீங்கும். அத்துடன் ஆறாத வயிற்றுப்புண்ணும் நீங்கும்.

**டாக்டர், எனக்கு அடிக்கடி வயிற்று வலி ஏற்படுகின்றது இலகுவான தீர்வு என்ன?**

**- ஷர்மிளா குமரன்.**

வெந்தயத்தை நெய்யில் வறுத்து பொடி செய்து மோரில் குடித்தால் சாதாரண வயிற்று வலி நீங்கும்.

**டாக்டர், மலச்சிக்கல் பிரச்சினைக்கு தீர்வு என்ன?**

**- சாமிநாத்.**

செம்பருத்தி இலைகளை பொடியாக்கி, தினமும் இருவேளை சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் தீரும்.

**டாக்டர், சீதபேதிக்கு சித்த மருத்துவம் கூறும் தீர்வு என்ன?**

**- சுலைமான்.**

மலை வாழைப்பழத்தை நல்லெண்ணையில் சேர்த்துச் சாப்பிட்டால் சீதபேதி குணமாகும்.

**டாக்டர், நான் பித்த வெடிப்பால் மிகவும் கஷ்ரப்படுகின்றேன். பித்த வெடிப்புக்கு எளிய மருந்தோன்று சொலலுங்களேன்!**

**- செண்பகவல்லி.**

கண்டங்கத்திரி இலைசாறை ஒலிவ் எண்ணையில் காய்ச்சி பூசி வந்தால் பித்த வெடிப்பு குணமாகும்.

**டாக்டர், மூச்சுப்பிடிப்புக்கு வீட்டு பக்குவம் வேண்டுகின்றேன்.**

**- கனகேந்திரன்.**

சூடம், சுக்கு, சாம்பிராணி, பெருங்காயம் இவைகளை சம அளவு எடுத்து சேர்த்து வடித்த கஞ்சியில் கலக்கி மறுபடியும் சூடுபடுத்தி மூச்சுப்பிடிப்பு உள்ள இடத்தில் மூன்று வேளை தடவினால் குணமாகும்.

**டாக்டர், சரும நோய் மற்றும் தேமல் தீர எளிய வைத்யம் என்ன?**

**- சாரதா.**

கமலா ஆரஞ்சு தோலை வெயிலில் காயவைத்து பொடி செய்து தினமும் சோப்புக்கு பதிலாக உடம்பில் தேய்த்து குளித்து வந்தால் சரும நோய் குணமாகும்.

வெள்ளை பூண்டை வெற்றிலை சேர்த்து மசிய அரைத்து தினமும் தோலில் தேய்த்து குளித்து வந்தால் தேமல் குணமாகும்.

**டாக்டர், மூலம் மற்றும் பவுத்திரம் இவைகளுக்கு என்ன சாப்பிட வேண்டும்?**

**- ஜம்பு.**

கருணைக் கிழங்கை சிறுதுண்டுகளாய் நறுக்கி துவரம் பருப்புடன் சேர்த்து, சாம்பாராக செய்து சாப்பிட்டு வந்தால் மூலம் குணமாகும்.

**டாக்டர், தீப்புண் குணமாக கிளிசரின் பூசலாமா?**

**- ஜெகன்.**

பூசலாம். அத்தோடு வாழைத் தண்டை சுட்டு அதன் சாம்பலை தேங்காய் எண்ணையில் கலந்து தடவி வந்தால் தீப்புண், சீழ்வடிதல் மற்றும் காயங்கள் விரைவில் குணமாகும்.

**டாக்டர், மூக்கடைப்பு நீங்கி சுவாசம் நலமாக வழி சொல்லுங்கள்.**

**- திருமணி.**

ஒரு துண்டு சுக்கை தோல் நீக்கி அரை லிட்டர் நீரில் போட்டு சுண்டக் காய்ச்சி, பால் சர்க்கரை சேர்த்துக் காலை, மாலை சாப்பிட்டு வந்தால் மூக்கடைப்பு விரைவில் நீங்கும்.

**டாக்டர், வறட்டு இருமல் பாடாய் படுத்துகின்றது - நின்மதியாகத் தூங்கிப் பல நாள் ஆகின்றது. பிரச்சினைக்கு தீர்வு சொல்லுங்கள்.**

**- வசந்தா.**

எலுமிச்சம்பழச்சாறு, தேனில் கலந்து குடித்தால் வறட்டு இருமல் குணமாகும்.

**டாக்டர், கழுதைப்பால் குடித்தால் காசநோய் குணமாகுமா? கிளியோபாட்ரா தினமும் கழுதைப்பாலில் குளித்தாளேமே!**

**- கவிப்பிரியன்.**

தங்கக் கிண்ணத்தில் ஊற்றப்பட்ட கழுதைப் பால் தானுங்கெட்டு கிண்ணத்தையும் கெடுக்கும் என்ற வழக்கு ஊர்ப்புறங்களில் இன்னும் உண்டு. கறந்த சில நிமிடங்களில் பாக்டீரியா போன்ற நுண் கிருமி தொற்று கழுதைப்பாலில் நிறைய உண்டு. தாய்ப்பால் தான் சிறந்தது – அதற்க்கு அடுத்தபடியாக பசும்பால் - வாலிப வயோதிகபர்களுக்கு ஒட்டகப்பால். கிளியோபாட்ரா அழகியல்ல... ஆனால் - கவர்ச்சியானவள். அது ரசிக்க முடியாது – ஏனெனில் அநேகரை அழித்துப் பொசுக்கிய காமத் தீ அந்தக் கவர்ச்சியில் கொழுந்து விட்டு எரிந்தது. நீங்கள் சந்தனமும் சவ்வவாதும் பன்னீரும் கலந்து குளியுங்கள் கவிப்பிரியன்.

**டாக்டர் சென்ற இதழில் மலர் மருத்துவத்தை ஒரு மாற்று கோணத்தில் வழங்கியிருந்தீர்கள். இதைப் போன்று காய் வைத்யம், பழ வைத்யம், இலை வைத்யம், தழை வைத்யம் போணறவற்றையும் எமக்குத் தரலாமே?**

**- அல்லி இராணி யமுனா.**

நீங்கள் கிண்டல் செய்கின்றீர்களா அல்லது உண்மையை சொல்கின்றீர்களா என்று விளங்கவில்லை. இருந்தாலும் மூலப் பொருள்களை மருந்தாக உண்பதில் என்ன தவறு? நான் தொடர்ந்து இதைப் போன்ற தகவல்களை தருவதன் மூலம் ஒரு சிலரையாவது வேதிப் பொருட்களின் பயன்பாட்டில் இருந்து தப்புவிக்கலாம் என்று உறுதியாக நம்புகின்றேன்.

- வெண்டைக்காய் - கொலஸ்ட்ராலைக் குறைக்கும் - மூளையை சுறு சுறுப்பாக வைக்கும்.
- கோலி பிளவர் மற்றும் புரோக்களி புற்று நோயைத் தடுக்கும்.
- ஆண்மையை அதிகரிக்கும் சின்ன வெங்காயம்.
- கல்லீரலைக் காக்கும் பாவற்காய்.
- சர்க்கரை நோயை விரட்டும் நெல்லி.
- மலச் சிக்கலை தீர்க்கும் பப்பாளி.
- செமிபாடு மற்றும் ஞாபக சக்திக்கு வல்லாரை.
- நரம்புத் தளர்ச்சிக்கு முருங்கைக் கீரை.
- கர்ப்பபை சூட்டிற்கு வெந்தயம்.
- முழங்கால் வலிக்கு இஞ்சி.
- நச்சுத் தன்மையை நீக்கும் பூசணி, சுரைக்காய், வெள்ளரி மற்றும் சவ் சவ்.
- மூளை சம்பத்தப் பட்ட நோய்கள் வராமல் தடுக்கும் மஞ்சள்.
- சளித் தொல்லைக்கு மிளகு.

என்று சொல்லும் "சமையல் மருத்துவம்" தமிழனின் நம்பிக்கை. அல்லி இராணி யமுனா மேற்சொன்ன குறிப்புகள் உங்கள சமையல் அறையில் நிச்சயம் இனி அங்கம் வகிக்கும் என்று நம்புகின்றேன்.

**டாக்டர், Arthritis எனப்படும் மூட்டு வலி ஏன் ஏற்படுகின்றது இதைத் தீர்ப்பதற்கான வைத்திய முறைகள் என்ன?**

**- ப்ரியா**

சிறு வயதில் இருந்து உடலின் கழிவுகள் (சிறுநீர், மலம், வியர்வை) சரியாக நீங்காமல் நாளடைவில் அதன் நச்சுத் தன்மை இந்த வகை நோயாக உருவெடுக்கின்றது.

கல்லீரல் மற்றும் மண் ஈரல் பாதிக்கப்படுவதாலும், ஒரு வகை பாக்டீரியாவினாலும் மூட்டு மற்றும் இணைப்புகளில் அழற்சி ஏற்படுகின்றது.

**தீர்வுகள்:**

- நல்ல நடுத்தரமான உருளைக்கிழங்கு ஒன்றை மெல்லிய வில்லைகளாக வெட்டி ஒரு கோப்பை குளிர்ந்த நீரில் இரவு முழுதும் ஊறவைத்து பின் காலையில் அந்த நீரை வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். புதிதான உருளைகிழங்கு சாறையும் அருந்தலாம். இது மூட்டு வலிக்கு மிகச்சிறந்த மருந்தாகும்.
- இரண்டு தேக்கரண்டி எலுமிச்சை சாற்றை ஒரு தேக்கரண்டி தேனுடன் ஒரு கோப்பை வெதுவெதுப்பான நீரில் பிழிந்து தினம் இருமுறை வெறும் வயிற்றில் சாப்பிடலாம். அத்துடன், ஒரு அவுன்ஸ் ஆமணக்கு எண்ணையுடன் ஒரு அவுன்ஸ் இஞ்சி சாறு கலந்து வாரம் ஒரு முறை அருந்தி வீட்டில் இருக்க வேண்டும்.
- ஒரு தேக்கரண்டி கறுப்பு எள்ளை கால் கோப்பை தண்ணீரில் இரவு முழுதும் ஊறவைத்து பிறகு காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட வேண்டும்.
- வெதுவெதுப்பான தேங்காய் அல்லது கடுகு எண்ணெயில் சிறிது கற்பூரத்தை போட்டு நன்கு மூட்டில் தேய்த்தால் வலி குறையும்.
- ஒரு தேக்கரண்டி குதிரைமசால் (இது ஒரு கால் நடை தீவனம்) விதைகளை ஒரு கோப்பை நீரில் கொதிக்க வைத்து தேநீர் போல ஒரு நாளைக்கு மூன்று-நான்கு முறை அருந்தலாம்.
- இரண்டு மேஜைக்கரண்டி விளக்கெண்ணையை (castor oil) அடுப்பில் சூடேற்றி ஒரு கோப்பை ஆரஞ்சு சாற்றில் விட்டு காலையில் உணவிற்கு முன் சாப்பிட வேண்டும். இதை நோய் தீரும் வரை செய்ய வேண்டும். மூன்று வாரங்கள் தொடர்ந்து செய்ய வேண்டும். பிறகு மூன்று வாரங்கள் விட்டு விட வேண்டும். மீண்டும் மூன்று வாரங்கள் செய்ய வேண்டும். இந்த மருந்தை சாப்பிடும் போது புளிப்பான உணவு வகைகளை தவிர்க்க வேண்டும்.
- ஒரு மேஜைக்கரண்டி பச்சை அல்லது பாசிப்பருப்பை முருங்கை இலையுடன் சேர்த்து இரண்டு பூண்டு பற்களுடன் வேகவைத்து சூப்பாக நாளொன்றுக்கு இருமுறை சாப்பிட வேண்டும்.

**உணவுப்பழக்கம்:**

வாழைப்பழம், அத்திப்பழம் அதிகமாக உண்ண வேண்டும். காய்கறி சூப் அதிகமாக சாப்பிட வேண்டும். கேரட், பீட்ரூட் போன்றவற்றை பச்சையாக சாப்பிடலாம்.

கால்சியம் அதிகம் உள்ள பால், பால் சார்ந்த பொருட்கள், முள் நிறைந்த மீன் போன்றவற்றை சாப்பிட வேண்டும்

**தவிர்க்கவேண்டியவை:** காரமான வறுத்த உணவுகள், வெந்தயம், தேநீர், கோப்பி, பகல் தூக்கம், மன அழுத்தம்.

**எனது நகங்கள் வெளுத்துக் காணப் படுகின்றது. எதனால் இப் பிரச்சினை உருவாகின்றது?**

**- ஷீலா**

இரத்த சோகையாக இருக்கலாம். இரத்தத்திலுள்ள சிகப்பணுக்கள் அளவில் குறையும் போது சின்னச் சின்ன வேலையைச் செய்வதற்கும் உடல் பலமின்றிப் போகும்! இரத்தத்தின் சிவப்பணுக்கள் குறைவதால், இயல் பாக நகம் இருக்க வேண்டிய 'பிங்க்' நிறம் போய், வெளுத்து விடுகின்றன.

இரும்புச்சத்து இரத்தத்திலுள்ள சிகப்பணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும். ஈரல், கீரைவகைகள், மற்றும் இறைச்சி, உயிர்சத்து பி-12, கறிவேப்பிலை மற்றும் அத்திப் பழம் அதிகமாக சேர்த்துக் கொள்ளுங்கள்.

**பி.கு: மேற்கூறிய குறிப்புக்களை வைத்தியரின் ஆலோசனையுடன் பின்பற்றுவதே சிறந்தது.**

rajasekar.a@thaiveedu.com

■ ■ ■


# TODAY IS A GOOD DAY
TO MAKE THINGS SIMPLER

Insurance and investment solutions that fit your life.



**Ahilan Balachandran** CFP CLU B.Comm.
Bus 416-894-2009
ahilan.balachandran@sunlife.com
www.sunlife.ca/ahilan.balachandran
2075 Kennedy Road, Suite 1300Scarborough ON M1T 3V3

I can help you with:
- Life insurance
- Long term care insurance
- Savings plans
- Disability insurance
- RRSPs/RRIFs
- Retirement planning
- Financial planning
- Tax-Free Savings Accounts
- RESPs*
- Critical illness insurance

Sun Life Financial

© Sun Life Assurance Company of Canada, 2010. *Mutual funds offered by Sun Life Financial Investment Services (Canada) Inc.

கேரளா ஆயுர்வேதா
Since 1992



Dr. இராஜசேகர் ஆத்தியப்பன் M.D.,F.H.M.S.S.,

# DIABEAN - Capsules

## ஆயுளைக் கூட்டும் அமிர்த சஞ்சீவி
## (St.Luke's Formula)

**நீரிழிவுக்கு - இதுதான் மருந்து.... இதுதான் தீர்வு.**

சர்க்கரை நோயை முற்றிலும் குணமாக்கும் அபூர்வ மூலிகையை
ஆனந்த வாழ்விற்காக கொடுத்த அகஸ்தியர் மலை ஆதிவாசிகள்!
நாள்பட்ட நீரிழிவு, & இரத்த அழுத்தம் ஒரே மருந்தில் குணமாகின்றது.

நம்ப முடியாத ஆச்சர்யம்!
உலகின் பல பாகங்களில் இருந்தும் பாராட்டுகளை
பெற்றுவரும் மருத்துவ விஞ்ஞானியின் அதி உன்னத கண்டுபிடிப்பு.

DIABEAN குளிசைகளை நாள் ஒன்றுக்கு 3 வீதம் குறைந்த பட்சம் ஒரு மாதம்
(அதிக பட்சம் 3 மாதம்) எடுப்பதால்...
ஆங்கில மருந்துகளை வருடக் கணக்கில் எடுத்தால் வரும் பக்க விளைவுகளும் நீங்கும்.

| மேலும்... சலரோகம் ஏற்படுத்தும் தாக்கங்களான | |
|---|---|
| 1. கை-கால் மரத்துப் போகுதல் | 7. மிகு தாகம் |
| 2. கண்பார்வை மங்குதல் | 8. அடிக்கடி சிறுநீர் கழித்தல் |
| 3. நரம்புத் தளர்ச்சி | 9. சோம்பல், சோர்வு, அசதி |
| 4. முடி உதிர்தல் | 10. உடல் மெலிதல் |
| 5. நா வறட்சி | 11. அணுக்களின் எண்ணிக்கை குறைதல் |
| 6. தோல் நோய்கள் | 12. உடல் உறவில் ஆர்வம் குறைதல். |

போன்ற எல்லாப் பிரச்சினைகளும் ஒரே மாதத்தில் தீர்ந்துவிடும் மூன்று
மாதங்களில் முற்றிலும் உங்கள் கட்டுப் பாட்டிற்குள் வந்துவிடும்.

அனுபவபூர்வமாக கண்ட உண்மை..! ஆயுளைக் கூட்டும் அமிர்த சஞ்சீவி..!!
(Pancreas) கணையத்தின் கண்ணறைகள் திறக்கப் பட்டு
தானாகவே இன்சுலினை சுரக்கச் செய்தவால் பரிபூரண மாற்றம் எற்படும்.

சுகம் பெற்றவர் தினந்தோறும் பாராட்டுகின்றார்கள்.
ஆனந்தமான, உற்சாகமான, இன்பமயமான,
ஒளி மயமான வாழ்கை வாழ்ந்திடுங்கள்

மருந்துகள் கையிருப்பில் கிடையாது.
முன்பதிவு செய்பவர்களுக்கு மட்டுமே வரவழைத்துக் கொடுக்கப்படும்.

விரைந்து பெற்றிட அழையுங்கள்

டாக்டர். இராஜசேகர் ஆத்தியப்பன் M.D.,F.H.M.S.S.,
## கேரளா ஆயுர்வேதா
4005 டான் மில்ஸ் ரோட்/ஸ்டீல்ஸ், அறை எண்-314, தொலைபேசி: 416 995 0416
ஜீவ சப்தம் ஆசிரமம் குற்றாலம், தென் இந்தியா.
தொலை நகல்: 1-416-946-1638
ஈமெயில்: ayurvetha@gmail.com, இணைய தளம்: www.ayurvetha.com

# உடலுளவுணர்வுச்சோர்வு
## (Burnout)

எம்மில் பலர் நாளாந்தம் அதிகாலையில் எழுந்து தம் முன்னால் குவிந்திருக்கும், செய்து முடிக்கப்படவேண்டிய பல நூறு விடையங்களால் தாங்கள் முடக்கப்பட்டு விட்டதான ஓர் உணர்வினைப் பெறுவார்கள். வீட்டிலுள்ளதும், வேலைத் தளத்திலுள்ளதுமான வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், விடுமுறையில் செல்லல் மற்றும் இன்னோரன்ன விடையங்களை கவனிப்பதற்காகவும் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருப்பார்கள். இவ்வாறான அதீத வேலைச் சுமைகளினால் அவர்கள் ஒருவகை சோர்வு நிலைக்கு உள்ளாக்கப்படுவார்கள். இந்நிலையில் பல நாளாந்த நடவடிக்கைகளைத் துறந்தேனும் விடுமுறை கழிப்பு இடங்களுக்குச் சென்று புத்துயிர் பெற்று வரவேண்டும் என்ற ஆர்வம் மிக்கவர்களாகக் காணப்படுவர். இந்த விவரணநிலை உடலுளவுணர்வுச்சோர்வு (Burnout) நிலையை உணர்த்தி நிற்கும்.

உடலுளவுணர்வுச் சோர்வு என்பது எங்களுக்கு அதிகம் பரீட்ஷிமில்லாத உளவியல் சார்நிலை. இதற்கு பின்வருமாறு வரைவிலக்கணம் கூறலாம்: நீடித்த உடல், உள உணர்வு ரீதியான சோர்வின் அனுபவமும், முன்பு அனுபவித்த தொழிற்பாடுகளில் நாட்டக் குன்றல். இன்றைய தேவைகள் நீண்டுசெல்லும் உலகில் எங்கள் வாழ்வின் ஏதோ ஒரு கட்டத்தில் எம்மில் பெரும்பாலானோர் இவ்வுளவியல் நிலையின் குணம் குறிகளை அனுபவிக்க நேரிடலாம்.

இவ்வுளவியல் நிலை மனவழிச் சக்தியின் சீரழிவில் தொடங்கி விரைவில் உடல்ரீதியான குணம்குறிகளாகப் பரிணமிக்கும். மேலும் மனவழுத்தத்தின் தோற்றத்தினால் சோர்வு நிலை அடைந்துவிட்டதான உணர்வு ஏற்பட்டு பின் தொடர்ந்து வரும் மனவழுத்தக் கூடுதலால் நாங்கள் வியாதிகள் தொற்றுவதற்கான இலகுநிலைக்கு உள்ளாவோம்.

உடலுளவுணர்வுச்சோர்விற்கு உள்ளாகுபவர்கள் தொடக்கத்தில் தங்களால் அதிக கூடிய



நாட்களுக்கு எவற்றையும் சரிவரச் செய்யமுடியாதென்று உணவுகொள்வர். அத்துடன் செய்யும் ஒவ்வொரு நடவடிக்கையையும் கஷ்டப்பட்டுச் செய்யவேண்டியிருக்கும். மேலும் அவர்களின் சக்தி நிலை சாதாரண நிலையைவிட குறைவாகவே அமைந்துவிடும்.

உடலுளவுண்ர்வுச் சோர்வு எங்கள் வாழ்வின் எல்லாக் கோணங்களிலும் புகுந்து பாதிப்பை ஏற்படுத்துவதுடன் பூரணமாக நாங்கள் அதனால் வெற்றிகொள்ளப்பட்டுவிட்டதான உணர்வினை ஏற்படுத்தும். அதாவது நாம் செய்யும் எதுவும் எமது நிலையில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்ற உணர்வினை ஏற்படுத்தும்.

பாதுகாப்பது எப்படி

இவ்வாறான சோர்வு நிலைத்தாக்கத்திலிருந்து எம்மை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளலாம்? எமக்குள்ள குணம் குறிகளை இனம்கண்டு கொள்ளல் பகுதியான தீர்வாக அமையலாம். அதீதகளைப்பு, நாட்டம் இன்மை மழுங்கடிக்கப்பட்ட உணர்ச்சித்தாக்கங்கள், உந்துதல் (motivation) குன்றல், விலகியிருக்கும் தன்மை போன்றவை சில குணம் குறிகள், அதாவது நடைமுறையில் மற்றவர் களிடம் இருந்து அதிக நேரம் விலகியிருத்தல், கடமைகளைச் செய்ய அதிக நேரம் எடுத்தல், வெற்றிகொள்ள முடியாத ஏமாற்றங்கள்.

அதிர்ஷ்டவசமாக இச்சோர்வு நிலையைத் தடுக்க பல வழிகள் உண்டு. முதன்மையானதாக, நாங்கள் எமது நலனுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். ஒவ்வொரு நாளையும் எமது தேவைகள் பற்றிய தீர்வைப் பண்ணும் வகையில் ஒரு நடைமுறையுடன் தொடங்கவேண்டும். இந்நடைமுறை தியானம் பண்ணுதல் (Meditation), வாசித்தல் அல்லது பயிற்ச்சிகளில் ஈடுபடுவதாக அமையலாம். அடுத்து நலமாகவும், ஒழுங்காகவும் உண்ணுதல். அத்துடன் நாங்கள் மீளமைப்புத்

கந்தையா பரநிருபசிங்கம்



துயிலல், பயிற்சிகள் பெறுவதை உறுதி செய்யவேண்டும். முக்கியமாக, எங்கள் நேரம், எங்கள் வேலை ஆகியவற்றை மதிக்கும் வகையில் எமக்கு நாங்கள் எல்லைகளை வகுத்து வாழப்பழகிக் கொள்ளவேண்டும். எங்களுக்கு நாங்கள் எமது வாழ்வின் கதியைக் குறைத்து விழக்கூடியதாக அனுமதி அளிக்கவேண்டும். அதாவது நாங்கள் எமது உடலையும், உள்ளத்தையும் தொடர்ந்து கனம்பண்ணுமுகமாக எங்களுக்கும் மற்றவர்களுக்கும் எல்லைகளை வகுத்து எமக்கு உதவுமுகமாக சிருஷ்டிக்கும் அக்கறைகளை (Creative interests) வளர்த்தெடுத்தும், மனவழுத்தத்தைப் பராமரிக்கக் கற்றும், எங்களிடமுள்ள அனைத்து வளங்களையும் பாவிக்க வேண்டும். விடுமுறைகள் எமக்குத் தேவையான இடைவெளையைக் கொடுத்தாலும், எங்கள் தேவைகளை மீளொளுங்குபடுத்தலும் (realigning our needs), எங்களுக்கே நாங்கள் முன்னுரிமை கொடுக்கக் கற்றுக் கொள்ளலும் எங்களுக்குப் புத்துயிர் (Rejuvenation) அளிப்பதில் அதிகம் பங்கு கொள்ளும்.

"ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நலனை முன்னிலைப் படுத்தி உடலுளவுணர்ச் சோர்விலிருந்து பாதுகாப்புப் பெறுவோமாக"

paranirubasingam.k@thaiveedu.com

■ ■ ■



# MORTGAGE

- *1st & 2nd Mortgages*
- *New Immigrants / Self Employed*
- *Refinance*
- *Equity Line of Credit*
- *Renewal*
- *All other Financial Arrangement*

**Kethes Sivasubramaniyam**

Mortgage Agent - (Lic # M08006105)

**Cell : 416.873.5780**

Via Financial (Lic # 10669) Services Inc.



5200 Finch Ave. E, Suite 304, Scarborough, ON. M1S 4Z5

Tel : 416-548-8005 Fax : 416-548-8006

Head Office : 120 Traders Blvd. Suite 206, Mississauga, ON. L4Z 2H7

## வருமானவரிச்சேவையில் பலவருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால் நம்பிக்கையான சேவை

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Saving Advice




**KETVAR**

**TAX & ACCOUNTING**

304-5200 Finch Ave.E, (Middlefield & Finch)

Toronto. ON M1S 4Z5

**Tel : 416-873-5780 / 416-548-8005**

Email : ketvar@gmail.com




## Kannan Kankesu

REAL ESTATE & MORTGAGE BROKER

Mortgage/Refinance 2.15%....

**Cell: 416 418 5189**

Bus: 416 284 5555

www.bestinfo.ca

RED CARPET. Royal Realty Ltd., Brokerage

**9th & 14th**




| | |
|---|---|
| $689,900 | 4 Bedroom |
| 4 Years Only | Library |
| 3000-3500 | 4 Washrooms |
| On Boxgrove | 110k+Upgrades |

880 Ellesmere Road, Suit 204, Toronto, ON kkankesu@gmail.com

**Major Mack/Jane**




$499,900 2nd Floor Family Room
3+1 Bedroom Finished Basement

**Chinguacousy/Botavia**




$349,000 $$$$ Spent on upgrades
4Years Only High End S.S Appl.

**McCowan/MajorMackenzie**




$488,000 HardWood Floor
4 Bed Room 3 Washrooms

**Tobram/Fathertobin**





$449,900 Hardwood Floor
4 Bedroom 3 Washrooms

**Markham/Passmore**





$399,800 3 Bed Room
Finished Basement

**McCowan/Eglinton**





$24,900+ Sale of Business
Low Rent Long lease

**Westney/Rossland**



$424,900 Hardwood Floor
4 Bed Room 3 Washrooms

**9th Line/14th Ave**




$499,999 Detached 2 Story
4 Bedroom 3 Washrooms

Computek College
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY
Est. 1991
www.computek.edu
A Career College near you ...



Looking for jobs in Banks
Get job ready in weeks !

Bank Teller
CSC (Canadian Securities Course)
IFIC ( Investment funds Institute of Canada)
FOREX Trading

SAP Training - FI & CO , BPC
Canadian Payroll Assoc (CPA) - Exam Prep
Food Handler Certification
A+ ( Computer Assembly &Troubleshooting )
CCNA (Cisco Certified Network Admin)
Programming (C++ / JAVA)

Diploma
Get ready for job in 6 - 12 months !
If you are :
- Currently receiving E.I. benefits
- Received E.I. within 3 yrs
- Received maternity benefits within 5 yrs
You may be eligible for HRDC funding

Are you not qualified for HRDC Funding Assistance ?
Is your HRDC funding REJECTED?
You may still qualify for other Financial Assistance
Please call us for details

Network Engineering
- CompTIA A+
- CCNA
- Linux 1
- MCP, MCSA, MCSE
- Network +

Weekdays, Week-end and Evening Classes

Personal Support Worker (PSW)
Early Childcare Asst.(ECA)
Computerized Accounting
Business Administration
Medical Office Admin (MOA)

Financial assistance available to those who qualify

Markham Campus
Markham / Steeles
202 - 7 Eastvale Drive.
Markham L3S 4N8
905.471.3344

Scarborough Campus
Kennedy / Sheppard
301-2347 Kennedy Road
Scarborough M1T 3T8
416.321.9911

Toronto Campus
Kennedy / Eglinton
248-2390 Eglinton Ave E
Toronto M1K 2P5
416.285.9941

NOT ALL THE COURSES ARE AVAILABLE AT ALL THE CAMPUSES

# கலைந்து போன...

7ம் பக்கத் தொடர்ச்சி...

ஐந்து மாதத்தில் Arrow தனது முதலாவது பறப்பை வெற்றிகரமாக செய்து முடித்தது. தனது ஏழாவது பறப்பின் போது தரையில் இருந்து 50,000 அடி உயரத்தில் மணிக்கு 1,600 km வேகத்தில் Arrow பறந்து சென்றது. வலிமை குறைந்த J75 என்ஜின்களை கொண்டே Arrow 1600 km வேகத்தில் பறக்கும் என்றால், அசுர சக்தி கொண்ட Iroquois என்ஜின்களைப் பூட்டிவிட்டால் மணிக்கு 2500 km வேகத்தினை கூட எட்டலாம் என்பது தெளிவாக தெரியலாயிற்று. இந்த வேகம் கனடிய வான்படை கேட்டதை விட அதிகமாகும். இதே நேரம் கனடிய வான்படை, Arrowஇல் எவ்வகையான ஏவுகணைகளை பொருத்துவது என்பதில் அடிக்கடி முடிவுகளை மாற்றியது. இதன் காரணமாக Arrowஇனுடைய வடிவமைப்பில் மாற்றங்களை செய்ய வேண்டியதாயிற்று. இந்த மாற்றங்களால் தயாரிப்பு செலவு தாறுமாறாக எகிறத் தொடங்கிற்று. செலவீனம் குறித்து அரசு மட்டத்தில் அரசல், புரசல்களாக முணுமுணுப்புகள் கேட்கத் தொடங்கிற்று.

இதனிடையே, Arrow இனுடைய பறப்பின் பின் ஒருவாரம் கழித்து கனடிய அரசியல் வானில் காட்சிகள் மாறுகின்றன. விபரல் கட்சி ஆட்சியை இழக்க, கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சியை கைப்பற்றிக் கொள்கிறது. John Difenbaker பிரதம மந்திரியாகின்றார். விபரல் ஆட்சியினது செல்லப் பிள்ளையான Avro நிறுவன தலைவர் Gordon மீது பிரதமருக்கு அவநம்பிக்கை பிறக்கிறது. Arrow திட்டத்தின் செலவு குறித்து அதிருப்தி கொண்ட பிரதமர் உற்பத்தி செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் விமானங்களைத் தவிர, புதிய விமானங்களை நிர்மாணிக்க வேண்டாம் என உத்தரவு பிறப்பிக்கின்றார். 1959ம் ஆண்டு மார்ச் மாதத்தில் Arrow திட்டம் மீண்டும் பரிசீலிக்கப்படும் என அறிவிக்கின்றார். இதனிடையே தங்களது புதிய என்ஜினான Iroquois இனுடன் Arrow விமானத்தை வானில் ஏவ Avro நிறுவனம் முடிவெடிக்கின்றது. புதிய பலத்துடன் Arrow விமானம் வானில் எழுந்துவிட்டால், பிரதமரின் Arrow திட்ட மீள்பரிசீலனை தங்களுக்கு சாதகமாக அமைந்து விடும் என்று Avro நிறுவனம் கணக்குப் போடுகிறது. சகல வேலைகளும் முடிவடைந்து Arrow விமானம் புதிய என்ஜின்களுடன் தனது பறப்பிற்காக காத்திருந்த வேளையில், தான் உறுதியளித்த மார்ச் மாதத்திற்கு ஒரு மாதம் முன்பதாகவே திட்டம் கைவிடப்படுவதாக பிரதமர் அறிவிக்கின்றார்.

தனது உறுதிமொழிக்கு முன்பதாகவே ஏன் பிரதமர் திட்டத்தை கைவிடுவதாக அறிவித்தார்? Arrow தனது திட்டத்தின்படி Iroquois என்ஜின்களுடன் பறப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படாமலேயே ஏன் திட்டம் கைவிடப் பட்டது? பெரும் பொருட்செலவில் உருவான Iroquois என்ஜின் ஒருமுறை கூட பறக்க விடப்படாமல் உருக்கப்பட்டதன் காரணம் என்ன? இது குறித்த பல விடை தெரியாத கேள்விகளும், அது பற்றிய வாதப்பிரதிவாதங்களும் இன்னும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. செலவீனத்தை காரணம் காட்டினாலும், ஏன் சகல விமானங்களும், அது தொடர்பான ஆவணங்கள், வரைபடங்கள், வடிவமைப்புகள், உற்பத்தி செய்ய பயன்பட்ட சின்ன உபகரணங்கள் கூட அழிக்கப்பட்டன என்பதற்கு இன்று வரை விடையில்லை.

பிரதமரின் முடிவுக்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும் முதன்மையானது அமெரிக்கா சம்பந்தப்பட்டது. சோவியத்தினுடைய அச்சுறுத்தல்களை சமாளிப்பதற்கு விமானங்களை விட ஏவுகணை தொழில்நுட்பமே உகந்தது என்று அமெரிக்கா நம்பத் தொடங்கியிருந்தது. எதிரி விமானங்களையும், ஏவுகணைகளையும் தானாகவே கண்டுபிடித்து அழிக்கும் Bormac எனும் ஏவுகணைத் திட்டத்தை அமெரிக்கா ஆரம்பித்திருந்தது. கனடாவையும் இந்த ஏவுகணைகளை வாங்குமாறு அன்பான, அல்லது வற்புறுத்தலான வேண்டுகோள்களை விடுத்தது. கனடா இதற்கு அடிபணிந்தது. ஆனால் Bormac திட்டத்தையும் Arrow திட்டத்தையும் ஒரேயடியாக நடைமுறைப்படுத்துவதற்கு கனடாவின் பொருளாதாரம் இடம் கொடுக்கவில்லை. அதனால் தான் Arrow திட்டம் கைவிடப்பட்டதாக சொல்லப் பட்டாலும், அதைவிட இன்னுமொரு சூழ்ச்சியையும் அநேகர் சுட்டிக் காட்டுகின்றார்கள். அமெரிக்கா அப்போது U2 எனப்படுகின்ற உளவு விமானத்தை பல நாடுகளில் உளவறிவதற்காக பயன்படுத்திக் கொண்டிருந்தது. இந்த விமானம் தரைக்கு மேலே 50,000 அடி உயரத்தில் பறக்கக் கூடியது. யாருடைய கண்களுக்கும் அகப்படாதது. ஆனால் Iroquois என்ஜின்களுடன் பறக்கத் தயாராய் இருந்த Arrow விமானம் U2 உளவு விமானத்தை மிக இலகுவில் கண்டு பிடித்துவிடும். அத்துடன் U2 விமானத்தை அழிக்கும் வல்லமையும் இந்த Arrow விமானத்திற்கு மட்டும் தான் இருந்தது. இதை அமெரிக்கா விரும்ப வில்லை. இதன் காரணமாகவே அமெரிக்கா கனடிய அரசுக்கு அழுத்தம் கொடுத்து Arrow சம்பந்தமான அத்தனை தடயங்களையும் அழித்தது என்றே அநேகர் நம்புகின்றனர். அண்மையில் Paul Campagna எனும் பாதுகாப்பு துறை ஆலோசகர் எழுதிய "THE SECRET FILES OF AVRO ARROW REVEALED" எனும் புத்தகத்தில் இது பற்றிய ஆதாரங்களை அடுக்கியிருக்கின்றார்.

Arrow திட்டம் நிறுத்தப்பட்டபின் கனடிய வான் படை, அமெரிக்கா வான்படையால் பாவிக்கப்பட்ட 66 யுத்த விமானங்களை விலைக்கு வாங்கியது. கனடிய வான்படை இந்த வகை விமானங்களை முன்பு வாங்க மறுத்திருந்தது. Bormac ஏவுகணைகளில் அணுவாயுதங்களையும் பாவிக்க வேண்டும் என கனடிய அரசுக்கு அமெரிக்க அரசு அழுத்தம் கொடுக்கக் தொடங்கியது. அதற்கு அடிபணிய மறுத்த John Diefenbakerஇன் ஆட்சி கவிழ்க்கப்பட்டு விபரல் கட்சி ஆட்சிக்கு வந்தது. Lester B. Pearson தலைமையிலான அரசு அணுவாயுத Bormac ஏவுகணைகளை கனடிய மண்ணில் நிறுவியது. எதிர்பார்க்கப்பட்ட மாதிரி தொழிற் படாத Bormac ஏவுகணைகள் 1972ம் ஆண்டு முற்றாக அமெரிக்காவுக்கு திருப்பி அனுப்பப் பட்டன.


சரி, Arrow திட்டத்தில் வேலை செய்த மூளை சாலிகளுக்கு என்ன நடந்தது? அவர்களில் பெரும்பாலோரை அமெரிக்கா தனது விண்வெளி ஆராய்ச்சிக்காக NASAஇல் இணைத்துக் கொண்டது. அமெரிக்க விண்வெளித் துறையின் வெற்றிக்கு இவர்கள் பெரும் பங்காற்றினார்கள். Avroஇன் தலைவரான Gordon விரக்தியில் மதுப்பழக்கத்திற்கு அடிமையாகி, எட்டு வருடத்தில் மரணமடைந்தார்.

செலவுகள் காரணம் காட்டப்பட்டாலும் பெரும் அரசியல் சூழ்ச்சிகளே Arrow திட்டத்திற்கு ஆப்பு வைத்தது என்பதே அநேகரின் வாதம். கனடிய விமானத் தொழில்நுட்பதுறை Arrow இன் அழிவின் பின் செயலிழந்து போனதுடன் அதன் எதிர்கால வளர்ச்சியும் இல்லாமல் போய்விட்டது. அசுர சாதனைகள் செய்ய தோள் நிமிர்ந்து புறப்பட்ட Arrow தடயம் கூட இல்லாமல் கலைந்து போனது. கூடவே கனடியர்களின் கனவும் தான்.

nimal.nagaraj@thaiveedu.com

■ ■ ■

இணையத்தளத்திலும்'
தாய்வீடு'
www.thaiveedu.com


தளம் எல்லாம் தளமல்ல
iwishtomove.com மாத்திரமே
உங்கள் வீடு வாங்குதல், விற்றலுக்கான இணையத்தளம்
SEE PAGE 51
ITS FAMOUS FOR HOME BUYERS AND SELLERS
www.iwishtomove.com
NEW LISTINGS EVERYDAY
Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
Fax: 905.471.7441
RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated


Trusted for Service and
Respected for Results
22 Years Real Estate Experience & Multi Award Winner
RED CARPET
Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
880 Ellesmere Road, Suite 204, Toronto, ON.
Karu Kandiah FRI. CRES.
Real Estate Broker / President
Bus: 416-284-5555 Dir: 416-616-7278
To Buy or Sell your Home for the Right Price please call me...
Call For More Info!
New Condo at Midland / Steeles Ave
Only few Units Available, 2 Bedrooms
$489,000
Jane/Major Mack
3+1 Bedrooms, 4 Washrooms
Gorgeous Upgraded Arista Built Home
$115,000
Lawrence/Midland
1 Bedroom, 1 Washroom
Location Next To Subway.
Call for Price!
Finch/ Middlefield
2 Bedroom, 2 Washrooms
Close To All Amenities
$189,900
Neilson / Ellesmere
3+1 Bedrooms, 3 Washrooms
Very Close To 401
$579,900
14th And 9th Line
4 Bedrooms, 4 Washrooms
Built Less Than 5 Years By Starlane
$99,900
Nelson / Sheppard
2 Bedrooms, 2 Washrooms
Ideal For First Time Buyers
$359,900
Mclaughlin & Wanless
4 Bedrooms, 3 Washrooms
Spacious Family Room
$689,900
9th Line /14th Ave
4 Bedrooms, 4 Washrooms
9th/14th, Markham
$329,999
Markham/Eglinton
2+1 Bedroom, 2 Washrooms
5 Years Old Town Home
$129,900
Kennedy/Hwy 401
1+2 Bedrooms, 2 Washrooms
Ideal For First Time Buyers
Ellesmere & Midland Plaza
Space for Rent 1000 to 2000 Sq.ft
For retail Business or Office
$229,000
Brampton
3 Bedrooms, 2 Washrooms
Close To Transport & Hwy 410
$459,900
9th Line/North Of 407
4 Bedrooms, 3 Washrooms
Beautiful 4 Years All Brick
$479,000
Keele/Finch
3+2 Bedrooms, 2 Washrooms
Close To All Amenities School
Looking for a New Real Estate Career
Join a winning team for your success
• Free Real Estate Classes
• Regular Sales Training from Experts
• Referral leads
• Help & guidance for newly licensed agents


AGRன் மூன்றாவது கிளை உங்கள் அருகாமையில்
AGR
AGR FOREX
Personal & commercial transaction services
உலகளாவிய பணமாற்றுச் சேவை
15 Years in Customer's Satisfaction
1995 ல் ஆரம்பிக்கப்பட்ட எமது AGRஸ்தாபனம்
மூன்றாவது கிளையை இன்று புதுப்பொலிவுடனும்
நவீன வசதிகளுடனும் பல ஆயிரம் வாடிக்கையாளர்களின்
ஆதரவுடன் 1145 Morningside ல் ஆரம்பிப்பதுள்ளோம்.
AGR FOREX
personal & commercial transaction services
இலங்கை, இந்தியா, தூரகிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு பணம் அனுப்பவும் எடுக்கவும்
Personal and Business Needs
வெளிநாட்டு நாணயங்கள் (US, EURO, POUNDS) வாங்கலாம் விற்கலாம்
இலங்கையில் எப்பாகத்தில் உள்ள வங்கிகளிலும் பணவைப்பு செய்யலாம்
இலங்கையில் எப்பாகத்திலிருந்தும் கனடாவிற்கு பணம் எடுக்கலாம்
கனடாவின் எந்தமாகாணத்திலிருந்தும் வீட்டிலிருந்தவாறே E-MAIL TRANSFER மூலம் பணம் அனுப்பலாம்.
Interac
Tel: 416-261-0003
Fax: 416-261-9592
Email: info@agrcanada.com
www.agrcanada.com
Steeles Ave.
AGR
Sheppard Ave.
AGR
401
Brimley Rd.
Morningside Ave
Eglinton Ave
AGR
1145 Morningside Ave, Unit #5, Scarborough, ON M1B 0A7
2637 Eglinton Ave E, Scarborough, ON. M1K 2S2
5005 Steeles Ave East, Scarborough, ON. M1V 5K1

# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## SRI
## CREDIT SOLUTION CENTRE

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate  Drive, Suite 309
Scarborough, ON  M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



digi

## கடன் கொடுத்தோர் உங்களது சம்பளத்தில் இருந்து

# பணம் கழித்தலும் தடுத்து நிறுத்தலும்

## (How can you stop a wage Garnishment)

**பகுதி - 6**



வ. சிறி

### கடன் கெடுத்தோர் உங்களது சம்பளத்தில் இருந்து பணம் கழிக்கப்படுவதை எவ்வாறு தடுத்து நிறுத்த முடியும்?(How can you stop a wage Garnishment)

நீங்கள் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரிப் பணம், உங்களது பிள்ளைகளின் தாபரிப்பிற்கான பணம் அல்லது உங்களது கடன்கள் என்பவை தொடர்பாக உங்களது சம்பளத்தில் இருந்து ஓர் பெரும் பகுதி பணம் கழிக்கப்பட நேரிடலாம்.

இவ்வாறான வேளையில் சம்பளத்தில் இருந்து பணம் கழிக்கப்படுவதை தவிர்ப்பதற்கு மூன்று வழிகள் உள்ளன.

- உங்களுக்கு கடன் வழக்கியவர்களுடன் நீங்கள் ஓர் உடன்படிக்கை செய்தல்.
- நுகர்வோர் ஆலோசனையை முன்வைத்-தல் (Consumer Proposal)
- வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பித்தல் (File for Bankruptcy)

### உங்களது சம்பளத்தில் இருந்து எவ்வளவு பணம் கழிக்கப்பட லாம்?

ஒன்ரேரியோ மாகாணத்தின் சம்பள சட்டத்தின்படி ஆகக்கூடிய அளவாக உங்களது மொத்த சம்பளத்தின் (Gross Pay) 50 சதவீதத்தை மட்டுமே கழிக்க முடியும்.

### சம்பளத்தில் இருந்து பணம் கழிக்கப்படும் நிலை ஏற்படும் போது உங்களுக்குள்ள தெரிவுகள் (Options when facing a wage garnishments).

நீங்கள் பணியாற்றும் தொழில் நிறுவனத்தின் உரிமையாளர் உங்களது சம்பளத்தில் இருந்து பணம் கழிக்கப்படுவதற்கான அறிவுறுத்தலை பெறுவதற்கு முன்பு, நீங்கள் உங்களுக்கு கடன் வழங்கியவர்களை தொடர்பு கொண்டு ஓர் சமரசமான முடிவுக்கு வருவது நன்று. ஆனால் பணம் கழிக்கப்படுவதை நிறுத்துவதற்கு நுகர்வோர் முன்வைக்கும் ஆலோசனைத் திட்டம் (Consumer Proposal) அவசியம்.

உங்களுக்கு கடன் வழங்கியவர்கள் யார் என்பதைப் பொறுத்து, தனியார் வங்குரோத்து நிலை செயற்பாடு (Personal Bankruptcy) மூலமும், பணம் கழிப்பதை உங்களால் நிறுத்த முடியும்.

### கடன் வழங்கியவர்களிடம் தொடர்பு கொண்டு, ஓர் சமரசமான ஒழுங்கு முறையை ஏற்படுத்துவதன் மூலம் சம்பளத்தில் இருந்து பணம் கழிக்கப்படும் செயற்பாட்டை எவ்வாறு நிறுத்த முடியும்?

உங்களுக்கு கடன் வழங்கிய ஒருவர் ஏற்கனவே நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்து, நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் காரணமாகவே உங்களது சம்பளத்தில் இருந்து பணம் கழிக்கப்படுகிறது.

எனவே: (1) உங்களது கடன் முழுவதும் செலுத்தப்பட்டால் அல்லது (2) இந்த செயற்பாட்டை நிறுத்துவதற்கு உங்களுக்கு கடன் வழங்கியவர் ஒப்புதல் வழிக்கினால் மட்டுமே உங்களது சம்பளத்தில் இருந்து பணம் கழிக்கப்படுதல் நிறுத்தப்படும். என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

உங்களுக்கு கடன் வழங்கியவரிடம் தொடர்பு கொண்டு ஒரு சுமுகமான முடிவைப் பெறுவதற்கு நீங்கள் முயற்சி செய்யலாம். ஆனால் பொதுவாக இவ்வாறான சொற்பாடு வெற்றி அளிப்பதில்லை. அவ்வறான ஒரு பாதகமான நிலை ஏற்பட்டல், நுகர்வோர் முன்வைக்கும் ஆலோசனை அல்லது தனிநபர் வாங்குரோத்து நிலை மூலம் சம்பளத்தில் இருந்து பணம் கழிக்கப்படுவதை நிறுத்த முடியும்.

**குறிப்பு:** ஆனால் பிள்ளைகளை அல்லது வாழ்க்கைத் துணைவியை பராமரிப்பதற்காக நீங்கள் பணம் செலுத்த வேண்டிய கடமைப் பொறுப்பை நுகர்வோர் ஆலோசனை (Consumer Proposal) மூலம் நீங்கள் நிறுத்த முடியாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

### உங்களது சம்பளத்தில் இருந்து பணம் கழிக்கப்படுவதற்கான உத்தரவு பெற்ற எவரை Consumer Proposal என்னும் செயற்பாடு மூலம் தடுத்து நிறுத்த முடியும்?

- வங்கிகள்.
- கடன் அட்டை வழங்கும் நிறுவனங்கள்.
- கனடா வருமான வரி பகுதி (Canada Revenue Agency).
- சம்பளத்தின் கடன் வழங்கும் நிறுவனங்கள்.
- Credit Unions.

### தனிநபர் வங்குரோத்து நிலை விண்ணப்பம் மூலம், சம்பளத்தில் இருந்து பணம் கழிக்கப்படுவதை எவ்வாறு நிறுத்த முடியும்?

நீங்கள் தனிநபர் வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பித்தால் உங்களது பிள்ளைகளை அல்ல வாழ்க்கைத் துனைவைப் பராமரிப்பதற்காக குறிப்பிட்ட ஒரு தொகை பணம் வழங்க வேண்டுமென நீதி மன்றம் வழங்கிய உத்தரவைத் தவிர, பொதுவாக சம்பளக் கழிவுக்கான உத்தரவு பெற்ற ஏனைய நிறுவனங்கள் யாவும் உங்களது சம்பளத்தில் இருந்து கழிக்கப்படும் பணத்தை பெறும் உரிமையை இழக்கின்றனர்.

**உதாரணங்கள்:**

- வங்கிகள்
- Credit Unions
- கடன் அட்டை வழங்கும் நிறுவனங்கள்.
- கனடிய வருமானவரித் தினைக்களம்.
- சம்பள தின கடன் வழங்கும் நிறுவனங்கள்.

### கடன் அறவிடும் நிறுவனங்களை (Collection Agency) கையாளுதல்; இந்த நிறுவனங்கள் விடுக்கும் தொலைபேசி அழைப்புக்களை தடுத்து நிறுத்துதல்.

முதலில் குறிப்பிட்டது போன்று இதற்கான மூன்று வழிமுறைகள் உள்ளன.

- கடன் அறவிடும் நிறுவனங்களுடன் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்துதல்.
- நுகர்வோர் ஆலோசனையை முன்வைத்தல்.
- வங்குரோத்து நிலைக்கான விண்ணப் பத்தைச் சமர்ப்பித்தல்.

**குறிப்பு:** கடன் அறவிடும் நிறுவனம் உங்களிடம் விடுத்த கோரிக்கை தவறான தகவலின் அடிப்படையில் அமைந்துள்ளது என்று நீங்கள் நம்பினால், அந்தக் கடனுக்கு நீங்கள் பொறுப்புடையவர்கள் அல்ல. எனவே இவ்வாறான நிலை ஏற்படும்போது, நீங்கள் தான் கடனாளி என்று நிரூபிக்கும்படி அந்த நிறுவனத்திடம் கூறுவது அவசியம்.

### கடன் வழங்கும் நிறுவனங்களுடன் நடந்து கொள்ளுவது எப்படி?

அந்த நிறுவனங்களிடம் இருந்து வரும் தொலைபேசி அழைப்புக்களையோ கடிதங்களையோ அலட்சியப்படுத்த வேண்டாம். ஏனெனில் நீங்கள் இவ்வாறு நடந்து கொண்டால் உங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம்.

அதே சமயம் இந்த நிறுவனங்கள் தொடர்ச்சியாக தொலைபேசி அழைப்புக்களை மேற்கொண்டால் அல்லது உங்களுக்கு மிரட்டல் அல்லது துன்புறுத்துதல் போன்று அவை செயற்பட்டால், அது தொடர்பான விபரங்களை சேகரித்து வையுங்கள். ஏனெனில் எப்போதாதவது அந்த நிறுவனங்கள் மீது நீங்கள் நடவடிக்கை எடுக்க விரும்பினால் இந்த தகவல்கள் உங்களுக்கு தகுந்த ஆதாரமாக அமையும்.

இந்த நிறுவனங்கள் commission அடிப்படையில் இயங்குகின்றன. எனவே அவர்கள் உங்களிடமிருந்து பணம் பெறும் வரை தொடர்ந்து முயற்சி செய்வார்கள். எனவே உங்களால் முழுக் கடனையும் உடனடியாக செலுத்த முடியாவிடில் ஏதாவது ஒரு குறிப்பிட்ட தவணைக்கால அடிப்படையில் கடனைத் திரும்ப செலுத்துவது தொடர்பாக ஓர் இணக்க நிலைப்பாட்டை ஏற்படுத்துவது பயன் தரும். அவ்வாறான ஓர் இணக்கநிலை ஏற்படுத்தப்பட்டால் பின்பு நீங்கள் உங்களது வாக்குறுதியைக் காப்பாற்றுவது அவசியம்.

### கடனைச் சமாளிப்பது எப்படி வங்குரோத்து நிலை விண்ணப்பமும் அதற்கான மாற்று வழி முறைகளும்.

தமது வாழ்க்கைக் காலத்தில் பலர் தமது Billsகளை கட்ட முடியாமல் சிரமப்படும் நிலையை எதிர் நோக்குகின்றனர்.

பொதுவாக உங்கள் கடன்பெறும் தகமை (Credit History) சிறந்த தரமாக இருந்தால் நீங்கள் உங்களது Billக்கான முதல் தடவையாக பணத்தை கட்டத்தவறும் போது கண்ணியமான அறிவுறுத்தல் கடிதம் அனுப்பப்படும். ஆனால் அதன் பின்பு நீங்கள் பதிலளிக்காவிடில் இரண்டாவது அறிவுறுத்தல் அனுப்பப்பட்டு அதற்கும் நீங்கள் பொருத்தமான நடவடிக்கை எடுக்காவிட்டால் கடன் வசூலிக்கும் நிறுவனங்களுடன் தொடர்பு ஏற்படுத்தப்படும் நிலை ஏற்படும். தனிநபர் ஒருவரது கடன்களை தீர்ப்பதற்கு வங்குரோத்து நிலைக்கு செல்லுதல் இறுதியான நடவடிக்கையாகும். ஆனால் அந்த முடிவு எடுப்பதற்கு முன்பு பல் வேறு மாற்று தீர்வுகளை நீங்கள் கருத்தில் கொள்ளலாம்.

- தனிப்பட்ட முறையில் உங்கள் வரவு செலவு திட்டத்தை ஆரம்பித்தல்.
- இந்த வரவு செலவு திட்டத்தின் அடிப்படையில் உங்களது வருமானத்தை அதிகரித்தல் செலவைக் குறைத்தல் என்பது பற்றி சிந்தித்தல்.
- கடன் பெறும் தகமையைச் சீர் செய்வதற்கு முயற்சி எடுத்தல்.
- கடன்களை ஒன்றிணைத்தல் (Debt Consoildation) பற்றி கருத்தில் கொள்ளுதல்.
- கடன் பெறுவது பற்றிய ஆலோசனையைப் பொறுவது பற்றி சிந்தித்தல்.
- கடனை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்ற திட்டம் (Debt Management Plan) பற்றி சிந்தித்தல்.
- உங்களுக்கு கடன் வழங்கியவர்களுக்கு, அந்தக் கடனை எவ்வாறு திரும்ப செலுத்த எண்ணியுள்ளீர்கள் என்பது பற்றிய உங்களது ஆலோசனையை (Consumer Proposal) தெரிவியுங்கள்.
- வங்குரோத்து நிலைக்கு (Bankruptcy) விண்ணப்பிக்கவும்.

sri.v@thaiveedu.com


**கனேடிய தமிழ் வானொலியின் நட்சத்திர விழா**

**சிறுகதைப்போட்டி 2010**

போட்டி முடிவுத் திகதி

**June 15-2010**

**போட்டி விதிகள்:-**

- சிறுகதைகள் முன்னர் எங்கும் பிரசுரிக்கப்படாததாகவும் போட்டிகளுக்கு அனுப்பப்படாததாகவும் இருக்க வேண்டும்.
- போட்டியில் பங்குபற்றுபவர்கள் தமது பெயர் முகவரி போன்ற விடயங்களை தனியான இதழில் எழுதி சிறுகதையுடன் இணைத்து அனுப்பவும்.
- சிறுகதைகள் வானொலியில் வாசிக்கும் தரத்தில் 15 முதல் 25 நிமிடங்களுக்குள் இருத்தல் வேண்டும்.
- மின்னஞ்சல் மூலம் அனுப்புவது விரும்பத்தக்கது.

மின்னஞ்சல் முகவரி: **venthan@ctr24.com**

அஞ்சல் முகவரி: **306, Rexdale Blvd, Unit #7, Toronto, on, M9W 1R6, Canada.**

தொலை நகல்: 416 593 9353

தொடர்புகளுக்கு: 416 264 8798

முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கதைகள் போட்டியில் சேர்க்கப்பட மாட்டாது.

அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்

# வீட்டு வாடகையும் கை கொடுக்கும் அரசின் திட்டமும்

### வீட்டு வாடகை பணம் செலுத்த இயலாத நிலையிலுள்ளவர்களுக்குக் கைகொடுக்கும் அரசின் திட்டம்

வாடகைக்கு குடியிருக்கும் வருமானம் குறைந்தவர்களுக்கு சில நேரங்களில் சில பிரச்சனைகள் எழலாம்.

கடந்த ஒன்று அல்லது இரண்டு மாத வாடகைப் பணம் செலுத்தாத காரணத்தினால் தாம் குடியிருக்கும் குடியிருப்பு மனையினை விட்டு இடம்பெயரவேண்டிய ஒரு இக்கட்டான நிலைமை உருவாகலாம். இப்படியொரு பரிதாபகரமான நிலைமையிலிருப்பவர்களுக்கு ஒன்று அல்லது இரண்டு மாத வாடகை பணத்தினை மட்டும் வட்டியில்லாத கடனாக வழங்கி அதனை பகுதி பகுதியாக திருப்பி செலுத்தும் ஒரு திட்டத்தினை ஒன்ராரியோ மாகாண அரசு உருவாக்கி மாகாணத்திலுள்ள சுமார் 47 நகரசபை நிர்வாக பிரிவினூடாக நிறைவேற்றி வருகின்றது.

ஒன்ராரியோ மாகாண அரசின் 'நகரசபை வீடுகள் விவகார அமைச்சு' (Ontario – Ministry of Municipal Affairs & Housing) 'மாகாண வாடகை வங்கி திட்டம்' (Provincial Rental Bank Program) என்னும் பெயரில் இத் திட்டத்தினை அறிமுகப்படுத்தி வாடகை பாக்கியால் இடம் பெயரவேண்டிய நிலையில் உள்ளவர்களுக்கு கைகொடுத்து வருகின்றது.

இக் குறுகிய கால குடியிருப்பு வாடகை செலுத்த (Short term Rental arrears) முடியாத

**தகவல் தொடர் - 40**

நிலமையிலிருப்போர் இவ் உதவியினை கேட்டு விண்ணப்பிக்கும் போது, இவ் விண்ணப்பத்திற்கு உரியவர்கள் உண்மையில் இதனை பெறுவதற்கு தகுதியானவரா? என்பதனை அவர்கள் குடியிருந்து விண்ணப்பிக்கும் நகரகபை அதிகார பிரிவினர் (Municipality Authorities) வெவ்வேறு அம்சங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்து தீர்மானிக்கின்றனர். ஆனால் பொதுவாக இப் பண உதவிகளை பெற விரும்புவோர் பின்வரும் தகுதி நிலைமைக்குள் இருத்தல் வேண்டும்.

- வருமானம் குறைந்த மாகாணவாசிகளாக (Low Income Ontarians) இருத்தல் வேண்டும்.
- சமூக உதவி பணம் பெறுவோர் (Social Assistanlp recipients) என்ற நிலைமைக்குள் இருத்தல் வேண்டும்.
- வாடகை செலுத்தாத காரணத்தினால் இடம்பெயரும் ஆபத்தான நிலையில் இருத்தல் வேண்டும். (Due to short term rental arrears and facing eviction)
- வங்கியில் எதுவித பணமோ அல்லது சொத்துக்கள் எதுவும் அந்த நேரம் கையில் இல்லாதவர்களாக இருத்தல் வேண்டும்.

இப்படி சில அம்சங்களை கருத்தில் கொண்டு மாகாண அரசின் இவ் அவசர பண உதவியினை பெற தகுதியடையவர்களா? என்பதனை அவரவர் குடியிருக்கும் நகரசபை நிர்வாக பிரிவினர் தீர்மானிப்பார்கள். ஒவ்வொரு நகர சபைக்கும் இவ் ஒழுங்கு விதிகள் அடிப்படையில் ஒன்றாக இருந்தாலும் சிலசில விதிகளில் மாறுபட்டும் இருக்கலாம். ஏனெனில் ஒன்ராரியோ மாகாணங்களிலுள்ள சில நகரசபை நிர்வாகத்தினர் இதனை திருப்பி செலுத்த தேவையேயில்லாத உதவி பணமாக (Grant) இத்தகைய அவசரமான பரிதாப நிலையில் உள்ளவர்களுக்கு வழங்கி வருகின்றனர்.

இத் திடத்திலிருந்து உதவி பெற தகுதியுள்ளவர்கள் ஒவ்வொரு இரு வருடங்களுக்கு ஒரு முறை விண்ணப்பிக்கலாம். நேரடியாக இவ் அவசர உதவி பணம் குடியிருப்பு உரிமையாளருக்கு (Land Lord) வழங்கி வாடகை குடியிருப்பிலிருந்து துரத்தும் நிலைமையிலிருந்து குடியிருப்பாளரைப் பாதுகாக்குமே தவிர நேரடியாக சிக்கலில் இருக்கும் இக் குடியிருப்பாளரின் கைகளுக்கு நகரசபை நிர்வாகத்தினர் காசோலையினை வழங்கமாட்டார்கள்.

### இதற்கு எப்படி விண்ணப்பித்து இவ் அவசர உதவியினை பெறுவது?

ஒவ்வொரு நகரசபை பிரிவிலும் நகரசபை 'சேவை முகாமையாளர்' (Municipal Service Manager) அல்லது 'வாடகை வங்கி சேவையாளர்' (Rent Bank Provider) என இருப்பார்கள் அவர்களின் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவத்தினை நிரப்பிக் கொடுத்தல் வேண்டும்.


ஒன்றிணைக்கப்பட்ட ரொறன்ரோ நகரசபையின் வாடகை வங்கி மத்திய அலுவலகத்திற்கு (Rent Bank Central office) 416 924 3862 என்னும் தொலைபேசியில் தொடர்புகொண்டு தகவல்களை பெறலாம்.

ரொறன்ரோவில் இத்தகைய நிலையில் உள்ளவர்களின் சேவைகளை வழங்கும் நகரசபை உத்தியோகத்தரின் அலுவலகங்கள் பின்வரும் முகவரியில் உள்ளது.

**SHELTER, SUPPORT & HOUSING**
**ADMINISTRATION DIVISION**
**SOCIAL HOUSING UNIT**
**365, BLOOR ST.EAST, 15th FLOOR**
**TORONTO, ON, M4W 3L4**
**தொலைபேசி: 416 338 8342**
**தொலைநகல்: 416 338 8228**

**AFFORDABLE HOUSING OFFICE**
**55 JOHN ST, 7TH FLOOR**
**TORONTO, ON, M5V 3C6**
**தொலைபேசி: 416 397 4169**
**தொலைநகல்: 416 392 4219**

ரொறன்ரோ நகரில் இருந்து இவ் உதவியினை பெறவிரும்புவர்கள் நகரத்தின் தகவல் பிரிவு தொலைபேசி இலக்கம் 311 என்ற இலக்கத்திற்கு அழைத்தாலும், ஆங்கில மொழியில் பரிச்சயம் திறமையாக இல்லாவிட்டாலும் கூட தமிழ் மொழியில் தகவல்களை தந்து வழிகாட்ட தமிழ் உத்தியோகத்தவர்கள் என்றும் தயாராக உள்ளார்கள். மார்க்கம் நகரம் உட்பட யோர்க் பிராந்தியத்தில் உள்ளவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை வழங்கலாம்.



சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -

**REGINAL MUNICIPALITY OF YORK**
**COMMUNITY & HEALTH SERVICE DEPARTMANT**
**HOUSING & LONG TERM CARE**
**17250 YONGE STREET**
**NEWMARKET**
**GWTARIO 23Y 6Z1**
**தொலைபேசி: 905 830 4444**
**தொலைநகல்: 905 895 2189**

'மாகாண வாடகை வங்கி திட்டம்' 'Provincial Rental Bank Program' என்பதற்கு எப்படி விண்ணப்பிப்பது? எப்படி விண்ணப்பிப்பதனை முன் எடுப்பது? என உதவி கேட்டால் இவ் நிர்வாக உத்தியோகத்தர்கள் வழிகாட்டுவார்கள்.

www.Mah.gov.on.ca என்னும், மாகாண அரசின் கீழ் இயங்கும் நகரசபை வீடு விவகார அமைச்சின் (Ontario Ministry of Municipal Affairs & Housing) இணையத்தளத்திறகுச் சென்று 'Provincial Rent Bank Program' என்று காட்டும் சொற்தொடரினைக் 'கிளிக்' செய்யும் போது இத் தகவல்களை பெறலாம். ஆனால் ஒரு முக்கிய விடயம்! குடியிருப்பதற்கு ஆரம்பிப்பவர்கள் முதல் மாத மற்றும் இறுதி மாத கட்டணம் என ஒரு தொகை செலுத்தவேண்டும். அதற்கான தொகையினைப் பெற முயலலாம் என நினைத்தால் எந்தச் சந்தர்ப்பத்திலும் இத் திட்டத்திலிருந்து பெற முடியாது. வருமாணமில்லாது இத்தகைய நிலைமையிலிருப்போர் இதற்கு சமூக உதவி திட்டங்களில் முயற்சி செய்யலாம்.

சமூக உதவி பணம் பெற தகுதியுடையவர்களை இரு வகையான திட்டத்தின் கீழ் சேவை வழங்குபவர்களாக பிரிப்பார்கள்.

- வருமானம், கையில் பணம், எதுவித சொத்துக்கள், உடைமைகள் இல்லாத நிலையில் சமூக உதவிப் பணம் பெறுவோர். (Program under ontario work)
- உடல் இயங்க முடியாத நிலை, வேலை செய்ய முடியாத நிலையில் சமூக உதவி பணம் பெறுவோர். (Uner Ontario Disability Support Programme/under)

உடல் இயங்க முடியாத நிலையில் இத் திட்டத்தின் கீழ் மாதா மாதம் அரசின் பணம் பெற்றுக் கொண்டு இருப்பவர்களும் இவ் வாடகை வங்கி திட்டத்திலிருந்து இரு மாத வாடகைக்கு என பணம் எடுக்க முடியாது.

அதாவது குடியிருப்பவர்களுக்கு தொடர்ந்து குடியிருக்கும் இடத்தில் வாடகைப்பணம் செலுத்தமுடியாத இக்கட்டான நிலைமை உருவாகி தெருவுக்கு வரவேண்டிய பரிதாப நிலைமை ஏற்பட்டால் மட்டுமோ இத் திட்டம் கண்திறந்து பார்க்கும்.

siva.panchalingam@thaiveedu.com

■ ■ ■

**Law Office**
**T. JEGATHEESAN**
(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும்
ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.
**தி. ஜெகதீசன்**
(Barrister, Solicitor and Notary Public (on)
Off: **416 • 266 • 6154**
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677
2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

**உங்கள் சகல காப்புறுதிகளுக்கும்**
பல்வேறு வகையான காப்புறுதி கம்பனிகளிலும்
விலைகளை அறியவேண்டுமா
**To shop around insurance price please call**
**Siva Panchalingam, B.Com.**
**(Licensed Insurance Broker)**
**Office: 1 888 651 1955**
**Home: 416-321-0999, Cell: 416-990-4908**
**400, Bradwick Drive., Suite 102, Concord, ON**




உங்கள் மனைகள்
மாளிகைகளாகிட...
Reduced
$149,000
Midland/ Mcnicoll
Office Building, Unit Has A Reception Area Wiht Four Rooms. Steps To T.T.C.Close To Everything
$259,900
Pickering Beach /Roll (Ajax)
Link 2-Storey, 3+1 Bedrooms, 3 Washrooms, Situated In Prime South Ajax Community,Steps To Lake/Trail
$519,800
Church/ Rossland (Ajax)
Detached 2-Storey, 4+1 Bedrooms, 4 Washrooms, Great Location,Very Spacious, Full Of Sunlight,Over $100K In Upgrades
$185,900
Mccowan /Eglinton
Condo Apt, 2+1 Bedrooms, 2 Washrooms, Steps To Ttc,Go Station,Doctors,School,Park,All Amenities, 24 Hrs Security
$219,999
Kennedy / Eglinton
Condo Apt, 2+1 Bedrroms, 2 Washrooms, Rainbow Village Luxury Condo,Bright Spacious Unit,Very Demanded Location
$269,900
Brimley / Ellesmere
Condo Apt, 1+1 Bedrooms, 1 Washrooms, Excellent & Convenient Location,Luxurious Tridel Built Condo
$212,000
Birchmount & Ellesmere
Condo Apt, 1+1 Bedrooms, 1 Washrooms, Approx. 700 Sq.Ft. Luxurious Tridel Condo, 9Ft. Ceilings, W/O To Huge Balcony
$149,000+ Stock
Scarborough
Party rental buisness for sale in scarborough for $149000.00 plus stock
$169,000
Weston / Sheppard
Condo Apt, 2 Bedrooms, 2 Washrooms, Newer Laminate Floors,Newer Kitchen Cupboards And Countertop,Steps To Ttc,Close To Schools, Shops
$799,900
Port Elgin
Gas Station, (Esso) Convenient Store + Restaurant (Leased) + Four Apartments (Leased) With Steady Income
- digi Media -
முழுநேர வீடுவிற்பனை முகவர். Emerald Award Winner
சத்தி மருதப்பா
Sales Representative
416.816.1500
Not intended to solicit properties currently listed for sale.
மேலும் பல Gas Stationகளும் வியாபாரநிலையங்களும் விற்பனைக்குண்டு
Century 21
Affiliate Realty Inc., Brokerage
208-80 Corporate Drive,Toronto, ON M1H 3G5
Bus: 416-290-1200, Fax: 416-290-1900


THINKING OF BUYING OR SELLING
$285,000
Markham/ Denison
$329,000
Morningside/ Sewells
$210,000
Ellesmeree/ Orton Park
$509,000
Open House Sat 2-4PM
9th Line/ Reeves Way
$587,990
Good Investment
Yonge/Sheppard
$279,900
Brock/Rossland
$359,000
Brimley/Steeles
$577,500
Bank Sale
Bayview/elgin Mills
More Houses Visit www.krishome.ca
HOMELIFE HIGHER STANDARDS
Krish Sivapatham
Sales Representative
Full Time Realtor
Direct : 416-895-4457
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Dr, Markham, ON, L3S 4N7
Bus:905-201-9977 Fax: 905-201-9229
Indepently Owned and Operated, REALTOR
NEW RELEASE CONDOS!!
One Bloor
This is Your Fantasy
PEARS
encore
Tridel Westvillage
nexus Condos
nexus NORTH
Krish Sivapatham is a VIP Sales Rep.
He can get you a Unit VIP Discount Price..
Don't Miss This Golden Opportunity.....!!!
Many More Investment Condos In GTA and Markham
Call Krish For VIP Discount Price & Floor Plan
This is not intended to solicit properties Currently under conract/ some conditions may apply/ I Do Not Represent The Developer



# Shan Thayaparan
Sales Representative

Dir: 416.567.7675
Bus: 416.321.2228

www.shan123.com
E mail: Shan123@rogers.com

RE/MAX Above the Crowd!
Vision Realty Inc.
2210 MARKHAM ROAD, UNIT 01 TORONTO,ONTARIO M1B 5V6

**Scarborough**




**Largest Unit**
Well kept & Well managed Condo. No worries about reserve funds. Newly painted, Newer Floor,Newer Appliances.

**Markham**




**2800 Sqf. New Starlane Home**
Larger 4 Bedrooms, 3 Full Washrooms Upgraded Large Kitchen, Oak Staircases Formal Living and Dining & More

**Markham**




**2900Sqf. Starlane Home**
4 Bedrooms, 3 Full Washrooms, Upgraded Extra large kitchen, Hardwood main floor, Pot lights, Inviting open concept
**Call for appointment!!!**


**Brampton**




**Priced to Sell!!!**
Large 4 Bed Rooms, 2 Full Wash Rooms Steps to all schools, transit & shopping Double garage, Entrance to Garage

**Brampton**
**Wanted a House for Sale**

**Scarborough**




**You Must See to Believe it!!!**
More than 3500 sqf. 5+2 Bedrooms, Hardwood Floors throughout, Finished Basement Backing on to Ravine
**$175,000 upgrades alone!!!**

**Scarborough**




**Extra Large/Finished Bsmt**
Large 3 Bed Rooms & 3Bedrooms in the Basement. Close to Scar. Town center School 401,& TTC

**Scarborough**




**Gorgeous House& Great Location**
Large 4 Bed Rooms, Custom interior Design, Granite Counter top. Pot Lights. Looks like a model house. Upgraded cabinets
**$60,000 in upgrades.**

**Scarborough**




**$Excellent Value$**
4 Bed Rooms, with 3 full washrooms executive home on a premium lot. Upgraded cabinets Hardwood main floors.

**Scarborough**
Wanted!!! Condos in
**100 Mornelle Court for Top Dollars**

**Scarborough**




**Mattamy Built/ 4+2 Bedrooms**
4 Bed rooms, 3 Full washrooms Finished Basement/ Separate Entrance Close Schools, TTC & Shopping.

**Scarborough**
Wanted!!! Condos in
**180 Markham Road. for Top Dollars**

**Scarborough**




**McCown/Finch**
Full Brick Renovated Home, Large Driveway Close to TTC, Temple, Schools & Shopping 3 Bedrooms with Finished Basement

**Scarborough**
Wanted!!! Condos in
**2500 Bridle Town Cir. for Top Dollars**

**Wanted a House for Sale**

**Ajax**




**One Year Old Semi**
Very Spacious, Well Maintained House Upgraded Kitchen, Washrooms, Stainless Appliances. Close to Transit, Shopping & 401

**Daisy Mart**




**Real Money Maker**
Steady Weekly Sales $10,000. Ideal Family Business.

**Stouffville**




**Beautiful Semi.**
3 Large Bed rooms, 2 Full washrooms Upgraded Kitchen, Upgraded Washroom Stainless Appliances. Close to GO Station

**Wanted a House for Sale**

**Scarborough**
Wanted!!! Condos in
**400,410,430,480 McLevin Ane Top Dollars**

RE/MAX Above the Crowd!
Vision Realty Inc. Brokerage
2210 MARKHAM ROAD, UNIT 01 TORONTO,ONTARIO M1B 5V6

# Viki Velauthan
Sales Representative

Dir: 416.457.7162
Bus: 416.321.2228
E mail: vvelauthan@yahoo.com



# காப்புறுதியில் ஏற்படும் குழப்பங்கள்

## கேள்வி - பதில்



சக்திவேல்
- ஆயுட் காப்புறுதி முகவர் -

**எனது வயது 45, சொந்தவீடு இருக்கிறது. வீட்டு அடமானக் கடன் $250,000. இரண்டு பிள்ளைகள். வயது 10, 8. மனைவியார் பகுதிநேர வேலை மட்டும் தான் செய்கிறார். எனக்கு ஒருவிதமான காப்புறுதியும் இல்லை. ஆனால் இரண்டு வேலை செய்கிறேன். அந்த முறையில் நான் அடமானக் காப்புறுதி செய்வது நல்லதா அல்லது ஆயுள் காப்புறுதி செய்வது நல்லதா?**

அடமானக்காப்புறுதி குறுகிய காலநேரத்திற்கு மட்டும் தேவைப்படும் பாதுகாப்பு ஆகும். பொதுவாக 20 வருடங்கள் மட்டும் தேவைப் படும் காப்புறுதியாகும். இதற்கு பொதுவாக 20 வருட தவணைக் காப்புறுதியாகும். 20 வருட முடிவில் அதை நீடிப்பதானால் உங்கள் கட்டுப்பணம் ஏறத்தாழ 5 மடங்கால் அதி-கரிக்கும். ஆயுள் காப்புறுதி உங்களை நம்பி-யிருப்போருக்கு அல்லது உங்கள் உழைப்பை நம்பியிருப்போருக்கு ஆயுள் காலம் வரை தேவைப்படும் காப்புறுதியாகும். 20 வருட முடிவில் உங்கள் வயது 65 ஆகும். அந்த நேரம் நீங்கள் அநேகமாக ஓய்வூதியத்தில் தான் இருப்பீர்கள். அந்த முறையில் 20 வருடம் மட்டும் கட்டுப்பணத்தை செலுத்தி ஆயுள்காலம் வரை நீடிக்கும் சலுகையுள்ள காப்புறுதியை தேர்ந்தெடுப்பது நல்லது. இந்த இரண்டு திட்டங்களையும் ஒருங்கினைத்து தகுந்த சலுகையுள்ள காப்புறுதிக்கு மனுச்-செய்வது சாலவும் நல்லது. 20 வருட முடிவில் உங்கள் தவனைக்காப்புறுதியை ரத்து செய் யாமல் அந்த காப்புறுதிக்கு உரிமையாளராக விண்ணப்பதாரராக, வாரிசுதாரராக உங்கள் பிள்ளைகளை நியமித்து மருத்துவ ரீதியின்றி அவர்கள் அதனை ஆயுள்காப்புறுதியாக மாற்றுவது சிறந்த முடிவாக இருக்கும். காரணம், 20 வருட முடிவில் அவர்கள் வயது முறையே 30, 28 ஆகும். அவர்களுக்கு அப்போது வாழ்க்கை ஆரம்பம் உங்களுக்கு வாழ்க்கை முடியும் கட்டம். அத்துடன் இந்த நாட்டில் மரணமும், வருமானவரியும் மட்டும் தான் நிச்சய காரணிகள். உங்கள் மரணத்-திற்கு பின் இந்த காப்புறுதி இழப்பீட்டு தொகை வருமான வரியின்றி அவர்களை சென்றடைவதனால் அவர்களுக்கு அது இலாபகரமான முதலீடாக அமையும். உங்கள் சொந்த வீடு, வதியும் வீடாக (Principal Residence) இருப்பின் அதை விற்கும் போது அந்த இலாபகரமான முதலீட்டுப்பணமும் வருமான வரியின்றி உங்களையோ அல்லது உங்கள் மனைவியாரையோ சென்றடையும். இந்த இரண்டையும் ஒருங்கிணைத்த காப்பு-றுதிக்கு பணம் செலுத்துவது கடினமாக இருப்பின் அடமானக் காப்புறுதிக்கு மனுச்-செய்வது உத்தமம். 20 வருட முடிவில் விட்டு அடமானக் கடன் முழுவதையும் கட்டி முடித்த பின் பிள்ளைகள் இந்தக் காப்புறுதியை ஆயுள் காப்புறுதியாக மாற்றி காப்புறுதி இழப்பீட்டு தொகையை வருமான வரியின்றி பெற்றுக் கொள்ளலாம்.



**நான் சொந்த தொழில் செய்கிறேன். மனைவியார் சம்பளத் தொழில் செய்கிறார். ஒரு பிரத்தியேக காரணத்-தையிட்டு எங்கள் வீட்டை மனைவி பெயரில் வாங்கி, அடமானக் காப்பு-றுதியை வங்கி மூலம் மனுச்செய்ய முயன்றபோது எனது மனைவிக்கு மட்டும் தான் அடமானக் காப்புறுதி வழங்கினார்கள். எனக்கு கொடுக்க-வில்லை, காரணம் எனது பெயர் பத்திரத்தில் இல்லை. அந்த முறை யில் நான் பிரத்தியேகமாக அடமானக் காப்புறுதிக்கு மனுச் செய்யலாமா?**

நிச்சயமாக முடியும். காரணம், கனடிய சட்டத்தின்படி நீங்கள் இருவரும் ஒரே வீட்டில் ஒரு வருடத்திற்கு மேல் இருந்தால் உங்க-ளுக்கும் வீட்டில் அரைப்பங்கு உரிமையுண்டு. அந்த முறையில் நீங்களோ அல்லது நீங்கள் இருவரும் பிரத்தியேகமாக அடமானச் காப்-புறுதிக்கு மனுச் செய்யலாம். வங்கியை பொறுத்தவரை மனைவியின் காப்புறுதிக்கு உரிமையாளர், வாரிசுதாரர் இரண்டுமே வங்கிதான். அத்துடன் வங்கி மூலம் மனுச் செய்த காப்புறுதி அடமானக்கடன் குறைய, குறைய குறைந்து கொண்டுபோகும். எதிர்-காலத்தில் வேறு வங்கிக்கு அடமானக்கட-னுக்கு மனுச்செய்யும் வேளை இந்த காப்புறுதி ரத்து செய்யப்படும். பிரத்தியேக அடமானக் காப்புறுதி அப்படியல்ல.

**ஆயுள்காப்புறுதி, வருமானக் காப்புறுதி, Critical Illiness ஆகிய மூன்றிலும் எது**

47ம் பக்கம் பார்க்க...


## சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில்
முழுநேர நெறியான சேவை

“சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி”

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 10,000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 160 துரித காப்புறுதி இழப்பீடுகள். 30 நிரந்தர ஊன இழப்பீடுகள்
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) ,
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services),
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 375,000 வரை காப்புறுதி

**- சக்திவேல் -**

தொலைபேசி: **416.706.3530, 905.428.9299, 905.763.8912**
Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

**மன்னிக்கவும்!**
வாகனக் காப்புறுதி (Car Insurense). தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!



## மருத்துவ ரீதியின்றி ஆயுள் காப்புறுதி

**.85 வயதிற்குட்பட்ட எவரும் $375,000 வரை மனுச்செய்யலாம்.**

**.சலரோகம், சலரோக தடுப்பூசி, மாரடைப்பு, இரத்த அழுத்தம் (BLOOD PRESSURE), கொழுப்பு சத்து கூடியுள்ளவர்கள் (HIGH CHOLESTEROL).**

**.பகுதி ஊனம், நிரந்தர ஊனம் உள்ளோர்.**

**.மற்ற காப்புறுதி நிறுவனங்களினால் நிராகரிக்கப்பட்டோர்.**

**.நிறை கூடியுள்ளோர் (OVER WEIGHT)**

**.அதிகூடியான கை கால் வலி, மூட்டு வலியுள்ளோர்.**

உங்கள் வருத்தங்களை பொறுத்து, நிலவரத்தை பொறுத்து தகுந்த காப்புறுதி திட்டத்தை நிச்சயமாக அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

**சக்திவேல்**
**416 706 3530**

# ஆபத்தான மனநோயின் ஆரம்ப நிலை

## (Early Psychosis)


புஸ்பா
கனகரட்ணம்
- உளவியல் நிபுணர் -

உளநலத்தாக்கங்களை மேலெழுந்தவாரியாக பார்ப்போமானால், ஆபத்தான மற்றும் ஆபத்தல்லாத நோய்நிலைகள் என்று பிரிக்கலாம். ஆபத்தான நோய்நிலைகளில் தீவிர மனச்சோர்வு (Serious depression or major depression) அடங்கும். மிகவும் முக்கியமாக யதார்த்த பிறழ்வுடன் கூடிய நோய்நிலைகள் அடங்கும். யதார்த்த பிறழ்வு (psychosis) பல உளநோய் நிலைகளில் ஏற்படலாம். முதல் முறையாக இந்த யதார்த்த பிறழ்வு ஏற்படும் போது இதனை early psychosis அல்லது first episode psychosis என்பார்கள். யதார்த்தத்துடன் ஒவ்வாத நம்பிக்கைகள் (delusions), இல்லாத ஒன்றை புலன்களால் உணர்தல் (Hallucinations), அதீத சந்தேகம், சிந்தனையிலும் பேச்சிலும் ஒழுங்கின்மை போன்றவை Psychosis நோய்நிலையின் அறிகுறிகளாகும்.

கிட்டத்தட்ட 3 வீதமான மக்கள் தங்கள் வாழ்க்கைக் காலத்தில் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் மேற்குறிப்பிட்ட நோய்நிலை அறிகுறிகளை உணர்கிறார்கள் என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. Psychosis ஆண்களையும், பெண்களையும் ஒரே விகிதாசாரத்தில் தாக்குகிறது. முதல் கட்ட நோய்நிலை பொதுவாக இளம்பருவத்தில் இருந்து முழு வளர்ச்சியை ஒருவர் எட்டும் காலகட்டத்திற்குள் தாக்குகிறது. அதாவது 17இலிருந்து கிட்டத்தட்ட 24 அல்லது 25 வயதிற்குள் முதல் அறிகுறிகள் தோன்றுகின்றது. ஆரம்ப கட்டத்திலே Psychosisகான சிகிச்சை பெறுவது நோயின் மாற்றமுடியாத தன்மையை தடுத்து விட உதவுகிறது. நாட்பட்டுப் போகும் போது குணமாக்க முடியாத ஒரு நிலை ஏற்படலாம்.

### உறவினர்கள் அல்லது நண்பர்கள் எப்படி அடையாளம் காணலாம்.

ஆரம்ப கட்டத்திலே Psychosisஐ கண்டு அறிவது கடினம் தான். ஏனெனில் இது இளம் பருவத்திரை தாக்குவதால், விடலைப்பருவத்து பிரச்சினைகள் என நாம் அக்கறை இன்றி விட்டுவிடக்கூடும். இந்த அறிகுறிகளால் பாதிக்கப்படும் நபருக்கும் இது ஒரு குழப்பமான நிலையை தோற்றுவிப்பதால் பயம் காரணமாகவோ வெட்கம் காரணமாகவோ வெளியில் சொல்லாமல் தவிர்க்கப் பார்ப்பார்கள். சிலர் இது மனநோய்க்கான ஆரம்ப அறிகுறிகள் என்று கருதுவதில்லை. மற்றவர்களும் இது தானாகச் சரியாகிப் போய் விடும் என்ற எதிர்பார்ப்பில், நம்பிக்கையில், எதுவுமே செய்யாது விட்டுவிடுவார்கள். Psychosis ஒருவரின் உணர்வுநிலையில், சிந்தனையில், மற்றும் பழக்க வழக்கங்களில் மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

சிலபேருக்கு முழுமையான அறிகுறிகள் தோன்ற முன் ஒரு சில மாதங்களுக்கு உணர்வுநிலை, எண்ணங்கள், பழக்க வழக்கங்களில் சில மாறுபாடுகள் தோன்ற ஆரம்பிக்கும். சமூகத்தில் இருந்து ஒதுங்குதல், கவனக்குறைவு, மனதை ஒருமைப்படுத்த முடியாமை, மனச்சோர்வு, நித்திரைப் பிரச்சினைகள், பதட்டம், சந்தேகம், பாடசாலை/ வேலை தவிர்த்தல், எரிச்சல் போன்றவை பொதுவாக இந்தக் காலகட்டத்தில் தோன்றும். இந்த அறிகுறிகள் மிகப் பொதுவானவை. அத்துடன் சாதாரணமாக விடலைப்பருவத்தில் தோன்றக்கூடியவை. இப்பாடியான அறிகுறிகள் நீண்ட நாட்களுக்கு நீடிக்கின்றனவா என அவதானிக்க வேண்டியது அவசியம். ஏனென்றால் சிகிச்சை எவ்வளவு விரைவாக ஆரம்பிக்கின்றதோ, அவ்வளவுக்கு குணமாக்கும் சந்தர்ப்பமும் அதிகரிக்கின்றது.

எல்லோருக்கும் இந்த (மேற்கூறிய) அறிகுறிகள் முதலில் தோன்றும் என்று சொல்லமுடியாது. ஆனால் நிச்சயமான Psychotic அறிகுறிகளை சில வெளிப்படையான அறிகுறிகள், சில மறைமுகமான அறிகுறிகள் என நாம் வேறு படுத்தலாம். வெளிப்படையான அறிகுறிகள் என பார்க்கும்போது, ஆணித்தரமான தவறான நம்பிக்கைகள் ஒரு அறிகுறி.

உதாரணமாக:- மற்றவர்கள் பின்தொடர்கிறார்கள், தனக்கு எதிராக சதி செய்கிறார்கள், தம்மைப்பற்றி மறைமுகமாக மற்றவர்கள் கதைக்கிறார்கள், தொலைக்காட்சியில் அல்லது வானொலி, பத்திரிகையில் தன் மனதில் தோன்றுவதை அறிந்து ஒளி/ ஒலிபரப்புகின்றார்கள், பிரசுரிக்கிறார்கள், வேறுமக்களோ, சக்திகளோ தன்னை கட்டுப்படுத்துகிறார்கள், தனக்கு அதீதமான ஒரு வல்லமை அல்லது சக்தி இருக்கிறது. இப்படியான நம்பிக்கைகளை ஆங்கிலத்தில் delusions என்பார்கள். அடுத்து அசாதாரண புலன் உணர்வுகள், இதை ஆங்கிலத்தில் hallucinations என்பார்கள். இல்லாத ஒன்றை பார்த்தல், கேட்டல், உணர்தல், நுகர்தல் என்பன இதில் அடங்கும். பொதுவாக சப்தங்களை அல்லது குரல்களை கேட்பது ஒரு பொதுவான அறிகுறியாக இருக்கும். இந்த அறிகுறிகளை உணர்பவர் இதனை உண்மை என்று ஆணித்தரமாக நம்புவார். இதனால் ஒருவர் வழமைக்கு மாறாக நடக்க ஆரம்பிக்கும் போதுதான் மற்றவர்கள் இதனை பிரச்சினையாக கருதத் தொடங்குவார்கள். ஒழுங்கற்ற பேச்சும் பழக்கவழக்கங்களும் அடுத்த அறிகுறி. ஒருவிடயத்தில் இருந்து இன்னொரு விடயத்திற்கு அடிக்கடி மாற்றி மாற்றி கதைப்பார்கள் அல்லது பேச்சில் ஒரு விளக்கம் இல்லாமல் இருக்கும். அவர்கள் பழக்கவழக்கங்களும் அசாதாரணமாக இருக்கலாம். உதாரணமாக கவலைக்குரிய ஒரு விடயத்தை சிரித்தவாறு சொல்லக்கூடும். நாளாந்த நடவடிக்கைகளில் (உதாரணமாக சமைத்தல், காலைக்கடன்கள்) ஒழுங்கின்மை அல்லது மாறுபாடு, குழப்பம் இருக்கலாம்.

வெளிப்படையான அறிகுறிகள் போன்று இல்லாமல், மறைமுகமான அறிகுறிகளை அவதானிப்பது கடினம். சாதாரண இயக்கநிலையை விட எல்லாம் குறைந்து இருக்கும். உதாரணமாக உணர்வுநிலை வெளிப்பாடு, பேச்சு, மற்றும் விஷயங்களை ஆரம்பித்து செய்வது போன்றவற்றில் ஓர் உறைநிலை இருக்கும். இவற்றோடு மனச்சோர்வு, பதட்டம், தற்கொலைக்கான எண்ணங்கள், போதைப் பொருள் பாவனை போன்ற பிரச்சனைகளும் இருக்கலாம்.

ஆரம்ப Psychosisஇன் போது தற்கொலைக்கான சாத்தியக்கூறு அதிகமாக இருக்கிறது. 10% - 30% வரையானவர்கள் முதன்முறை துறைசார் உதவியை நாடமுன்பே தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் 20% - 51% வரையானவர்கள் சிகிச்சையில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கும் போது கூட தற்கொலை எண்ணங்களை கருத்தில் கொள்கிறார்கள். ஏனெனில் ஆரம்ப Psychosis ஒரு குழப்பமான, பயமுறுத்தக்கூடிய அனுபவமாக இருக்கும். அறிகுறிகள் அசாதாரணமாகவும் ஒருவரை மிகவும் பாதிப்பதாகவும் இருக்கின்றன. சுற்றுச் சூழலிலும் ஆதரவோ புரிந்துணர்வோ இல்லாமல் போகும்போது பாதிக்கப்பட்டவர் இரட்டிப்பான துன்பத்துக்கு ஆளாகிறார். முதல் கட்ட Psychosisஇனால் பாதிக்கப்பட்டவர்களிடையே அதீத போதைப் பொருள் பாவனையும் இருக்கிறது. குடும்பப் பின்னணியின் பாதிப்பு இருக்கும் நபர்களுக்கு, அதாவது வேறு குடும்ப அங்கத்தினருக்கு Psychosis சார்ந்த நோய்நிலைகள் இருப்பின், போதைப் பொருள் பாவனை Psychosis ஏற்படும் சாத்தியக்கூறை அதிகரிக்கும். Psychosis இனால் பாதிக்கப்பட்ட, பாதிக்கப்படாத இளம்பருவத்தினர் இருசாராருமே, போதைப்பொருள் பாவனைக்கு ஒரே காரணங்களைத் தான் சொல்கிறார்கள். இருப்பினும் Psychosisஇன் பாதிப்பு இருப்பவர்கள், அதனால் ஏற்படும் வெளிப்படையான அறிகுறிகளில் இருந்து மீள ஒரு வழியாக போதைப்பொருள்களை நாடலாம்.

ஏன் யதார்த்த பிறழ்வு (Psychosis) ஏற்படுகிறது? முதல் யதார்த்த பிறழ்வு ஏற்படுவதற்கான காரணங்கள் பலவாக இருக்கலாம். இதுதான் என உறுதியாக ஒரு காரணத்தை சொல்லமுடியாது. ஆய்வுகளின் படி மரபியல், உயிரியல் சார்ந்த காரணங்களுடன் சூழ்நிலைத் தாக்கங்களும் இணையும் போது முதல்கட்ட Psychosis ஏற்படும் சந்தர்ப்பம் அதிகரிக்கிறது. மூளையின் இரசாயன மாற்றங்களும் தாக்கத்தை ஏற்படுத்தலாம். மன உளைச்சலை ஏற்படுத்தும் ஏதாவது ஒரு சம்பவமும் இத் தாக்கத்தை ஏற்படுத்தலாம். உதாரணமாக திடீர் இறப்பு, அதிர்ச்சி, ஏமாற்றம், பொருளாதார பிரச்சனைகள், குடும்ப உறவுகளில் சிக்கல், மது மற்றும் போதை பொருள் பாவனை போன்றவற்றை சொல்லலாம்.

> ஆரம்ப கட்டத்திலே Psychosisஐ கண்டு அறிவது கடினம் தான். ஏனெனில், இது இளம் பருவத்திரை தாக்குவதால், விடலைப்பருவத்துப் பிரச்சினைகள் என நாம் அக்கறையின்றி விட்டுவிடக்கூடும். இந்த அறிகுறிகளால் பாதிக்கப்படும் நபருக்கும் இது ஒரு குழப்பமான நிலையை தோற்றுவிப்பதால், பயம் காரணமாகவோ வெட்கம் காரணமாகவோ வெளியில் சொல்லாமல் தவிர்ப்பார்கள். நாம் தான் அதிக கவனம் எடுக்கவேண்டும்.

ஒருவரில் Psychosis ஏற்படும் சாத்தியக்கூறு அல்லது பாதிப்பு அதிகமாக இருப்பின், சில சூழ்நிலைத் தாக்கங்கள், இந்த சாத்தியக்கூறு குறைவாக இருப்பவர்களைவிட ஒப்பீட்டளவில் முன் குறிப்பிட்டவர்களில் கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. Psychosis ஏற்படுவதற்கான பாதிப்பை ஒரு குறிப்பிட்ட நபரின் குடும்பப் பின்னணியில் இதே நோய்கள் இருத்தல், பிறப்பின் போது ஏற்படும் பிரச்சினைகள், மற்றும் மூளைத்தாக்கங்களின் அடிப்படையை வைத்து கணிப்பிடலாம். சில உடல் நோய்கள் கூட யதார்த்த பிறழ்வை ஏற்படுத்தலாம். அதனால் எவ்வளவு விரைவில் உளநலத்துறை சார் நிபுணர்களை அணுகுகிறீர்களோ, அவ்வளவுக்கு குணமடைதலும் இலகுவாக இருக்கும்.

சிகிச்சை முறைகள் Psychosis பற்றிய விளக்கமும் தகவல்களையும் நோயாளிக்கும் அவரை நெருங்கியவர்களுக்கும் கொடுப்பது சிகிச்சையின் ஒரு முக்கிய அம்சமாகும். இது சம்பந்தப்பட்ட நபருக்கும் குடும்பத்திற்கும் மிக உதவியாக இருக்கும். மருந்துகள் சிகிச்சையின் ஒரு முக்கிய பங்காக அமையும். மருத்துவ சிகிச்சை வெளிப்படையான அறிகுறிகளை கட்டுப்படுத்தி மீண்டும் இந்த அறிகுறிகளை தோன்றவிடாது தடுக்கும். இம் மருந்துகளின் பாவிப்பால் ஏற்படும் பக்கவிளைவுகள் நாளடைவில் குறைந்துவிடும். சிலருக்கு பக்கவிளைவுகள் ஏற்படுவதில்லை. உளநலமருத்துவர் இது சம்பந்தப்பட்ட ஆலோசனைகளை வழங்குவார். மன உளைச்சலை குறைத்து ஆரோக்கியமான வாழ்க்கை முறையை கடைப்பிடிப்பது நோய்நிலையை கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவும். உளவியல் சார்ந்த நிபுணர்கள் இதற்கான ஆலோசனைகளை வழங்குவார்கள். இது போன்ற உளவியல் சிகிச்சை தனிப்பட்ட முறையில் அல்லது குழுக்களில் வழங்கப்படும். குடும்ப உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டவரின் சிகிச்சையில் முக்கிய பங்கை வகிப்பார்கள். ஏனெனில் குடும்பத்தில் புரிந்துணர்வு இருக்கும்போது நோயை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது இலகுவாகிறது.

சிலவேளைகளில் மிகப்பெரிய மனஉளைச்சல் ஏற்படும்போது திடீரென யதார்த்த பிறழ்வு ஏற்படலாம். இப்படியான அறிகுறிகள் பொதுவாக ஒருமாத காலத்திற்குள் மறைந்துவிடும். சாதாரணமாக, Psychosisஇனால் பாதிக்கப்படுபவர்கள் ஆபத்தானவர்கள் அல்ல. தம் அறிகுறிகள் காரணமாக அவர்கள் எதிர்பாராத விதங்களில் நடக்கலாம். ஆனால் மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் விதமாக நடப்பது மிகக்குறைவு. தமக்குத் தாமே ஆபத்தை ஏற்படுத்தும் சாத்தியக்கூறு தான் அதிகம் என்று சொல்லலாம்.

Psychosisஇனை குணமாக்க முடியும். பலபேர் சிகிச்சையுடன் நல்ல முறையில் வாழ்கிறார்கள். அத்துடன் பலபேர் ஆரம்பநிலையில் ஏற்படும் யதார்த்த பிறழ்வின் பின் முழுமையாக குணமடைகிறார்கள். அறிகுறிகள் இரண்டாம் முறை அவர்களை தாக்குவதில்லை. ஆரம்பநிலையில் ஏற்படும் அறிகுறிகளை கண்டறிந்து, எவ்வளவு விரைவில் துறைசார் உதவி பெறுகிறார்களோ அவ்வளவுக்கு குணமடைதலுக் கான சாத்தியக்கூறும் அதிகரிக்கிறது.

Pushpa.kanagaratnam@thaiveedu.com


■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய
விமர்சனங்களை
எதிர்பார்க்கின்றோம்.
விமர்சனங்கள் எம்மை ஓர்
ஆரோக்கியமான
பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*


# HomeLife/Future Realty Inc., Brokerage*

**Birchmount & Ellesmere**



Call For Price
- 4 Bed Rooms
- 3 Wash Rooms
- 1 Kitchen

**Brimley & Ellesmere**



For Rent
- 9 Bed Rooms
- 3 Wash Rooms
- 3 Kitchens
- Separate Entrance

**Markham & Sheppard**



$249,900
- 1+1 Bed Rooms
- 1 Wash Rooms
- 1 Kitchen

**7428 Markham Rd**



SOLD
- 3 Bed Rooms
- 2 Wash Rooms

**Markham & Lawrence**



SOLD
- 3+2 Bed Rooms
- 2 Wash Rooms
- 2 Kitchens
- Separate Entrance

**Midland & Lawrence**



$157,900
- 3 Bed Rooms
- 2 Wash Rooms
- 1 Kitchen

**Downtown Condo**



X2 & ICE2 & ONE BLOOR

With More VIP Price Condos

Call NOW

**Scarborough Condo**



Starting Price $147,800

For Sale or Rent

Call NOW

**Markham Condo**



Starting Price $189,000

For Sale or Rent

Call NOW

16 YEARS ஆண்டுகள் தமிழர்களின் பேராதரவைப் பெற்ற NaNo Computer ஸ்தாபனத்தின் விரிவுபடுத்தப்பட்ட உங்கள் முகவர்



**RAJ NADARAJAH**
Sales Representative

வீடு வாங்க விற்க
இலவச ஆலோசனைகளுக்கு

**Direct: 416-333-6115**
Office: (905)-201-9977
FAX: (905)-201-9229
E-mail: nanohomes@gmail.com
7 Eastvale Dr., Unit 205, Markham, ON, L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®

**Buying/Selling Your Home ?**

**Call Now!**
Lets Talk!

**Direct: 416-333-6115**

---

# Century 21
King's Quay Real Estate Inc.
Brokerage

For All Your Real Estate Needs
**HomeExpertTeam.com**
**416-496-2625**

Bus: 905-940-3428 Fax: 905-940-0293 7300 Warden Ave., Suite 401 Markham, On L3R 9Z6

***Committed to Providing Real Estate Service to attain results beyond your expectations.***
*Knowledge + Experience + Team work = Result*



**AMIR RAMALINGAM ***
Masters Hall of Fame
CENTURION Honor Society

***Flexible & competitive commission!***



**PRATHEEP BALASUBRAMANIAM ****
Masters Ruby (2003-2007)
Masters Diamond (2008)



**THAYA SUBRAMANIAM ***
Masters Silver (2007)
Masters Diamond (2008)



**JUGA SUREES ***



**ATHAVAN KULARAJASINGHAM ***

* Sales Representative ** Broker

உங்கள் வாடகைப்பணத்தில் சொந்தமாக வீட்டை
அமைத்திட இன்றே அழையுங்கள்

**416-496-2625**
Top Producers Award Winning Team

முழுநேர வீடு விற்பனை முகவர்கள் உங்களுக்கு
உதவக்காத்திருக்கின்றோம்
நம்பிக்கை நேர்மை நட்பான சேவை !

---



Plant Your Seed for a Great Investment Return

*Special V.I.P. Brokerage price*

**Price Starting mid $300,000**

# THIS IS YOUR FANTASY
# ONE BLOOR



One Bloor will rise to 65 storeys. Interiors designed by Cecconi Simone. Two amenity floors on the 6th and 7th floor offer one of a kind amenities, including a large spa area with three treatment rooms, plus separate his and hers cold plunge, hot plunge, jet massage, experience showers, Laconium and Tepidarium steam suites... Much Much more included.

Call us today to reserve your units !!!

# வரி வழிகாட்டிகளும் அதன் பயன்பாடுகளும்



ராகுலன்
- Accountant -


நமது மக்கள் அதிமாக வரிப்பத்திரங்களை நிரப்புவதற்கு ஒரு நிபுணரின் (Accountant) உதவியை நாடுவது உண்டு. ஒரு வீட்டின் காற்று பதனப்படுத்தும் கருவியை (Air Conditioner) பார்ப்பதற்கு அதில் நிபுணத்துவம் கொண்டவரை அழைப்பது போல இதற்கும் நிபுணர்களின் உதவி முக்கியமானது. ஆனால் இந்த வரிப்பத்திரத்தில் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட சில சந்தர்பங்களில் மாற்றங்களை வருடாந்தம் அரசாங்க சட்ட மாற்றங்கள் ஏற்படுத்துகின்றது. இந்த வரிப் பத்திரம் நிரப்பும் நிபுணர் சில கேள்விகளை கேட்க மறந்தால் உங்களின் வரிப்பத்திரம் முழுமையடையாது.

அத்துடன் இந்நாளில் தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக இணையத்தள வழியாக பலரும் வரிகளை நிரப்ப முடிகிறது. எல்லா எண்களையும் நிரப்பி விட்டு Sendஐ அழுத்திவிட்டால் விடயம் வெற்றியாக முடிந்தது என்று நினைக்க முடியாது. வரிகளை நிர்வகிப்பது என்பது வருடம் முழுவதும் செய்ய வேண்டிய ஒரு காரியம்.

இதற்கு பல வரி வழிகாட்டிகள் உங்களின் உடனடிக் கேள்விகளுக்குப் பதிலளிப்பதுடன் நீண்டகால நோக்கில் எப்படி வரிகளை சேமிக்கலாம் என்பதையும் சொல்லித் தருகின்றன. இந்த வரி வழிகாட்டிகள் ஆங்கிலத்தில் இருந்தாலும் தற்போது கூடுதலாக வளர்ந்த குழந்தைகள் இருக்கும் வீடுகளில் ஆங்கிலப் பிரச்சினை இருக்காது. வழக்கமாக 2009க்கான வரி வழிகாட்டிகள் 2010 ஆண்டுப் பதிப்பு என்று அழைக்கப்படும்.

இந்த வகையில் பல புத்தகங்கள் பிரசுரிக்கப் படுகின்றன. KPMG's Tax Planning for you and your family 2010 (PB – Carswell) முக்கியமான உசாத்துணை நூலாகும். இது பல நிபுணர்களைக் கொண்ட குழுக்களினால் எழுதப்பட்டு பதிப்பிக்கப் படுகிறது. 78 Tax tips for Canadians for Dummies (PB- Willy & sons, To) என்ற புத்தகம் 2000 ஆண்டில் இருந்து பதிப்பிக்கப்படுகிறது. Dummy என்ற பெயர் இருப்பதால் ஆரம்ப நிலையில் உள்ள நாம் அனைவருமே படித்துப் பயன் பெறக் கூடிய புத்தகமாகும். இந்தப் புத்தகம் பல மாற்றங்களுடன் இந்த ஆண்டு வெளிவருகிறது. வழமையாக முன்னைய ஆண்டுகளில் இருந்த ஆண்டு மறைந்து விட்டது. எழுத்தாளர் குழுவினர் இந்தப் புத்தகம் இன்னும் வரும் சில ஆண்டுகளுக்குப் பயன் தரக்கூடியதாக இருக்கும் என்று கூறுகிறார்கள். அத்துடன் வருடம் முழுவதும் வரி நிர்வாகம் பற்றிச் சிந்திக்கும் நிலையை திணிக்கும் நல்ல நோக்கில் இந்த மாற்றங்களை கொண்டு வந்துள்ளோம் என்றார் அவர்.

> “ 101 இரகசியங்களைக் கொண்ட
> இந்தப் புத்தகம் பல முறை வெளிவந்ததால்
> பல இரகசியங்கள் தற்போது
> பரகசியங்களாகிவிட்டாலும்
> பலருக்குத் தேவையான பல விடயங்கள் இந்தப்
> புத்தகத்தில் இருக்கின்றன. ”

அடுத்து Grant Thornton's Smart Tax Tips 2010 (PB-Key Porter) Evelyn Jacks Essential Tax Facts 2010 (PB Knowledge Bureau News books) Tim Cestnicks's 101 Tax Secrets for Canadians (PB-John Wiley & Sons). Evelyn Jacks 230 பக்கங்களில் 202 தகவல்களைத் தருகிறார். அவை ஆறு தலையங்கங்களில் புதிய மாற்றங்கள், தனியாரும் குடும்பத்தினரும், வேலை செய்வோர், தனியோரும் முதியோரும், புதிய முதலீட்டாளர்கள், முதலைப் பாதுகாத்தல் என பிரித்துத் தரப்பட்டிருக்கின்றன.

என்ன புதியது என்ற கேள்விக்கு எல்லாமே புதியது என்கிறார் Jacks. 2009 மத்திய அரசின் வரவு செலவுத்திட்டத்தில் பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. மேலும் அவர் கூறுகையில் 2009 வரிப் பத்திரத்துடன் ஒத்துப் பார்ப்பது நல்லது என்றார். முதன் முறையாக வீடு வாங்குவோருக்கு RRSP பணம் எடுக்கக்கூடியதாக இருப்பது யாவரும் அறிந்ததே. அது 25,000ஆக உயர்த்தப்பட்டது பலருக்குத் தெரியாது. இப்படிப் பல விடயங்களை தனது புத்தகத்தில் தந்துள்ளார் Jacks.

அடுத்து 101 இரகசியங்களைக் கொண்ட புத்தகத்தில் என்ன சொல்லியுள்ளார் என்று பார்த்தால் இந்தப் புத்தகம் பல முறை வெளிவந்தபடியால் பல இரகசியங்கள் தற்போது இரகசியங்களாக இல்லாத போதும் பல தேவையான விடயங்கள் இந்தப் புத்தகத்தில் இருக்கின்றன.

இப்படியாக ஒவ்வொரு புத்தகத்திலும் பல சிறப்பு அம்சங்கள் இருக்கின்றன. வாசித்து தகவல்களை அறிந்து கொள்வதன் மூலம் நீங்கள் வரிப்பத்திரத்தில் கையொப்பம் இடும் போது அதில் என்ன இருக்கிறது என்பதை அறிந்து தெரிந்து வைத்துக் கொள்ள முடியும்.

ragulan@thaiveedu.com

■ ■ ■


இணைந்து கொள்ளுங்கள் ‘தாய்வீடு’ facebookஇல்
www.facebook.com/thaiveedu



இலங்கையிலும் கனடாவிலும் தச்சுவேலையில் பல வருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால்

- **Basement**
  Complete Basement
  Separate Entrance Cutting
  Window Cutting
- **Kitchen**
  Custom Kitchen Cabinets
  Kitchen Modification
  Kitchen Backflash
  Counter tops Granite and Wood
- **Bathroom**
  Custom Bath Cabinets
  Bathroom Modification
  Counter Tops Granite and Wood
- **Floor**
  Hardwood Flooring
  Laminate Flooring
  Vinyl Tiles
  Ceramic Tiling
  Carpet
  Stairs
- **Wall and Ceiling**
  Painting
  Crown Mouldings Work
  Ceiling and Stucco Work
- **Back Yard**
  Custom Deck with Design
  Fence Work
  Storage
- **Repairs**
  Plumbing Repairs
  Basement Repairs
  Kitchen Cabinet Repairs
  Bathroom Repairs
  Floor Sanding and Polishing
  Door and Window
  Replacement & Repair
  Kitchen and Washroom Fan
  (Exhaust) Changing
  Washing Machine and
  Dishwasher Fixing




6 Months or 1 Year
No Payment
No Interest
some conditions may apply

Arul
RENOVATION
Expert in Sri Lankan & Canadian Carpentry

5200 Finch Ave. East, Unit 304,
Toronto, ON. M1S 4Z5
Tel : 416-728-2222/416-268-2993

Quality • Commitment • Satisfaction


TWO FULL TIME REALTORS
ONLY ONE COMMISSION
Sheppard & Neilson
$ 119,900
2+1 Bedrooms + 2 Washrooms
Neilson & Mclevin
$ 159,000
2 Bedrooms + 2 Washrooms
Markham & Denison
$ 279,900
2+1 Bedrooms + 2 Washrooms
Steeles & Brimley
$359,000
3+2 Bedrooms + 3 Washrooms
Middlefield & Elson
$ 439,000
4+2 Bedrooms + 4 Washrooms
Mclevin & Neilson
$ 249,900
3+1 Bedrooms + 3 Washrooms
Sandalwood & Torbram
$ 320,000
3 Bedrooms + 3 Washrooms
Rossland & Harwood
$ 439,000
4+2 Bedrooms + 3 Washrooms
Countyside & Airport
$4999,900
3 Bedrooms + 3 Washrooms
9th Line & Reeves way
$ 489,000
4 Bedrooms + 3 Washrooms
9th Line & Reeves way
$ 509,900
4 Bedrooms + 3 Washrooms
Salem Rd. & 401
$ 375,000
4 Bedrooms + 2 Washrooms
Rossland & Westney
$ 389,000
3+1 Bedrooms + 4 Washrooms
Salem & Williamson
$389,900
4 Bedrooms + 3 Washrooms
Westney & Rossland
$ 649,000
4 Bedrooms + 4 Washrooms
Markham & 14th Ave.
$ 659,000
5 Bedrooms + 4 Washrooms
Markham & 16th Ave.
$ 499,000
4 Bedrooms + 4 Washrooms
9th Line & 16th Ave.
$ 549,000
4 Bedrooms + 3 Washrooms
Markham & Bur Oak
$588,888
4 Bedrooms + 4 Washrooms
14thAve. & 9th Line
convenience store with LOTTO
$ 69,900
*BUY - SELL - RENT*
Experience, Knowledge, Professionalism, Team work & No Pressure
YOUR HOME SOLD GUARANTEED !
Thamil Suberamaniam
Salesrepresentative
Direct: 416-358-6200
Mugunthan Nadarajah
Salesrepresentative
Direct: 416-276-8025
SOLD
HomeLife/Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr, Suit 205,Markham ON. L3S 4N8
Bus : 905-201-9977 Fax : 905-201-9229
www.realhouse.ca
*Independently Owned and Operated
No Intended to Solicit Currently Listed Properties or Buyers Under Contract.

# மெல்ல மெல்ல நகரும் கனடிய நாணயம்

**கனடிய நாணயம் மெல்ல அமெரிக்க நாணயத்தை நெருங்குகிறது.**




மாறன் செல்லையா

- நிதி திட்டமிடல் ஆலோசகர் -


இந்த கனடிய நாணயமும் அதன் பெறுமதியும் வர்த்தகர்களுக்கும் நுகர்வோருக்கும் பெரிதாக உணர முடியாவிட்டாலும் பெரிய பொருளாதாரப் படத்தில் மிக முக்கியமானது. அயல் நாட்டுக்கு ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபடுவோருக்கு அவர்களுடைய ஏற்றுமதி செய்யும் பொருட்களின் விலைகள் வாங்கும் நாட்டில் அதிகரிப்பதால் அந்தப் பொருட்களின் கேள்வி குறையும் அதே நேரத்தில் அவர்களின் வருமானம் குறையும். மறுபக்கத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் கனடிய நுகர்வோருக்கு மலிவாக இருப்பதால் பல்வேறு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை இலகுவில் வாங்கலாம். நாணயத்தின் பெறுமதி உயர்வாக இருக்கும் போது அயல் நாட்டில் சொத்துக்ளை வாங்குவோருக்கு இலகுவாக இருக்கும். ஆனால் வெளிநாட்டு முதலீடுகளில் இருந்து கனடாவுக்கு பணத்தைக் கொண்டு வருவது வீதம் குறைவாக இருக்கும்.

இப்படி பல தாக்கங்களை மாற்றங்களை கனடிய நாணயத்தின் பலம் கொண்டுவரும் போது கனடிய ஏற்றுமதியாளர்கள் பலரும் இத்தகைய மாற்றத்திற்கு முகம் கொடுக்க வேறுவகையில் செலவுகளைக் கட்டுபாட்டில் கொண்டு வந்து ஏற்றுமதியில் வரும் விழுக்காட்டுக்கு சரி செய்யும் வகையில் ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளார்கள்.

சர்வதேசரீதியில் Hard currency என்ற அழைக்கப்படும் நாணயங்களுள் கனடிய நாணயமும் ஒன்றாகும். பொருளாதாரத்தில் உலகத்தில் எல்லா நாணயச் சந்தைகளிலும் பரிமாறப்படுவதும் சேமிப்புப் பெறுமானத்தைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். இந்த நிலைக்கு நாட்டின் அரசியல் ஸ்த்திரத் தன்மை, குறைந்த பணவீக்கம், ஸ்திரமான நாட்டின் நாணய கொள்கையிலும் அரசாங்க நிதி நிலவரத்திலும் தங்கியுள்ளது.

இந்த நாணயங்களும் முதன்மையான நாணயமாக இருக்கும் அமெரிக்க நாணயத்தின் பலவீனம் கனடிய நாணயத்தின் உயர்சிக்கு வழிகோலியுள்ளது. அமெரிக்காவின் வர்த்தக துண்டு விழும் தொகை (Trade Deficit) காரணமாகவும் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத் துண்டு விழும் தொகை காரணமாகவும் அமெரிக்க நாணயம் தொடர்ந்தும் பலவீனம் அடையும் நிலை காணப்படுகிறது. அத்துடன் பல வளரச்சியடைந்து வரும் நாடுகள் தங்களது நாணயங்களை அமெரிக்க நாணயத்துடன் இணைத்து நிர்ணயிப்பதால் (Peg) வர்த்தக துண்டு விழும் தொகையை சரி செய்வதில் அமெரிக்காவிற்கு தடங்கல்கள் பல இருக்கின்றன. அண்மைக் காலமாக சீனாவிற்கும் அமெரிக்காவிற்கும் உறவில் ஏற்பட்டுள்ள விரிசலுக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

இந்த நாணயப் பெறுமான வீழ்ச்சியால் அமெரிக்க நாணயத்தில் விலை கூறப்படும் தாதுப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கின்றது. ஒரு பொருளாதாரப் பின்னிடைவில் இருந்து மீண்டு கொண்டிருக்கும் நேரத்தில் ஒரு பெரிய தாதுப் பொருள் ஏற்றுமதியாளராக விளங்கும் கனடிய நாணயத்திற்கு மவுசு ஏற்பட்டுள்ளது. இந்தத் தாதுப் பொருட்களுக்கான மவுசு வளர்ந்து வரும் நாடுகளான இந்தியா சீனா போன்ற நாடுகளில் அதிகம் என்பதும் அதனால் விலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் தகைமை இந்த நாடுகளுக்கு இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

> “ பலவீனமடைந்து வரும்
> அமெரிக்க நாணயத்திற்கு பதிலாக
> வெளிநாட்டுச் செலாவணியை
> வேற்று முதலீடுகளில் ஈடுபடுத்த முயலும்போது
> கனடிய நாணயம்
> ஒரு கவர்ச்சிகரமான தெரிவாகும். ”

பலவீனமடைந்து வரும் அமெரிக்க நாணயத்திற்கு பதிலாக தங்களது வெளிநாட்டுச் செலாவணியை வேற்று முதலீடுகளில் ஈடு படுத்த நாடுகள் முயலும் போது கனடிய நாணயம் ஒரு கவர்ச்சி கரமான தெரிவாகும். அண்மைக் காலங்களில் சீனா, ரூசியா போன்ற நாடுகள் கனடிய நாணயத்தில் முதலிட்டது கனடிய நாணயத்தில் சர்வதேச சமூகம் கொண்ட நம்பிக்கையைக் காட்டுகின்றது.

கனடிய பொருளாதாரம் ஸ்திரம் அடையும் போது வட்டிவீதங்களை உயர்த்த வேண்டிய கட்டாயத்திற்கு மத்திய வங்கி ஆளாகிறது. அடுத்து வரும் சந்திப்பான Juneஇலேயே வட்டி வீதம் உயரலாம் என ஆய்வாரள்கள் கருதும் போது அத்துடன் அமெரிக்க மத்திய வங்கியான Federal Reserve வட்டி வீதத்தை உயர்த்த முன் இது அமையும் என்பது இன்னெரு கவனிக்கப்பட வேண்டிய விடயம் ஆகும். இந்த விடயமும் முதலீட்டாளர்கள் மத்தியில் ஒரு ஆர்வத்ததை ஏற்படுத்தியிருக்கிறது.


கனடிய நாணயத்தின் பெறுமானம் உச்சம் பெற்றுவிட்டது ஒரு விலைத் திருத்தத்திற்கு ஆயத்தமாகிறது என்று கூறும் ஆய்வாளர்கள் கூட அந்தத் திருத்தம் சில சதங்கள் மட்டுமே என்றுதான் கூறுகிறார்கள். அந்த வகையில் கனடியர்களும் கனடிய ஏற்றுமதியாளர்களும் வர்த்தகர்களும் உறுதியான ஒரு நாணயத்துடன் இருக்க தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டுள்ளார்கள். கூடுதலாக உற்பத்தியாளர்கள் உற்பத்தித் திறன் போன்றவற்றை அதிகரிப்பதன் மூலம் வர்த்தக வினைத்திறனை அதிகரித்துள்ளார்கள். மொத்தத்தில் இவையெல்லாம் ஒரு வளையத்தில் நடப்பவை ஆகவே அந்த வட்டத்தில் இது உயர்வாக இருக்கும் நேரம்.

maran.chelliah@thaiveedu.com

■ ■ ■







# சுயதொழில் செய்பவர்களுக்கான ஈட்டுக்கடன் குறிப்புகள்



சொக்கலிங்கம் பிரபாகரன்
- வீடு விற்பனைப் பிரதிநிதி -
haran@thaiveedu.com

பொருளாதார நிலைமைகளின் தாக்கங்களால் கனடிய மண்ணில் பலர் வேலையில்லாச் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டநிலையில் சுய-தொழிலின் பாலான தமது நாட்டத்தினை அதிகரித்து வருவதனை வெகுவாகக் காண முடிகின்றது. இதனால் தனிப்பட்ட பொருளா-தார நிலை பாதிப்படையாத வண்ணம் காப்-பாற்றப்படக்கூடியதாக உள்ளதையும் காண முடிகின்றது.

சுயதொழில் என்னும் பொழுது "நானே ராஜா நானே மந்திரி" என்பது போல் பிறருக்கு அடிபணிந்து வேலை செய்யாமல் சுயமாக நமக்கு நாமே வேலை செய்யும் சுதந்திரம் முதலான பல அனுகூலங்கள் உள்ளன என்பது மறுக்கமுடியாத உண்மை. அதே போல் இத்தகைய சுயதொழில்களில் எதிர் நோக்கும் சவால்களும் எண்ணற்றவை. சுய தொழில் Tax Credit எப்படி என்பது போன்ற Revenue Canada சம்பந்தப்பட்ட யுக்திகளை அறிந்திருப்பது வெற்றிக்கான வழிகளில் முதன்மையானதாகும். அதேபோல் கடன்களை கையாளுவதும் கைவந்த கலையாக இருக்க வேண்டும்.

Canadian Income Tax Act சட்டம் அனுமதிக்-கும் சலுகை வாய்ப்புகள் தனியார் தொழில் களை ஊக்குவிற்பனவாக உள்ளமை சுய தொழில்களின் வளர்ச்சிக்கு மற்றுமொரு காரணமாகும். சுயதொழில் செய்பவர்கள் குறைந்த வருமானத்தோடும் நிறைந்த வாழ்வு வாழும் வகையில் நேரமுள்ளவர்களாக இருப்பர்.

எல்லாம் சிறப்பாக இருப்பினும் கடன் வழங் கும் நிறுவனங்கள் குறிப்பாக ஈட்டுக்கடன் வழங்கும் நிறுவனங்கள் சுயதொழில் செய்-பவர்களிற்கு முந்தியடித்து கடன் வழங்க முன்வருவதில்லை என்ற குறைபாடு உள்ளது. இது தவறான எண்ணம். அதாவது சுயதொழில் செய்பவர்களும் ஈட்டுக்கடனை சிரமமின்றி பெறமுடியும் என்பதை விளக்கி நம்பிக்கை-யூட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

சுயதொழில் செய்பவர்களுக்கு High-Ratio Mortgages (25% ஐ விட குறைவாக down payment போட்டுப் பெறும் mortgage)ஐ எடுப்பது Conventional Mortgage financing for the self employed (கொள்விலையின் 25% இனை down payment ஆகப் போட்டுப் பெறும் ஈட்டுக்கடன்)ஐ எடுப்பதைவிட கடின-மான விடயம் என்பது உண்மை.

CMHC, GE Capital ஆகிய இரு High-ratio Mortagage insurers (காப்புறுதியாளர்களும்) கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு கடன்பெறும் சுயதொழிலாளர்களின் ஈட்டுக்கடனுக்கு காப்-புறுதி உத்தரவாதம் வழங்குவதற்கு பின்-வரும் விடயங்களை பூர்த்தி செய்திருக்க வேண்டுமென வலியுறுத்துகின்றன.

கடன் பெறும் சுயதொழிலாளர் தான் செய்யும் சுயதொழிலில் குறைந்த பட்சம் 3 முழுமை-யான வருடங்கள் சுயதொழில் செய்து பூர்த்தி செய்திருக்க வேண்டும். (இதற்கான வரிப்பத்-திரங்களை ஆதாரமாகக் காட்ட வேண்டும்) வரிப்பத்திரங்களின்படி 3 வருட சுயதொழில் வருமானம் வரிச்சட்ட விதிகளுக்கமையக் காட்டப்பட்டிருக்க வேண்டும். பல கடன் வழங்-கும் நிறுவனங்கள் 2 வருட பூரண வருமான வரிப்பத்திர ஆதாரத்துடனான வருமானம் காட்டினாலே ஈட்டுக்கடன் வழங்குகின்றனர் என்பது நடைமுறைக்கு போதுவானது.

சுயதொழிலாளர்கள் 25% down payment உடன் ஈட்டுக்கடன் விண்ணப்பிப்பதில் சவால்கள் எதுவுமில்லை. ஆனால் 25%ற்கும் குறைவாக Down Payment போடுகையிலேயே CMHC அல்லது GE Capital காப்புறுதி தேவைப்படும் நிர்ப்பத்தினாலேயே 2-3 வருட சுயதொழில் வருமானம் வரிப்பத்திரங்களோடு காட்ட வேண்டியுள்ளது. 25%க்கு குறைவான ஈட்டுக்கடனுக்கு விண்ணப்பிக்கும் சுயதொழில் முதலீட்டாளர்களிடம் அவர்கள் எதை எதிர்-பார்க்கின்றார்கள் என்றால் பரிசீலிக்கப்பட்ட கணக்கியல் பத்திரங்கள் (Audited business financial statements) காட்டப்பட வேண்டும். இவற்றோடு 2 வருடத்திற்குரிய Personal Tax Returnsஉம் காட்டப்பட வேண்டும். Personal Tax Returnஇல் அவர்கள் பொதுவாக பார்க்கப் போவது line 150. அதாவது உங்கள் மொத்த வருமானத்தை (total income) காட்டும் வரிசை இதுவாகும்.

பல கடன் வழங்கும் நிறுவனங்கள் மேற்-கூறியவற்றோடு இரு வருடகால உத்தியோக பூர்வமான Notice of Assessments from Revenue Canadaவையும் கேட்கின்றன. அவற்றுள் சில Add back items கணக்கு விபரங்களையும் எடுத்துக்காட்டாக வீடு, அலுவலக செலவுகள் உபகரணங்களின் depreciation போன்ற கணக்கு விபரங்களையும் கேட்கின்றன.

நீங்கள் சுயதொழில் செய்பவராக இருந்து ஈட்டுக்கடன் பெற விரும்புபவராக இருந்தால் முக்கியமாக நீங்கள் செய்ய வேண்டியது Creditஐ நன்றாகக் கட்டி எழுப்பியவராகவும் well-organized ஆகவும் இருக்க வேண்டும்.

உங்களுக்கு பிடிக்கிறதோ இல்லையோ கடன் வழங்கும் நிறுவனங்கள் உங்கள் creditஐ வைத்தே உங்கள் Characterஐ எடை போடுகின்றன. உங்கள் bussinessஐ எவ்வளவு நேர்த்தியாகவும் திறமையாகவும் வெற்றிகரமாகவும் நீங்கள் செய்யவல்லவராக உள்ளீர்கள் என்பதை உங்கள் credit புள்ளியை வைத்து கணித்து மதிப்பிடுகின்றனர். அதுவும் ஒருவகையில் சரியானதே. ஏனெனில் தனது Creditஐயே நிர்வாகம் பண்ண முடியாத-வரால் தனது வியாபாரத்தை ஒருபோதும் நேர்த்தியாக செய்ய முடியாது. இந்நாட்டில் எல்லாவற்றையும் விட own personal credit மிக முக்கியமானது என்பதை நாம் புரிந்து நடக்க வேண்டும்.

சரி, உங்கள் tax returnஇன் படி உங்கள் வருமானம் உங்களை ஈட்டுக்கடன் பெற தகைமையாளராக்க போதவில்லை எனக் கொள்வோம். அதனால் குடி மூழ்கியதாக எண்ணிக் கவலைப்படத் தேவையில்லை. உங்களால் 25% க்கும் மேல் (25 of purchasing price) முதலிட முடிந்தால் வருமானம் குறித்த கவலை தேவையற்றதாகும். ஆனால் credit புள்ளிகள் நன்றாக இருக்க வேண்டும் என்பது முக்கியமானதாகும்.

வருமானமில்லையா? ஆனால் 25%க்குமேல் முதலிட நீங்கள் தயாராக உள்ளீர்களா? எனின் Posted rateஇல் ஈட்டுக்கடன் பெற முடியலாம். ஆனால் 35%க்குமதிகமாக முதலிட நீங்கள் தயாராக இருப்பீர்களாயின் வருமானம் பற்றிய கவலையுமில்லை வட்டிவீதம் குறித்த கவலையும் தேவையில்லை. நல்ல discounted rateஇல் வட்டி பெற இவ்வாறு முதலிடுவோர் ஈட்டுக்கடனைப் பெறமுடியும். எனினும் அதற்கு ஓர் ஈட்டுக்கடன் முகவர் உங்களுக்காக பேரம் பேசுவதன் மூலம் மட்டுமே இலகுவாக சாத்திய மாகும். ஏனெனில் வங்கிகளைப் பொறுத்த-வரையில் ஒவ்வொரு வங்கிகளுக்கும் ஒவ்-வொரு கொள்கை உள்ளதனால் இத்தகைய குறைந்த வட்டி ஈட்டுக் கடனை பெறமுடியும் என உறுதிப்படுத்த முடியாது. ஈட்டுக்கடன் ஆலோசனைகள் அல்லது ஈட்டுக்கடன் முகவர்-கள் பல எண்ணிக்கையான பொருளாதார நிலையங்களுடன் தொடர்பில் இருப்பவர்கள். அதனால் அவர்களை அணுகுவதன் மூலம் சிறந்த discounted rate mortgageஐப் பெற முடியும். எது எவ்வாறாயினும் உங்கள் credit நன்றாக இல்லாவிட்டால் ஈட்டுக்கடன் சிறு தொகையாகப் பெறுவதனாலும் சவாலானதே.

எனவே உங்கள் creditஐச் சொத்துக்களைப் பாதகாப்பதைவிட அதிக அக்கறையோடு பேணிப் பாதுகாப்பீர்களாக.

prabaharan.s@thaiveedu.com

■ ■ ■

# காப்புறுதியில் ஏற்...

41ம் பக்கத் தொடர்ச்சி...

**சிறந்தது? ஏன்?**

வருமானக்காப்புறுதியை பொறுத்தவரை எவ்வளவு சம்பளம் நீங்கள் உழைத்தாலும் வருமானவரி இலாகாவிற்கு உங்கள் செலவு-களை கழித்து இறுதியாக காட்டும் வருமா-னத்தில் (Net Income) மூன்றில் இரண்டு பங்கு மட்டுமே அதிகப் படியாக மனுச்செய்ய-லாம். அத்துடன் ஒருவித வேலை செய்யாமல் படுத்தபடுக்கையாக இருந்தால் மட்டுமே காப்புறுதி நிறுவனம் வருமான வரியின்றி உங்கள் மாதாந்த தொகையை வழங்கும். ஆனால் Critical Illnessஇனை பொறுத்த வரை உங்களுக்கு ஏதாவது தீராத கொடிய நோய் ஏற்பட்டு 30 நாட்களுக்கு மேல் உயிரோடு இருந்தால் மனுச் செய்த முழு காப்புறுதியும் உங்களுக்கு வருமான வரி-யின்றி கிடைக்கும். அத்துடன் நிறுவனத்தை பொறுத்து குறிப்பிட்ட காலவரை (பொதுவாக 15, 20 வருடங்கள்) முடிந்ததும். ஒருவித வருத்தமும் வராமல் இருப்பின் நீங்கள் கட்டிய முழுத்தொகையை வட்டியின்றி மீளப் பெற-லாம். ஒரு விதத்தில் பார்ப்போமானால் இந்த தொகை நிச்சயமாக கிடைக்கும் ஒய்வூதிய திட்டமாக கருதப்படும். இந்த மாதிரியான திட்டத்தில் 25 வருத்தங்கள் அடங்கும். அத்துடன் இந்த திட்டம் நீங்கள் உயிரோடு இருக்கும் போதே அனுபவிக்கும் திட்டம். ஆனால் ஆயுள் காப்புறுதியை பொறுத்தவரை உங்கள் மரணத்தின் பின் காப்புறுதி இழப்-பீட்டு தொகை நீங்கள் நியமிக்கும் வாரிசு-தாரரை வருமான வரியின்றி சென்றடையும். அத்துடன் ஆயுள் காப்புறுதியை பொறுத்த வரை எதிர்பார்க்கும் பாதிப்பு வீதம் (Risk Factor) 1/100. வருமானக் காப்புறுதியை பொறுத்த வரை எதிர்பார்க்கும் பாதிப்பு வீதம் 1/5. Critical Illnessஇனை பொறுத்த-வரை எதிர்பார்க்கும் பாதிப்பு வீதம் 1/3. இந்த ரீதியில் பார்க்கப்போனால் மாதாந்த கட்டுப்பணத்தை பொறுத்த வரை Critical Illness ஆனது வருமானக்காப்புறுதி, ஆயுள் காப்புறுதியை விட அதிகமாகத்தான் இருக்கும். அத்துடன் Critical Illnessஇனை பொறுத்த-வரை உங்கள் குடும்ப அங்கத்தவர்களின் தேகநிலையும் கருத்தில் கொள்ளப்படும். உதாரணமாக உங்கள் குடும்ப அங்கத்தவர் யாராவது சலரோகம், இரத்த அழுத்தம், மாரடைப்பு, கொழுப்பு அதிகம், புற்று நோய் போன்ற வருத்தங்களால் பாதிக்கப்-பட்டவராக இருப்பின் உங்கள் மாதாந்த கட்டணம் சாதாரணமான கட்டணத்தை விட ஒரளவு அதிகமாக இருக்கும்.

**எனது தாயாருக்கு வயது 84. சகல விதமான வருத்தங்கள் இருக்கின்றன. அந்த முறையில் அவருக்கு ஆயுள் காப்புறுதிக்கு மனுச் செய்யலாமா?**

நிச்சயமாக முடியும். மருத்துவரீதியின்றி ஏறத்தாழ $200,000 வரை மனுச்செய்யாம். இந்தக்காப்புறுதி உடனேயே அமுலுக்கு கொண்டு வரும் காப்புறுதி திட்டமாகும். இதில் நிறுவனங்களை பொறுத்து அகால மரணமாயின் இரண்டு மடங்கு காப்புறுதி இழப்பீட்டு தொகையாகவும் இந்த மரணம் பேருந்து, வாடகை வண்டி, புகையிரதம், விமா-னம் ஆகியவற்றில் செல்லும் போது ஏற்படின் 3 மடங்கு காப்புறுதி இழப்பீட்டு தொகை-யை வருமான வரியின்றி மீளப் பெறலாம்.

saththivel@thaiveedu.com

■ ■ ■

GP
TELECOM
இரமணன் திரு
(முன்னாள் பெல் கனடா ஊழியர்)
Telephone and Voice Mail Systems
Voip Phone Systems - Wireless Networks
Surveillance Cameras
Voice and Data Structured Cabling
Professional Cable Fishing for
Residential and Commercial Buildings
416.203.0344


# 4 இயந்திரங்களும் செயலற்றுவிட்டன



கந்தசாமி
கங்காதரன்

> "நான் உங்கள் கப்ரன் பேசுகிறேன்.
> விமானத்தின் 4 இயந்திரங்களும் செயலற்றுவிட்டன"
> என்ற அறிவிப்புச் செய்தியைக் கேட்டதும்
> விமானத்தின் 248 பயணிகள் முகங்களும்
> பேயறைந்தது போலாயிற்று.
> விமானத்தின் உள்ளே அமுத்தம் குறைய
> ஒட்சிசன் முகமூடிகள்
> மேலேயிருந்து தொங்கின...

ஏப்ரல் 19 மாலை தமிழ் வணிக நிறுவனமொன்றில்,

"அண்ணை, என்ன விகடன், குமுதம் ஒண்டையும் காணேல்லை..?
"ஏன்... தெரியாதே... விமானம் பறக்கேல்லையெல்லோ அதுதான்..!

இன்னொரு நண்பர், அன்று மாலை தன் விடுமுறையைக் கழிக்க ஐரோப்பா செல்லவிருந்ததாகவும் விமான சேவைகள் நிறுத்தப் பட்டதால் தனது விடுமுறை அநியாயமாகக் கனடாவிலேயே கழிகின்றதாகவும் புலம்பினார்.

வேறொருவர் எடுத்த விடுமுறைக்கு விடுமுறை கொடுத்து வேலைக்குப் போகத் தொடங்கிவிட்டார்.

ஏறத்தாழ ஒரு கிழமை வரையில் விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அது ரொறன்ரோவில் வசிக்கும் ஒரு விகடன் / குமுதம் வாசகரைக் கூடப் பாதித்திருக்கின்றது. மில்லியன் கணக்கான பயணிகள்... பெரும்பாலும் அமெரிக்க, ஐரோப்பிய விமான நிலையங்களில் அநாதரவாக விடப்பட்டனர். ஒரு விமானம் பறக்காது போனால் விடுதிகள் ஒழுக்கு செய்து கொடுத்து அந்தப் பயணிகளுக்குச் சரியான, தகுந்த வாடிக்கையாளர் சேவையை வழங்கலாம் இப்படிப் பல விமானங்கள் பறக்காது போனால்..?

உலகெங்கும் 100,000க்கு மேற்பட்ட பறப்புக்கள் கைவிடப்பட்டிருந்தன.

தவித்துப்போன தங்கள் நாட்டுக் குடிமக்களைச் சந்தித்து அவர்களை ஆறுதற்படுத்த தங்கள் நாட்டு உயர் இராஜதந்திரிகளை உடனடியாவே கிடைத்த பாதை வழியாக அனுப்பிவைத்தன பெல்ஜியமும் பிரான்சும். இரு நாடுகளையும் சார்ந்த 70 பேர் ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் காத்திருந்து காத்திருந்து பொறுமையிழந்து, எயார் கனடா பயணிகள் உள் நுழைவதைத் தடுக்கும் போராட்டத்தில் இறங்க முனைந்தையடுத்தே இந்தப் போர்க்கால நடவடிக்கை போன்ற இராஜதந்திரிகளின் பயணம் இடம் பெற்றது.

ரொறன்ரோ விமான நிலையத்தில் இருந்த நிலைமைதான் பொரும்பாலான வட அமெரிக்க, ஐரோப்பிய விமான நிலையங்களிலும் இருந்தது. ஐரோப்பாவின் மிக அதிக பயணிகள் பயன்படுத்தும் இலண்டன்-ஹீத்ரோ, ஆம்ஸ்டர்டாம் ஸ்கிபோல், பாரிஸ் சார்ள் து கோல் மற்றும் ஃபிராங்ஃபேட் விமான நிலையங்கள் வெறிச்சோடிப் போயிருந்தன.

உலகெங்கும் விமான சேவை நிறுவனங்களுக்கு 2 பில்லியன் டொலர் வரையில் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதைவிட அதிக தொகை சொல்லப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. பல்வேறு நாடுகளிலும் ஏற்பட்ட பொருண்மிய இழப்பு விபரங்கள் பற்றிய கணிப்பு முழுமையாக வெளிவரக் கொஞ்சநாளாகும்.

இத்தனைக்கும் காரணமான ஐஸ்லாந்தின் Eyjafjallajökull எரிமலை இப்போது புகையைக் குறைத்தாலும் பாறைக் குழம்பைத் தொடர்ந்தும் கக்கியபடிதான் இருக்கின்றது. கொஞ்சம் அடக்கி வாசிக்கின்றது, போலும். மார்ச் 20ம் நாள் தனது நீண்ட அமைதியைக் கைவிட்டு உறுமத் தொடங்கியது. ஒரு சிறிய இடைவேளை விட்டுவிட்டு ஏப்ரல் 14ம் நாள் முழு வேகத்தோடு தனது திறமையைக் காட்டியது. ஒரு காரின் அளவினதான பாறைகளெல்லாம் எரிமலை வாயிலிருந்து தூக்கி வீசப் பட்டுக் கொண்டிருந்தன. பாறைக் குழம்பு 6-10 கீ.மீ உயரத்துக்குப் பொங்கி எழுந்தது. வெளியேற்றப்பட்ட புகையும் மிக மிக அதிகம். ஒரு பெரும் புகை மண்டலம் தனது ஐரோப்பியச் சுற்றுப் பயணத்தை ஆரம்பித்தது.

தொடங்கியது வில்லங்கம்.

இந்தப் புகை மண்டலம் ஏன் இவ்வளவு பீதியைக் கிளப்பவேண்டும்? புகைதானே... எங்களுக்குத் தெரியாத புகையா? எத்தனை புகைகளைப் பார்த்திருக்கிறோம்? வாழைக் குலைக்கு அடித்த புகையிலிருந்து விமானத்திலிருந்து வீசப்பட்ட குண்டுகள் வெடித்த புகை வரை எத்தனை புகைகளைக் கண்டிருக்கிறோம்.

இந்தப் புகைக்கு ஏன் இவ்வளவு பயம்?

பார்ப்போம்.

1982 ஜுன் 24ம் நாள் City of Edinburgh என்ற பெயரைக் கொண்ட பிரிட்டிஷ் எயார்வேஸ் நிறுவனத்தின் போயிங் 747-236B வகை விமானம் இலண்டனிலிருந்து மும்பை, சென்னை, கோலாலம்பூர், அவுஸ்திரேலியாவின் பெர்த், மெல்போர்ண் வழியாக நியூசிலாந்தின் ஒக்லன்ட் நகருக்குப் பறப்பை மேற்கொண்டிருந்தது. கோலாலம்பூரில் விமானம் தரித்தபோது இலண்டனில் பணியைத் தொடங்கிய விமானிகளும் பணியாளர்களும் இறங்கிக்கொள்ள புதியதொரு குழுவினர் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

அவுஸ்திரேலியாவின் பெர்த் நகரை நோக்கி, இந்தோனேஷியாவுக்கு அண்மித்த வான்பரப்பில் விமானம் தொடர்ந்து பறந்து கொண்டிருந்தது. விமானத்தின் வானிலைக் கதுவி (Radar) தெளிவான வானிலை என்று காட்டியது. ஆனால் விமானத்தின் முன் கண்ணாடியில் ஏதோ மினுமினுப்பது போன்று இருந்ததைக் கண்டனர் விமானிகள். பனித்துகள்களாக இருக்குமென்ற எண்ணத்தில் விமானத்தின் பனியெதிர்ப்பு சாதனத்தையும் இயக்கினர். இப்போது விமானத்தினுள் புகை பரவத் தொடங்கியது. சிகரெட் புகையாக இருக்குமென முதலில் கருதப்பட்டது. கொஞ்ச நேரத்தில் புகை அதிகரித்தது. அதேவேளை கடும் கந்தக வாசமும் வீசியது.

ஜாகர்த்தா நேரம் இரவு 8:40.

4ம் எண் இயந்திரம் விக்கி விக்கி நின்று போனது. 8:43க்கு 2ம் எண் இயந்திரம் செயலற்றுப் போனது. சில வினாடிகளுள் விமானத்தின் பறப்புப் பொறியிலாளர், "என்னால் நம்பவே முடியவில்லை, 4 இயந்திரங்களும் நின்றுவிட்டன..." என்று பதறினார். இயந்திரங்கள் இயங்காதவிடத்து 747-200 வகை விமானத்தின் மிதப்பு விகிதம் 15:1. அதாவது ஒவ்வொரு கிலோ மீற்றர் உயரம் குறையும் போதும் விமானம் 15 கிலோ மீற்றர் முன்னோக்கி நகர்ந்திருக்கும். 11,000 மீற்றர் உயரத்தில் பறந்துகொண்டிருந்த விமானம் தரையைத் தொடுவதற்குள் 23 நிமிடங்களுள் 169 கிலோ மீற்றர் முன்னோக்கியும் சென்றிருக்கும் என விமானிகள் கணித்தனர். வான் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுச் கோபுரத்திற்கு, விமானத்தின் அவசரகால நிலை தெரிவிக்கப் பட்டது. ஆனால் ஜாகர்த்தா வான் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பிரிவினர், '4 இயந்திரங்களும் இயங்கவில்லை' என்பதை, 'விமானத்தின் 4ம் எண் இயந்திரம் இயங்கவில்லை' எனத் தவறாகப் புரிந்து கொண்டனர். அந்தப் பிராந்தியத்தில் பறந்து கொண்டிருந்த ஓர் இந்தோனேஷிய விமானத்தின் விமானிகள்தான் நிலைமையைப் புரிந்துகொண்டு கட்டுப்பாட்டுப் பகுதியினருக்குத் தெளிவுபடுத்தினர்.

இதற்கிடையே பயணிகள் தங்கள் உறவினர்களுக்கு பிரியாவிடைச் செய்திகளை எழுதத் தொடங்கியிருந்தனர். விமானத்தின் இயந்திரங்களை இயக்குவதற்கான முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன. இவ்வேளையில் விமானத்தின் பொறுப்பாளர் (கப்ரன்) "நான் உங்கள் கப்ரன் பேசுகிறேன். ஒரு சின்னப் பிரச்சினை... விமானத்தின் 4 இயந்திரங்களும் செயலற்றுவிட்டன" என்று ஓர் அறிவிப்புச் செய்ய விமானத்தின் 248 பயணிகள் முகங்களும் பேயறைந்தது போலாயிற்று. விமானத்தின் உள்ளே அமுத்தம் குறைய ஒட்சிசன் முகமூடிகள் மேலேயிருந்து தொங்கின. விமானியொருவரின் முகமூடி, வழங்கு குழாயிலிருந்து பிரிந்து வந்துவிட்டது. இதைப் பார்த்த கப்ரன் விமானத்தினுள் இருப்பவர்கள் சுயமாகச் சுவாசிக்கக் கூடிய உயரத்திற்கு விமானத்தை வேகமாக இறக்க முடிவெடுத்தார்.

இனி, எப்படி எங்கு விமானத்தை இறக்குவது?

கடலிலே விமானத்தை இறக்குவதானால் அதற்கான அறிவுறுத்தல்கள் விமானிகளுக்குத் தெரிந்திருந்தாலும், இதற்கு முன் யாருமே 747 வகை விமானத்தைக் கடலில் இறக்கிய முன்னுதாரணங்களும் இல்லை.

நேரம் இரவு 8:56.

விடாப்பிடியாக இயந்திரத்தை இயக்க முயற்சித்ததில், எதிர்பாரத விதமாக – அல்லது எதிர்பார்த்த விதமாக எண் 4 இயங்கத் தொடங்கியது. இந்த இயந்திரத்தின் வலுவை வைத்துக்கொண்டு விமானம் கீழிறங்கும் வேகத்தைக் குறைக்க முயன்றார் கப்ரன். தொடர்ந்து 3ம் எண் இயந்திரமும் சற்று நேரத்தில் 1, 2 உம் இயங்கத் தொடங்கின. விமானத்தின் பறப்பு உயரத்தை அதிகரித்து 3,500 மீற்றருக்குக் கொண்டு சென்றதன் மூலம் எதிர்கொண்ட பெரும் ஆபத்தான மலைகளைக் கடந்தது விமானம். மேலும் பறப்பு உயரத்தை அதிகரித்து, பாதுகாப்பான உயரத்தை விமானம் அடைத்ததும் மீண்டும் தொடக்கத்திலிருந்தது போன்று முன் கண்ணாடியில் ஏதோ மினுமினுத்தது. மீண்டும் இயந்திரம் எண் 2 செயலற்றுப் போனது. உடனடியாகப் பறப்பு உயரம் 3700 மீற்றர் ஆக்கப்பட்டது. ஜாகர்த்தாவை அண்மிக்கும் போது, முன்னே இருப்பது... வருவது... போவது எதுவுமே தெரியாதவாறு முன் கண்ணாடி மறைக்கப்பட்டுவிட்டது. விமானத்தின் தரையிறங்கு விளக்கும் இயங்கவில்லை. கண்ணாடி வழியே கோடாகத் தெரிந்த ஓடுபாதை விளக்குகளை அடையாளம் கண்டு மிகுந்த சிரமத்தின் மத்தியில், ஒரு விமானி பக்கச் சாளரமொன்றைத் திறந்து அதன் வழியாகப் பார்த்துக்கொண்டு நின்றபடி விமானத்தைப் பாதுகாப்பாகத் தரையிறக்கினர் விமானிகள். பாதுகாப்பான தரையிறக்கத்துக்கு வேறு வழி?

ஜாகர்த்தாவில் முன் கண்ணாடியும் 1,2,3,ம் எண் இயந்திரங்களும் மாற்றப்பட்டன. உடைந்த உதிரிப்பாகங்கள் சில நியூசிலாந்தின் ஒக்லன்ட் நகர அருங்காட்சியகம் ஒன்றில் இன்றும் பார்க்கக் கூடியதாயுள்ளன. (நன்றி google)

இத்தனை களேபரத்துக்கும் காரணம் இந்தோனேஷியாவின் Mount Galunggung என்ற எரிமலையிலிருந்து வெளியான புகை மண்டலத்தினூடு இந்த விமானம் சென்றதுதான். ஆனால் இதற்கு முன்பே கருடா விமான சேவையில் DC-9 வகை விமானமொன்று ஏப்ரல் 5இலேயே இதேவகையான பிரச்சினையைச் சந்தித்திருந்தது.

போயிங் 747இன் இந்தச் சம்பவம் Discovery Channelல் Mayday என்ற தொடரில் 'All Engines Failed' என்ற பெயரில் விவரணமாக இடம் பெற்றது.

மிகச்சிறிய பாறைத்துகள்களும் பாறையிலிருக்கும் சிலிக்கன் ஈரொட்சைட் (மணல், படிகம் போன்றவையும் $SiO_2$ஐ அதிகம் கொண்டுள்ளன) உருகி விசிறப்பட்டு மிகச்சிறு துகள்களாக உறைந்து உருவாகும் கண்ணாடித் துண்டுகளும் இந்த எரிமலைப் புகையில் கலந்திருக்கும். இந்தத் துகள்கள்தாம் ஆபத்து விளைவிக்கக்கூடியவை.

விமானத்தின் இயந்திரங்களினுட் புகுந்த எரிமலைப் புகையுடன் கலந்த சாம்பல், பாறைத்துகள்கள் வெப்பத்தினால் உருகி இயந்திரம் நின்ற பின் உறைந்து திண்மமாகி, இயந்திரம் மீள இயக்கப்படும் போது காற்றுப் போக்குவரத்தைத் தடுத்தது. இயந்திரத்தின் பாகங்களையும் உடைத்துத் தள்ளியது.

இதுபோன்ற இன்னொரு சம்பவம்...

KLM நிறுவனத்தின் 747 விமானம் ஆம்ஸ்டர்டாமியிருந்து அலாஸ்கா மாநிலத்தின் அங்கரேஜ் நகருக்குப் பறந்து கொண்டிருந்த போது அலாஸ்காவின் Mount Redoubt எரிமலையின் புகை மண்டலத்தினுட் சென்றதால் 4 இயந்திரங்களும் செயலற்றுப்போயின. புகை மண்டலத்திலிருந்து வெளியே வந்த பின் இயந்திரங்கள் வெற்றிகரமாக இயக்கப்பட்டன.

இப்படியான காரணங்கள் தான் ஐரோப்பிய ஒன்றியம் உடனடியாக விமானப் பறப்புக்குத் தடை விதிக்க ஏதுவாயிருந்தன.

"விமானப் பறப்புக்கு விதிக்கப்பட்ட இந்தத் தடை அவசரப்பட்டுக் கொண்டுவரப்பட்ட தடை, தரவுகளை ஆய்ந்து பார்க்காமல் இப்படி முடிவெடுத்தது தவறு" என ஐரோப்பிய நாடுகள் மீது கண்டனம் தெரிவிக்கின்றது அனைத்துலக வான் போக்குவரத்துக் கூட்டமைப்பு (IATA).

IATA, ஐரோப்பிய நாடுகளைக் குற்றம் சாட்டினாலும், எரிமலைப் புகையின் விளைவுகளைக் குறைத்து மதிப்பிடமுடியாது.

சர்ச்சைகள் ஓயப்போவதில்லை.

ஆனால் விமானமொன்று எரிமலைப் புகையினால் விபத்துக்குள்ளாகி உயிரிழப்பு ஏற்படும் போது விமானம் பறக்க அனுமதித்த அரசுகளையும் நாம் தான் குறைசொல்வோம்.

gangatharan.k@thaiveedu.com

■ ■ ■



# CREDIT **RECOVERY** CANADA

- வங்கிக்கடனில் 25% மட்டும் செலுத்தி உங்கள் கடன் சுமையிலிருந்து விடுபடல்!
- COLLECTION AGENCY களின் தொலைபேசித் தொல்லைகளையும் சட்ட நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்துதல்!
- சம்பளப்பணத்தை பறிமுதல் செய்வதை தவிர்த்தல்!
- உங்கள் RRSP, RESP மற்றும் வீடு வாகனங்களை பாதுகாத்தல்!
- சிறிய மாதாந்த கட்டுப்பணத்தின் மூலம் BANKRUPTCY செல்வதை தடுத்தல்!

## கடன் சுமையிலிருந்து உடனடியாக மீளுங்கள்..!




**Suren Sornalingam**
*Certified Credit Counsellor*

## இலவச ஆலோசனைகள்
## CALL: (416) 264 1272

55 TOWN CENTRE COURT SUITE 700 - SCARBOROUGH, ONTARIO
INFO@CREDITRECOVERYCANADA.COM - WWW.CREDITRECOVERYCANADA.COM

STSADS 416 985 7379


வீடு வாங்கவும், விற்கவும்...
Barrie
4 Bedroom
3 Washroom
Light Airy Decor, Neutral Tones and 9' Ceilings
$349,900
Oakville
4 Bedroom
3 Washroom
Fantastic Premium Lot Greepark Home
$599,900
Win.Church/ Britannia
3 Bedroom
2 Washroom
Beautifull All Brick Semi-Detached Home
$340,000
Mccowan /16th 5 Bedroom
5 Washroom
9" Ceiling, Oak Staircase, Open Concept
$599,000
9th/Hooverpark
3 Bedroom
3 Washroom
Fabulous Detached Home In Most Desirable Area Of Stoufville
$394,900
Jane/Major Mac
Established South Asian Grocery, Fish, and Video Store
$125,000 Plus Stock
9th/14 Ave
Established South Beautiful Well Maintained Arista Built Detached Home With Charming Porch
$479,900
Jane/Major Mac
Restaurent For Sale. Easy To Manage, Right Next Across Wonderland
$224,000
Morningside / Finch
4+2 Bedroom
4 Washroom
Basement Finished With Two Bedrooms With Seperate EntranceHome
$439,900
Finch/ Morningside
4 Bedroom
3 Washroom
Brazillian Cherry Hardwood Floors, & Fenced Yard.
$449,500
NO
• Pressure
• Commitment
• Cost
Ganesh Thangarajah
Real Estate Broker
416-994-9046
Raj Ariyanayagam
Real Estate Broker
416-930-4663
HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE TODAY REALTY LTD., BROKERAGE
Independently Owned And Operated
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6 • Office: 416-298-3200



தளம் எல்லாம் தளமல்ல
iwishtomove.com மாத்திரமே
உங்கள் வீடு வாங்குதல், விற்றலுக்கான இணையத்தளம்
SEE PAGE 65
- digi Media -
ITS FAMOUS FOR HOME BUYERS AND SELLERS
www.iwishtomove.com
NEW LISTINGS EVERYDAY
Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
Fax: 905.471.7441
RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated



Toronto - London - Quatar - Colombo
From $980 + Tax

Toronto - Brussels - Chennai
From $625 + Tax

Toronto - London - Colombo
$1080 + Tax
SriLankan Airlines

Toronto - Abudhabi - Colombo
$1005 + Tax
ETIHAD AIRWAYS

Toronto - Abudhabi - Chennai
$715 + Tax
ETIHAD AIRWAYS

Toronto - Dubai - Chennai
$925 + Tax
Emirates

**Colombo - Jaffna**
Expo Aviation Tickets Avialble Here

Toronto - London - Colombo - Chennai **$1080** + Tax
Sri Lankan AirLines

**SPECIAL GUIDED TOURS**
India • Malaysia • Thailand • Cambodia • Indonesia • Vietnam • Laos • Myanmar • Hongkong • China • Korea • Japan

TICO 50012691

**www.serandibtravel.com**

**Serandib Travel**
*Your satisfaction is our success*

2075 Lawrence Ave, E, Suite 202,
Toronto, ON
(Warden & Lawrence)
**416.750.0009**

7 Eastvale Drive, Unit 207
Markham, ON
(Markham & Steeles)
**905.201.6660**

New Location

Montréal : **514-448-1389**, Calgary: **403-770-9647**
Vancouver: **604-625-0495**, Mississagua: **905-564-7564**

* Above fares are seat sale fares. Certain conditions and restrictions apply. Prices are subject to availability of the seats. Taxes vary from $325 - $400.

- digi Media -

# போவோமா... ஊர்க்கோலம்...




கோடை விடுமுறைக்கான ‘பெட்டி’ கட்டும் படலம் ஆரம்பமாகிவிட்டது. நாட்டிற்குப் போய் உறவுகளைப் பார்த்துத் திரும்பிவர வேண்டும் என்ற வேகத்தில் பிரயாணச்சீட்டுக்களை வாங்கும் பணி தொடங்கி விட்டது. எவ்வளவு பணம் கொண்டு போவது, எப்படிச் செலவு செய்வது என்பதில் தொடங்கி எவற்றைக் கொண்டு போவது, திரும்பி எவற்றைக் கொண்டு வருவது என்று பட்டியல் போடும் வேலையும் மும்முரமாகவே நடைபெறத் தொடங்கிவிட்டது.

ஆன்மீகப் பயணம், உல்லாசப் பயணம், மருத்துவப் பயணம் என்று பயணங்களைப் பட்டியலிட்ட காலம் போய் தாயகப் பயணம் என்று ஒரு புதுச் சொல்லைப் புகுத்த வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டுவிட்டது. இவையெல்லாம் ஒருபுறம் களைகட்டிக் கொண்டிருக்கும் வேளையில் ஊரில் நமக்கு ஒரு வேலையும் இல்லை எனவே, எங்கே போவது என்றொரு குழுவினர் மண்டையைப் பிய்த்துக் கொண்டு ‘MAP’இல் படுத்திருந்து நாடு தேடும் படலமும் நடக்கிறது. நாட்டைக் கண்டு பிடித்த பின் அங்கே போகவர ஒரு வழிமுறையைக் காணவேண்டிய கட்டயம் இருக்கிறது. இப்படி இப்போது பலராலும் மிகவும் கவர்ந்திழுக்கும் இடமாக மாறிவரும் ஒரு இடம்தான் கம்போடியா.

சென்று வந்த பலரும் திரும்பிப் போகவேண்டும் என்று மனதில் அவாவை ஏற்படுத்தி அனைத்து உள்ளங்களையும் கொள்ளை கொள்ள வைத்திருக்கும் ஒரு நாடு என்று சொல்வதானால் அது கம்போடியாவாகத்தான் இருக்க வேண்டும்.

ஏதோ ஒரு வழியில் மனங்களைக் கொள்ளை கொள்ளும் கம்போடியாவைப்பற்றி விலாவாரியாக பார்த்தால் அது பலருக்கும் பிரயோசனமானதாக இருக்கும் என்ற எண்ணத்திலேயே இக்கட்டுரை வரையப்படுகின்றது.

கம்போடிய அரசின் உண்மையான பெயர் Preah – Reach – And – Chak Kamphcher. இதில் புதுமை என்ன வென்றால் இதில் வரும் Reach என்ற சொல்லுக்கு சமஸ்கிருதத்தில் அரசன் என்பதே பொருள். அதேபோல் Chak என்ற செல்லுக்கு சக்கரம் என சமஸ்கிருதத்தில் பொருள் படுகின்றது. இதன் அர்த்தத்தின் மூலம் கம்போடியாவில் இந்து சாம்ராஜ்யம் கொடிகட்டிப் பறந்திருக்கிறது என்பது தெளிவாகின்றது.

Camboja என போத்துககீச மொழியிலும் Kamdoja என இந்தோனீசிய மொழியிலும் Cambodia என ஆங்கிலத்திலும் Campoya என ஸ்பானிசிலும் Cambogia என இத்தாலியப் மொழியிலும் அழைக்கப்படுவது ஆச்சரியமாக இருக்கின்றது.

கம்போடிய நாட்டவர்களின் பெயர்களின் பின்னால் பெரும்பாலும் Rama, Raja போன்ற இந்திய சொற்பதங்கள் பிரயேகிக்கப்படுகின்றன. இந்த நாட்டின் முக்கிய மொழியாக Khmer விளங்குகிறது. முக்கிய மதமாக புத்த மதமே இருக்கின்றது. 2005இல் ஐக்கிய நாடுகள் சபையின் கணக் கெடுக்கின்படி 14.8 Million மக்கள் வாழுகின்றார்கள். இதன் தலைநகரமாக Phnom, Penh திகழ்கின்றது.







இதன் பெருமைக்கு அழகு சேர்ப்பது போல Laos, தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகள் எல்லைப் புறங்களாக இருக்கின்றன. இதனால் தாய்லாந்து நாட்டைப் பார்க்க வருபவர்கள் எல்லை வழியாக கம்போடியாவினுள் நுழைந்து வருகின்றனர்.

விமான நிலையத்தை அடைந்தவுடன் உங்களுக்கு 80களில் இலங்கைப் புகையிரத நிலையங்களில் ஏற்பட்ட தொரு அனுபவத்தைச் சந்திக்கலாம். விமான நிலையத்தில் இருக்கும் Taxi Standஇல் $7.00 என குறிப்பிடப்பட்டிருக்கும். ஆனால் உங்கள் சட்டைப் பையிலுள் நீங்கள் கையை விட்டு $4.00 மட்டுமே எடுத்தால் அவர்கள் $5.00 என்று இறங்கி ஏறுவார்கள். சரி வேண்டாம் என்று விட்டு நடையைத் தொடங்க ஒடிவந்து கையைப் பிடித்து $4.00க்கு Taxiஇல் ஏற்றிச் செல்வார்கள். முட்டாள் தனமாக நமது கெட்டித்தனத்தைக் காட்டுவதற்காக ஆகக் கீழ் இறங்கி விலை கூறுவீர்களாயின் வீணாக Airportஇலேயே படுக்கவேண்டி வரும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும்.

வீதியில் இறங்கி நடக்கும் போது நீங்கள் வெள்ளவத்தையூடாக எப்படி நடந்து திரிவீர் களோ அப்படி அனுபவமே கிடைக்கும். காரணம் போக்குவரத்து நெருக்கடி அதிகமாக இருப்பதால் வாகனங்கள் மேலும் கீழும் ஒடிக் கொண்டே இருக்கும். அவர்கள் நீங்கள் கடக்க வேண்டும் என்பதற்காக வாகணங்களை நிறுத்தி உங்களை கடக்க வைக்க மாட்டார்கள். Jumpins Styleஇல் கொழும்பை நினைத்துக் கொண்டு பாய்ந்தோடிக் கடந்து விட வேண்டியது தான். நாம்தானே பாய்ந்தோடிக் கடப்பதில் கில்லாடிகள் ஆயிற்றே.

இந்த உலகத்தின் அமானுஷ்ய பெருமைமிக்க இடமான Siem Reapகிற்கு செல்லவேண்டியது மிக மிக அவசியம். இங்கே நீங்கள் 3 நாட்கள் தங்கியிருந்து இவ்வுலகத்தின் ஆலயங்களின் பாரம்பரிய கட்டிட நுணுக்கங்களை கண்டு களிக்கலாம். விஜய நகர சம்ராஜ்யத்தின் ஆட்சி அதிகாரம் இங்கேயும் கொடி கட்டிப் பறந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது உடலில் புல்லரிக்கின்றது.

70% சிறுபான்மையினர் வாழும் Ratnagiri கட்டாயமாகப் பார்க்க படவேண்டிய இடங்களில் ஒன்றாகும். Ratnagiriஇல் அமைந்திருக்கும் பூர்வீகக் கட்டிட அமைப்புக்கள் இந்தியக் காலாச்ரார்ப் பின்னணியைக் கொண்டதாக இருப்பது மிக மிக ஆச்சரியம். Banlung, Yeak Laom Lake, Bokeo Chum Rum Bei, Lumphat, Karlai என்று உல்லாசப் பிரயாணத்தின் உச்சகட்டத்தை எட்ட வைத்து எம்மையெல்லாம் பிரமிப்பில் ஆழ்த்த வைக்கும் இடங்களாகும்.

இங்கிருந்து Group Tour ஆக சென்ற வாரம் Cambodia சென்றுவந்த பலரும் இன்னமும் அந்த பிரமிப்பிலிருந்து மீளாமல் அதைப் பற்றி எமக்குத் தொலைபேசியிலும் நேரிலும் சொல்லும்போது அவர்களை கம்போடியா எவ்வளவு தூரம் கவர்ந்திருக்கிறது என்பதை உணரமுடிகின்றது.

Group Tourஆக செல்லும் போது பணத்தை மிச்சம் பிடிப்பதோடு நமக்கு பிடித்தவர்களையும் கூடவே அழைத்துச் சென்று ‘யாம் பெற்ற இன்பத்தை’ மற்றவர்களையும் பெற வைக்கலாம் அல்லவா?

mahesan.thiru@thaiveedu.com

இணையத்தளத்திலும்

‘தாய்வீடு’

www.thaiveedu.com



# பாவித்த கார்களுள் சிறந்தது எது?

சிறப்பான மற்றும் மோசமான கார்கள். மிக உபயோகமுள்ள நம்பகமான மற்றும் தவிர்க்க வேண்டிய கார்கள் பற்றி Consumer Reports Magazineஇல் இடம் பெற்ற ஆக்கத்தினை மூலமாகக்கொண்டு வாசகர்களின் நலன் கருதிப் பிரசுரிக்கிள்றோம்.

கடைசியாக மறுஆய்வு செய்யப்பட்ட மாதம் ஏப்ரல் 2010.




அதீசன் சர்வானந்தன்


சராசரியான ஒரு புதிய காருக்கு முதல் மூன்று வருடங்கள் சொந்தக்காரனாக இருத்தலின் போது அதன் விலை மதிப்பு 47 சதவீதம் சரிவடைய நேரிடும். அதனால் தான் பல நுகர்வோர்கள் தாங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை பயன்படுத்தப்பட்ட கார்கள் மீது முதலீடு செய்து இலாபம் அடைய முனைகிறார்கள். ஆனால் ஒரு சிறந்த நம்பகமான பயன்படுத்தப்பட்ட காரை கண்டுபிடிப்பது சற்று சிரமமான காரியம். 2000 முதல் 2009 வரையிலான சிறந்ததிலும் சிறந்த வகைக்கார்கள் இந்த பக்கங்களில் உங்களுக்காக பட்டியலடப்பட்டுள்ளன. அவை புதியனவாக இருந்த போது நம்பகமான முறையில் அதிகப்படியான நேரம் ஓடி, இப்போதும் நல்ல முறையில் உள்ளன. அவை ஒவ்வொன்றும், பயன்படுத்தப்பட்ட மற்ற சராசரி கார்களைவிட அதிக வருடங்கள் ஓடி, அவற்றின் உடைமைக்காரர்களுக்கு சில சிறிய பிரச்சினைகளை தவிர வேறு எந்த பெரிய தொல்லைகளையும் அவை கொடுத்ததில்லை. இவற்றுள் Honda மற்றும் Tyota தயாரித்த மாடல்கள் தான் பட்டியிலில் முதலிடம் வகிக்கின்றன.

(இந்தவருட பட்டியலில் சேர்க்கப்பட வேண்டிய சில Toyoto வகைகள் விடப்பட்டுள்ளன. ஏனென்றால் sticking accelerator உள்ள ஒரு வகை உள்ளது என்று தெரியவந்தது. Dealer களுக்கே அதன் உதிரிப்பாகங்கள் இன்னும் வந்து சேரவில்லை. இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ள Toyota High lander, Prius, Tacoma, மற்றும் Lexus ES மற்றும் IS உள்ளிட்ட சில வகை வாகனங்கள் தன்னிச்சையான accelerationஐ பெற்றுதர floor-mat entrapment இயந்திர நுட்பத்தை கொண்டுள்ளன. floor matஐ அகற்றுவதின் மூலம் அவைகளில் எல்லாவற்றையும் சரி செய்ய முடியும். அதற்கென உள்ள ஒரு hardware fix, Dealerஇடம் கிடைக்கும்).

ஒரு பயன்படுத்தப்பட்ட காரை நீங்கள் வாங்கும் போது அதில் ஏதவாது பழுது பார்க்க வேண்டுமா என்பதை விசாரித்து தெரிந்து கொள்ளுங்கள். பட்டியலில் உள்ள மோசமானதிலும் மோசமான கார்கள் நம்பகமானவைகள் அல்ல என்பதை நீங்கள் தெரிந்து கொண்டு, அவற்றை தவிர்க்க முடியும் சுமார் 1.4 மில்லியன் வாகனங்களின் சொந்தக்காரர்களின் பதில்களை பரிசீலித்த பின்பே இந்த புள்ளிவிவரக்கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

## சிறந்ததிலும் சிறந்த கார்கள்.

எமக்கேற்றது என்று நாம் கருதும் வாகன வகைகளை சேர்ந்து இவைகள் 2000 முதல் 2009 வருட வாகன வகைகள் வரையிலான பல எண்ணிக்கையிலான ஓட்டமொத்தமான நம்பகத் தன்மையை கொண்ட முதன்மையான மற்றும் பட்டியலில் முன்னிலைப்படுத்த வேண்டிய கார்களை பற்றி நாங்கள் மிக முக்கியமாக இங்கு குறிப்பிட்டிருக்கிறோம்.

## சிறிய ரகக் கார்கள்.

Honda Civic நம்பகமான சிக்கனமான மற்றும் ஓட்டுவதற்கு ஏற்றவகையான கார் என்றால் அது civic தான். 2003ல் Hybrid மாடல் வெளிவந்தது. 2006ல் antilock brakes மற்றும் Curtain air bags உள்ள மாடல் பிரசித்திப் பெற்றது. ஆனால் கடைசியான மாடல்கள் தான் Electronic Stability Controlஐ கொண்டிருந்தன. Civicஐ விட Hond Fit hatchback தான் சிறிய கார்.

### மற்றய சிறந்த விருப்பத் தேர்வுகள்.

Honda Fit
Toyota Echo
Volkswagen Rabbit
Scion xB
Mazda3
Subaru Impreza (nonturbo)
Mazda Protegé

## குடும்பத்தினருக்கு உகந்த கார்கள்

Honda Accord ஒரு மிக நம்பகமான சிறந்த விருப்பதேர்வாகும். மேலும் அதை ஓட்டுவது ஒரு சுகமான அனுபவம். 2003ல் மறுவடிவமைப்பை கொண்ட வகைவாகனம் antilock brake system உள்ளது. மிக அமைதியாக விரைந்து செயல்படும் மற்றும் ஓட்டுவதற்கு மிக லாகவமான கார் இது 2006ல் வந்த V6 மாடல்கள் ESC தர சான்றிதழை பெற்றது 2008ல் மறுவடிவமைப்பை கொண்ட அனைத்து மாடல்களும் அதே தரவரிசையில் உள்ளவைதான். எரிபொருள் சிக்கனத்தை விரும்புவோர்க்கு The Toyoto Prius Hybrid ஒரு சிறந்த விருப்ப தேர்வாக அமையும் மிக நம்பகமான மற்றும் நியாயமான விலையுள்ள காருக்கு Ford Fusion and Mercury Milanஐ தேர்ந்தெடுப்பது தான் சரி.

### மற்றய சிறந்த விருப்பத் தேர்வுகள்.

Toyota Prius
Ford Fusion (FWD)
Mercury Milan (FWD)
Mazda 6 (4-cyl.)

## விலை உயர்ந்த கார்கள்

Lexus ES ஒரு மிக நம்பகமான சிறந்த விருப்பத் தேர்வைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டிருக்கிறது. 2004ல் மிக அமைதியான மற்றும் இதமான சுகத்தை தரகூடிய, எரிபொருள் செலவு சிக்கனமான கார் அது. 2007ல் ESC தர அந்தஸ்தை பெற்றது. மேலும் Lincoln MKZ மற்றும் Zephys ஆகியன மிக நம்பகமான மற்றும் குடும்பத்தினருக்குரிய கார்கள் ஆகும்.

### மற்றய சிறந்த விருப்பத் தேர்வுகள்.

Lincoln MKZ, Zephyr (FWD)
Acura TSX
Acura TL
Lexus IS
Infiniti I30, I35
Infiniti G
Hyundai Azera
Volvo S60 (FWD)

## ஆடம்பரமான கார்கள்.

Infinity M35 ஓர் சிறந்த தெரிவு. நீங்கள் ஒரு தேசிய நெடுஞ்சாலையில் உங்கள் காரை உல்லாசமாக ஓட்டிச் செல்வதாக இருந்தாலோ அல்லது வளைவுகளும் திருப்பங்களும் நிறைந்த ஒரு சாலையில் ஓட்டிச் செல்வதாக இருந்தாலோ அதற்கு உகந்த இன்பத்தை அளிக்கும் ஒரே நம்பகமான மற்றும் ஆடம்பரமான கார் M35, Sedan தான். மிக ஆடம்பரமான ஆனால் விளையாட்டுப் போட்டிப் பந்தய கார் அல்லாத ஒரு சிறந்த விருப்ப தேர்வு என்றால் Lexus LS தான்.

### மற்றய சிறந்த விருப்பத் தேர்வுகள்.

Lexus LS
Lexus GS (RWD)
Acura RL
Mercedes-Benz E-Class (V6, RWD)

## விளையாட்டுப் போட்டிப் பந்தய கார்கள்

Mazda MX-5 Miata நியாயமான விலையில் கிடைக்க கூடிய, மற்றும் ஓட்டுவதற்கு ஒரு சுகமான அனுபவத்தை தரும். மேலும் அதை இலாவகமாகவும் மற்றும் விரைவாகவும் ஓட்டிச் செல்ல முடியும். 2006க்கு பின்பு தயாரிக்கப்பட்டுள்ள ABS தர சான்றிதழ் பெற்ற Miata வகைகளையே வாங்குங்கள். Honda S2000 பிரயாணத்திற்குத் தகுதியுள்ள ஒருவகை திறந்த ஆடம்பரமான கார் என்றால் அதற்கு Lexus SC தான் மிகுந்த சரியான வாகனம்.

### மற்றய சிறந்த விருப்பத் தேர்வுகள்.

Honda S2000
Lexus SC
Toyota Camry Solara
Acura RSX
Toyota Celica
BMW Z3, Z4 ('00-06)
Nissan 350Z
Ford Mustang (V6)
Porsche 911

## சிறிய SUVs ரக கார்கள்

Honda CR-V எரிபொருள் செலவு சிக்கனமுள்ள நேர்த்தியாக செயல்படக் கூடிய நான்கு Cylinder Engine கொண்ட கார். ஓட்டுவதற்கு சுகமான அனுபவத்தை தரும். ESC மற்றும் Curtain air bagகள் கொண்ட 2005லிருந்து உள்ள மாடல்களை பாருங்கள் ஒவ்வொரு வருடத்தைக் காட்டிலும் நம்பகத்தன்மை அதிகரிக்கும்.

### மற்றய சிறந்த விருப்பத் தேர்வுகள்.

Acura RDX
Hyundai Tucson
Mitsubishi Outlander
Kia Sportage ('05-09)
Ford Escape Hybrid
Mercury Mariner Hybrid
Subaru Forester

## நடுத்தரமான மற்றும் பெரிய SUVs

Honda Pilot, போதுமான அளவு இடமுள்ள, நயமான தோற்றமுள்ள மற்றும் எரிபொருள் செலவு சிக்கனமுள்ள SUV கார்தான். SUVயின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட இன்னொரு சிறந்த கார்தான் The Toyota Higlander. சாலையை விட்டு கரடுமுரடான மேடுபள்ளங்களிலும் செல்லக்கூடிய 4 Runner truck வகை வாகனம் தான் இது.

### மற்றய சிறந்த விருப்பத் தேர்வுகள்.

Toyota 4Runner
Toyota Highlander
Lexus RX
Toyota Land Cruiser
Acura MDX
Infiniti FX35
Infiniti QX4
Hyundai Santa Fe (V6)
Lexus GX (except '08-09)
Subaru Tribeca

## சிறிய வேன்கள் / Mini Vans

Honda Odyssey தாராளமான இடவசதி உள்ள மற்றும் சுகமான இதத்தை தரக்கூடிய ஓட்டிச் செல்வதற்கு எப்போதும் எளிதாகவும் மற்றும் லாகவமாகவும் இருக்கும் சிறியவேன் தான். Odyssey 2003க்கு பின்பு உள்ள வகைகளை பாருங்கள். Sienna சக்தி வாய்ந்தது சற்று குறைவான இதம் உள்ளது.

### மற்றய சிறந்த விருப்பத் தேர்வுகள்.

Toyota Sienna

## Pickup Trucks அதிக ஆட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள்

ஒரு கார் போல ஆட்களையும் மற்றும் ஒரு pickup truck போல சாமான்களையும் ஏற்றிச் செல்ல Ridge line மிக சிறந்த தேர்வு. Cabinக்குள் எளிதாக சென்றுவர முடியும். என்ஜின் மென்மையாகவும், சீராகவும் இயங்கும் ஒரு பாரம்பரியமிக்க Pickup Truck உங்களுக்கு வேண்டுமெனில் Tacomaவை தேர்ந்தெடுங்கள்.

### மற்றய சிறந்த விருப்பத் தேர்வுகள்.

Toyota Tacoma V6 ('05-09)
Subaru Baja

## மோசமானதிலும் மோசமான வாகனம்.

2000 முதல் 2009வது மாடல்களின் மத்தியில் சராசரிக்கும் கீழே மிக மோசமான தரத்துடன் பலவருடங்கள் இந்த வாகனங்கள் இருந்திருக்கின்றன. எழுத்து வரிசைப்படி அவை பட்டியலிடப்பட்டுள்ளன.

Audi A6 Allroad
Cadillac SRX
Cadillac STS (V8)
Chevrolet Aveo
Chevrolet Blazer
Chevrolet Colorado (4WD)
Chevrolet Monte Carlo
Chevrolet S-10 Pickup (4WD)
Chevrolet TrailBlazer (V8)
Chevrolet Uplander
Chevrolet Venture
Chrysler Sebring Convertible
Chrysler Town & Country
Dodge Caravan (V6)
Dodge Grand Caravan
GMC Canyon (4WD)
GMC Envoy (V8)
GMC Jimmy
GMC S-15 Sonoma (4WD)
Jeep Commander
Jeep Wrangler (four-door)
Kia Sedona
Lincoln Aviator
Mercedes-Benz R-Class
Mini Cooper Convertible
Oldsmobile Silhouette
Pontiac Montana, Montana SV6
Saturn Relay
Volkswagen Cabrio
Volkswagen New Beetle (turbo)
Volkswagen Passat (V6, FWD)
Volkswagen Touareg
Volvo XC90 (6-cyl.)

இதன் மூல ஆக்கத்தினை Consumer Reports Magazine இணையத்தளத்தில் சென்றும் பார்வையிடமுடியும்.

இணைய முகவரி: http://www.consumerreports.org/cro/cars/used-cars/cr-recommended/best-and-worst-used-cars/overview/best-and-worst-used-cars.htm

atheesan.s@thaiveedu.com

■ ■ ■


**SP Electronics**

**TV, VCR, DVD, Players-Telephone-Computers**

உங்களுக்குத்தேவையான அனைத்துத் தமிழ் வானொலிகளுக்கும், திருத்த வேலைகளுக்கும்

**416 264 6400**

2641 Eglinton Avenue East ( Brimley & Eglinton)


$ 103,000
Lawrence/Midland



$109,900
Ellesmere/Kennedy


$119,000
Lawrence/Midland


$129,900
Markham/Eglinton


$132,900
Midland/Eglinton


$143,900
Morningside/Ellesmere


$210,000
Orton Park/Ellsmere


$239,000
Huntingwood/Kennedy


$249,900
Finch/Warden


$259,900
Warden/sheppard


$332,777
Markham/Eglinton


$265,000
Kennedy/Ellesmere


$327,500
Markham/Lawrence


$329,000
Midland/Lawrence


$329,900
Ellesmere/Scar.Golf Club


$338,000
Scar.Golf/Lawrence


$339,900
Mccowan/Lawrence


$339,900
Brimley/Lawrence


$339,999
Markham/Lawrence


$343,900
Ellesmere/Orton Park


$375,000
Markham/Ellesmere


$379,000
Ellesmere/Scar.Golf


$379,000
Mccowan/Lawrence


$324,900
Sheppard/Meadowale


$339,900
Sheppard/Meadowale


$349,900
Midland/Lawrence


$409,900
Middlefield/Denison


$469,000
9th Line/N of 407


$489,900
Bur Oak/Markham


$499,000
Markham/16th Ave




westvillage

Book your Units at Pre-Construction Price

$3000 முதல் 5000 வரை தள்ளுபடி பெறுங்கள்

HomeLife / GTA Realty Inc.
Brokerage
416 321 6969

அழையுங்கள்
**Kathir**
**416 856 6900**
**S Kathirgamanathan P. Eng.**
**Sales Representative**



# Franchise வியாபாரம்


அலன் சிவசம்பு
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

Franchise என்பது Franchisorற்கும், Franchisee இற்கு இடையில் எழுத்து மூலம் ஏற்றுக்கொள்ளப்படும் ஒப்பந்தம் ஆகும். Franchisor என்பவர் ஒரு வியாபாரம் உருவாக்கி பின்பு அதனை இன்னொருவருக்கு (Franchisee) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வியாபார ஒப்பந்தம் செய்வதாகும்.

அந்த ஒப்பந்தத்தின்படி Franchisorன் பொருட்களோ, அல்லது சேவைகளையே விளம்பரப் படுத்தல்.

அதே நேரத்தில் Franchisee, Franchisorன் பொருட்களையோ, சேவைகளையோ தரமாக வைத்திருத்தல்.

Frachisorற்காக Franchise fee அத்துடன் தொடர்ந்து royalty feeஐ ஒரு தவணை முறையில் செலுத்துதல் போன்றவற்றைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

Franchise கூடுதலாக எல்லாவிதமான வியாபாரங்களிலும் உண்டு. இந்த வியாபார அமைப்பில் கடைவில் ஒரு millionற்கும் மேலான மக்கள் தொழில்புரிகின்றனர். அதே நேரத்தில் Franchisor மற்றவர்களின் பணத்தின் உதவிகொண்டு தங்களது பொருட்களையும், சேவைகளையும் பல இடங்களுக்கு விஸ்தரிக்க உதவுகின்றது. இருந்தாலும் எல்லா frachisorம் தங்களது வியாபாரத்தை இன்னொருவருக்கு விற்பது இல்லை உதாரணமாக starbucks என்னும் Coffee Place, ஒரு தனிப்பட்ட ஒருவரின் கீழேயே நடத்தப்படுகின்றது.

ஆகவே ஒருவர் Franchise ஒன்று வாங்கும் முன்பு Franchiseல் அனுபவம் உள்ள lawyers, accountants உடன் தொடர்பு கொண்டு, ஒரு Franchiseத் தெரிவு செய்தல் வேண்டும். அத்துடன் ஒரு Franchiseஐத் தெரிவு செய்யும் முன்பு,

- Franchise Fee அந்தக் குறிப்பிட்ட வியாபாரத்திற்கு ஏற்றதா என அறிதல் வேண்டும்.
- Royalty fee அந்தக் குறிப்பிட்ட வியாபாரத்திற்கு ஏற்றதா என அறிதல் வேண்டும்.
- Agreementஇனுள் உள்ளடக்கப்பட்ட சில நிபந்தனைகளை மாற்ற முடியுமா, முடியாதா என அறிதல் வேண்டும்.
- உங்களது வியாபாரத்திற்காகத் தெரிவு செய்யப்பட்ட territory எந்த அளவில் பாதுகாக்கப்பட்டுள்ளது. அத்துடன் exclusive territory என ஒதுக்கப்பட்டால் எவ்வளவு மட்டத்தில் அந்தச் சலுகை நடைமுறைக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.
- வியாபாரம் Internet வழியாகவோ அல்து Mail மூலம் பெறப்பட்டால் Franchiseeற்கும் அதில் லாபம் உள்ளதா என அறிதல் வேண்டும்.
- Marketing தேவைக்காக அறவிடப்படும் பணம் எங்களது locationற்கு எவ்வாறு பயன்படும்.
- Franchisorன் Trade mark என்ன நிலையில் உள்ளது.
- உங்களது வியாபார இடத்தின் குத்தகை யாரது பொறுப்பில் எடுக்கப்படும்.
- வியாபார இடம் கட்டப்பட வேண்டுமானால் அதன் பொறுப்பு எடுப்பவரை எவரால் தெரிவு தெய்தல் வேண்டும்.
- Deposit, Lawyer's இன் trust accountல் வைக்க முடியுமா?
- வாங்கப்பட்ட Franchise எவ்வளவு சுலமாக இன்னொருபவருக்கு விற்பதோ அல்லது agreementஐ நீடிப்பதற்கான நிபத்தனைகள்.
- Franchise அமெரிக்காவைத் தளமாக வைத்திருந்தால் Canadaவில் நடத்துவதற்கான நிபந்தனைகள் அங்கீகரிக்கப்படுமா?

இப்படியாக பல கேள்விகளுக்கு பதில்கள் அறிந்த பின்பு ஒரு Franchise உடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும். ஆகவே மேலே குறிப்பிட்டபடி Franchiseல் தேர்ச்சி பெற்ற Lawyer's, Accountant'sன் உடன் தொடர்பு ஏற்படுத்தப்படுவது அவசியமாகும்.

அத்துடன் despost agreement ஒவ்வொரு provinceற்கும் வித்தியாசப்படும். ஆகவே deposit money கொடுக்குமுன்பு கவனத்திற்கொள்ள வேண்டியவை.

- எவ்வளவு deposit கொடுத்தல் வேண்டும்?
- Franchiseஐ வாங்காவிட்டால், depositஐத் திரும்பப் பெறமுடியுமா?
- பெறமுடியும் என்றால் எவ்வளவு காலம் எடுக்கும்?

அதுமட்டும் அல்லது சில Franchisors, Franchise உடன் செலவழித்த நேரத்திற்குக் குறிப்பிட்ட பணத்தை அறவிடலாம். ஆகவே இவற்றை எல்லாம் அறிந்து depositஐச் செலுத்துதல் நல்லது. அத்துடன் Franchise fee us Dollar அல்லது Canadian dollarல் குறிக்கப்பட்டுள்ளதா என அறிதல் நல்லது.

ஒருவரின் Franchiseஐ வாங்கி நடத்தும் போது royalty கிழமை அல்லது மாதத் தவணையில் செலுத்துதல் வேண்டும். அப்படியான நிலையில் Frachisee fee பணத்தைச் செலுத்துவதற்குத் தவறினால் அல்லது தாமதம் அடைந்தால் Franchisor, Franchisee உடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய முடியும். அதுமட்டுமல்லாது Franchisor அமெரிக்காவில் இருந்து வியாபாரம் செய்வதானால் Canadian Franchisee, 15% with holding taxஐ அவர்களது royalty fee அல்லது மற்றைய feeஇன் தொகையில் பிடித்து வைத்துக்கொண்டு தான் மிகுதியைச் செலுத்துதல் வேண்டும்.

அடுத்தாக Franchisee, Limited Liability அல்லது Corporation என அழைக்கப்படும். ஆகவே Share holders, Officers அல்லது directors தனிப்பட்ட முறையில், வியாபாரத்தில் ஏற்படும் கடன் தோல்விகளுக்கு பொறுப்பு ஏற்கத் தேவை இல்லை.

மேலே குறிப்பிட்ட தகவல்கள், ஒருவர் Franchise வாங்குவதாயின் கவனிக்கவேண்டிய பிரயோசனப்படும் தகவல்கள்.

alan.sivasambu@thaiveedu.com

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

ஆயுட்காப்புறுதி
For all your Insurance needs...
Call: 416•522•3314
Sockalingam Prabaharan
Life Insurance Broker
• வயோதிபர்களுக்கான காப்புறுதி
• ஆயுட் காப்புறுதி (Life Insurance)
• கொடிய நோய்களுக்கான காப்புறுதி
• குழந்தைகளுக்கான
உயர் கல்வி சேமிப்புத் திட்டம் RESP
20% - 40% அரச மானியத்துடன்
15% அதிக போனஸ்
• Disability Insurance
• Non Medical Insurance
• RRSP & Investments

$100,000. காப்புறுதிக்கு
$11.97
மாதாந்தக் கட்டணம்
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES
LILAND INSURANCE INC.
759 Warden Ave. Toronto, ON M1L 4B5

INPROBUS REALTY CORPORATION
Specialty Investment, Property and Business Brokers
Men's clothing store
For sale
22yrs in Business
---
Office space for lease
close to Subway.
Good location for Mississauga, Etobicoke and Down town clients.
Inprobus Realty Corporation
Call : Alan 647-504-2536




**Uthayan Nadarajah**
Broker

Bus: 416•286•3993
Fax: 416•286•3348
Dir: 416•727•9945
unadarajah@trebnet.com

RE/MAX Rouge River Realty Ltd., Brokerage
6758 Kingston Rd. Toronto ON. M1B 1G8
Each office independently owned and operated



ஒரு புதிய தொடக்கத்தின் முதற் புள்ளி...



**$69,000.**
**Lawrance Ave./ Victoria Park**
Well Established 'Daisy Mart' Convenience Store In A Busy Inter Section Of Lawrence & Victoria Park. Weekly Sale $7000.00 To $8000.00. Low Rent



**$338,888.**
**Danforth Rd.**
Store with Apartment
2400 Sq Ft.



**$549,900.**
**Southampton, Ontario**
Business + Property. Esso Self-Serve. Convenient Store . Renovated Restaurant With 30 Seats And 4 Apartments



**$799,000.**
**Port Elgin, Ontario**
Three-In-One With Property. Coffee Time Franchise With Drive-ThroughSelf Serve Independent Gas Station Convenient Store



**$89,000.**
**King/ Dufferin**
Profitable Business With Low Rent. Serve The Downtown Clients With Delighted Pizza And Yor Own Choice Of Menu



**$499,000.**
**Tiverton, Ontario**
Ideal Mini Plaza For A Small Investor!!! With high volume Daisy Mart . weekly sale $15,000. + Rental Income from Doctors Office ($1,000.00/M) Employment Agency ($1,000.00/M)



**$1,200,000.**
**Niagrafalls, Ontario**

Esso

**$648, 000.**
**Belville, Ontario**
Gas over 3 million litre sale, Convenient Store sale weekly over $10,000., 2 Acre Land,

JayaCS • 416 275 0070

# JRS COLLEGE

OUR COMMITMENT IS QUALITY TRAINING

## Scarborough Campus

**English Class (Business Communication)**
Starts on Apr 18th 2010 @ 1.00 PM (Sunday)

**Cashier Training**
Starts on May 2nd @ 9.00 AM (Sunday)

**Food Handler Training**

**FREE COMPUTER BASIC CLASS**
Etobicoke Campus Starts on Mar 27th @ 10:00 AM

**Are you unemployed or laid off ?**

**Please call for more Info.**
**(416) 292-2455**

✱ Some Courses are not available in Etobicoke

**DIPLOMA PROGRAMS**

**Office Assistant**




**Computerized Accounting**



**Accounting and Payroll Administration**



**Health Office Administrator (HOA)**



**CERTIFICATE COURSES**

- MS Office
- Business Communication
- Payroll
- QuickBooks
- Accpac
- Bank Teller
- Cahier
- Food handling
- Tax Class
- Simply Accounting

**SCARBOROUGH CAMPUS**
(Midland & Finch)
PH 16-4168 Finch Ave East
Scarborough, ON M1S 5H6
☏: 416-292-2455

**ETOBICOKE CAMPUS**
(Kipling & Dundas)
300-5359 Dundas St West
Etobicoke, ON M9B 1B1
☏: 416-207-9975

# அன்னை வடிவினில்...



உதயணன்

ஒரு மனிதனின் முதல் உறவு ஒரு பெண்ணின் கருவறையில் உண்டாகின்றது. அவளுடைய உதிரத்தை உண்டு வளர்கின்றது. அவளுடைய உயிரின் உயிராய்ப் பிறக்கின்றது. அந்த அன்னையின் மடியே அந்தக் குழந்தையின் முதல் தொட்டில்; அந்தத் தொட்டிலே அதன் முதல் உலகம். பெண்மையின் அடையாளம் தாய்மை. தாய்மைக்கு அர்த்தம் அன்பு. அன்பின் ஆபரணம் பொறுமை. பொறுமையின் புகலிடம் அவள்தான்; அவளேதான்!

கடவுள், தான் எல்லா வீடுகளிலும் ஏககாலத்தில் இருக்க முடியாது என்பதால்தான் தாயைப் படைத்தாராம். தனது படைப்புகளைத் தானே பக்கத்தில் இருந்து பராமரிக்க வேண்டும் என்ற பாசத்தில்தான், தானே தாயாக வந்தாராம். தாயில் சிறந்ததொரு கோயிலும் இல்லை என்ற தத்துவத்தைத் தரணிக்குத் தந்தாராம்.

அது சரி, கடவுள் எப்படி இருப்பார்? சிலர் மனித உருவத்தில் வைத்து வணங்குகிறார்கள். சிலர் கல்லை நிறுத்தி வைத்துக் கும்பிடுகிறார்கள். மரம், மட்டை, கடல், கங்கை, ஆகாயம், இயற்கை என்றெல்லாம் சொல்லுகிறார்கள். கடவுளே நான்தான் என்று கண்ணை உருட்டி, காவி கட்டி, நெஞ்சு தட்டிக் கதை சொன்ன சாமியார்கள் சாயம் வெளுத்துச் சங்கடப்பட்டு நிற்கிறார்கள். உண்மையிலேயே கடவுள் எப்படி இருப்பார்? ஒரு நாள் கடவுள் வந்து நமது வீட்டுக் கதவைத்தட்டி, "நான்தானப்பா கடவுள் வந்திருக்கிறேன்" என்று சொன்னால், நாம் என்ன செய்வோம்? பூமியில் நடைபெறுகின்ற பித்தலாட்டங்களினாலும் ஆள் மாறாட்டங்களினாலும் (ஆ)சாமி வேடங்களினாலும் குழம்பிய குட்டையாக இருக்கிற நாம், "ஸ்வாமி, தங்களிடம் ஐ.டி... ஏதாவது அடையாள அட்டை... அப்படி இப்படி ஏதாவது இருக்கிறதா?" என்று தயங்கித் தயங்கிக் கேட்டு விடுவோமோ என்று பயமாக இருக்கிறது. ஏனென்றால் "கடவுளைக் கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்". அன்னையிடம் அடையாள அட்டை கேட்கமாட்டோம். ஏனென்றால், நாமே அவளின் அடையாளம். அல்லது, அவள்தான் நமது அடையாளமோ? உண்மையை அவளுடைய இரத்தம் பேசும். அவள் நம்மை வளர்த்த பாசம் பேசும். அவள் பாடிய தாலாட்டுப் பேசும். தாய்ப்பாலின் தத்துவம் பேசும். நமது அனைவரது அடையாளமும் நமது அன்னையர்தாம். 'தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை' என்று சொல்வதில்லையா?

பாலூட்டி வளர்க்கும் உயிரினங்களில் நமது மானிடத்தாய் மேலானவள்; உயர்ந்தவள்; உயிரினங்களின் உலகத்து உச்சியில் மிளிரும் உன்னதமானவள். ஏனைய உயிரினங்கள் மண்ணில் பிறந்தவுடன் தட்டுத் தடுமாறி எழுந்து நின்று, தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்று தாய்மடியைத் தேடிக் கண்டுபிடித்துப் பால் குடிக்கக் கிட்டத்தட்ட இரண்டு மணித்தியாலங்கள் ஆகலாம் என்றொரு கணிப்புண்டு. பிறந்த உடனேயே அள்ளி அணைத்து உச்சி முகர்ந்து தனது மடிமீது வைத்துப் பாலமுது ஊட்டுபவள் நமது தாய்தான். மனித இனத்துக்கு தாய்ப்பாலைப் போன்று தூய்மையானதும் சக்தி வாய்ந்ததுமான இயற்கை உணவு உலகத்தில் எதுவுமே இல்லை. தாய்ப்பால் குழந்தைகளுக்கு மனத் தெளிவை ஏற்படுத்திப் பதற்றம், மன அழுத்தம் என்பவற்றை நீக்குகின்றது. நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கின்றது. அறிவு வளர்ச்சிக்கு உதவுகின்றது. ஒவ்வாமை ஏற்படாமல் தடுக்கின்றது. அத்துடன், பாலூட்டும் போது தாய்க்கும் குழந்தைக்கும் இடையே ஏற்படும் ஸ்பரிசம் என்னும் 'தொடுதல் உறவு'க்கு நிகரானது எந்த உலகத்திலும் எந்த இனத்திலும் எதுவுமே இல்லை என்பது ஆய்வாளர்களின் கருத்து மட்டுமல்ல; ஆன்மீகவாதிகளின் ஆழமான அனுபவமும் அதுதான். பெற்றவள் பிள்ளைக்குத் தரும் முத்தத்துக்கு ஈடான அருமருந்து உலகத்தில் எங்கேயுமே கிடையாது என்று ஓர் அறிஞர் சொன்னார்.

பெண் தெய்வங்களைத் தாயாக அல்லது தாய்த் தெய்வமாக வழிபடும் வழக்கம் கி.மு. 250 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்திருக்கலாம் என்றொரு கருத்துண்டு. நாங்கள் வழிபடும் தெய்வங்களை இன்றைக்கும் அன்னை வடிவிலும் காண்கிறோம். அன்னை பராசக்தி, துர்க்கையம்மன், வேளாங்கண்ணி மாதா ஆகியவற்றை எடுத்துக் காட்டாகச் சொல்லலாம். பெற்ற தாயை மதிக்கும் தத்துவம் ஆதியில் எகிப்தில் ஐஸிஸ் (Isis) என்ற பெண் தெய்வத்தில் இருந்து ஆரம்பமானது என்று சொல்கிறார்கள். ஐஸிஸ் என்றால் 'அரியணைக்கு உரியவள்' என்று பொருள். இவள் மனித உடலும் எருதின் தலையையும் உடையவள் என்ற ஓர் உருவகம் உண்டு. இவள் மண் தெய்வத்துக்கும் வான் பெண் தெய்வத்துக்கும் பிறந்தவள் என்றும், இன்னும் பல உறவுமுறைகளும் சொல்லப்படுகின்றன. இவளே அன்புக்கு, வித்தைக்கு, செழிப்புக்கு, நோய் ஆற்றுதலுக்கு எல்லாம் அதிபதி என்றும் கருதப்பட்டாள்.

> "ஆண்டவரே!
>
> இத்தகைய தவறுகளை இவர்கள்
>
> பணத்துக்கு ஆசைப்பட்டுத்
>
> தெரிந்தேதான் செய்கிறார்கள்.
>
> ஆனபடியால் ஆண்டவரே,
>
> தாய் தந்தையரை வதைக்கும் இந்தப் பாவிகளைத்
>
> தயவு செய்து மறந்துபோயும் மன்னிக்காதீர்!"

ஒரு காலகட்டத்தில் ஐஸிஸ் விழாவை உரோமானியரும் கொண்டாடினார்கள். ஒரு முக்கிய போரை நினைவுகூர்வதற்காகவும் வசந்தத்தின் வருகையை வரவேற்பதற்காகவும் ஐஸிஸுக்கு விழா எடுத்தார்கள். பண்டைய கிரேக்கரும் உரோமரும் ரேயா (Rhea) என்னும் தெய்வங்களுக்கெல்லாம் தாய் எனக் கருதப்பட்ட தாய்த் தெய்வத்தை வழிபட்ட வரலாறும் இருக்கின்றது. உரோமர் ஒரு காலத்தில் சைபெலி (Cybele) என்னும் தாய்த் தெய்வத்தை வழிபட்டதாகவும் சொல்லப்படுகின்றது. இப்படியாகத்தான் தாயை மதிக்கும் துதிக்கும் வழக்கம் மண்ணுலகில் ஆரம்பமானது.

தாய்மையை மதித்து விடுமுறை வழங்கும் வழக்கம் பின்னர் ஐரோப்பாவில் தொடங்கியது. பிரித்தானியாவில், கிராமங்களிலும் சிறு நகரங்களிலும் வாழ்ந்த மக்கள் தொழில் நிமித்தம் தலைநகரத்துக்கும் பிற வளர்ச்சியடைந்த நகரங்களுக்கும் சென்று வாழ நேர்ந்தது. அத்தகைய சூழ்நிலையில், 16ஆம் நூற்றாண்டளவில் சில சமயங்களில் கிறீஸ்தவர்கள் தங்கள் தாயகத் தேவாலயத்துக்குச் செல்வதும், அந்தச் சந்தர்ப்பத்தில் தாய்மார்களும் பிள்ளைகளும் ஒருவரையொருவர் சந்தித்து அந்நியோன்னியமாக அணைத்து உச்சிமுகர்ந்து உறவாடுவதும் உள்ளங்களை உருக்கும் நிகழ்வாக இருந்தது. அதைத் தொடர்ந்து மார்ச், ஏப்பிரல் மாதங்களில் "Mothering Sunday" என்ற தாய்மைத் திருநாள் இங்கிலாந்தில் ஆரம்பமாகியது. இந்த ஞாயிற்றுக் கிழமையிலிருந்து சரியாக மூன்றாவது ஞாயிறு யேசுநாதரின் உயிர்த்தெழுந்த புனித ஞாயிறு (Easter Sunday) அமையும்.

1870இல் வட அமெரிக்காவில் ஜூலியா வார்டு ஹோவே (Julia Ward Howe) என்னும் பெண்மணி அன்னையர் தினத்தை அறிமுகம் செய்தார். போர்க்களங்களில் ஒரு தாயின் பிள்ளைகளை இன்னொரு தாயின் பிள்ளைகள் கொன்று குவிப்பதைப் பார்த்ததால் ஏற்பட்ட வேதனையாலும் விரக்தியாலும் சமாதான உணர்வை மனிதரிடையே உண்டாக்க எண்ணி இதனைத் தொடங்கினார். வட அமெரிக்காவில் பதினெட்டு நகரங்களில் இருந்த பெண்களின் அமைப்புகள் பத்து வருடங்களுக்கு மேலாக இத்தினத்தைக் கொண்டாடின. இந்தக் கொண்டாட்டங்களுக்கு ஜூலியா வார்டு ஹோவே அம்மையாரே நிதியுதவி வழங்கி வந்தார். அன்னாருடைய நிதியுதவி நின்றபோது இந்தக் கொண்டாட்டங்களும் நின்று போயின. இதுவே இன்றைய அன்னையர் தினத்துக்கான அத்திவாரம்.

அமெரிக்காவில் மேற்கு வேர்ஜினியா மாநிலத்தில் கிராப்டன் என்ற கிராமத்தில் வாழ்ந்த மரியா றீவ்ஸ் ஜார்விஸ் (Maria Reeves Jarvis) என்னும் சமூக சேவகி, ஜூலியா வார்டு ஹோவே அம்மையாரின் சுவடுகளில் அடி எடுத்து வைத்தார். சமூகத்தின் உயர்வுக்காகவும் சமாதானத்துக்காகவும் தனது வாழ்நாட்களை அர்ப்பணம் செய்த இவர் 1904இல் காலமானார். இவருக்கு அன்னா மரியா ஜார்விஸ் (Anna Maria Jarvis) என்ற பெயரில் ஒரு மகள் இருந்தார். தன் தாயாரில் அளப்பரிய அன்பையும் பாசத்தையும் கொண்டிருந்த அன்னா மரியா ஜார்விஸ், விவாகம் செய்யாமலேயே தாயாரின் நினைவுகளோடு வாழ்ந்து வந்தார். தாயாரின் நினைவுகளை நெஞ்சிலிருந்து நீக்க முடியாத சூழ்நிலையில், 1908ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மேல் வேர்ஜினியாவின் கிராப்டன் கிராமத்து அண்ட்ரூஸ் மெதடிஸ்ட் தேவாலயத்தில் தன் தாயாரின் நினைவாக ஒரு சிறப்பு வழிபாட்டை நடத்தினார். அன்னையின் அன்பின் ஆழத்தையும் அன்னாரின் நெஞ்சார்ந்த நேசத்தையும் போற்றிப் புகழ்ந்து மனம் நிறைந்த நன்றியுடன் இறைவழிபாடு நடாத்திய முதலாவது பெண்மணி அன்னா மரியா ஜார்விஸ்தான். அந்த வழிபாடுதான் முதலாவது அன்னையர் தினக் கொண்டாட்டம் என்று வரலாறு சொல்கின்றது. அந்த வழிபாட்டில் 407 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கலந்துகொண்ட அத்தனை தாய்மார்களுக்கும், தன் தாயாருக்கு மிகவும் பிடித்தமான கார்னேஷன் மலர்களை ஆளுக்கு இரண்டிரண்டு கொடுத்துக் கௌரவித்தார். அன்றிலிருந்து, இறையடி சேர்ந்த அன்னையரை மதிப்பதற்கு வெள்ளை நிறக் கார்னேஷன் மலர்களை அவர்களுடைய கல்லறைகளில் வைப்பதும், இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கும் அன்னையருக்குச் செந்நிற கார்னேஷன் மலர்களை அன்பளிப்புச் செய்து மரியாதை தருவதுமான ஒரு சம்பிரதாயம் ஆரம்பமாகியது.

சமூகத் தொண்டுக்காகவே வாழ்ந்து மறைந்த தாயாரின் தடத்தில் நடந்து பழகியவர் அன்னா மரியா ஜார்விஸ். ஒவ்வொரு குழந்தையையும் பெறும்போது, தமது உடலையும் உதிரத்தையும் ஒரு பொருட்டாக நினையாமல் செத்துப் பிழைக்கும் அன்னையரை – அவர்கள் உயிருடன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் – அனைவரும் ஒரு நாளாவது மனத்தில் இருத்தி மதித்து மரியாதை செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவருடைய மனதில் அழுத்தமாகப் பதிந்தது. அதனால் அவர் தனது பாடசாலை ஆசிரியர் தொழிலையும் கைவிட்டுவிட்டு, தனது நண்பர்கள், அரச முதல்வர்கள், வர்த்தகத் தலைவர்கள், பெண்களின் அமைப்புகள், கிறீஸ்தவ இளைஞர் இயக்கங்கள், சமூகநல அமைப்புகள் ஆகியவற்றை அன்னையர் தினத்தைக் கொண்டாட ஆவன செய்யுமாறு கேட்டு வற்புறுத்திக் கொண்டேயிருந்தார். அவரது விடா முயற்சியின் பலனாக, முதலாவது அன்னையர் தினம் 1910இல் மேல் வேர்ஜீனியா கவர்னரால் பிரகடனம் செய்யப்பட்டது. 1911 அளவில் அநேகமாக அமெரிக்காவின் அனைத்து மாநிலங்களும் அன்னையர் தினத்தை கடைப்பிடிக்கத் தொடங்கின. நாளடைவில் மெக்சிக்கோ, கனடா, சீனா, ஜப்பான், தென் அமெரிக்கா, ஆபிரிக்கா ஆகியனவும் அன்னையர் தினத்தைக் கொண்டாட ஆரம்பித்தன. அன்னையர் தினத்தை அர்த்தமுள்ளதாகவும் மதிப்புள்ளதாகவும் கொண்டாட வேண்டும் என்ற எண்ணத்தில் 1912 டிசம்பர் 12இல் சர்வதேச அன்னையர் தின இயக்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. 1914ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் வுட்றோ வில்சன் வருடம்தோறும் மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையை அதிகாரபூர்வமான அன்னையர் தினமாகவும், அந்த நாளை விடுமுறை தினமாகவும் பிரகடனம் செய்தார்.

முதலாவது அதிகாரபூர்வ அன்னையர் தின அறிவித்தலுக்கு ஒன்பது ஆண்டுகள் கழித்து, அன்னையர் தினம் 'வணிகவழி'யில் வழுக்கி விழுந்தது. மலர்கள், ஆபரணங்கள், வாழ்த்து அட்டைகள், பல்வேறு விதமான பரிசுப் பொருட்கள் சந்தைகளில் குவிந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்பின. அன்னா மரியா ஜார்விஸின் படத்தையே கொடிகளிலும் சங்கிலிப் பதக்கங்களிலும் பொறித்து விற்பனை செய்தார்கள். இதனைப் பொறுக்க முடியாத அன்னா மரியா ஜார்விஸ் நீதிமன்றப் படிகளில் ஏறினார். கொடி விற்பனையை எதிர்த்து வழக்குத் தொடர்ந்தார். கார்னேஷன் மலர்க் கடை ஒன்றில் குழப்பம் விளைவித்ததாக ஒரு முறை கைது செய்யப்பட்டார். பாரம்பரியச் சொத்து முழுவதையும் செலவழித்து வணிக வழக்கத்தை எதிர்த்துப் போராடினார். ஆனாலும் வணிக உலகின் வளர்ச்சி வேகத்தையும் பண மோகத்தையும் தடுத்து நிறுத்த முடியாமல் சோர்ந்து போனார். "ஒரு நியாயமான, நேர்மையான, உள்ள உணர்வு பூர்வமான, உன்னதமான செயலை அரித்துத் தின்னும் கறையான்களின் கள்வர்களின் கொள்ளைக் காரர்களின் கருமித்தனத்தை அடியோடு அழிக்க என்ன செய்யலாம்" என்ற ஏக்கத்துடன், பார்வையற்றவராக, வறுமைக்கு ஆட்பட்டவராக, ஆதரவற்றவராக 1948இல் தமது 84ஆவது வயதில் காலமானார். "உலகத்தில் ஒவ்வொரு வீட்டிலும் அன்னையைப் போற்றுகின்ற வாழ்த்துகின்ற மகிழ்விக்கின்ற புனித நாளாக அன்னையர் தினம் கொண்டாடப்பட வேண்டும்" என்ற கோரிக்கையுடன் கண்களை மூடினார். அப்பொழுது உலகெங்கணும் 40க்கு மேற்பட்ட நாடுகள் அன்னையர் தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருந்தன.

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த முதலாவது அமெரிக்க ஜனாதிபதியான ஜார்ஜ் வாஷிங்டன், தாயைப்பற்றிக் குறிப்பிடும்போது இவ்வாறு சொன்னார்: "நான் கண்ட பெண்கள் அனைவரிலும் அழகான பெண்மணி என் தாயே. நான் இன்று எவ்வாறு இருக்கிறேனோ, அதற்காக நான் எனது தாய்க்குக் கடமைப்பட்டுள்ளேன். தாயிடமிருந்து நான் பெற்ற புத்தி, கல்வி, ஒழுக்கம் ஆகிய செல்வங்களினாலேயே வாழ்வில் வெற்றி பெற்றேன்" என்றார்.

ஆனால் இன்று - வணிகரீதியில் அமெரிக்காவில் அன்னையர் தினம் மிகவும் வெற்றிபெற்ற நிகழ்ச்சிகளில் ஒன்றாக விளங்கி வருகின்றது. அங்கே உணவகங்களில் இரவு விருந்துக்கு மிகவும் பிரபலமான நாளாக இந்தத் தினம் தொடர்ந்து இருக்கின்றது. அமெரிக்கர்கள் அன்னையர் தினக் கொண்டாட்டத்தின்போது மலர்களுக்கு 2.6 பில்லியன் டொலர்களையும் பரிசுப் பொருட்களுக்கு 1.53 பில்லியன்களை-

59ம் பக்கம் பார்க்க...

யும் வாழ்த்து மடல்கள் போன்றவற்றுக்கு 68 மில்லியன்களையும் செலவு செய்கிறார்கள் என்று ஒரு வணிக ஆய்வு நிறுவனக் கணிப்புக் கூறுகின்றது.

சில உணர்வுகளுக்கும் இயல்பான குணங்களுக்கும் அரச ஆணைகள் தேவையில்லை. தாய்க்குத் தொண்டு செய்வதற்கும் ஒரு சட்டம் கொண்டுவர வேண்டுமா, என்ன? சந்நியாசிகள்கூட தாயை வணங்கும் பண்புடையவர்கள். கி.பி. 11ஆம் நூற்றாண்டில், சோழர் காலத்தில் பட்டினத்தார் என்றும் பட்டினத்தடிகள் என்றும் அழைக்கப்பட்ட ஒரு துறவி இருந்தார். அவருடைய இயற்பெயர் திருவெண்காடர். காவிரிப்பூம் பட்டினத்தில் பெருமளவில் கடல் வாணிபம் புரிந்து மிகுந்த செல்வந்தராக விளங்கியவர். ஒருநாள் அவருடைய தெய்வமகன் "காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே!" என்று எழுதப்பட்ட ஓர் ஓலையைக் கொடுத்துவிட்டு மறைந்து போனார். அதிலிருந்து பட்டினத்தார் குடும்ப வாழ்வைத் துறந்தார். பொருளின் நிலையாமையை அறிந்தார். உறவுகளின் பந்தபாசம் நிலையற்றது என உணர்ந்தார். ஈசனில் ஈர்ப்புண்டு துறவறம் பூண்டு, கட்டிய கோவணத்துடன் வீட்டைவிட்டு வெளியேறினார். அவர் பல தெய்வத் தலங்களுக்குச் சென்று பல பாடல்களைப் பாடிய போதிலும், பெண்ணையும் பெண்ணுறவையும் பெண்ணுடலையும் எவ்வளவுக்கு நிந்தித்துப் பாட முடியுமோ, அவ்வளவுக்கு நிந்தித்துப் பாடிய பாடல்கள் பல உண்டு. அப்படிப்பட்ட பட்டினத்தாருக்கு ஒருநாள் அவருடைய தாயார் இறந்த செய்தி வந்தது. அப்பொழுது அவருக்குத் தன் தாயார் ஒரு பெண்ணாகத் தெரியவில்லை. தாயாக மட்டுமே தெரிந்தார். தாயார் வடிவில் வந்த தெய்வமாகத் தெரிந்தார். தாயார் இறந்த இடத்துக்கு ஓடிச் சென்று ஆகவேண்டிய கருமங்களைச் செய்தபோது அவர் பாடிய பாடல்களில் இதுவுமொன்று.

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே என அழைத்த வாய்க்கு

ஆகவே, ஒரு துறவிக்கும் தெரியும் தாயின் பெருமை. எந்தப் பிறவியும் அறியும் அன்னையின் அருமை.

இங்கே காணப்படும் படத்தில் ஒரு தாய் கொட்டும் மழையில் தான் சொட்டச் சொட்ட நனைந்து கொண்டே பையனுக்குக் குடை பிடித்துப் பத்திரமாக அழைத்துச் செல்கிறார். (படம்:http://amazingphotos4all.Blogspot. com)



உலகம் முழுவதிலும் உயர்ந்த அன்னையர் என்று எட்டுப் பெண்களின் புனிதமான பெயர்கள் இணையத் தளத்தில் பதிவாகியுள்ளன. அவர்களில் ஒருவர் ஆக்னஸ் கோன்ஜா போஜாஜியூ என்ற பெண்மணி. பொதுவாக ஆக்னஸ் என்று அழைக்கப்பட்ட இவர் அல்பேனியா நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட நிக்கல் மற்றும் டிரானா போஜாக்சியு தம்பதியின் கடைசி மகளாக 26.08.1910இல் பிறந்தார். எட்டாவது வயதிலேயே தந்தையை இழந்து, தாயினால் ஒரு ரோமன் கத்தோலிக்கராக வளர்க்கப்பட்ட ஆக்னஸ், தெய்வ நம்பிக்கையிலும் மனித சேவையிலும் மத வழிபாட்டிலும் ஆர்வம் கொண்டு, தனது பதினெட்டாவது வயதில் தனது குடும்பத்தை விட்டு, உலகமே தனது குடும்பம் எனப் புறப்பட்டு ரோமன் கத்தோலிக்க அருட்சகோதரி ஆனார். அன்றிலிருந்து 1997 செப்டம்பர் 5ஆம் திகதியன்று மரணமடையும் வரை தனது உடல், பொருள் ஆவி அனைத்தையும் மக்கள் சேவைக்காகவே அர்ப்பணம் செய்தார். அவர் "மிஷனரீஸ் ஆப் சேரிட்டி" (Missionaries of Charity) என்ற அமைப்பை ஆரம்பித்தார். அது வளர்ந்து கொண்டே வந்து, அவரது மரணத்தின் போது 123 நாடுகளில் 610 தொண்டு நிறுவனங்களை இயக்கிக் கொண்டிருந்தது. இதில் எச்.ஐ.வி / எய்ட்ஸ், தொழு நோய் மற்றும் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நல்வாழ்வு மையங்கள் மற்றும் இல்லங்கள், இலவச உணவு வழங்குமிடங்கள், குழந்தைகள் மற்றும் குடும்பத்தினருக்கான ஆலோசனைத் திட்டங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் பள்ளிக்கூடங்களும் அடங்கும்.

இந்தியக் குடியுரிமை பெற்ற இவர், இந்தியா உட்படப் பல உலக நாடுகளின் பட்டங்களையும் பாராட்டுதல்களையும் விருதுகளையும் பெற்றார். இவரை அமெரிக்காவில், பரவலாகப் புகழப்பட்ட தனிப்பெரும் நபர் என்று 'கேல்லப் போல்' என்ற கருத்துக் கணிப்பு நிறுவனம் தொடர்ந்து கூறிவந்திருக்கிறது. 1999இல் அமெரிக்காவில் நடத்தப்பட்ட மற்றொரு கருத்துக் கணிப்பில் இருபதாம் நூற்றாண்டில் அதிகமாகப் புகழப்பட்ட பெண்மணி எனக் கணிக்கப்பட்டிருக்கிறார். இத்தகைய பெருமையும் புகழும் பெற்ற உலகறிந்த அன்புள்ளம் கொண்ட இந்த அன்னையின் புனிதமான பெயர் – அன்னை தெரேசா!

"மாதா மனமெரிந்தால் வாழாய் ஒரு நாளும்" என்று சொல்லி நொந்தவளும் மனம் வெந்தவளும் ஒரு தாய்தானோ என்று தெரியவில்லை. வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் சிலர் தமது பெற்றோரை வருந்தி அழைத்து வந்து, பின்னர் வருத்தி வதைப்பதாகப் பொதுவாகப் பேசப்படுகின்றது. கனடாவில் தன் தகப்பனுக்கு மாதாமாதம் கிடைக்கும் ஆயிரம் டொலர் பென்சனைப் பெறுவதற்காகத் அவரைக் கார் கராஜ்ஜில் கட்டாந்தரையில் படுக்க வைத்துப் பராமரிக்கும் 'பாசமுள்ள' புத்திரனைப்பற்றி ஒரு நண்பர் சொன்னார். வீட்டு வேலைகள், சமையல் வேலைகள் அனைத்தையும் செய்து முடித்துப் பேரப் பிள்ளைகளையும் பார்த்துக் கொள்ளும் வயதான நோயாளிகளான பாவப்பட்ட தாய்மாரைப்பற்றிய ஒரு தொடர் நாடகம் லண்டன் தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பானது. இவற்றைக் கேட்கும்போது எங்கேயோ படித்த ஒரு வாசகம் நினைவுக் கண்களில் நீர்முட்டி நிற்கின்றது. இறைவனே, இத்தகைய தவறுகளை இவர்கள் பணத்துக்கு ஆசைப்பட்டுத் தெரிந்தேதான் செய்கிறார்கள். ஆனபடியால், ஆண்டவரே, தாய் தந்தையரை வதைக்கும் இந்தப் பாவிகளைத் தயவு செய்தும் மன்னிக்காதீர்!

uthayanan@thaiveedu.com

■ ■ ■


வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?
அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்



Over 50 Years Combined Experience

Even if you are:
- unemployed
- cyclist
- passenger
- pedestrian
- traveling in public transit
- student
- housewife

FIREMAN WOLFE LLP
PERSONAL INJURY LAWYERS
CERTIFIED AS A SPECIALIST IN CIVIL LITIGATION
SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A
MOTOR VEHICLE ACCIDENT
FRACTURES • SPINAL CORD INJURY • BRAIN OR HEAD INJURY
SCARRING OR DISFIGUREMENT • INTERNAL INJURIES OR DEATH


உங்களுக்குத் தெரியுமா?
விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி ஆகியவற்றுக்காக பணமாக $330,000.00 வரையும், சம்பள இழப்பீடுகள், அத்துடன் $172,000.00 வரை இழப்பாகவும் மற்றும்பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.

உங்களுக்குத் தெரியுமா?
விபத்து உங்கள் தவறாகயிருப்பின் உங்களால் $172,000.00 வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு $400.00 வரையும், இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

If the impairment catastrophic your claim can be:
- Medical and Rehabilitation expenses up to $1,000,000.00
- Personal care expanses up to $1,000,000.00

தீபன்
Thiparanjan Sivarajalingam
Accident Benefit Specialist
Licensed Paralegal
(Member of The Law Society of Upper Canada)

இலவச ஆலோசனைகளுக்கு: (416) 505-9804
24 Hours Direct Line (416) 624-4751
அனுபவம் இல்லாதவர்களின் ஆலோசனையின் கீழ் விழுந்திடாதீர்கள்
"One of the best personal injury law firm in Ontario"
TORONTO SCARBOROUGH MISSISSAUGA



Jack J. Fireman Q.C. LLM.
Jack J. Fireman Q.C. has been voted to the "Most Frequently Recommended Lawyer" catergory in L'Expert since 1997 as voted by the his peers from Ontario



William C. Wolfe B.A. LLB
Prior to 2000, Mr. Fireman and Mr. Wolfe defended insurance companies before changing their practices to representing injured people only.

IF YOU HAVE OPTIONAL INSURANCE, YOU CAN CLAIM UP TO $1,000.00 IRB'S PER WEEK
வரை
இழப்பதற்கு அனுமதிக்காதீர்கள்

# CELL TEL MOBILITY

For all your cellphone and accessory needs...

We sell new & used cellphones, Pagers and accessories for:

**ROGERS WIRELESS, FIDO, TELUS MOBILITY, BELL MOBILITY**



NOW OPEN



**Our new location now OPEN and ready, to serve you better than ever!**





- -Car charger
- -Leather case
- -Head sets
- -Home charger
- -Clear case
- -Bluetooth headset
- -Bluetooth dongle
- -Data cables
- -Batteries
- -Belt clip/Holder
- -Antenna booster
- -Flashing antenna
- -Flashing light




**Call Toll free:- 1.877.312.5123** *SHOP ONLINE* @ www.celltelmobility.com

## CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER



NOKIA, MOTOROLA, SONY ERICSSON, SAMSUNG, LG HTC,BLACKBERRY,iPHONE.

***Display,Antenna Replacement and all other Repairs (Software & Hardware).***

NEW LOCATION

| | | | |
|---|---|---|---|
| 2637 Eglinton Ave. East, | 5C - 2950 Birchmount Rd | 5A - 1162 Morningside Ave | 49 - 45 Karachi Dr |
| Eglinton Ave/Midland Rd | Birchmount / Finch Ave | Morningside Ave/ Sheppard Ave | Markham Rd / 14 th Avenue |
| 416.266.6818 | 416.495.7776 | 416.281.2355 | 905.201.4859 |

# நம்பிக்கை

## குமார் புனிதவேல் பக்கம்

அன்று புத்தகக்கடையில் அதிகம் சன நெருக்கடி என்று சொல்லமுடியாது. வளமையாக வெள்ளிக்கிழமை மாலை ஏழு மணிக்கு உள்ள நெருக்கடிதான். வாங்கிய புத்தகத்திற்கு பணம் செலுத்த சுந்தர் நின்று கொண்டிருந்தான். அவன் மனதில் எத்தனையோ கனவுகள். அவனுக்குத்தெரியும் அந்த புத்தக ஆசிரியரின் கதைகள் சாந்திக்கு மிகவும் பிடிக்கும். கட்டாயமாக அவள் அதை ஆசையுடன் அரவணைத்து வாசிப்பாள் என்று. சாந்தியை நினைத்தவுடன் அருகில் நின்ற சாந்தியின் உடம்பிலிருந்து அவள் பாவிக்கும் சென்ட் வாசனை அவனுடைய மூக்கை துளைத்தது. மிக்க ஆதங்கத்துடன் அவளை திரும்பிப் பார்த்தான் சுந்தர்.

அவனுக்கு வெகு நெருக்கமாக உராய்சியும் உராயாமலும் நின்றிருந்தாள் சாந்தி. தன்னை சுந்தர் நோக்குவதை உணர்ந்தவளாய் மெல்லிய புன்னகையுடன் அவனை நோக்கினாள். சாந்தி இதைத்தான் வள்ளுவனும் நகைமொக்கு என்று குறிப்பிட்டானோ என்று அவன் மனம் அசைபோட்டது. அவனுக்கு N.P.T.A படிக்கையில் படித்த

> "முகைமொக்குள் உள்ளது நாற்றம் பேதை
> நகைமொக்குள் உள்ளது ஒன்றுண்டு"

என்ற குறள் மனதில் தோன்ற ஏதோ தவறி பிடிப்பதுபோல் அவ்வளவு சனத்துக்கும் முன்னால் தெரியாதது போல் அவள் கையை மெதுவாக தடவினான். சாந்தி தன்னை மறந்தவர் போல் நல்ல தன்னுனர்வுடன் அவன் அங்கசேஷ்டைக்கு இடமும் கொடுத்தாள். இருவரும் பல்கலைக்கழக கடைசி வருட மாணவர்கள்.

அன்று பகல் முழுவதும் இருவரும் சல்லாபித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் காதலர்கள் என்று பிரகடனப்படுத்தாத ஒரு உறவில் பினைந்து இருந்தார்கள். சுந்தர் A/L படிக்கையில் புலம் பெயர்ந்து வந்தவன். சாந்தியோ கனடாவில் பிறந்து வளர்ந்தவள் அவர்கள் சம்பாஷனை யாவும் தேசியமொழியான ஆங்கிலத்தில் தான் நடக்கும். ஆனால் கேட்டால் இருவரும் Ceylon Tamil என்று கூறிக்கொள்வார்கள்.

இருவரும் மெல்லிய குரலில் கதைத்தபடி ஆமை ஊர்வதுபோல் அந்த பணம் கட்டுமிடத்திற்கு நகர்ந்தார்கள்.

சுந்தர் பின்னால் நிற்பவர்களை திரும்பிப் பார்த்தபோது யாரோ அறிந்தவர் அடிவானத்தில் நிற்பதுபோல் தெரிந்தது அவர் மற்றப்பக்கம் திரும்பி நின்றாலும் அந்த பிடரி மயிரையும், ஜக்கட்டையும் சுந்தர் நல்லாகவே அறிவான். அது நிச்சய அவன் அப்பா தான். தன்னை யாரே உற்று நோக்குவதை அறிந்தோ என்னவோ அவர் திரும்பினார். ஆமை தலையை இழுத்துக்கொள்வது போல் சுந்தர் வரிசையில் திரும்பி மறைந்து கொண்டான்.

அவன் மனம் அசைபோட்டது ஏன்தான் அப்பா இப்படி வந்து கழுத்தை அறுக்கிறார். அவரிடம் நல்ல ஜக்கட் இருக்கிறது. ஆனால் பென்சன் எடுத்தநாளில் இருந்து எங்கு வெளிக்கிட்டாலும் இந்த ஜக்கட்தான் அம்மாவும் சொல்லிப்பாத்து விட்டா. கேட்டால்தானே இது தனக்கு வசதியாம்.

மெதுவாக வரிசையிலிருந்து தலையைநீட்டி அப்பா இன்னும் நிற்கிறாரா என்று பார்த்தான் சுந்தர். அப்போது ஜக்கட் பையிலிருந்து அந்த இரும்புபிறேம் கண்ணாடியை எடுத்து மாட்டிக்கொண்டார். அப்படியானால் அவருக்கு புத்தகம் பிடித்துவிட்டது என்பதுதான். உலகை மறந்துவிடுவார். கொஞ்சம் ஸ்டைலாக அப்பா இருந்தால் எவ்வளவு நல்லம். சாந்தியின் பெற்றோர்கள் சிறுவயதில் வந்து நல்ல தொழிலில் இருப்பவர்கள். அழகான வீடு கார் எல்லாம் இருந்தது வீட்டிலும் அவர்கள் நாகரீகமாக ஆங்கிலத்தில் தான் பேசுவார்கள்.

சுந்தரத்தின் அப்பாவும் நல்ல தொழிலில் தான் இருந்தவர். ஆனால் இனக்கலவரத்தில் 'தமுத்தேகம' என்ற சிங்கள ஊரில் அனைத்தையும் இழந்து யாழ்ப்பாணம் வந்தவர்கள். மாமா ஒரு வருடைய ஸ்பொன்ஸ்சரில் கனடா வந்து இன்னும் Appantmat வாழ்க்கைதான் அப்பா எப்போதும் சொல்வார் "நல்லாகப்படி படித்தவனுக்குச் சென்ற இடம்எல்லாம் சிறப்பு" என்று. ஆனால் படித்த அப்பாவுக்கு அப்படியானால் ஏன் சிறப்பில்லை என்ற வினா சுந்தருக்கு அந்தரத்தில் தொங்கிய வண்ணமிருந்தது. கனடாவுக்கு வந்து ஒரு செக்கியூரிட்டி வேலைதான் அவருக்குக் கிடைத்தது. அம்மாவுக்கு ஒரு பைன்டரியில் தொழில் கிடைத்தது இருவருமே புலியின் வாலைப் பிடித்தவர்கள் போல் மாடாய் உழைத்து ஓடாய் தேய்ந்தார்கள்.



அப்பாவுடைய செக்கியுரிட்டி வேலை பகல் இரவு என்று மாறிமாறி வரும். பகல் வேலையுள்ள நாள்களில் எத்தனை மணி என்றாலும் விழித்து இருப்பார்கள் சுந்தர் வீடு திரும்பும்வரை - அவர்கள் கட்டிலில் அப்பா வெறும் மேலும் சாரமுமாய், அம்மா சேலையுடன் இருப்பார். அன்றைய நாள் பொழுது நடந்தது எல்லாம் கேட்டு அறிவார்கள். அம்மாதான் வழக்கில் கேள்விகேட்பதும் மறுமொழி சொல்வதும் அவவே. ஆனால் தீர்ப்புக்கூற ஜச்போல கடைசியில் அப்பா "தம்பி படிப்பை மட்டும் தவறவிடாதே" என்று தீர்ப்புக்கூற தவறமாட்டார். அதன் பின் அம்மா லைட்டை அனைத்து விட்டு உணவு பரிமாற வெளிக்கிட்டுவிடுவா. அப்பா படுத்துவிடுவார். இருவருமே கபடமில்லாதவர்கள். மற்றவர் சோலிக்கும் போகாதவர்கள். மனதில்பட்டதை வெளிச்சமாய் சொல்லிவிடுவார்கள்.

சாந்தியின் விடு அப்படியல்ல. அப்பா அரசாங்க உயர் அதிகாரி, அம்மா வங்கியில் டெல்லர் இங்கிதமாக பழகுவார்கள். சில தடவைகள் அவர்கள் வீட்டிற்கு போய் இருக்கிறான் சுந்தர். சாந்தியின் அப்பா அம்மாவை Darling என்றுதான் கூப்பிடுவார். அவவும் பதிலுக்கு Darling என்றுதான் பதில் வரும். தன் வீட்டிலோ அம்மா இஞ்சாருங்கோ என்றுதான் அழைப்பா அப்பாவும் அம்மாவை பெயர்சொல்லி அல்லாவிட்டா அனாகரிகமாக அம்மா என்று கூப்பிடுவார். ஆனால் ஒன்று மட்டும் தெரியும் சாந்தி வீட்டு உறவுகள் ஓடும் புளியம் பழமும் தான். ஆனால் தனது தாயும் தந்தையுமோ நகமும் தசையும் போலத்தான் என்று உணர்வான்.

பணத்தை கொடுத்தவுடன் சாந்தியை அழைத்துக்கொண்டு வெளியே செல்ல முனைந்தான் சுந்தர். அவனுக்கு அப்பாவை அறிமுகப்படுத்த விருப்பம் வரவில்லை என்பதிலும் வெக்கமாக இருந்தது என்பதுதான் உன்மை. இந்த உணர்வு அவனை வேதனைக்குள்ளாக்கியது. இதற்கிடையில் பணம்கொடுக்கும் இடத்திற்கு அண்மையில் பல புத்தகங்களை மலிவு விலையில் குவித்த வைத்திருந்தார்கள். அந்தக்குவியலில் தனக்கு ஏற்ற புத்தகம் யாதாகிலும் இருக்குமா? என்று நோண்டிக்கொண்டிருந்தாள் சாந்தி.

மெதுவாக சாந்திக்கருகில் வந்த சுந்தர் "இந்தக் குவியலில் ஒன்றும் நல்ல புத்தகம் இருக்காது வாரும் அருகிலுள்ள Coffice shop இற்கு போவோம் என்று வலிய அழைத்துக் கொண்ட மெதுவாக சுந்தர் தகப்பன் இருந்த திசையைத் திரும்பிப்பார்த்தான். ஒரு கணப்பொழுதுதான் என்றாலும் அவர்கள் கண்கள் செருகின. உடனே சுந்தர் திரும்பி விட்டான். சாந்தியை மெதுவான ஆனால் தீர்க்கமான குரலில் "சாந்தி இந்த பழைய குப்பையில் விற்கப்படாத புத்தங்கள் தான் இருக்கும் வாரும் வெளியே போவோம்" என்று சொன்னான். அவனுக்கு தன்னிலே இருந்த வெறுப்பை சாந்தியில் சுமத்தி அவளால் தான் தன்னால் தன்தந்தைக்கு அறிமுகப்படுத்த வெக்கமாயிருந்தது என்றுபட்டது.

தகப்பனாரோ கையில் இருந்த புத்தகத்தை வைத்து விட்டு கண்ணாடியை கழற்றி பையில் வைத்துக்கொண்டு நிமிர்ந்தபடி வெளியில் நடந்தார். சுந்தருக்கு தன்னிலே தனக்கே வெறுப்பாயிருந்தது. "சாந்தி வெளியே செல்வோமா?"

"ஒரு நிமிடம் சுந்தர்"

"இப்ப போவோமா?"

கவணியாதவள்போல் "கொஞ்சம் பொறுங்கள் சுந்தர்" என்று சாந்தி சொன்னாள்.

இங்கே ஒரே சனமாயிருக்கிறது, புளுக்கமாயிருக்கிறது. வெளியே சென்றால் இதமாக இருக்கும்"

"உங்களுக்கு என்ன திடீரெண்ட இவ்வளவு பொறுமை இல்லாமல் அவசரப்படுகிறீர்கள்.

"இதிலே பழைய பத்தக் குப்பைதான் இருக்கிறது".

"சில சமயங்களில் நான் பலகாலம் தேடிய புத்தகங்கள் இப்படியான இடத்தில்தான் கிடைக்கும் என்று சொல்லி சுந்தரைப்பார்த்து புன்னகைத்தாள்.

சுந்தருக்கு தெரியும் தனது தந்தை திரும்பிப்பாராது தொடர்ந்து வீடு நோக்கிச் செல்வார். வீட்டிலும் வந்து ஒரு கேள்வியும் கேட்கமாட்டார். இன்றும் பிந்திப்போனாலும் அப்பாவும் அம்மாவும் கட்டில் சம்பாஷனைக்காக பார்த்துக் கொண்டிருப்பார்கள். அப்பா ஒருகேள்வியும் கேக்க மாட்டார். ஆனால் சுந்தருக்கு தன்னில் வெறுப்பு அதிகரித்தது. தங்களுடைய கள்ளம் கபடமறியாத குடும்பத்தில்தான் ஒரு கள்ளனாகப்பட்டது. ஆனால் அப்பாவை அறிமுகப்படுத்தினால் சாந்தி ஏளனம் செய்வாளோ என்ற தயக்கம். கனடியனாக வளர்ந்த அவளுக்கு எங்களுடைய பாசப்பினைப்பு எப்படித்தெரியும் என்று நினைக்கையில் அவனுக்கு ஒரு அகங்காரம் பீரிட்டுக் கொண்டு வந்தது.

அவள் பாவிக்கும் சென்ட் மணம் அவனை மீண்டும் இவ்வுலகத்திற்கு கொண்டுவந்தது. தான் எதை அடையவேண்டுமோ, எதை அனைக்க வேண்டுமோ அது மிக அருகில் இருப்பதை உணர்ந்தான் சுந்தர். அதேவேளை அவளிடம் ஒரு வெறுப்பு, தன் தந்தையை அவள் ஏளனம் செய்வாளே என்ற வேதனை.

"சுந்தர், நீ சொன்னது சரிதான். இந்த பெரியகடையில் சனநெருக்கடி நிற்பதற்கும் முடியாத இறுக்கமாயிருக்கிறது. நாங்கள் ஒரு 'டோநட்' கடைக்குப்போய் கதைப்போம்" என்றாள். "உமக்கு சனநெருக்கடி என்றாள் பிடியாதோ" என்று அவன், அவளிடம் கேட்டாள்.

"சனம்? எந்தச் சனம்? டொரொன்டோவில் எல்லா இடமும் சனம் தானே?" என்று முடித்தாள் சாந்தி. தனக்குள்ளே குமைந்துகொண்டிருந்த சுந்தர் எரிச்சலுடன் "உமக்கு நாளாந்தம் முகம் கொடுக்கம் தொழிலாளி வர்க்க மக்களைத்தான்.." இடைமறித்து "ஓம் அவர்களோடு உறவாடவேண்டும் என்று சட்டமேதுமில்லையே" என்று சிரித்துக்கொண்ட சொன்னாள் சாந்தி.

"அது எனக்கும் பரிகிறது. சாதாரண உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பெசாத ஊமை சனத்தை உமக்கு பிடிக்காது என்று எனக்கு எப்பவோ தெரியும்" என்று பிதற்றினான் சுந்தர். உண்மையில் அவன் சொல்ல வந்தது உமக்கு எனது குடும்பத்தை பிடிக்காது. உம்மை எனது வீட்டிற்கு அழைத்துச் சென்றால் நிச்சயம் முகம் சுளிக்கத்தான் செய்வீர், இது எனது அப்பாவிற்கும் புரிந்துதான் மற்றப்பக்கத்தால் சென்று விட்டார் என்பது தான். அவனுக்குத்தெரியும் அப்பா அதே நிமிர்ந்த நடையுடன் வீட்டிற்கு சென்று கொண்டிருப்பார். அன்று இரவைக்கு மற்றவர்கள் எல்லாரும் கலகலப்பாக கதைத்துக்கொண்டிருக்கையில் அவர் மட்டும் எதையோ இழந்துவிட்டவர் போல் இருப்பார். பாவம் அப்பா அவர் வேதனையை அவர் நடையில் அவனுக்குக் காட்டி விட்டது.

சாந்தி, சுந்தருடைய முகத்தைப் பார்த்தாள். ஏதோ ஒரு கோபத்தை மனதில் வைத்துக் கொண்டு சொல்ல மனமில்லாமல் அவன் குமைவது அவளுக்கு தெரிந்தது. அவளுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது "சுந்தர், உங்களுக்கு திடீர் என்று மூட் குழம்பி விட்டது. நீங்களே கேட்டீர்கள், எனவே வெளிக்கிடுவோம். மேலும் இங்கு ஒவ்வொருவரையும் பார்க்கையில் எரிச்சலாயிருக்கிறது" என்று சொன்னாள்.

"அது உம்முடைய தலைக்கணம்தான் காரணம்"

"இப்ப நான் தலைக்கனம் பிடித்தவள் கூட"

"நிச்சயமாய் உமக்குத்தலைக்கணம் கொஞ்சம் கூட" என்று சுந்தர் சொல்ல அவர்கள் கடைக்கு வெளியே வீதிக்கு வந்த விட்டார்கள். அவர்கள் வீதியில் நடக்கையில் சுந்தர் தனது மனதின் ஆழ்தளத்தில் இருந்த எண்ணத்தை சொன்னான் "எனக்கு பிடித்தவர்கள் உமக்குப் பிடியாது என்று எனக்கு எப்பவோ தெரியும்." என்று "சுந்தர், உமக்கு நல்ல விசர்" என்று பதில் சொன்னாள். இருவரும் ஒருவரை ஒருவர் புண்படுத்துவதில் போட்டிபோட்டார்கள். இதைமுடிவுக்கு கொண்டுவர சாந்தி "சுந்தர் உமக்கு என்னை பிடிக்கிறதில்லை இப்போ இருவருமாக இனி ஒன்றாக போவதில் அர்த்தமில்லை. நீர் உமது வேலையைப்பாரும் நான் வீட்டுக்கு போகப்போகிறேன்"

"சரி பாய்"

இருவரும் பிரிந்து இரண்டு அடி எடுத்து வைத்திருப்பார்கள் சுந்தர் திரும்பி சாந்தியின் கையை பிடித்து "சாந்தி தயவு செய்து போக

64ம் பக்கம் பார்க்க...

# "எனக்கு இப்போது நேரம் இல்லை"

- பொன் குலேந்திரன் -

ஒரு வேலையை செய்யக் கேட்டால் "எனக்கு இப்போது நேரமில்லை" என்று கடத்துவது எம்மவர்கள் பலரிடம் உள்ள குணமாகும். ஆனால் செய்யப்போகும் வேலை மூலம் பணம் வருவதாக இருந்தால் பதில் வேறாக இருக்கும். கிடைக்கும் சந்தர்ப்பத்தை தவற விட்டால் திரும்பவும் அது கிடைப்பது அரிது. மனிதனின் வாழ்க்கையில் நேரத்துக்கு இருக்கின்ற விலைமதிப்பு தங்கம், வைரம் போன்றவைகளுக்கு இருக்கும் மதிப்பிலும் பார்க்க உயர்ந்தது என்று குறிப்பிட்டால் பலர் சிரிப்பீர்கள்.


இரு சம்பவங்களுக்கிடையேயான இடைவெளியை காலம் என்கிறோம். பிறந்த சம்பவத்திலிருந்து இறக்கும் சம்பவம் வரை உள்ள காலத்தை ஒருவனின் ஆயுள் என்கிறோம். சராசரி ஒருவனின் ஆயுள் 80 வயதாகில் அவனுக்கு 42 மில்லியன் நிமிடங்கள் இருக்கிறது. அவன் பல சாதனைகள் புரிய இருக்கிற நேரமிது. அதில் தூக்கத்தில் மூன்றில் ஒரு பங்கும், மூன்றில் ஒரு பங்கு வேலை செய்வதிலும் மற்றைய மிகுதி மூன்றில் ஒரு பங்கு நேரம் தம் குடும்பத்துடன் செலவு செய்வதிலும் கழிப்பது மனித ஆரோக்கியத்துக்கு நல்லது என்பது மனோதத்துவ வல்லுனர்கள் கருத்து.

## மாணவர்களும் நேர பரிபாலனமும்.

ஒரு வேலையை ஒரு முகப்படுத்தி முழு ஆர்வத்துடன் செய்யும்போது நேரம் போவது தெரியாது. ஆனால் எம் மனதில் நேரம் வேகமாக போய்க்கொண்டிருக்கிறது என்ற உணர்வு ஏற்படும். அதேபோன்று வேலையில்லாமல் இருக்கும்போது நேரம் மிக மெதுவாக செல்வது போன்ற ஒரு பிரமை. பரீட்சை எழுதும்போது வந்த கேள்விகள் எல்லாவற்றிற்கும் பதில் முற்றாகத் தெரிந்தால் பதில் எழுதி முடிக்க நேரம் போதாமையாக இருக்கும். இதில் மாணவர் நேரத்தை கேள்விகளுக்கிடையே பார்ப்பதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். உதாரணத்துக்கு 7 கேள்விகளில் 5 கேள்விகளுக்கு ஒரு கேள்விக்கு 20 புள்ளிகள் விகிதம் பதில் எழுத வேண்டுமாகில் அந்த 7 கேள்விகளில் நன்றாகப் பதில் தெரிந்த கேள்விகளை வரிசைப் படுத்த வேண்டும். அதில் முழுமையாக பதில் தெரிந்தவற்றிற்கு வரிசையில் முதலிடம் கொடுக்க வேண்டும். இதைத் தேர்ந்தெடுக்க 2 நிமிடங்களாவது செலவு செய்யுங்கள். அதன் பின் ஒவ்வொரு கேள்விக்கும் 175 நிமிடங்களை சரிசமமாக பிரித்து கேள்விக்கு 35 நிமிடம் விகிதம் அந்த நேரத்துக்குள் பதில் எழுதுங்கள். கேள்விகளைத் தேர்ந்தெடுக்க 2 நிமிடங்களும், கடைசியில் வினாத்தாள்களில் கேள்வியின் எண் சுட்டிலக்கம், பக்கங்கள் எல்லாம் சரியாக குறிக்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்க்க 3 நிமிடங்கள் செலவளியுங்கள். ஆகவே பதில் 3 மணித்தியாலத்தில் உங்களுக்கு 175 நிமிடங்கள்தான் இருக்கும். நன்கு பதில் தெரிந்த கேள்விக்கு 35 நிமிடங்களுக்கு மேல் செலவு செய்தாலும் உங்களுக்கு கிடைக்கப் போவது ஆகக் கூடியது 20 புள்ளிகள்தான். முடிந்த மட்டில் 5 கேள்விகளுக்கும் பதில் எழுதுவதன் மூலம் பரீட்சையின்போது நேரத்தை நல்ல முறையில் பரிபாலனம் செய்து சித்தியடைய வாய்ப்புண்டு. நேரத்தை சரியாக பரிபாலனம் செய்யாமல் பரீட்சை எழுதிவிட்டு வந்து எனக்கு நேரம் போதவில்லை என குறை கூறாதீர்கள். இந்த பரிபாலனத்தை பரீட்சையில் மட்டுமல்ல படிக்கும் போதும் பழக்கத்துக்கு கொண்டு வரப்பாருங்கள்.

## ஊழியர்களும் நேர பரிபாலனமும்.

கடினமும் அழுத்தமும் இல்லாத திறமையான செயல்பாட்டின்மூலம் மிகக் கூடிய விளைவினைப் பெறுவதற்கு நேர பரிபாலனம் (Time Management) மிக உதவும். நேரத்தை சரிவர பரிபாலனம் செய்யாவிடில் மன அழுத்தம் (stress) ஏற்படும். மன அழுத்தம் சுயமாக சிந்தித்து செயலாற்றவிடாது. "ஐயோ இன்னும் 5 நிமிடங்கள் தான் இருக்கிறது. அதற்கிடையில் இந்த அறிக்கையை முடித்து எனது அதிகாரிக்கு கொடுத்தாக வேண்டும்" என அழுத்தத்துடன் அறிக்கை எழுதும்போது பிழைகள்விட ஏதுவாகிறது. திறமையைப் பாதிக்கிறது. விளைவு அறிக்கை முழுமையாக இல்லாததால் கிடைக்கவிருந்த வணிகம் கிடைக்காமல் போகலாம். இவற்றிற்கு முக்கிய கரு நேரமே. உங்கள் ஸ்தாபனத்தின் பணத்தை செலவு செய்வதும் உங்கள் வேலை நேரத்தை செலவு செய்வதும் ஒன்றே. உங்களுக்கு மணித்தியாலக் கூலி 60 டொலராகில் நீங்கள் உங்கள் வேலை நேரத்தை சரியாக பயன்



படுத்துவதை எதிர்பார்க்கிறது. காரணம் உதாரணத்துக்கு உங்கள் வேலை நேரத்தின்போது 10 நிமிடம் நீங்கள் தொலைபேசியில் நண்பருடன் வம்பளந்தால் உங்கள் ஸ்தாபனத்துக்கு 10 டொலர் நஷ்டம். வேலை செய்யும் அலுவலகத்திற்கு குறிப்பிட்ட நேரத்துக்கு போவது அவசியம். அதே போன்று வேலை சம்பந்தப்பட்ட கூட்டத்திற்கும் நேரம் தாமதியாது போகவேண்டும். இந்தக் கலாச்சாரம் சிறீலங்கா அரச அலுவலகங்களில் காண்பது அரிது. வேலைக்கு தாமதித்து செல்வது ஒரு கலாச்சாரம். தாமதித்து சென்ற பின்னர் வேலைசெய்ய ஆரம்பிக்க முன்னர் அன்றைய பத்திரிகை செய்திகள் வாசிப்பது, தேனீர் அருந்துவது போன்றவற்றில் சில நேரங்களை கழித்து விடுவார்கள். அரை மணி நேரம் மதிய உணவுக்கு ஒதுக்கப்பட்டாலும் அனேக ஊழியர்கள் குறைந்தது ஒரு மணி நேரம் செலவு செய்வது வழக்கம். இதனால் உற்பத்தி பாதிப்படைகிறது என்பதை அவர்கள் உணருவதில்லை. ஒரு முக்கிய வேலை கொடுத்து உடனே செய்துதாரும் என்று சொன்னால் "எனக்கு இப்ப நேரமில்லை" என்பார்கள்!

## தாமதித்து கூட்டத்துக்குப் போவது தமிழர் கலாச்சாரமா?

தமிழர்களிடையே ஒரு காரியத்தை அறிவிக்கப்பட்ட நேரத்தில் ஆரம்பிக்கும் பழக்கம் குறைவு. அதனால்தானோ என்னவோ 'மணி அளவில்' என்ற வார்த்தையை நேரத்துடன் சேர்த்துக் கொள்வர். அன்று ஒருநாள் வில்லுப் பாட்டு கேட்க கோயில் ஒன்றுக்கு போயிருந்தேன். பின்னேரம் 6 மணி பூஜைக்குப் பின் 6.30 மணிக்கு வில்லுப்பாட்டு ஆரம்பமாகும் என அறிவித்திருந்தார்கள். 7 மணியாகியும் பூஜை ஆரம்பிக்க வில்லை. ஐயரிடம் காரணம் கேட்டபோது கூட்டம் சேர்ந்த பின் (வியாபார நிமித்தம்) ஆரம்பிக்கலாம் என்றார். இதேபோன்று தமிழ் ஈழ அபிவிருத்திக் கூட்டம் ஒன்றுக்குப் போயிருந்தேன். 7 மணிக்கு ஆரம்பிக்க வேண்டிய கூட்டம் 30 நிமிடங்கள் தாமதித்து ஆரம்பித்தது. தலைவர்கள்கூட 15 நிமிடம் தாமதித்து வந்தார்கள். போர்க்களத்தில் ஒரு தாக்குதலின்போது நேர பரிபாலனம் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனை தமிழீழத் தேசிய தலைவர் பல முறை வலியுறுத்தியுள்ளார். அப்போது கிட்டத்தட்ட 50 பேர் அங்கு பிரசன்னமாயிருந்தனர். ஆகவே மொத்த நேரம் 1500 நிமிடங்கள் விரயமாக்கப்பட்டதை கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்களின் கவனத்துக்கு கொண்டு வந்தேன். எந்தச் செயல் திட்டத்தையும் செயல்படுத்தும்போது நேர பரிபாலனம் முக்கியம் என்பதை எடுத்துச் சொன்னேன். சில சமயங்களில் இந்தக் கருத்துக்கள் செவிடன் காதில் சங்கு ஊதுவது போலாகி விடுகிறது.

தாமதித்து வருவது தமிழர்கள் கலாச்சாரம். கூட்டத்துக்கு தலைவர்கள் அல்லது முக்கிய புள்ளிகள் தாமதமாக வருவதற்கு காரணம் உண்டு. தம் வரவைப் பார்த்தபடி அங்கு கூடியுள்ள மக்கள் தம்மேல் கவனத்தை செலுத்துவதற்காக அப்படி தாமதித்து வருவோர் உண்டு. சிலர் தாம் வேலை அதிகம் என்று எடுத்துக்காட்டுவதற்கும் தாமதித்து செல்வார்கள். ஆனால் ஒன்று, குறிப்பிட்ட நேரத்துக்கு வராதவர்கள்மேல் மற்றவர்களுக்கு மரியாதையும் நம்பிக்கையும் குறையும் என்பதை அவர்கள் சிந்திப்பதில்லை.

தாமதமாக கூட்டத்துக்குப் போவது சிறீலங்கா ஜனாதிபதியின் வழக்கம். காரணம் கேட்டால் பாதுகாப்பைக் காரணம் காட்டுவது வழக்கம். ஒரு நாட்டின் தலைவர் நேரத்தை மதிக்க முடியாவிட்டால் எவ்வாறு நாடு முன்னேற முடியும்? இந்தியா, சிறீலங்கா, பங்களாதேஷ், பாக்கிஸ்தான் போன்ற நாடுகளில் அரச ஊழியர்கள் நேரத்துக்கு அவ்வளவு மதிப்பளிப்பதில்லை. காரியாலயம் 9.00 மணிக்கு ஆரம்பிக்குமாகில் குறைந்தது 30 சதவிகித ஊழியர்கள் 30 நிமிடமாவது தாமதித்து தான் வருவார்கள். பின் காரியாலயம் 5.00 மணிக்கு மூடுவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னரே நாற்காலிகள் பல காலியாகிவிடும். சிலர் அடிக்கடி கடிகாரத்தில் எப்போது 5 மணி அடிக்கும், வீட்டுக்குப் போகலாம் என்று பார்த்த வண்ணம் இருப்பார்கள்.

## நேர பரிபாலனத்தின் நன்மைகள்.

தன்னம்பிக்கை கூடுதலாகும் போது நேர பாரிபாலனத்தை கடைப்பிடிப்பது குறைவு. வருட முடிவில் ஊதியத்தை கூட்டுவதற்கோ அல்லது போனஸ் எனப்படும் விருப்பூதியம் கொடுப்பதற்கோ அவ்வருட சேவைக் கணிப்பின்போது நேர பரிபாலனம் முக்கிய இடம் பெறுகிறது. குறிப்பிட்ட திகதிக்குள் அவர் வேலையை திருப்திகரமாக செய்து முடித்தாரா என்பது கவனிக்கப்படும். நேர பரிபாலனத்தை கடைப்பிடிப்பதன் மூலம் விரயம், பிழைகள் என்பன தவிர்க்கப்படுகின்றன. அதிகமான வேலைப் பாரம் குறைகிறது. ஒரு திட்டம் எவ்வாறு செயல்படுகிறது, குறிப்பிட்ட நேரத்துக்குள் CPM அல்லது PERT திட்ட முறைப்படி செய்து முடிக்க முடியுமா என்பதை அவதானித்து நடவடிக்கைகள் எடுக்கக் கூடியதாயிருக்கிறது. ஊழியர்களுக்கு வேலையினால் ஏற்படும் அழுத்தம் குறைவு. மற்றவர்களின் பாராட்டும் நம்பிக்கையும் அதிகரிக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக பணம் விரயமாகாமல் பார்த்துக்கொள்ள முடியும்.

## வணிகமும் நேர பரிபாலனமும்.

வணிகத்தில் ஈடுபடுவோருக்கு நேரம் மிக விலையுயர்ந்தது. பல வேலைகளை ஒரே நேரம் செய்வதினால் தவறுகள் ஏற்படலாம். அதனால் கொடுக்கும் சேவையின் தரம் குறையலாம். அதனால் வாடிக்கையாளர்கள் அதிருப்தியால் போட்டியாளரைத் தேடிப் போகலாம். வணிகத்தில் எந்த வேலை முக்கியம் என்று கணித்து செயல்படுவது முக்கியம். சில சமயம் வரையறுக்கப்பட்ட 8 மணித்தியாலம் போதாமையால் சிலர் குடும்பத்துக்கென ஒதுக்கப்பட்ட 8 மணித்தியாலத்தையோ அல்லது நித்திரைக்கென ஒதுக்கப்பட்ட 8 மணித்தியாலத்தையோ குறைத்து அதை வேலைக்கு பாவிப்போரும் உண்டு. அதன் விளைவாக குடும்பத்தில் பிரச்சினைகள் தோன்றலாம். போதிய தூக்கமின்மையால் தேகநலம் பாதிக்கப்படலாம். வணிகத்தில் குறிப்பிட்ட நேரத்தில் கூட்டத்தை ஆரம்பிப்பதோ அல்லது ஒரு வாடிக்கையாளரைச் சந்திப்பதோ மிக அவசியம். அதனால் வாடிக்கையாளருக்கு நம்பிக்கை ஏற்படுகிறது. குறிப்பிட்ட நேரத்தின்படி கொடுக்க உறுதியளித்த பொருளையோ அல்லது சேவையையோ கொடுப்பது மிக முக்கியம். வணிகம், வாடிக்கையாளர் திருப்தி, வருமானம் ஆகியவை ஒன்றுடன் ஒன்று இணைந்தவை.

இனியாவது யாரும் ஒரு காரியத்தை செய்து தர முடியுமா என்று கேட்டால் எனக்கு நேரமில்லை என்று தட்டிக் கழிக்காதீர்கள். உங்களைப் பார்த்து மற்றவர்கள் "இவன் சோம்பேறி. எதைச் செய்யும்படி கேட்டாலும் நேரமில்லை என்கிறான்" என்று உங்கள் திறமையை குறைவாக மதிப்பிடுவார்கள். நேரத்தை மதித்து நடவுங்கள். நேரம் உங்கள் முன்னேற்றத்துக்கு வழிகாட்டும்.

pon.kulendiran@thaiveedu.com


■ ■ ■

வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்



Century 21
Service Plus
5855 Taschereau Blvd (Office)
Brossard, Quebec. J4Z 1A5
Email : sugumaran@sympatico.ca

Office : (514) 299-3186
(450) 926-1881



Sugumaran Sinnaiah
Chartered Real Estate Broker

# LOOKING FOR A NEW CAREER

A GREAT OPURTUNITY




- Full refund of **ALL COST** (Apx. $600$^{00}$ upon passing exam)
- Direct contract from **RBC** (Only tamil managing general agency)
- No contract. No obligation
- Top of the line supporting web access
- High compensation. Lowest price guaranteed for customer
- You can choose the Company what is good for the client.

-digi media-



RB ROYAL BROKERS CORPORATION

# Siva Kandiah

CEO & Managing General Agent

Cell: **416.315.8100**

80 Nashdene Rd., Unit 25&26, Toronto, ON M1V 5E4
Tel: 416.298.4722, Fax: 416.298.4664
E-mail: sivakandiah@royalbrokers.com

RBC Insurance
Manulife Financial
Canada Life
Assumption Life
INDUSTRIAL ALLIANCE

# போலியான தொழில்கள்

# (Job Scams)

- என். மிலான் -

கீழே காட்டப்பட்டுள்ள கவர்ச்சியான வாசகங்கள் அடங்கிய விளம்பரத்தை பத்திரிகைகளில் அல்லது இணையத்தளங்களில் கண்டுள்ளீர்களா?

"Set up your own business! Earn $$$1000's from home!"

"We will find you a high paying job! It's worth the fee!"

"Act now! Hiring 30 security guards immediately, $30 an hour!"

இப்படியான விளம்பரங்களில் தான் நீங்கள் விழிப்பாக இருக்கவேண்டும். இவை போலியான தொழில்களாக இருக்கலாம்.

போலியான தொழில்கள் (Job Scams) பற்றிய விழிப்புணர்வு எல்லோருக்கும் இருப்பது அவசியமானது. இன்று கனடாவிலே இல்லாத ஒரு தொழிலைப் பெற்றுத் தருவதாக கூறி பலரிடமிருந்து பணம் அறவிடப் படுகின்றது. நீங்கள் கூட பணத்தை கொடுத்து ஏமாந்து இருக்கலாம். எதிர்காலத்தில் இது போன்ற போலியான தொழில்கள் (Job Scams) பற்றிய விளம்பரங்கைப் பார்த்து பணத்தை செலுத்திவிட்டு வேலையுமின்றி கட்டிய பணமும் இன்றி ஏமாற்றமுறாமல் இருக்கவும் அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவே இங்கே சில குறிப்புகள் தரப்படுகின்றன.

### போலியான தொழில் (Job Scams) என்றால் என்ன?

இது, ஒரு கம்பனி அல்லது ஏஜென்சி உங்களிற்கு உண்மையில் இல்லாத தொழில் ஒன்றை பெற்றுத்தருவதாக பொய் கூறி அதற்குரிய தங்கள் கட்டணமாக உங்களிடமிருந்து ஒரு தொகைப் பணத்தைப் அறவிடுவார்கள். பணத்தை அறவிட்ட பின்னர் போகப்போகத்தான் நீங்கள் புரிந்து கொள்வீர்கள் உண்மையில் அப்பிடி எந்த தொழிலும் உங்களிற்கு கிடைக்கப்போவதும் இல்லை செலுத்திய பணமும் கிடைக்கப் போவதும் இல்லை என்று. இப்டியாக உண்மையிலேயே இல்லாத தொழில் ஒன்றைத் தான் Job Scams என்று கூறுவார்கள். சில தொழிலாளர்கள், உதாரணமாக காவல் தொழிலாளிகள் (Security guards) ஏராளமான முறைப்பாட்டை இது பற்றி முறையிட்டுள்ளார்கள். அதாவது பல கம்பனிகள் தங்களிடம் இந்த தொழிலிற்குரிய பயிற்சியை அளிப்பதற்கான கட்டணத்தை அறவிடுகின்றார்கள். ஆனால் அந்த பயிற்சியின் மூலம் தொழிலைப் பெற்றுக் கொள்ள முடிவதில்லை.

உங்களிற்கு பயிற்சிகளை அளிக்கும் நிறுவனங்கள் பற்றி அல்லது அவர்களது சேவை பற்றி நீங்கள் நம்பிக்கை அற்றிருப்பின் எந்த ஒரு ஒப்பந்தத்திலும் ஒப்பமிடவோ அல்லது பணம்செலுத்தவோ வேண்டாம். நீங்கள் ஒரு முறை பணத்தைச் செலுத்தி விட்டீர்கள் எனின் அதனைத் திருப்பி பெற்றுக் கொள்வது என்பது மிகக் கடினமானது ஆகும்.

### இந்த போலியான தொழில் ஏமாற்றைத் தவிர்ப்பதற்கான சில தகவல் துளிகள்.

நீங்கள் ஒரு குறிப்பிட்ட கம்பனி பற்றி விபரங்களை தேடும்பொழுது உங்களால் இயன்றளவிற்கு அந்த கம்பனி பற்றிய சகல தொடர்பு தகவல்களையும் சேகரித்துக் கொள்ளுங்கள். நீங்கள் உங்களது முதலாளியினது பெயர், அவரது தந்தையின் பெயர், முகவரி, தொலை நகல் இலக்கம், தொலைபேசி இலக்கம், அத்துடன் தலைமை அலுவலகத்தின் விபரம், இணையத்தளத்தின் விபரம், அல்லது மின்னஞ்சல் முகவரி போன்றவற்றை பெற்றுக் கொள்வதை உறுதிப் படுத்துங்கள். அந்தக் கம்பனி இந்த தகவல்களை உங்களிற்கு வழங்காதவிடத்து அந்த கம்பனிக்கு நீங்கள் எந்த ஒரு பணத்தையும் செலுத்தாமல் விடுவதற்கு முடிவெடுக்கலாம். போலியான தொழில்களைக் கண்டு பிடிப்பது மிகவும் கடினமானது.

எந்த ஒரு முதலாளியும் நீங்கள் வேலையைத் தொடங்குமுன் உங்களிடமிருந்து எந்த ஒரு கட்டணத்தையும் கேட்க முடியாது. கட்டணங்கள் என்பது உதாரணமாக உபகரணங்கள் வாங்குவதற்கோ, பொருட்களிற்கோ, பயிற்சிக்கோ, போக்குவரத்திற்கோ, நியமனத்திற்குரிய கட்டணமோ, அல்லது விண்ணப்பத் தொகை என்பன ஆகும். சில சமயங்களில் நீங்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட பின்னர் உங்களது சீருடைக்கு உங்களிடம் இருந்து பணம் அறவிடலாம். இது சட்டப்படி ஏற்றுக் கொள்ளக்கூடியது ஆகும். தற்காலிக முகவர்கள் (ஏஜென்சி) அவர்களிடம் வேலைக்கு விண்ணப்பிப்பதற்கோ அல்லது வேலையைப் பெற்றுத் தருவதற்கோ அல்லது அதற்குரிய அறிவை வளர்த்துக் கொள்வதற்கோ உங்களிடம் இருந்து எந்த ஒரு கட்டணத்தையும் அறவிட முடியாது. இது சட்ட விரோதமானது ஆகும்.

உங்களை வேலை பெற்றுத் தருவதாக கூறி முதலாளியோ அல்லது வேலைக்கு நேரடியாக அமர்த்தும் முகவர்களோ உங்களை அந்த வேலையை பெற்றுத் தருவவதற்கான பயிற்சிக்கு உங்களை கட்டணம் செலுத்த சொல்லிக் கேட்பவர்கள் பற்றி விழிப்பாக இருங்கள். அந்த பயிற்சியின் நிறைவில் நீங்கள் வேலை பெற்றுக்கொள்ள முடியாமல் போகும் பட்சத்தில் அந்த பணத்தை மீளப் பெற்றுக் கொள்வது என்பது மிக மிகக் கடினமானது ஆகும். அனேகமாக நீங்கள் ஒரு புதிய தொழிலை தொடங்கும் போது உங்களது முதலாளி உங்களிற்கு ஒரு வகை பயிற்சியை வழங்குவார்கள். நீங்கள் வேலை தொடங்குவதற்கு முன்னர் வழங்கப்படும் பயிற்சியின் போது உங்களிற்கு, நீங்கள் வேலை செய்யும் போது வழங்கப்பட இருக்கும் ஊதியத்தை விடக் குறைவாக வழங்கப்படலாம். இருந்தாலும் இந்த தொகை கூட அடிப்படைச் சம்பளத்தை விட குறைவாக இருக்க முடியாது.

உங்களிற்கு தரப்பட்ட ஒப்பந்தத்தில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பதை ஒப்பந்தம் இடுவதற்கு முன் சரியாக தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் ஒரு ஒப்பந்தத்தில் ஒப்பமிடும் பட்சத்தில் அந்த ஒப்பந்தத்தில் உள்ள சட்டத்திற்கு முரணான பகுதிகளை ஒப்புக் கொள்வதாக அர்த்தப்பட மாட்டாது. ஆனால் உங்கள் பணத்தை மீளப் பெற்றுக் கொள்வது மிகக் கடினாமானதாக இருக்கலாம்.

> “ உங்களின் அனுமதியின்றி
> உங்களின் சம்பளத்திலிருந்து
> உபகரணங்களிற்காகவோ, பாதிப்புக்களிற்காகவோ
> அல்லது தவறான வேலைக்காகவோ
> பணத்தைக் கழிப்பது என்பது
> சட்டவிரோதமானது. ”

உங்களின் சம்பளத்திலிருந்து உபகரணங்களிற்காகவோ, பாதிப்புக்களிற்காகவோ அல்லது தவறான வேலைக்காகவோ பணத்தைக் கழிப்பது என்பது சட்டவிரோதமானது. உங்கள் முதலாளி உங்கள் ஊதியத்திலிருந்து எவ்வளவு பணம் கழிக்கலாம் என்று நீங்கள் ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டால் மட்டுமே அத்தொகையைக் கழிக்கலாம். இல்லாதவிடத்து இந்தப் பணத்தொகையைக் கழிக்க முடியாது. தற்காலிக முகவர்கள் (ஏஜென்சி) உங்களிற்கு தொழில் பெற்றுக் கொடுப்பதற்கோ அல்லது அதற்குரிய தொழில் கல்வியை கொடுப்பதற்கோ, உங்கள் சுய விபரக்கோவையை (Resume) தயாரித்து தருவதற்காகவோ உங்களிடம் இருந்து எந்த ஒரு கட்டணத்தையும் அறவிட முடியாது.

இப்படியான சந்தர்பங்களை தவிர்ப்பது மிக முக்கியமானது ஆகும்.

### நீங்கள் உங்கள் பணத்தைச் செலுத்தியிருந்தால் உங்களிற்கு தெரிய வேண்டியது என்ன?

நான் பல தொழிலாளர்களை அவர்களது பிரச்சினைகளுடன் சந்தித்திருக்கின்றேன். தொழிலாளிகளைப் பொறுத்தவரையில் அவர்களிடம் தங்களிற்கு ஏற்பட்ட அநீதியை நிரூபிக்கக் கூடிய எந்த ஆவணங்களையோ ஆதாரங்களையோ பொதுவாக வைத்திருப்பதில்லை. இது மிகவும் துரதிஷ்டவசமானது.

நான் பல தொழிலாளர்களை அவர்களது பிரச்சினைகளுடன் சந்தித்திருக்கின்றேன். தொழிலாளிகளைப் பொறுத்தவரையில் அவர் களிடம் தங்களிற்கு ஏற்பட்ட அநீதியை நிரூபிக்கக் கூடிய எந்த ஆவணங்களையோ ஆதாரங்களையோ பொதுவாக வைத்திருப்பதில்லை. இது மிகவும் துரதிஷ்டவசமானது.
ஆனால் முதலாளிமார் பொதுவாக தங்களைப்.

- நடந்த அத்தனை விடயங்கைளையும் விபரமாக எழுதி வைத்துக் கொள்ளுங்கள். இந்த விபரங்களுடன் இவற்றுடன் தொடர்புடைய திகதிகள், நேரங்கள், முகவரிகள், சாட்சிகளின் விபரங்கள், அது மட்டுமல்லாது கம்பனி முதலாளியின் வாகன அனுமதி இலக்கத்தையும் கூட எழுதி வையுங்கள். பின்னர் உங்கள் பணத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு இந்த தகவல்கள் உதவியுடையனவாக இருக்கலாம்.
- இந்தக் கம்பனி ஏதேனும் பத்திரிகைகளில் இந்த வேலைக்குரிய விண்ணப்பங்கோரலிற்கு விளம்பரம் செய்கின்றார்களா? அப்படி எனின் அந்த பத்திரிகையைத் தொடர்பு கொண்டு இந்த "போலியான தொழில்" விளம்பரத்தைப் பற்றி முறையிடுங்கள். அந்த பத்திரிகை நிறுவனம் இந்த விளம்பரத்தை நீக்கிவிடலாம் அல்லது உங்களது முறைப்பாடு பற்றி கவனம் செலுத்தலாம்.
- நீங்கள் இந்த விளம்பரத்தை ஒரு தொழில் பெற உதவும் நிறுவனத்தில் (Employment centre) பார்த்திருப்பின், இந்த போலியான தொழில் பற்றியும், இதனால் என்ன நடந்தது என்பது பற்றியும் அந்த நிறுவன ஊழியர்களிடம் தெரிவியுங்கள். அத்துடன் இந்த விளம்பரத்தை நீக்கும் படி கேட்பதுடன் இந்த விளம்பரத்தை அந்த நிறுவனத்திற்கு கொடுத்தவர்கள் பற்றியும் அந்த கம்பனியுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கும் படியும் கேட்டுக் கொள்ளவும். அத்துடன் அவர்கள் அந்த தொழில் தேடலில் உதவும் நிறுவனத்திற்கு (employment centre) வரும் ஏனையவர்களையும் இந்த போலியான தொழில் பற்றி எச்சரிப்பதற்கு உதவியாக இருக்கும்.
- சில முதலாளிமார் தொழிலாளர்களை அவர்களை "சுய ஒப்பந்தக்காரர்கள்" (Independent contractors) என்று அவர்கள் ஒப்புக்கொள்ளும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடச் சொல்லி உங்களைக் கேட்கலாம். குறிப்பாக துப்பரவு(Cleaning) கம்பனிகள் பல இவ்வாறாகவே தொழிலாளர்களை நடத்துகின்றார்கள். சில நேரங்களில் நீங்கள் உங்கள் SIN, மற்றும் சகல விபரங்களையும் பதிந்துவிட்டே வேலை செய்வீர்கள். ஆனால் உங்களிற்கு நேரடியாகப் பணமாக (கைக் காசு) தருவதாக கூறி உங்களிற்குத் தெரியாமலே உங்களை ஒரு சுய ஒப்பந்தக்காரர்களாக நடத்துவார்கள். சில நேரங்களில் சில கம்பனிகள் தொழிலாளர்களைப் பாதுகாக்கும் சட்டங்களில் இருந்து தப்புவதற்காக இப்படியாக தொழிலாளர்களைக் கேட்பதுண்டு. நீங்கள் தொழிலாளி என்ற உரிமையை மீறக்கூடிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட தேவையில்லை. உங்களது முதலாளி உங்களை ஒரு தொழிலாளி இல்லை என்றும் நீங்கள் ஒரு சுய ஒப்பந்தக்காரர் தான் என்று கூறினாலும் கூட அது தவறாக இருக்கலாம். நீங்கள் அந்தக் கம்பனியின் தொழிலாளியாகவே இருக்கலாம்.

milan@thaiveedu.com

■ ■ ■

# நம்பிக்கை...

61ம் பக்கத் தொடர்ச்சி...

வேண்டாம்".

அவன் மனதில் இருந்த கோபம், வெறுப்பு எல்லாம் நீங்கி தான் விரும்பிய பொருள் கை நளுவுகிறதே என்று ஆதங்கம் தான் நிறைந்து வழிந்தது.

"என்னை மன்னித்துவிடும் நான் உம்முடன் கதைத்தவிதம் மிகவும் தவறானது எனக்குள் என்ன வந்ததோ தெரியாது அப்படி மோசமாக பேசி விட்டன் நான் உண்மையில் விசரன்தான். தயவுசெய்து என்னை மன்னித்துவிடு, விலகிப்போய் விடாதே என்று சொன்னான்.

அவன் சொற்களில் உண்மையான ஆதங்கமும், வேதனையும் தொனித்தது. அவன் கூறியவிதம் அவளை ஒரு கணம் நிலைகுலையவைத்துவிட்டது. அவன் முன் எப்போதும் இப்படி அவளிடம் கெஞ்சி கேட்கவில்லை. அவளை அறியாமல் அவள் முகம் நாணத்தால் சிவந்தது.

இந்த சிறு சண்டை இல்லை ஊடல் அவர்களை இன்னும் நெருக்கமாக்கிவிட்டது. அவளும் அவனுக்காக அவன் உறவுக்காக ஏங்க உந்தியது.

"என்ன என்று தெரியவில்லை. அந்தக் கடையின் புளுக்கம் எங்களை இப்படி எல்லாம் கதைக்க வைத்து விட்டது. Sorry சுந்தர்" என்று குழந்தை தனது விளையாட்டு பொம்மையை பிடிப்பதுபோல் அவன் கையை இறுக்கிப் பிடித்தாள் சாந்தி. அவனுக்கு அவளிடம் "கட்டாயம் அப்பா உன்னை நேசித்திருப்பார் உன்னை அவர் அழைத்திருப்பார்" என்று எல்லாம் சொல்லத் தோன்றியது. ஆனால் தனது இயலாமைதான் காரணம் என்று புரிந்தது. அவள் கரத்தை இறுக்கமாக பிடித்துக்கொண்டு எல்லாம் நல்லாகவே நடக்கும் என்று எதிர்காலத்தில் நம்பிக்கையுடன் நடந்தான் சுந்தர்.

kumarpunithavel@thaiveedu.com

■ ■ ■


தளம் எல்லாம் தளமல்ல
iwishtomove.com மாத்திரமே
உங்கள் வீடு வாங்குதல், விற்றலுக்கான இணையத்தளம்
- digi Media -
SEE PAGE 83
ITS FAMOUS FOR HOME BUYERS AND SELLERS
www.iwishtomove.com
NEW LISTINGS EVERYDAY
Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
Fax: 905.471.7441
RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated

# ATTIC INSULATION

There are over 1 million homes without enough attic insulation!

## INSULATE YOUR ATTIC NOW

For a limited time government will pay rebate for insulating your attic

**Federal (750) + Provincial (750) + Toronto (200) = $1700**

from existing R-12 insulation to raise it up to R50

GET UPTO $1700

**How can attic insulation help me?**

- Reduce the heat loss through attic
- Prevent roof rot and mold in a well
- Save on heating & cooling cost
- insulated & vented attic

Energy Audit செய்தபின் உங்கள் வீட்டின் Attic ஐ Insulate செய்வதனால் அரசாங்கத்திடமிருந்து rebate பெறுவதோடு மட்டுமல்லாமல் உங்கள் மாதாந்த கட்டணங்களையும் குறைத்துக்கொள்ளுங்கள்.

**Call for no obligation free quote**

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

ENERecon INSULATION

Tel 416-847-7171 | Fax 416-847-7181 | info@enerecon.com

Stay warm in winter. Be cool in summer





www.facebook.com/digimediaphoto

digimedia creations

**karuna photography**

Wedding Photographers

416.467.4952 www.digimediaphoto.com



# S.P.IMPORTERS

## Furniture



அனைத்து தளபாடங்களும் மிக மிக மலிவு விலையில்

**NO PAYMENT INTEREST for 1 YEAR 416-266-3077**

கொள்வனவு விலையில்

## மலிவு விற்பனை



Sealy Posturepedic

Special Sealy Mattress on SALE

ஒரே பிளாசாவில் 4 தனிப்பெரும் ஸ்தாபனங்கள்...

2861 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2S8

(Brimley & Lawrence சந்திப்பில்)


American Standard உபகரணங்கள் நகரிலேயே
மிகச்சிறந்த விலையில்...
Government
Rebate
$1715.00
AC - From $24.99
Furnace - From $24.99
Tankless - From $29.99
Heating & Air-conditioning Contractors
Raman Appliances Inc.
www.raheatingcooling.com
Raman Appliances Inc.
Grand Opening
Brampton Location
Raman Chelliah
105 Kennedy Road, Unit 6 (2nd floor)
Brampton, ON.
(Kennedy & Steeles)
Tel: 647-893-4414
3021 Markham Rd., Unit 51&52,
Scarborough, ON.
(McNicoll & Markham)
Tel: 416.332.1989
Fax: 416.332.4967, E-mail: info@raheatingcooling.com


வீடு தரம் உயர்த்துதலுக்கான
வங்கிக் கடனுதவி...
Roofing
Heating & Air conditioning
Flooring & Kitchen
Landscaping (including Drive way)
Windows & Doors etc...
இந்த சேவைகளுக்கான
கட்டணத்தை
ஒரு வருடம் வரை
செலுத்தத்தேவையில்லை.
போன்றவற்றை உங்கள் வீடுகளில் தரமுயர்த்தும்போது,
இந்த சேவைகளுக்கான வங்கிக் கடனைப் பெறுவதற்கு
ஒழுங்குசெய்து தருகிறோம்.
- digi Media -
Heating & Air-conditioning Contractors
Raman Appliances Inc.
www.raheatingcooling.com
Raman Appliances Inc.
3021 Markham Rd., Unit 51&52, Scarborough, ON.
Tel: 416.332.1989, Cel: 647-893-4414
Fax: 416.332.4967, E-mail: info@raheatingcooling.com





# The Theory of Reliability.
# Proven by Honda

0.9%† PURCHASE FINANCING FOR UP TO 60 MONTHS

## Civic

LEASE FOR /APR $148# @ 2.9%£ PER MONTH FOR 48 MONTHS WITH $3,868 DOWN ON APPROVED CREDIT

$17,420‡ MSRP For Civic DX Sedan Includes Freight & Fees

*"What no competitor matches is this compact's particular fusion of engineering, style, value and reputation for reliability…"*
Consumer Guide
– Sept. 2009



Civic DX Sedan
model FA1E2AEX

**PROVEN: Civic is Canada's best-selling car for the 12th straight year.***

0.9%† PURCHASE FINANCING FOR UP TO 60 MONTHS

## Accord

LEASE FOR /APR $248# @ 2.9%£ PER MONTH FOR 48 MONTHS WITH $5,507 DOWN ON APPROVED CREDIT

$26,475 MSRP For Accord LX Sedan Includes Freight & Fees

*"…what so reliably sets the Accord apart is its platform – as solid and unyielding as a shotgun barrel."*
Car and Driver/10Best
– Jan. 2010



Accord LX Sedan
model CP2E3AE

**PROVEN: Accord has won more Car and Driver 10Best awards than any other vehicle.**

STARTING FROM 0.9%† PURCHASE FINANCING

## Odyssey

LEASE FOR /APR $388# @ 1.9%£ PER MONTH FOR 48 MONTHS WITH $7,206 DOWN ON APPROVED CREDIT

$39,515 MSRP For Odyssey NHL® SE Includes Freight & Fees

*"Top 10 Family Cars"*
Kelley Blue Book
– Feb. 2010



Odyssey NHL® SE
model RL3H5AE

**PROVEN: Odyssey is a true friend of the family.**

0.9%† PURCHASE FINANCING FOR UP TO 48 MONTHS

## CR-V

LEASE FOR /APR $268# @ 3.9%£ PER MONTH FOR 48 MONTHS WITH $5,734 DOWN ON APPROVED CREDIT

$28,015 MSRP For CR-V LX 2WD Includes Freight & Fees

*"Residual Value Award - Best Compact Utility"*
Automotive Lease Guide
– Feb. 2010



CR-V LX 2WD
model RE3H3AEY

**PROVEN: CR-V value starts high, and stays there.**



# ATHEESAN (SHAN) SARVANANTHAN


**CELL (416) 720-1184**

# FORMULA HONDA

2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4. TEL: 416-754-455 EXT.2705, FAX: 416-754-9465

#Limited time lease offers based on new 2010 Honda models. Lease examples based on new 2010 Civic DX Sedan, model FA1E2AEX / 2010 Accord LX Sedan, model CP2E3AE / 2010 CR-V LX 2WD, model RE3H3AEY / 2010 Odyssey NHL SE, model RL3H5AE available through Honda Financial Services on approved credit. £2.9% / 2.9% / 3.9% / 1.9% lease APR for 48 / 48 / 48 / 48 months. Monthly payment (includes freight and PDI, environmental fees and OMVIC fee) is $148 / $248 / $268 / $388. Down payment or equivalent trade of $3,868.30 / $5,506.71 / $5,734.36 / $7,205.74, first monthly payment and $0 / $0 / $0 / $0 security deposit due at lease inception. Total lease obligation is $12,433.70 / $19,809.10 / $21,051.15 / $29,322.61. Taxes, license, insurance and lien registration (if applicable) are extra. 96,000 kilometre allowance; charge of $0.12/km for excess kilometres. Retailer may lease for less. Retailer order / trade may be necessary. †Limited time financing offers based on new 2010 Honda models. Available for 60 months on 2010 select Civic and Accord models; available for 36 months on 2010 Odyssey and available for 48 months on 2010 CR-V models. Finance example based on new 2010 Civic DX Sedan, model FA1E2AEX available through Honda Financial Services on approved credit. ‡MSRP is $17,420 (includes $1,430 freight and PDI, and environmental and OMVIC fees) financed at 0.9% APR equals $297.02 per month for 60 months. Cost of borrowing is $401.43 for a total obligation of $17,821.43. Taxes, license, insurance and lien registration (if applicable) are extra. Retailer may sell for less. Retailer order / trade may be necessary. #/£/†Offers valid from May 2nd, 2010 through May 31st, 2010 at participating Honda retailers. Offers valid only for Ontario residents at Ontario Honda Dealers. Offers subject to change or cancellation without notice. See your Honda retailer for full details. *As reported by Canadian manufacturers for calendar year 2009. NHL and the NHL Shield are registered trademarks of the National Hockey League. © NHL 2010. All rights reserved.

# என் பார்வையில் - கே.எஸ்.பாலச்சந்திரனின் 'கரையைத் தேடும் கட்டுமரங்கள்'



என்.கே. மகாலிங்கம்


என் பார்வையில் -கே.எஸ்.பாலச்சந்திரனின் கரையைத் தேடும் கட்டுமரங்கள் -நாவல்

மிகச் சுருக்கமாகச் சொல்வதானால் இந்த நாவல் அந்தோனி என்ற மீனவ இளைஞ-னின் காதல் கதை. அல்லது அந்தோனி காதல்களில் தோல்வி அடைந்த கதை. முதல் காதலில் தோல்வியடைந்து சோகத்துடன் நின்ற அந்தோனியுடன் ஆரம்பித்த நாவல் முடிவிலும் இன்னொரு காதலில் தோல்வி-யடைந்த அந்தோனியுடனே முடிகிறது. இடை-யில், தகப்பன் மரியாம்பிள்ளை சம்மாட்டி, தாய் மதலேனாள், தமையன், தங்கைகள் எலிசபேத், மேரி, மனைவி சில்வியா, முதல் காதலி செல்வராணி, இரண்டாவது காதலி ஸ்ரெல்லா என்பவர்களுடன் மான்பாய்ஞ்ச வெளி என்ற கிராமமும் ஒரு சில உறவுக் குடும்பங்களும், புங்குடுதீவிலுள்ள மீனவப் பகுதியிலுள்ள ஒரு குடும்பமும் ஊடாடுகின்றன.

மான்பாய்ஞ்ச வெளி மீனவர்கள் தங்கள் கடலில் மீன்பிடித் தொழில் குறைந்த பருவ காலத்தில் புங்குடுதீவு தெற்குக் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்வது வழக்கம். அங்குள்ள மீனவத் தொழிலாளிகள் சிலரை மான்பாய்ஞ்ச வெளி மீனவர்கள் தொழிலுக்கு உதவிக்கு வைத்தும் கொள்வர்.

அந்தோனி முதல் காதலில் தோல்வியடைந்து சோகத்துடனும் துயரத்துடனும் இருக்கையில் குடும்பம் புங்குடுதீவுக்குத் தொழிலுக்குச் செல்லுகின்றது. அவனும் செல்கிறான். போன இடத்தில் இவனுக்கு இரண்டாம் காதல் ஸ்ரெல்லா என்பவளுடன் ஆரம்பமாகின்றது. இவள் கணவனை இழந்த இளம் விதவை. அரசினர் ஆஸ்பத்திரியில் தாதி. அவளுடைய தாய் லூர்த்தம்மா. அவளை அந்தோனியின் தகப்பன் மரியாம்பிள்ளை இளம் கணவனாக இருந்த காலத்தில் புங்குடுதீவுக்குத் தொழி-லுக்குச் சென்ற இடத்தில் 'வைத்திருந்தவன்'. அப்பொழுது ஸ்ரெல்லா சிறு குழந்தை. லூர்த்தம்மாவின் கணவன் அப்பொழுது அவர்களைக் கைவிட்டு வேதாரிணியத்தில் குடும்பமாக போய் விட்டான். லூர்த்தம்மா-வுக்கும் மரியாம்பிள்ளைக்கும் இருந்த உறவு பலருக்குத் தெரியாது.

மரியாம்பிள்ளை, அந்தோனி ஸ்டெல்லா காதலை விரும்பவில்லை. அதனாலும் அந்தோனி, ஸ்டெல்லாவை இன்னொரு ஆடவனுடன் பார்த்து சந்தேகப்பட்டதாலும் இந்தக் காதலும் நிறைவேறவில்லை. அவ-னுக்கு மான்பாய்ஞ்சவெளியின் அருகிலுள்ள கிராமத்திலுள்ள பணக்காரச் சம்மாட்டியின் மகள் சில்வியாவுக்கும் திருமணம் நடக்கிறது. சில்வியா பணக்காரி. படித்தவள் என்ற திமிர் பிடித்தவள். திருமணம் முடித்த நாளிலிருந்தே அவள் அந்தோனியையும் அவன் குடும்பத்-தையும் விரும்பவில்லை. ஏறுமாறாக நடத்து-கிறாள். அதனால் திருமண வாழ்க்கையிலும் அவனுக்குக் காதல் சுகம் கிடைக்கவில்லை. அந்தவேளையில் ஓர் அசம்பாவிதம் நடக்கிறது. அவன் தொழிலுக்குச் சென்ற படகு புயலில் அகப்பட்டுக் காணாமல் போகிறது. படகில் சென்ற அந்தோனியும் மற்ற மூவரும் காணாமல் போய் விடுகிறார்கள். அத்துடன் அவனுடைய குடும்பத்தில் தாய் சாகிறாள். எலிசபெத்தின் திருமணம் தடைப்படுகிறது. தகப்பன் தடுமாறுகிறான். தொழில் பாதிப்படைகிறது. படகுகள் விற்கப்படுகின்றன. சில்வியாவும் ஒரு மைனருடன் ஓடிப் போய் விடுகிறாள். தெய்வாதீனமாக அந்தோனியும் மற்றவர்களும் சென்ற படகு தாய்லந்து தேசத்தில் கரை-யொதுங்குகிறது. அதிலிருந்த இருவர் இறந்து



விட அந்தோனியும் மற்ற இருவரும் இலங்கை திரும்புகின்றனர். அந்த இடைவெளிக்குள் தாயில்லை. மனைவி வேறொருவனுடன் ஓடி விட்டாள். ஆகவே, அவனுடைய அண்ணியின் தூண்டுதலில் திரும்பவும் புங்குடுதீவுக்கு ஸ்டெல்லாவிடம் காதலைத் தேடி ஓடுகிறான். அங்கும் அவளுக்கு கணவனின் தம்பியை திருமணம் செய்யப்பட்டு விட்டதை ஸ்டெல்லா தெரிவிக்கிறாள். திரும்பவும் அந்தோனி காதல் தோல்வியில் சோகத்துடன் நிற்கிறான். அத்துடன் நாவல் முடிகின்றது.

இந்த நாவலில் சில சிறப்புக்கள் உள்ளன. முதலாவது, நாவலை வாசகன் தங்குதடை-யின்றி ஒரே இருப்பில் வாசிக்கக் கூடியதாக நேர்கோட்டில் கதை செல்கிறது. ஆசிரியர் நல்ல கதைசொல்லி. இரண்டாவது, யாழ்ப்-பாணத்து மொழிநடை. அதனால் நாவல் எந்தவகையிலும் எமக்குச் சிரமம் தரவில்லை. மண்வாசைனயை ஒட்டிய உரையாடல்களும் சொற்களும், சொல்லாடல்களும், பின்னணியும், காட்சிகளும் கதையை ஓட்டிச் செல்வதனால் கதைக்கு ஒரு உண்மைத்தன்மை (credibility) உள்ளது. அதனால் இப்படியும் நடக்குமா என்ற ஆதங்கமோ வியப்போ படத் தேவை வரவில்லை. புயலில் அகப்பட்ட படகொன்றில் சென்ற மீனவர்கள் தாய்லாந்தில் அடைந்து திரும்பிய கதை ஒன்றும் யாழ்ப்பாணத்தவ-ருக்குத் தெரியாததல்ல. எனவே, அதுவும் சாகசக் கதையின் அம்சமல்ல. மூன்றாவதாக, சோக உணர்ச்சிகள், இரக்கம், குடும்ப உறவு, அன்பு, பாசம், பொறுப்புணர்வு ஆகிய அறங்கள் எல்லாம் மீறப்படாமலே அப்படியே படம்-பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. அவை வாசகர்-களை உருக வைத்து நாவலை விடாமல் வாசிக்கத் தூண்டுகின்றன. நாலாவது, மீனவர்களின் வாழ்வியல், நடைமுறைகள், சம்பிரதாயங்கள், தொழில் நடவடிக்கைகள், தொழில் நுட்பங்கள், போன்றவை அனைத்-துமே நுட்பமாக அவதானிக்கப்பட்டு எழுதப் பட்டுள்ளன. ஐந்தாவது, யாழ்ப்பாணக் கிராமங்-களினதும், குறிப்பாகப் புங்குடுதீவுக் கிராமத்-தினதும் புவியியல் அமைப்பும் இடங்களும் நுட்பமாக அவதானிக்கப்பட்டுள்ளன. வாடைக் காற்று, கச்சான் காற்று, சோளகக் காற்று முதலியவைகள் அவற்றின் திசைகள், போக்கு-கள், காலங்கள், படும் மீன்கள், வலைகள், படகுகள் எல்லாம் முறையாகக் கவனிக்கப் பட்டு பொருத்தமாக எழுதப்பட்டுள்ளன. இவ் வகைகளில் வாசக ருசிகள் கவனிக்கப் படுகின்றன. அந்தவகையில் இந்த நாவல் வெற்றியே.

அவற்றை விட, தமிழிலக்கியத்தில் இந்த நாவலின் இடம் எது அல்லது ஈழத்திலக்கிய வரலாற்றில் இந்த நாவலின் இடம் எது என்று கேள்விகள் கேட்கப்பட வேண்டும் என்று நினைக்கிறேன். அப்படிக் கணிப்பீடு செய்ய நவீன நாவலுக்குரிய சில அம்சங்களை இங்கே கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என்றும் நினைக்கிறேன்.

எந்த இலக்கியப் படைப்புமே இலக்கிய வரலாற்றில் எக்கால கட்டத்தைச் சேர்ந்தது என்று நிர்ணயிக்கப்பட வேண்டும். அந்த வகை-யில் இந்த நாவலின் காலமும் களமும் யாழ்ப்பாணத்தில் 1980களுக்கு முன்னர் நடந்-தவை என்று அனுமானிக்கலாம். ஏனென்றால், அதன் பிறகு ஒரு யுகப்புரட்சியே நடைபெற்று முடிந்திருக்கின்றது. இந்த நாவல் யாழ்ப்பாணக் கிராமங்கள் இயல்வு நிலையில் இருந்த காலத்தில் நடைபெற்றுள்ளன. இப்பொழுதோ, 1980களுக்குப் பிறகோ இருந்த அரசியல் சூழலோ, சமூகச் சூழலோ அங்கிருக்கவில்லை. 30 வருட யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இருந்த காலமும் களமுமே இந்தக் கதைக்-கானவை. அதுதான் வன்முறை அரசியல், இயக்கக் கெடுபிடிகள், யுத்தங்கள், இடப்-பெயர்வுகள் முதலியன நடைபெறாத காலம்.

எந்த நாவலும் ஒரு அரசியல் சூனியப் பிர-தேசத்தில் நடைபெறாது. அது சாடைமாடை-யாகக் கூட இந்த நாவலில் கோடிகாட்டப்-படவில்லை. ஆனால் இந்த நாவல் பிரசுர-மாகியதை வைத்து (இது 2009இல் தான் வெளிவந்தது) இந்த நாவலின் இலக்கிய வரலாற்றுக் காலப் புள்ளியை குறிப்பிட முடியாது. ஆகவே, இந்த நாவலை நாம் ஒரு முப்பது வருடங்கள் முன் தள்ளி வைத்தால் அக்காலத்தில் இலங்கையில் வெளிவந்த நாவல்களுடன் இதை ஒப்பீடு செய்யலாம். அதுவே இந்நாவலின் இருப்பையும் தரத்தை-யும் நியாயப்படுத்த எடுத்துக் கொள்ள வேண்டிய அளவீடுகள். இன்றைய நவீன, அல்லது பின் நவீன நாவல்களுடன் ஒப்பிடுவது

தொடர்தல் 71ம் பக்கம்

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...
Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com
COLDWELL BANKER


# மண்ணாய்ப் போன ஏரி



குரு அரவிந்தன்

சண்டிலிப்பாய் என்ற ஊர் இலங்கையில், யாழ்ப்பாணக் குடாநாட்டில், வடக்கே அளவெட்டியையும் தெற்கே மானிப்பாயையும் மேற்கே சங்கானையையும் எல்லையாகக் கொண்ட ஒரு விவசாயக் கிராமமாக இருந்தது. வயலும் வயல் சார்ந்த இடமாயும், சங்க இலக்கியத்தில் குறிப்பிட்ட மருத நிலமாயும் இருந்த இந்த ஊரின் வயல்களுக்கு மேற்குப் புறமாக சில இந்துக் கோயில்கள் அடுத்தடுத்து வரிசையாக இருந்தன. சுண்ணாகத்தில் இருந்து கந்தரோடை வீதி வழியாக மாசியப்பிட்டி நோக்கிச் செல்லும் போது, இரண்டு பக்கமும் இந்த வயல் வெளி மிகவும் அழகாகப் பச்சைப் பசேல் என்று காட்சிதருவதை அவதானிக்க முடியும். மேற்குப் பக்க வயல்வெளியின் நடுவே, பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக தெப்பக் குளமொன்று இருந்தது. மழை காலத்தில் இந்தக் குளத்தில் நீர் நிரம்பி இருக்கும். குளத்தின் ஒரு பக்கத்தில் தாமரைக் கொடிகள் படர்ந்திருக்கும். இயற்கை அழகை ரசிக்கத் தெரியாதவர்கள் கூட, குளத்திலே தாமரைப் பூக்கள் மலர்ந்திருக்கும் அழகான காட்சியை குளக்கட்டில் உட்கார்ந்து மணிக்கணக்காக ரசித்துக் கொண்டேயிருப்பார்கள். வெய்யிலின் அகோரத்தைத் தணிப்பதற்காகவே தென்றல் வந்து மெல்லத் தழுவிச் செல்லும் அந்த இடத்தில் அப்படி ஒரு குளம் பச்சைப்பசேலென்ற வயலின் நடுவே அமைந்திருப்பது அழகோ அழகு. இந்தக் குளம் எப்பொழுதும் தாமரைப் பூக்களால் நிறைந்திருந்ததால் பூ + அல் என்றும், அதனால்தான் இதைப் பூவல் என்றும் அழைத்தார்களோ தெரியவில்லை. இப்படி ஒரு பெயரைச் சொல்லி, அந்தக் குளத்தை அழைப்பதற்குக் கட்டாயம் ஒரு காரணகாரியம் இருந்திருக்கும். வண்டினங்கள் ரீங்காரம் செய்தபடி மலர் விட்டு மலர் தாவித் திரிவதையும், கரும் பச்சைத் தவளைகள் தாமரை இலையில் காலை நீட்டி உட்கார்ந்து ஓய்வெடுப்பதையும், வேடிக்கையாகக் கல்லெறிந்தால் கண்மூடிக் கண் திறப்பதற்குள் தண்ணீரில் தாவிப்பாய்ந்து மாயாஜாலம் செய்வதையும், குளத்து மீன் பிடிக்க வெள்ளைக் கொக்குகள் கரையில் தவமிருக்கும் அழகையும் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருக்கலாம். ரோஜா மலர்களுக்கு எப்படி முட்கள் பாதுகாப்பாக இருக்கின்றனவோ, அதே போல தாமரை மலர்களுக்கு அதன் கொடிகள் பாதுகாப்பாய் இருப்பது பலருக்குத் தெரியாது. வீட்டிற்குத் தெரியாமல், புதிதாக இந்தக் குளத்திற்கு நீந்திப் பழகவரும் சிறுவர்களுக்கும் தண்ணீருக்கு அடியில் தாமரைக் கொடியின் வடிவில் இருக்கும் இந்த ஆபத்து தெரிந்திருக்கவில்லை.

பரமரகசியம் போல இருந்த இந்த ஆபத்தைப் பற்றிச் சொல்லித் தந்தவர் எங்களுக்கு உள்ளூர் நீச்சல் பயிற்றுநராக இருந்த தன்னார்வத் தொண்டரான வன்னியசிங்கம் அங்கிள்தான். ஏனென்றால் தப்பித்தவறி வீட்டிலே இதைப் பற்றி மூச்சு விடப்போய், அதனால் நீச்சல் வகுப்பு பற்றிய விடையங்களும் வெளிவந்து விடும் என்பதால் தான் இது முக்கியமான ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. சண்டிலிப்பாய் சிறுவர்களும், இளைஞர்களும் நீச்சல் பழகும் தடாகமாக இந்தப் பூவல் குளம் மாறியிருந்ததால் எப்பொழுதும் சிறுவர் கூட்டமொன்று ஒல்லித் தேங்காயுடன் அவருக்குப் பின்னால் திரியும். பொதுவாக நீச்சல் பழகுவதற்கு அனேகமானவர்கள் சற்றுத் தள்ளியுள்ள கீரிமலைக் கேணிக்குத்தான் செல்வது வழக்கம். கீரிமலைக்கு அடிக்கடி போவதற்கு எல்லோருக்கும் வீட்டிலே அனுமதி கிடைப்பதில்லை. எனவேதான் வீட்டிலே தெரியாமல் நீச்சல் பழக விரும்பும் சிறுவர்கள் இந்தக் குளத்தில் போய் நீச்சல் பழகுவார்கள். நீச்சல் கற்றுக் கொள்வதற்கு ஒல்லித் தேங்காயைப் பயன்படுத்துவார்கள். இரண்டு ஒல்லித் தேங்காய்களை எடுத்து அவற்றின் நாரை உரித்து இரண்டையும் சேர்த்து ஒரு முடிச்சுப் போட்டு வைத்திருப்பார்கள். உள்ளுக்குள் ஒன்றுமற்று காய்ந்த தேங்காயைத்தான் ஒல்லித் தேங்காய் என்பார்கள். அதைக் கட்டித் தண்ணீரில் போட்டு அதன்மேல் குப்புறப்படுத்து நீச்சலடிப்பார்கள். இங்கே நீச்சலின் முதலாவது பாடம் தாமரைக் கொடியால் வரக்கூடிய ஆபத்து பற்றியதாக இருந்தது. இரண்டாவது பாடம் இடுப்பளவு தண்ணீரிர் இறங்கி நிற்பது. மூன்றாவது பாடம் ஒல்லித் தேங்காயில் குப்புறப் படுத்துக் கொண்டு கையையும் காலையும் அடிப்பது. நீச்சலடிக்க வேண்டும் என்றால் தண்ணீரில் இறங்கித்தானேயாக வேண்டும் என்ற உண்மையை, ஊரிலே பெரியவர்கள் உவமானமாக அடிக்கடி சொல்லிக் காட்டுவதுண்டு. இந்த மூன்றையும் சரியாகச் செய்தால் முதலாவது நாளே ஓரளவு நீச்சல் கற்றுக் கொண்டு விடுவார்கள். ஆனால் இங்கே முக்கியமாக நீச்சல் பழகுகிறவர்கள், இவை எல்லாம் ஆரம்பிக்குமுன் பயிற்றுநருக்கு





ஒரு வாக்குறுதி கொடுக்க வேண்டும். அதாவது ‘பெரியவர்கள் யாரும் அருகே இல்லாத நேரத்தில் தனியாகச் சிறுவர்களாகிய நாங்கள் நீச்சல் குளத்தில் இறங்கமாட்டோம்’ என்று முதலில் வாக்குக் கொடுக்க வேண்டும். அதைத் தவறுவதில் உள்ள ஆபத்து அப்போது விளங்காவிட்டாலும், கொடுத்த வாக்கைத் தற்செயலாக மீறும்போது, தாமரைக் கொடியில் சிக்கிக் கொண்டு உயிருக்குப் போராடும் போது பலருக்கு உடனே புரிந்து விடும். அப்படி நடந்த சில சம்பவங்களும் அங்கே உண்டு.

வழுக்கையாறு சண்டிலிப்பாய்க்கு வடக்கே உள்ள பெருமாக்கடவையில் ஆரம்பமாகி, அளவெட்டி வழியாக வந்து, கந்தரோடை வீதியைக் கடந்து ஆலங்குளாய் வழியாகத் தான் ஓடிப்போய் ஐந்துகண்மதகையும் கடந்து மேற்கே நவாலியூடாகச் சென்று அராலிக் கடலில் சங்கமமாகிறது. நாட்டின் போர்ச் சூழ்நிலை காரணமாக, கவனிப்பார் அற்ற நிலையில் வழுக்கியாற்றின் பாதை தடைப்பட்டபோது இப்பகுதிக்கான தண்ணீரும் தடைப்பட்டுப் போனது. அதனால் இப்பகுதிக் குளங்களும் தண்ணீர் கிடைக்காமல் வற்றிப் போயின. அந்த மண்ணிலே நடக்கும் அநியாயத்தைத் தட்டிக் கேட்க ஆட்கள் இல்லாததாலோ என்னவோ, மாரி மழைகூடச் சில சமயங்களில் பொய்த்துவிடும். தொடர்ந்து மழை இல்லாததால் குளம் வற்றிப் போய்விடவே, அற்றகுளத்து அறுநீர்ப்பறவைகள் போல, போர்ச் சூழல் காரணமாகவும், சீவனத்திற்கு வயலை நம்பியிருந்ததன் காரணமாகவும் சில குடி மக்களும் தற்காலிகமாகக் குடிபெயர்ந்து வேறு இடம் தேடிப் போய்விட்டனர். அடுத்த தலைமுறையினருக்கு இந்தக் குளத்தில் தான் நாங்கள் சின்ன வயதில் நீச்சலடித்துப் பழகினோம் என்று வற்றிப்போன குளத்தின் புகைப் படத்தைக் காட்டினால், கட்டாந்தரையிலா நீச்சலடித்தீர்கள் என்று எங்களை ஏளனமாய்ப் பார்க்கிறார்கள். பல்கலைக் கழகத்திற்கு முதன் முதலாகப் போகும்போது பகிடிவதை பண்ணுவதற்காக மணவ, மாணவிகளை கட்டாந்தரையில் படுக்க வைத்து நீச்சலடிக்கச் சொல்வதுண்டு. அதுபோலத்தான் நாங்களும் நீச்சல் பழகிய கதை என்று இளைய தலைமுறையினர் எங்களைப்பற்றி நினைத்தார்களோ தெரியாது.

காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு என்று ஊரிலே பழமொழி சொல்வார்கள். மண்பற்றுக் காரணமாக இந்த ஒரு சின்னக்குளம் வற்றிப் போய், தூர்ந்து போனதற்கே ஊர் மக்கள் எல்லாம் குழம்பிப்போய்ப் பெரிதாக ஆரவாரம் செய்யும்போது, ரஸ்யாவில் பெரியதொரு கடல் போன்ற ஏரி திடீரென வற்றியபோது அந்த மக்கள் என்ன பாடுபட்டிருப்பார்கள் என்று நினைத்துப் பாருங்கள். உங்களால் இதை நம்பமுடியவில்லை அல்லவா, ஆனாலும் அதுதான் உண்மை. இப்போது உலகப்படத்தில் மட்டும்தான் அந்த ஏரி தன் கடந்தகால இருப்பை உறுதி செய்து நிற்கின்றது. ‘மண்ணாய்ப்ப போன ஏரி’ என்று அந்த ஏரியை நம்பி வாழ்ந்தவர்கள் இப்பொழுதும் திட்டித் தீர்க்கிறார்கள். மத்திய ஆசியாவில் உள்ள சோவியத் யூனியனில் இருந்த ஏரல் (Aral sea) என்ற ஏரிதான், ஒருகாலத்தில் உலகத்திலே இருந்த ஏரிகளில் நாலாவது மிகப் பெரிய ஏரியாக இருந்தது. வடக்கே கஸாக்ஜ்தானையும், தெற்கே உஸ்பெகிஸ்தானையும் எல்லையாகக் கொண்டிருந்தது. உலக வரைப்படத்தில் (45N 60E) மிகவும் தெளிவாக இந்த ஏரி குறிக்கப்பட்டுள்ளது. இந்த ஏரி 1960ல் 68,000 சதுர கிலோ மீற்றர் பரப்பைக் கொண்டிருந்தது. சுமார் 1,500 சிறிய தீவுகள் இந்த ஏரல் கடலில் இருந்தன. இந்த ஏரியை நம்பிச் சுற்றியுள்ள பல கிராமங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தன. முக்கியமாக ஏரியின் கரையில் இருந்த முனாக் என்ற நகரம், ரஸ்யாவிலே மீன்பிடித் தொழிலுக்குப் பேர்போனதாக இருந்தது. சோவியத் யூனியனின் இரண்டு பெரிய யுத்தக் கப்பல்கள் 1851ல் இந்தக் கடலில் கண்காணிப்புச் சேவையில் ஈடுபட்டிருந்தன என்றால் நீங்கள் நம்ப மாட்டீர்கள்.

சோவியத் யூனியனில் ஏற்பட்ட தொழிற் புரட்சி காரணமாக 1918ல் இந்த ஏரியில் வந்து விழுந்த அமுதார்யா, சித்தார்யா என்ற ஆறுகள் நெல்லு, பருத்திச்செடிச் செய்கைக்காக ஏற்படுத்தப்பட்ட நீரணைத் திட்டத்திற்காகத் திசை திருப்பி விடப்பட்டன. வெள்ளைத் தங்கம் என்று சொல்லப்படுகின்ற பருத்திச் செடியின் விளைச்சலுக்கு தண்ணீர் திசை திருப்பியது உதவியாக இருந்தாலும், அதனால் இந்தப் பிரமாண்டமான ஏரிக்கு நீர் பற்றாக் குறை ஏற்பட்டது. இன்று பருத்தி ஏற்றுமதி செய்யும் இடங்களில் முக்கிய இடத்தை உஸ்பெகிஸ்தான் வகித்தாலும், இந்த ஏரிக்குச் சென்றடைந்த நீர் தடுக்கப் பட்டதால், 1960ம் ஆண்டளவில் இந்த ஏரி மெல்ல மெல்லச் சுருங்கத் தொடங்கியது. ஒவ்வொரு வருடமும் சராசரி எட்டு அங்குல நீர்மட்டம் குறைந்து கொண்டே சென்றது. 1964ம் ஆண்டிலேயே இந்த ஏரி விரைவில் தொலைந்து போய்விடும் என்பதைச் சோவியத் அரசியல் வாதிகள் அறிந்திருந்தனர். தண்ணீர் பற்றாக குறை காரணமாக 1998ல் இரண்டாகப் பிரிந்த இந்த ஏரியில், மொத்த ஏரியின் 10 வீதம் மட்டுமே எஞ்சி இருந்தது. இதனால் வடக்கே இருந்த ஏரியை வடஏரல் என்றும், தெற்கே இருந்த ஏரியைத் தென்ஏரல் என்றும் அழைத்தனர். 2004ல் இந்த ஏரி 17,160 சதுர கிலோ மீற்றர் பரப்பாகக் குறைந்து விட்டது. படிப்படியாகத் தண்ணீர் வற்றத் தொடங்கவே மீண்டும் இந்த ஏரி 2007ம் ஆண்டு மூன்றாகப் பிரிந்து போனது. 2008ம் ஆண்டு 138 அடி ஆழமாக இருந்த தென் ஏரல் ஏரியும் 2009ம் ஆண்டு முற்றாகத் தண்ணீர் வற்றிப்போகவே, ஏரி இருந்த இடமே தெரியாமல் தொலைந்து போய்விட்டது. ஒன்றாறியோ வாவியும், எரிவாவியும் சேர்ந்தால் எவ்வளவு நீரைத் தன்னகத்தே கொள்ளுமோ அந்தளவு நீரை ஏரல் ஏரி இழந்திருந்தது. இதனால் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த நகரத்து மக்கள் தொழிலை இழந்தது மட்டுமல்ல, அவர்களது விலைமதிப்பற்ற மீன்பிடிப் படகுகளின் இறுதிக்கால மயானமாகவும் அந்த ஏரி மாறிவிட்டது. இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் தங்கள் நினைவுகளை மீட்பதற்காக இப்பொழுதும் அப்பகுதிக்குச் சென்று வருகிறார்கள். அந்த மண்ணாய்ப்போன வரண்ட ஏரியில் கைவிடப்பட்ட படகுகளின் நிழலில் ஒட்டகங்கள் படுத்திருக்கும் காட்சியைத்தான் அவர்களால் இப்போது காணமுடிகிறது. ஏதோ காரணத்தால், இழந்துவிட்ட ஒன்று மீண்டும் கிடைக்கப் போவதில்லை என்பதால், அந்த ஊர்மக்கள் பழைய நினைவுகளை மட்டும் அசைபோட்டு தங்களைத் தாங்களே திருப்திப்படுத்திக் கொண்டு வாழப்பழகிக் கொண்டிருக்கிறார்கள்.

kuruaravindan@thaiveedu.com

■ ■ ■

எலி பூச்சித் தொல்லையா...?
RUBAN PEST CONTROL

- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- தொழிற்சாலைகள்
- வியாபார நிலையங்கள்

ஆகிய அனைத்து இடங்களிலும் எலி, பூச்சித் தொல்லைகளை அறவே நீக்க அழையுங்கள்!
KANTHAN
416•291•3997

# என் பார்வையில்...

69ம் பக்கத் தொடர்ச்சி...

முறையல்ல. இந்நாவல் எழுதப்பட்ட அக்காலத்தில் தான் முற்போக்கு நாவல்களும், செங்கையாழியானின் வாடைக்காற்று, பாலமனோகரனின் நிலக்கிளி போன்ற நாவல்களும் வெளிவந்திருந்தன.

அத்துடன் 70-80 காலத்தில் மீனவர் வாழ்க்கையை வைத்து சில நாடகங்களும் சினிமாவும் வெளிவந்துள்ளன. மஹாகவியின் புதியதொரு வீடு நாடகம். அதே காலத்தில் ஐரிஷ் நாடகாசிரியரான ஜே.எம். சிஞ்சின் Riders to the Sea என்ற கடல் சார்ந்த நாடகம் ஒன்றை ஆங்கில விரிவுரையாளர் கந்தையா மேடையேற்றினார். தகழியின் செம்மீன் நாவல் சினிமாவாக்கப்பட்டு மக்கள் மனதைக் கவர்ந்திருந்தது. அந்நாவலை சுந்தர ராமசாமி மொழிபெயர்த்தும் இருந்தார். அதைப் பரவலாகப் பலரும் வாசித்தும் இருந்தனர்.

செம்மீன் சினிமாவில் (நாவலிலும்) கறுத்தம்மா கணவன் பழனி கடலுக்குப் போயிருந்தபோது பழைய காதலன் பரிக்குட்டி சோகமாகப் பாடிக் கொண்டிருந்ததைக் கேட்டு, காதலைத் துறக்க முடியாமல் அவனுடன் மீண்டும் தொடர்பு வைப்பாள். அதேபோல இந்த நாவலிலும் அந்தோனி கடலுக்குப் போயிருந்தபோது சில்வியா தன் காதலனுடன் போய் வருவாள். செம்மீனிலும் கடலன்னை அதைப் பொறுக்காமல் கணவனை தனக்குள் இழுத்துக் கொள்வாள். இங்கும் அந்தோனி சென்ற படகு புயலில் மாட்டிக் கொண்டு அவனும் காணாமல் போய் விடுவான். அந்த ஐதிகம் தெரிந்தோ தெரியாமலே இந்த நாவலாசிரியரையும் பாதித்திருக்கிறது.

இந்த நாவல் நேரடியான கதை சொல்லல் முறையில், யதார்த்தப் பண்பில் சொல்லப்பட்டுள்ளது. சிலவேளை யதார்த்த வாதப் பண்புக்கும் இயற்பண்பு வாதத்திற்கும் இடையே இந்நாவல் ஊடாடுகிறது. அதாவது, யதார்த்தத்தை அப்படியே பிரதிபலிப்பது, மற்றது இயற்கையை அப்படியே படம்பிடிப்பது. நவீன நாவல்கள் வளர்ச்சியடைந்து பல நவீன உத்தி முறைகளைக் கையாண்டு, நவீன, பின் நவீனப் புனைவுகளாக வளர்ந்தும் விட்டன. பல அவிழ்க்க முடியாத முடிச்சுக்களை வாசகர்களே அவிழ்க்க விட்டு ஆசிரியர் மறைந்தும் நிற்கிறார். வாசக வெளிக்கும் மௌனத்துக்கும் கற்பனைக்கும் இடம் விட்டு விடுகிறார். இந்த நாவலின் ஆசிரியர் வாசகனுக்கு எந்தத் தொல்லையும் கொடுக்காமலே அவரே அனைத்தையும் சொல்லி விடுகிறார். உதாரணமாக, சில்வியா ஏன் மைனரை நாடிப் போனாள் என்பதற்கு அந்தோனி தன் பழைய காதலியை நினைத்துக் கொண்டிருப்பதால் தன்னைத் தொடுவதே இல்லை, அதனால் தான் வேறோருவனிடன் போக வேண்டி வந்தது என்கிறாள். இதை வாசகனே உய்த்துணர வைத்திருக்க வேண்டியது நாவலாசிரியனின் வேலை. விளக்கம் கொடுப்பதில்லை. பாத்திரங்கள் மூலமாகக் கூட.

நாவலாசிரியர் ஒரு மேடை நாடக நடிகர். வானொலி நாடக நடிகர். அருமையான குணசித்திர நடிகர். அவை 50-60 தமிழ் சினிமாவில் அதிகம் காணக் கூடிய பண்பு. ஒரு மெலோடிராமாவுக்குரிய - மிகையுணர்ச்சிக் குரிய - பல அம்சங்கள் இதிலுள்ளன. குறிப்பாக, அந்தோனியின் பாத்திரம். இந்த நாவல் தமிழ் சினிமாக் கதையின் அம்சங்கள் பலவற்றைக் கொண்டதாக உள்ளது. முக்கியமாக, சில்வியா என்ற பாத்திரம் சினிமாவில் வரும் அச்சொட்டான வில்லியாகவே உள்ளாள். மற்றப் பாத்திரங்கள் பலவும் அப்படியே உள்ளன. அந்தோனி, அவனுடைய தமையன், தங்கை எலிசபெத், கறுப்பு வெள்ளைப் பாத்திரங்கள் அடங்கிய தமிழ் சினிமா உலகம்.

நாவலில் இரண்டு பகுதி மீனவர்களும் கத்தோலிக்க சமயத்தவர்கள். அது ஓர் ஒற்றுமை. அதனால் அவர்களிடையே வேறு வேற்றுமைகள் இல்லை என்று சொல்ல முடியாது. உதாரணமாக, மான்பாய்ஞ்சவெளி மீனவர்கள் கரையார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். புங்குடுதீவு மீனவர்கள் வேர்க்குத்திப் பறையர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். அந்த இரு சமூகங்களிடையேயும் பெண்கள் ‘கொள்வனவு கொடுப்பனவு’ இருக்குமோ என்று எனக்குத் தெரியாது. அதுவும் திருமண பந்தம் செய்யும் அளவுக்கு. வேர்க்குத்திப் பறையர் மீன் தொழில் செய்வதை மறந்து பல நூற்றாண்டுகளாகி விட்டன. அவர்கள் போர்த்துக்கீசர் காலத்திலேயே கத்தோலிக்கராகி விட்ட ஊர் மக்கள். நாவலாசிரியர் கூறுவதுபோல அவர்கள் அங்கு தங்கி விட்ட மீனவர்கள் அல்ல. டச்சுக்காரர் காலத்தில் அவர்களில் பெரும்பான்மையினர் புடவைக்குச் சாயம் போட்டனர். அதனால் அவர்கள் வேர்க்குத்திப் - வேல்குத்திப் - பறையர் என்று அழைக்கப்பட்டனர். பின்னாளில் அத்தொழில் மறையவே அவர்கள் பல தொழில்களையும் செய்தனர். வலை போட்டு மீனும் பிடித்தனர். கட்டிட வேலை செய்தனர். ஓலை வெட்டினர். தோட்டத்தில் உதவியாளராக இருந்தனர். திருகோணமலை துறைமுகத்தில் வேலை பார்த்தனர். இளம் பரம்பரையினர் படித்து அரச உத்தியோகம் பார்த்தனர். ஆனால் தோணி வைத்து மீன் பிடித்த இன்னொரு சமூகம் புங்குடுதீவில் இருந்தது. அவர்கள் திமிலர். அவர்கள் சைவ சமயத்தவர்கள். இவற்றைக் குறிப்பிட வேண்டி வந்ததற்குக் காரணம், சமூகக் கட்டமைப்பில் இன்னும் யாழ்ப்பாணம் சாதி அடுக்குச் சமூகமே. ஊர் விட்டு ஊர் போனாலும் - அதாவது மான்பாய்ஞ்சவெளியிலிருந்து புங்குடுதீவுக்குப் போனாலும் சரி, நெல்லியடிக்குப் போனாலும் சரி, தேசம் விட்டு தேசம் சென்றாலும் சரி, சாதியம் தீய ஆவியைப் போலத் தொடர்ந்து கொண்டு தான் போயிருக்கிறது, போய்க் கொண்டிருக்கிறது. தூய சவேரியார் வந்து மதம் மாற்றினால் போல அது மறைந்து விடவில்லை. அதுவும் 80களுக்கு முதல்.

இறுதியாக, ‘கரையைத் தேடும் கட்டுமரங்கள்’ என்பது அருமையான உருவகம்.

mahalingam.k@thaiveedu.com

■ ■ ■


## Driving School

ஓட்டுனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை, நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி G1, G2 தேர்வுப் பயிற்சிகள், போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள், வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள், வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்.

நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி

General Driving School

Ministry of Transportation Approved Instructor

பேரின்பநாதன் வேந்தன்

416-731-2829

# INCOME TAX

**Keele & Finch**
1315 Finch Ave. West, Unit 407
647-885-3012

**Markham & Denision**
23 Taplane Dr.
416-494-4777

LIFE INSURANCE | CRITICAL ILLNESS INSURANCE
NON MEDICAL INSURANCE | RESP | RRSP

- ஆயுட்காப்புறுதி
  10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்தி முடிக்கலாம்
- வயோதிபர்களுக்கான காப்புறுதி
  மருத்துவ பரிசோதனை எதுவும் இல்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
  காப்புறுதித் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது கட்டிய பணம் முழுவதும் திரும்பப் பெறலாம்.
- குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்
  20% அரச மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15% சலுகையும் வழங்கப்படும்.
- ஈட்டுக்கடன் காப்புறுதி
  Mortgage Insurance




வசந்த் விநாயகமூர்த்தி
காப்புறுதி முகவர்
647-885-3012

LILAND INSURANCE INC.   IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.

759 Warden Ave. Toronto, ON. M1L 4B5 Tel : 416-759-5453 ext. 362

# CTR தகவல் பலகை

### ROOMS / BASEMENT RENT

**ELLESMERE & MORRIS**
2 bedroom basement
Mahendiran: 647 350 3418, 416 938 3418

**NEILSON & MCLEIVEN**
1 Bed room for rent
Nathan: 647-427-7747

**MARKHAM & ELLSON**
2 bedroom basement
Sutha: 905294 5868, 416 686 4859

**EGLINTON & BIRCHMOUNT**
1 Bedroom Basement for Rent
(From June 1st)
Ranjan 416-937-2727

**BRIMLEY & EGLINTON**
2 Bedroom Basement for rent
Nathan 416-264-6113

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom Basement
Separate entrance/Parking
Sothy 416-284-7435

**REXDALE & KIPLING**
2 Bedroom Basement (Near all facility)
Mano 416-746-5018

**MORNINGSIDE & OLDFINCH**
2 Bedroom Basement
Separate Entrance
Gjanaa 416-286-6489, 416-716-5053

Highway 50 & Highway 7 (Brampton)
New Condo for rent
Kumar 416-400-2222

**MCCOWAN & STEELES**
2 Bedroom basement for rent (from June)
Separate entrance
Maaran 647-993-6103

**10 TUXEDO CRT**
Thiyagaraja: markham and ellesmere
1 room rent
416 430 0140

**JANE & FINCH**
Condo, 1 room for rent
Senathini: 416 514 1661

**TAPSCOURT & FINCH**
1 bedroom basement for rent
Siva: 416 768 4246

**MORNINGSIDE & LAWRENCE**
2 bedroom basement for rent
Renuka: 416 284 7435

1 bedroom basement
Separate entrance
Car parking/internet
Roshan: 905 403 9093, 416 836 2445

**KIPLING & STEELES**
2 bedroom basement
Manookaran: 416-746-5018

**BRIMLEY & EGLINTON**
2 bedroom basement
Nathan: 416-264-6113, 416-301-3076

### HOUSE FOR RENT

3 bedrooms upstairs
2 bedrooms downstairs
Thurairajah: 905 949 1075

**MCCOWAN & DENISION**
3 bedroom house for rent
Eswary: 905 209 1744, 647 885 4135

### HOUSE FOR SELL

**BRAMPTON**
3000 sq feet House for sell
Kumar: 416-400-2222

**MARKHAM AREA**
4 bedroom house
Ranjan: 647 801 5501

**EGLINTON & BIRCHMOUNT**
House for Sale (Semi Detached 3 Bedrooms)
Near Canada Kandaswamy Temple
Sri 416-823-3552

### BASEMENT WANTED

**KENNEDY & EGLINTON**
2 bedroom basements wanted
Kumar: 416-804-3220

1 bedroom basement needed
Sundar: 416-431-5889

### AUTO

**97 TOYOTA COROLLA DX**
274km $ 1500
Sivaratnam: 416-995-3662

**97 RV4 TOYOTA 250KM**
Green-winter tires
Selvakumar: 416-291-4340

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

**McGowan & Lawrence**
2 Bedroom Basement for rent
Separate entrance
Gnanam 647 829 8082


**A Z வாகன சாரதிகள் தேவை**

கனடாவிற்குள் கனரகவாகனம் செலுத்துவதற்கு மூன்றுவருடத்திற்கு மேல் அனுபவமுள்ள A Z வாகன அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் சரதிகள் தேவை.

தொடர்புகட்கு:
பிரபா: 416 716 6785

NEW HOUSE BASEM FOR RENT
**NEILSON & FINCE**
1 Bedroom Basement for rent
Separate entrance
Sivaraj:
**416 659 5536**

# துயர் பகிர்வோம்



## திரு. தியாகராஜா ஜெயதாசன் (ஜெயா)

துன்னாலை வடக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திரு. தியாகராஜா ஜெயதாசன் 27.04.2010 அன்று காலமானார்.

அன்னார் தியாகராஜா - பூமணி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற தர்மலிங்கம் - மகேஸ்வரி தம்பதியினரின் மருமகனும், சுபதினியின் அன்புக் கணவரும், தனுஷாந்தன், ஷகிலன் ஆகியோரின் தந்தையும், மனோரஞ்சிதம் (இலங்கை), ஈஸ்வரதேவி (பிரான்ஸ்), பாலதாசன் (கனடா), இந்திராணி (இலண்டன்), இந்துமதி (பிரான்ஸ்), ரஞ்சிதமலர் (இலங்கை), லோகதாசன் (இந்தியா), ரோகினி (சாம்பியா), ஆகியோரின் சகோதரரும், பவானி (இலங்கை), நளினி (இலங்கை), ரவீந்திரன் (பிரான்ஸ்), நகுலேந்திரன் (பிரான்ஸ்), சுபேந்திரன் (இலண்டன்), கலேந்திரன் (இலங்கை), வாசுதேவன் (இலங்கை), ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிவணக்க நிகழ்வு மே மாதம் மூன்றாம் திகதி Mississaugaவில் நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| தொடர்புகள்: | கனடா | 416 640 5433 |
| | | 416 666 4559 |
| ஜெயராஜா இந்துமதி | பிரான்ஸ் | 3314 086 9076 |
| ரவி | பிரான்ஸ் | 3314 625 9159 |
| ரகு | பிரான்ஸ் | 3314 543 3544 |
| திருமதி தர்மலிங்கம் | இலங்கை | 9426 222 2295 |




## திருமதி. சிவகாமிப்பிள்ளை கணபதிப்பிள்ளை

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சி சில்வா வீதியை வசிப்பிடமாகவும் தற்போது இந்தியாவில் வசித்த வருமாகிய சிவகாமிப்பிள்ளை கணபதிப்பிள்ளை அவர்கள் 29-04-2010 அன்று இந்தியாவில் காலமானர்.

அன்னார், காலஞ்சென்ற பெருமையினார் காமாட்சிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற யாதவராயர் பார்வதிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மருமகளும், காலஞ் சென்ற கார்க்கார கணபதிப்பிள்ளையின் அன்புமனைவியும், சிவபாக்கியம் (கனடா), கமலசேகரம் (பிரான்ஸ்), நவரத்தின ராசா(சுவிஸ்), குமாரசேகரம் (டென்மார்க்), சந்திரசேகரம் (கனடா), தேவராசா(இலங்கை) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற சண்முகரத்தினம், காலஞ்சென்ற லீலாவதி, மனோரஞ்சிதம், காலஞ்சென்ற சரஸ்வதி, சாந்தினி, புஸ்ப ராணி ஆகியோரின் மாமியாரு கணேஸ்வரன் (டென்மார்க்), கேதீஸ்வரன்(கனடா), இராஜேஸ்வரன்(கனடா), புசர்ணா (கனடா), மோகனாம்பாள்(மதி)(பிரான்ஸ்), சதீஸ்சேகர்(கனடா), டயானா, டயஸ், வினோஜன்(பிரான்ஸ்), லாவண்யா(பிரான்ஸ்), ஜெகதீபா, சுரேகா(சுவிஸ்), சந்திரிக்கா, காயத்திரி, வனஜா, வினுசிகா (டென்மார்க்), கோவர்த்தனன், ஜெனார்தனன் (இந்தியா), ஜெனோதன், ஆதித்தியன், ஆருத்திரன் ஆகி யோரின் அன்பு பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிவணக்க நிகழ்வு இந்தியாவில் நடைபெற்றது.

| | |
|---|---|
| கனடா | 416 319 6713 |
| டென்மார்க் | 459 785 6900 |
| பிரான்ஸ் | 33 143 331 4800 |
| சுவிட்சர்லாந்து | 41 62 873 1104 |
| இந்தியா | 91 812 266 0151 |



## திரு. தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் 26.04.2010 அன்று சென்னையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை, செல்லாச்சி அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற-வர்களான சோமசுந்தரம், சின்னப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகனும், ஜானகி அவர்களின் அன்புக் கணவரும், கார்த்திகேசு (கனடா), விநாயகமூர்த்தி (கனடா), காலஞ் சென்ற சிவபாதசுந்தரம், கனகாம்பிகை(கனடா), யோகேஸ்வரி (பிரான்ஸ்), மகேஸ்வரி (கனடா), ராம் சிவதாசன் (கனடா), இராஜேஸ்வரி (கனடா), ஆகியோரின் அன்புமிகு சகோ-தரரும் சிவபாக்கியம் அவர்களது ஒன்றுவிட்ட சகோதரரும், ரவிராஜ் (இங்கிலாந்து), காலஞ்சென்ற ஸ்ரீதரன், வாசுகி (சுவிஸ்), ஸ்ரீரூபன் (சுவிஸ்), ரூபிகா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், நகுலாம்பிகை (கனடா), வான்மதி (கனடா), பவானி (இலங்கை), இரத்தினவடிவேல் (கனடா), தியாகராஜா (பிரான்ஸ்), இராமச்சந்திரன் (கனடா), அரபான் (கனடா), காலஞ்சென்ற முத்துலிங்கம், காலஞ்சென்ற மாணிக்கவாசகர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாந்தி (இலங்கை), காலஞ்சென்ற கோகிலராணி, கைலாசநாதன் (சுவிஸ்), தயாழினி (சுவிஸ்), ஞானேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிவணக்க நிகழ்வு மே மாதம் 2ம் திகதி இந்தியாவில் நடைபெற்றது.

| | |
|---|---|
| கனகாம்பிகை | 416 335 7454 |
| ராம் சிவதாசன் | 416 804 3443 |

# உங்கள் இழப்புக்களை ஆவணப்படுத்துங்கள்



சிவநாதன் நாகநாதர்

கடந்த ஆண்டு இதே கால கடத்தில் குளிரையும் பொருட்படுத்தாது இலங்கையில் நடந்த கொடூரங்களை நிறுத்திடவும், அங்கு நடந்த கொடுமைகளை உலக நாடுகளுக்கு உணர்த்திடவும் சாலைகளில் கூடியவர்கள் நாம். எம் மக்கள் மீது நாம் கொண்ட பற்றை வெளிப்படுத்த, அவர்களுக்கு நடந்த கொடுமைகளை நிறுத்திட, எம் மண்ணை மறவாதநாம் எடுத்த முயற்சிகள் பல. அன்று அவற்றைச் செய்ய எம்மிடம் நேரம் இருந்தது, ஏக்கம் இருந்தது, இதனை விட நிறுத்திவிடமுடியும் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் காலம் வேறு திசையில் பயணித்து ஆண்டு ஒன்றாகி விட்டது.

இன அழிப்பை தடுக்க முடியாமல் போய்விட்டாலும் சர்வதேச மட்டத்தில் ஒரு விழிப் புணர்வை, அதனால் சில அழுத்தங்களை உண்டு பண்ணிய திருப்தி எமக்கு.

கடந்த 2009 மே மாதம் நடைபெற்ற இறுதிப் போரில் வெறும் 700 அப்பாவி பொதுமக்களே கொல்லப்பட்டனர் என்கின்றது இலங்கை அரசு. ஏழாயிரம் பேர்வரை இருக்கலாம் என்கின்றது ஐக்கிய நாடுகள் சபை. நாமோ நாற்பதாயிரத்திற்கும் அதிகமான உடன்பிறப்புக்களை இழந்து விட்டதாக, சிங்களப் பேரினவாதம் அழித்துவிட்டதாக புலம்பிக்கொண்டிருக்கின்றோம். போர்க்குற்றம் புரிந்தோரை நீதியின் முன் நிறுத்த எப்போதாவது அடித்து வெளுக்கும் மழை போல, புரட்டிப்போடும் புயல் போல எங்காவது தூதரகங்கள் முன்போ அல்லது நாடாளுமன்றம் முன்போ என எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் நின்று குரல் நசுக்கப்பட்ட உறவுகளுக்காக குரல் எழுப்புகிறோம், வீதியெல்லாம் தவம் இருக்கின்றோம். இத்துடன் நம் கடமை முடிந்தது என நமக்கு நாமே சமாதனம் சொல்கின்றோம். மீண்டும் மீண்டும் சட்டங்களுக்கு சத்தங்கள் மட்டுமல்ல சாட்சிகளும், ஆதாரங்களும் தேவை என்பதை கவனமாக மறந்துவிடுகிறோம்.

1956ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை தமிழ் மக்களுக்கு இலங்கையில் மனித உரிமை அத்துமீறல்கள் நிகழ்வதாக அடிக்கடி கூறிக்கொள்கின்றோம். ஆனால் நமக்கு சென்ற ஆண்டு, இந்த நாளில், இந்த மணித்துளியில் எம்மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் என்ன? அதற்காக நாம் இந்த புலம் பெயர் மண்ணில் என்ன செய்துகொண்டிருந்தோம் என்பதனைச் சரியாக நினைவுபடுத்திச் சொல்ல முடியுமா? மறப்பது மனித இயல்பு, குறை கூறுவதற்கு புதிதாக ஒன்றும் இல்லை என மீண்டும் எம்மை நாமே சமாதனப்படுத்திக் கொள்கின்றோம்.

இக்கட்டுரையை நீங்கள் வாசித்துகொண்டிருக்கும் போது மே 2010 உங்களை கடந்து கொண்டிருக்கும். கடந்த ஆண்டை நினைத்து மீண்டும் ஒன்று கூடுவோம், ஒப்பாரி வைப்போம், ஒரு மெழுகுதிரி ஏற்றி ஓரிரு நிமிடம் மௌனிப்போம். தட்டிக்கேட்க மறந்த, மறுத்த சர்வதேசத்தை நோக்கி ஒர் கூப்பாடிடுவோம். போர்க்குற்றவாளிகளை, மனித உரிமைகள் மீறியவர்களை நீதிமன்றத்தில் நிறுத்துவதாக சபதம் எடுப்போம். அத்துடன் நம்மை நாமே தட்டிக்கொடுப்போம் இதற்கு மேல் "என்னத்த செய்ய" என்ற பெருமூச்சோடு எம் கடமை முடிந்ததாக கலைந்து செல்வோம். என்ன சாதித்தோம் என எண்ணிப்பார்த்தால் அதற்கான விடை தூரத்தில் கூட தெரிவதாக இல்லை.

பொதுவாக போர்க்குற்றங்களில் ஈடுபடுவோர் தாங்கள் அப்பாவிப் பொதுமக்களுக்கு செய்த குற்றங்களை மறைப்பதுடன், அவற்றை நியாயப்படுத்தவும் முயற்சிக்கிறார்கள். ஆனால் பாதிக்கப் பட்டோர் பெரும்பாலும், அழுது புலம்புவதுடன் தங்கள் கடமையை முடித்துக் கொள்கின்றனர். ஏனோ தங்களுக்கு நேர்ந்த பாதிப்புகளை ஆதாரபூர்வமாக வெளி உலகிற்கு எடுத்துச்சொல்லி அநீதி இழைத்தோரின் முகத்திரையை சர்வதேசத்தின் முன் எடுத்துரைக்க ஆர்வம் காட்டுவதில்லை. விளைவு போர்க்குற்றம் புரிந்தோர் சர்வதேசத்தின் முன் தலைவர்களாய் வலம்வருவதுடன் மீண்டும் அதே குற்றங்களை செய்ய முற்படுகின்றனர். பாதிக்கப்பட்டோர் தோற்றுக்கொண்டே இருக்க அவர்கள் மீண்டும் மீண்டும் வென்றுகொண்டே இருக்கின்றார்கள்.

ஆனால் வரலாற்றில் சில பக்கங்களில் இன அழிப்பின் பாதிப்பில் இருந்தோர் மீண்டு வந்த, குற்றங்களில் ஈடுபட்டோரின் முகத்திரையை உலகறியச்செய்த உண்மைகளும் உண்டு. வரலாற்றின் வெற்றிப் பக்கங்களில் இடம்பிடித்திட்ட யூத இனத்திற்கு முன்னுரை தேவையில்லை. எனினும் அவர்கள் வெற்றியின் சூத்திரம் தெரிய வேண்டாமா? அவர்களும் நம்மைப்போல் கூச்சல் இட்டதுடன் நிறுத்திக் கொண்டார்களா என்ன? இந்த இடத்தில் இத்தனை பேர் இவரால் இதற்காக கொல்லப்பட்டனர் என ஆதரத்துடன் நிரூபித்தனரே! இவர்களால் மட்டும் எப்படி இது சாத்தியமாயிற்று?

> **"நசுக்கப்பட்ட உறவுகளுக்காக**
> **குரல் எழுப்புகிறோம்,**
> **வீதியெல்லாம் தவம் இருக்கின்றோம்.**
> **இத்துடன் நம் கடமை முடிந்தது என**
> **நமக்கு நாமே சமாதனம் சொல்கின்றோம்.**
> **சட்டங்களுக்கு**
> **சாட்சிகளும், ஆதாரங்களும் தேவை என்பதை**
> **நாம் மறந்துவிடுகிறோம்."**

ஆம், நாமும் முயன்றால் தொடர்ந்து சரியான வழியில் பயணித்தால் எம்மாலும் சாத்தியமாகாமலா போகும்? புலம்பெயர் உறவுகள் தங்கள் உறவுகளுக்கு நடந்த அவலங்களை தம் சொந்தங்களுடன் மட்டும் பகிர்வதுடன் நின்றுவிடாமல் ஒரு பொதுவான ஆவணப் படுத்துதலிலும் தம்மை ஈடுபடுத்தியாக வேண்டும். இதற்காகவே கடந்த ஆண்டிலிருந்து போரால் பாதிக்கப்பட்டோருக்கும் மனித உரிமைகளுக்குமான நடுவமானது இப்பணியை சர்வதேச நியமங்களுக்கு அமைய பல்வேறு புலம்பெயர் மனித உரிமை அமைப்புக்களுடன் இணைந்து இடைவிடாது செயலாற்றிக் கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக உங்கள் தனிப்பட்ட விபரங்கள் உங்கள் அனுமதி இல்லாமல் எவருடனும் பகிர்ந்துகொள்ளப்படமாட்டது என்ற உறுதிமொழியுடன் ஆவணப் படுத்திக்கொண்டிருகிறது. எனவே எமது பணி யானது எமது உறவுகளுக்கு நடந்தவற்றை, எமக்குத் தெரிந்தவற்றை உள்ளதை உள்ளவாறு, முடிந்தால் நிரூபிக்கத்தக்க ஆவணங்களுடன் இவர்களுடன் பகிர்வதன் மூலமும், மற்றவர்களை இதற்குத் தூண்டுவதன் மூலமும் நாமும் இந்த தொலைதூர வரலாற்று பணியில் எம்மை ஈடுபடுத்திய பெருமைக்குரியவர்களாகின்றோம்.

நாற்பதாயிரம் பேர் கொல்லப்பட்டதாக அலறிக் கொண்டிருக்கும் எம்மால் வெறும் நாலாயிரம்பேரின் பெயர்களையாவது, அவர்களுக்கு நடந்தவற்றையாவது சொல்லிட முடியுமா?

எம்மால் முடியும் என்பதே அழிக்கப்பட்ட அப்பாவி பொதுமக்களுக்கும், அல்லல்பட்டுக்கொண்டிருக்கும் தாயக உறவுகளுக்கும், ஆயிரம் கனவுகளுடன் நாளையை எதிர்பார்த்திருக்கும் எம் இளைய சமுதாயத்திற்கும் நாம் செய்யக்கூடிய சிறிய சிறந்த பணியாகும். முடியாவிட்டால் ஆண்டுதோறும் சம்பிராதாயத்திற்கு மீண்டும் ஒன்று கூடுவோம், ஓப்பாரி வைப்போம், ஒரு மெழுகுதிரி ஏற்றி ஓரிரு நிமிடம் மௌணிப்போமாக.

sivanathan.n@thaiveedu.com

■ ■ ■

CENTRE FOR WAR VICTIMS & HUMAN RIGHTS

நடந்த உண்மைகளை
இறந்தவர்களாலும் சொல்ல முடியாது
இழப்புகளுக்குள் வாழ்பவர்களாலும் சொல்ல முடியாது
உங்களால் மட்டும்தான் முடியும்!
ஆவணப்படுத்த அழையுங்கள்



போரால் பாதிக்கப்பட்டோருக்கும் மனித உரிமைகளுக்குமான நடுவம்
416-628-1408 www.cwvhr.org

# சிந்துவெளி நாகரிகம்

## (ஹறப்பா - மொஹஞ்சதாரோ நாகரிகம்)

முருகேசு பாக்கியநாதன்



சிந்துவளி நாகரிகம் ஹறப்பா கலாச்சாரம் என்றும் அறியப்படுகின்றது. இது செப்புக்காலத்தே தோன்றியதாகவே கொள்வார்கள். இது மொசப்பத்தேமியா மற்றும் எகிப்திய நாகரிகளின் சமகாலத்தாகவே அறியமுடிகிறது. இந்நாகரிக வளர்ச்சியின் உச்சக்கட்டம் கிமு.2500 என்றே அறிஞர்கள் கொள்ளுகின்றர். பூகோள அமைப்பின் பிரகாரம் 1,260,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிலேயே சிந்துவெளி அமைந்திந்துள்ளது. இது தற்போதைய பாகிஸ்தான், இந்தியாவின் வடமேற்குப் பகுதி, பலுகிஸ்தான் தொடங்கி ஆப்கானிஸ்தான் வரை நீண்டிருந்தது.

சுமேரியன் நாகரீகத்தில் மே-ல-க (Me-lah-ha) என்னும் ஒரு சொல் சிந்துவெளி நாகரிகம் பற்றிக் குறிப்பிடுவதாக சிந்துவெளியின் முன்னோடி ஆராச்சியாளர் அஸ்கோ பர்பொல குறிப்பிடுகின்றார். இதனை அவர் திராவிடச் சொல்லான மேட்டகம் Met-akam என்றும் அதாவது மேல் - அகம் என்ற உயர்ந்த வாழும் இடம் எனக் குறிப்பிடுகின்றார். அத்தோடு சமஸ்கிருத சொல்லான mleccha மெல்க என்பதும் தமிழ் சொல்லிலிருந்து பிறந்திருக்கலாம் எனகிறார்.

இன்று வரை 1,052ற்கு மேற்ப்பட்ட நகரங்களும் குடியிருப்புக்களும் காணப்பட்டதாக அறியப்பட்டுள்ளது. இவைகள் ஹர்க்கா – கக்கார் ஆற்றிற்கு இடைப்பட்ட பகுதிகளிலும் ஹறப்பா – மொஹஞ்சதாரோ, லொதல், டொலவிரா, கங்வேரிவெல, கலிபங்கா மற்றும் றக்கிஹாரி ஆகிய பகுதிகளில் அமைந்திருந்தன.

தென் ஆசியாவின் முதன் முதலான விவசாயம் பற்றி அறிதல் சிந்துவெளியிலிருந்தே கிடைக்கின்றது. பலுகிஸ்தானின் மேட்டு நிலங்களிலும் சிந்துவின் மேற்குக் கரைகளிலும் கிமு. 6,500களில் விவசாயம் புரிந்துள்ளார்கள் அங்கு கோதுமையும் பலவித மிருக வளாப்பும் அத்தோடு மந்தை வளர்ப்பும் செய்துள்ளார்கள். கிமு. 5,500களில் மட்பாண்ட பாவனையும் இருந்துள்ளது. மட்பாண்டம் வனையும் கலையிலை அக்காலத்தேயே அம்மக்கள் அறிந்து வைத்துள்ளார்கள். அந்த மட்பாண்டங்களிலேயே தமது கருத்துக்களையும் எண்ணங்களையும் பதிவு செய்து வைத்துள்ளார்கள்.

கி.மு. 4,000 ஆண்டளவில் ஒரு உப கலாசாரமும் இக்காலத்தே வளர்கின்றது. அதனை ஹறப்பாவிற்கு முற்பட்ட கலாசாரம் என்றழைத்தனர். இதன் ஆதாரங்களும் பரவலாக சிந்துவெளியில் கண்டுபிடிக்கப்பட்டன. ஒரு வர்த்தக வலையமைப்புக்கூட இக்காலத்தே இங்கு காணப்பட்டுள்ளது. இவ்வர்த்தகத்தில் ரொட்டி செய்யும் மூலப்பொருட்களும் இது கோதுமை மாவாக இருக்கமுடியும். அத்தோடு

**தொடர்...**

தானியங்களான பருப்பு, எள்ளு, பேரீந்து, பஞ்சு மேலும் பல வகையான வீட்டு வளர்ப்பு மிருகங்கள், எருமை மாடுகள் அத்தோடு இன்று எந்த வகையான மிருகங்கள் விவசாயத்தோடு பாவனையில் உள்ளதோ அந்த வகையான மிருகங்கங்கள் வர்த்தகத்தில் பயன்படுத்தப்பட்டன.

ஹறப்பாவிற்கு முந்திய காலப்பகுதி நாகரிகம் ரவி பகுதி என்றும் அறியப்பட்டிருந்தது. இது ரவி ஆற்றங்கரையினை அடுத்து இருந்ததனால் இப்பொயர் வழங்கலாயிற்று. இது கி.மு. 3,300 காலப்பகுதியாகும். கிமு 3,300ற்கும் கிமு. 2,800ற்கும் இடைப்பட்ட காலமே சிந்து எழுத்துக்கள் தோன்றிய காலமாகக் கொள்ளப்பட்டுள்ளது. இக்காலத்தேயே எகிப்திய மற்றும் மொசப்பத்தேமிய காலமாகவும் இருந்-

அல்லாதுவிடில் இப்படியாகத் திட்டமிட்டு கட்டிடங்களும், வீதிகளும், வடிகாலமைப்புக்களும் அமைத்திருக்க முடியாது. இப்படியாக திட்டமிடப்பட்ட வீதி அமைப்புக்கள் மொஹஞ்சதாரே, ஹறப்பா ஆகிய இடங்களில் காணப்பட்டன. இதனை ஒரு ஆராச்சியாளன் இன்றைய நியு யோர்க் நகர அமைப்புடன் ஒப்பிடுகின்றார். சுகாதார ஒழுங்குகள் நகர அமைப்பில் பேணப்பட்டன. வீட்டு அமைப்புக்கள் சத்தங்கள் உட்செல்ல முடியாமலும் துர்நாற்றம் உட்செல்ல முடியாமலும் கள்ளர்களிற்கு பாதுகாப்பாகவும் அமைக்கப் பெற்றிருந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

மிக அண்மையில் ஹறப்பா மொஹஞ்சதாரோவில் உள்ள றக்கிகார்கி என்னும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முதன் முறையான நகர சுகாதார அமைப்பு முறையானது நகருக்குள் தனிப்பட்ட வீடுகளும் வீட்டுத்தொகுதிகளும்

ளாலான சுவர்களால் அமைக்கப்பட்டிருந்ததானது மொசப்பத்தேமிய நாகரிகத்தில் காணப்பட்டதனைவிட மிக விசாலமானதாகவும், விஷேடமானதாகவும், பாதுகாப்பாகவும் அமைந்திருந்தது சிந்துவெளிக்குரிய விஷேட அம்சமாகும்.

நகரங்களுக்கருகே மக்கள் அவசரகாலத்தின் போது பாதுகாப்பாக ஒதுங்குவதற்கான கோட்டைகள் இதன் சமகால நாகரிகங்களான மொசப்பத்தேமியா மற்றும் எகிப்திய நாகரிகங்களில் காணப்படாததாக சிந்துவெளியில் கட்டப்பட்டிருந்தன. இங்கு கோவில்கள்




ஹறப்பாவின் சிதைந்த ஒரு கட்டிடத் தொகுதி




சிதைவுற்ற மற்றுமொரு கட்டிடத் தொகுதி



சிந்துவெளியில் கண்டெடுக்கப் பெற்ற வண்டியின் மாதிரி



ஒருவர் யோக அல்லது தியான நிலையில் உள்ள முத்திரை.



சிந்துவெளியின் ஒரு மத குரு

துள்ளன. முதிர்ந்த ஹறப்பன் நாகரிகத்தின் காலத்தினை கி.மு.2,600 என்றே கொள்ள முடியும்.

### நகர நிர்மாணம்

மிக நுட்பமான தொழில் நுட்பத்தினைப் பயன் படுத்தியே மாநகர, நகர அமைப்புக்களை (Municipal - மாநகரம், Urban - நகரம்) திட்டமிட்டு அமைத்திருந்தனர். உள்ளுர் அரச அமைப்புக்களின் துணையுடனேயே இந்த அமைப்புக்கள் செயற்படுத்தப் பட்டிருக்கலாம்.

கிணற்றிலிருந்து நீர் பெறும் முறையும், தனியாக குளிப்பதற்கான அறையும் அதிலிருந்து வெளியேறும் கழிவு நீரினை அகற்ற மூடப்பட்ட வடிகால்களும் வீதிக் கரையோரங்களில் காணபட்டன. வீடுகளின் வாசற் கதவுகள் வீதிகளின் முகப்பை நோக்கியும் பின் வளவினை நோக்கியும் அமைக்கப் பெற்றிருந்தன. சிந்துவெளியின் கழிவகற்றும் வடிகாலமைப்பு முறையானது sewage and drainage அக்காலத்தின் சமகாலத்தே காணப்பட்ட மத்திய கிழக்கு நாகரீகங்களிலோ அல்லது இன்றை பாகிஸ்தானிலோ இவ்வளவு நேர்த்தியா அமைக்கப்படவில்லை என்றே கூறவேண்டும் சில பகுதிகளில் காணப்பட்ட வடிகாலமைப்பானது அதிவிஷேடமாகக் காணப்பட்டதாகும்.

ஹறப்பாவில் தானியக் களஞ்சியங்களும் களஞ்சிய அறைகளும் செங்கற்களால் கடடப்பட்ட மேடைகளுடன் கூடியதாகவும் கால நிலைக்கு ஏற்பவும் வெள்ளப் பெருக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்ட செங்கற்க-

இருந்ததற்கான எதுவித ஆதாரங்களும் இது வரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் ஒரு மத குருவின் உருவம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. இவர் இந்துக்கள் அணியும் ஒரு நெத்திப் பட்டம் அணிந்துள்ளார். அரசன், பாதுகாப்பு வீரர்கள், போதகர்கள் ஆகியோருக்கான கல்லறைகள் கண்டுபிடிக்பட்டிருந்தன. இந்த அமைப்புக்களில் சில தானியக் களஞ்சியங்களாயுமிருந்தன. பல நகரங்களில் தனிப்பட்ட கிணறுகளும் பொதுக்கிணறுகளும் அமைந்திருந்தன. சகல வீகளுக்கும் நீர் வசதியும் வடிகால் வசதியும் இருந்துள்ளன.

நகரில் வாழ்ந்தவர்கள் பலர் வர்த்தகர்களாகவும் கலைஞர்களாகவும் இருந்துள்ளனர். வீடுகள் கட்டும்போது அதனை அலங்கரிக்க பழிங்கு கற்களும் விஷேட உருளைக் கற்களும் பயன்படுத்தப்பட்டிருந்தன. சிந்துவில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளில் மிருகங்களின்

76ம் பக்கம் பார்க்க...

### தவறு திருத்தம்

கடந்த ஏப்ரல் மாத இதழில் வெளிவந்த “சிந்துவெளி நாகரீகம்” என்ற எனது கட்டுரையில் திராவிட மொழிகளின் ஒப்பில்கணத்தினை எழுதிய பிஷப் றொபேட் கால்டுவெல் அவர்களின் தமிழ்ப் பெயர் வீரமாமுனிவர் என்று தவறுதலாகக் குறிப்பிட்டதற்கு வருந்துகிறேன்.

வீரமாமுனிவர் என்பவர் தமிழிற்குத் தொண்டு செய்த அருட்தந்தை பெஸ்கி என்பதாகும்.

நன்றி
முருகேசு பாக்கியநாதன்



ஆனந்தமான அனுபவம் ! தகவல்களின் சுரங்கம்
இசையும் ஆழ்ந்த அறிவும் தமிழின் பலமே!
கலசம்
www.KALASAM.com
தமிழின் சுவைகூறும் இணையத்தள ஒலிபரப்பு

வட அமெரிக்காவிலிருந்து முதல் முறையாக நேரடி
இணையப் பல்கலைக் கல்லூரி ஆரம்பம்

# VARNAM VIRTUAL ACADEMY

## Save Money ! Save Time ! Save Energy !

**Save 1500$ to 6500$ per year**

உங்கள் வீடுகளில் இருந்தே இணையம் மூலம் நேரடியாக
கற்றுக்கொள்வதோடு மேலும் பல சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம்

- **Grade 1 - 12 Tutoring**
- **Kids & Adult Computer**
- **Western Music**
- **Indian Music**

*Further information visit -:* www.varnamonline.com

**You Can Learn From Your Home Face to Face ( Live )**

***Any Where in the World !!!***

* Vocal ( Carnatic ) * Violin * Veena* Mirudhangam * Tabla
* Piano * Keyboad * Guitar * Drums * Music Theory * Dance

வகுப்புகள் நடைபெறும் இடங்கள்

* Midland & Ellesmere * McCowan & Denison * Nellson & Finch
* Dundas & Hwy 10 * Dixie & Meyer side * Dixe & Bovaird

**Contact : Varna.Rameswaran 647.893.4010 / 416.265.8884**

# எப்பவும், எவரையும், எப்படியும் திட்டித் தீர்க்கலாம்?

வாழும்போது ஒருவர் விரும்பி உண்ட உணவு வகைகளை அவர் இறந்தபின் எட்டுக்கிரியை அன்றும், அந்தியேட்டி அன்றும் படையல் செய்து அந்த ஆத்மாவுக்கு மரியாதை செய்வது வழக்கமாயிற்று. இதுபோலவே ஒருவர் வாழும்போது அவர் கடைப்பிடித்த நம்பிக்கைகளுக்கும், அவர் விரும்பிய கொள்கைகளுக்கும் அமைய அவரது இறுதிச்சடங்குகளைச் செய்வது மறைந்தவரின் ஆத்மாவுக்குக் கொடுக்கும் கௌரவமாக அமையும்.

●

ஒரே வீட்டில் ஒன்றாக வசிக்கும் கணவன் - மனைவியையும், தாய் தந்தை – பிள்ளைகளையும், பேரன், பேத்தி - பூட்டப்பிள்ளைகளையும் தொடர்பு கொண்டு பேசவும், ஏசவும் உதவும் தொடர்பு சாதனத்தை எப்படித் தெலைபேசி என்று கூறலாம்? வெவ்வேறு அலைவரிசையில் இருப்பவர்களை இணைக்க உதவுவதால் அலைபேசி என்று அழைத்தால் என்ன?

●

பாதையைக் கடக்கும் போதும், அங்காடியில் நடக்கும் போதும், வாகனத்தரிப்பு நிலையங்களில் தாண்டும் போதும் பாதசாரிகள் செல்லிடத் தொலைபேசியையோ (Cell Phone) அல்லது ஐம்புலன்களின் கூர்மையைக் குறைக்கும் உபகரணங்களையோ பாவிப்பதைத் தடைசெய்யும் சட்டத்தை அரசாங்கம் அமல் செய்ய எத்தனிக்கலாம்.

●

வழியில் செல்லும் அல்லது அருகில் நிற்கும் ஒருவரை வாய்விட்டுத் திட்டவோ அல்லது



அவதூறாகப் பேசவோ வசதி வாய்ப்பு முன்னர் இருக்கவில்லை ஆனால் இப்பொழுது ஒரு "Blue Tooth"தைக் காதில் கொழுவிக்கொண்டு எப்பவும், எவரையும், எப்படியும் வாய்க்கு வந்தபடி திட்டித்தீர்க்கலாம்

நன்றி:- நீலப்பல் (*Blue Tooth*)

●

நாங்கள் வீட்டில் சமையல் செய்வதில் காட்டும் அக்கறை, கையாழும் நுட்பம், செலவிடும் நேரம் அளவிற்கு, உணவைப் பரிமாறுவதில் காட்டும் அக்கறை, அமைதி அன்பு முதலின இருப்பதில்லை. உணவகங்களுக்குச் செல்லும் நாங்கள் சமைத்த உணவை அழகாக அன்பாக அக்கறையுடன் பரிமாறுகிறவருக்குச் சந்தோஷமாக இனாம் கொடுக்கின்றோம்; கஷ்டப்பட்டு சமையல் செய்தவருக்கு அல்ல.

●

நிகழ்ச்சிகளுக்கு உரையாற்ற அழைக்கப்படுபவர்களில் சிலர் மேடையில் வந்து "எனனைப் பேசும்படி கேட்டார்கள், இந்த நிகழ்வில் பேசுவதற்கு எனக்கு என்ன தகுதி இருக்கிறது என்று பலமுறை சிந்தித்தேன்" என்று ஆரம்பிப்பார்கள். தகுதி அற்றவர் பேச்சை ஏன்செவிமடுக்க வேண்டும் என்று சபையோர் சிந்திக்கலாம். ஆகையால் பேச அழைத்த வேளை ஒருமுறை சிந்தித்து சரியான முடிவை எடுப்பது நல்லது

●

இங்கிருந்து இலங்கைக்கு விஜயம் செய்பவர்கள் முச்சக்கர வண்டியில் (Auto) செல்வதாய் இருந்தால் வண்டியில் ஏறுமுன்

- கதிர் துரைசிங்கம் -

செல்லும் இடத்தை மட்டும் சொல்லுங்கள். எத்தனை ரூபாய் என்று கேட்டுவிட்டால் கனடாவில் இருந்து வந்தவர் என்பது ஊர்ஜிதம் ஆகிவிடும். இறங்கும் போது சாரதி கேட்பதைக் கொடுப்பது தான் இலங்கையின் இன்றைய நிலவரம்.

●

கனடியத் தமிழர்கள் ஐரோப்பாச் சுற்றுலாச் செல்லும் போது பெரிதாகக் கைவரிசை காட்ட முடியாது. ஆனால் ஈழம் சுற்றுலாச் சென்றால் நன்றாகக் கைவரிசை காட்டலாம். அதற்காக, போரினால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் மக்கள் மத்தியில் செல்லும் போது உங்கள் விலாசத்தைக் காட்டுவது அவர்களை மேலும் விஷனமாக்கும் செயலாகி விடும்.

(ஒருதடவை சொன்னால் நூறு தடவை சொன்னமாதிரி. ஒரு டொலர் மாற்றினால் நூறு ரூபாய் வாற மாதிரி)

kathir.thuraisingam@thaiveedu.com

■ ■ ■

# சிந்துவெளி நாகரி...

74ம் பக்கத் தொடர்ச்சி...

உருவங்களும் கடவுளின் உருவங்களும் பொறிக்கப்பட்டிருந்தன. சில வீடுகள் மற்ற வீடுகளைவிட பெரியதாக அமைந்திருந்ததனை நோக்கும் போது அவ்வீடானது சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருந்த ஒருவர் பாவித்த வீடாக இருந்திருக்க வேண்டும். இங்கும் மத்திய தர சமூகமும் ஒன்று இருந்திருக்கலாம் என எண்ணத்தோன்றுகின்றது.

## விவசாயம்

சிந்துவெளியின் முக்கியம் அதன் நதியாகிய சிந்து நதியாகும். இதுவே சிந்துவெளி வாழ்க்கையின் உயிர்நாடியாகவும் இருந்தது. நதியானது நீர்ப்பாசனத்தினையும், வழமான வண்டல் நிலத்தினை விவசாயத்திற்காக உருவாக்கிக் கொடுப்பதில் உதவியதெனலாம். விவசாயம் பற்றியதும் அதன் இயங்கு முறை பற்றியதுமான பெரிய கண்டுபிடிப்புக்கள் பெரியளவில் கண்டுபிடிக்கப்படாது விட்டாலும் விவசாயத்தோடு தொடர்பு படுத்தக்கூடிய சில தகவல்களின் அடிப்படையில் சாத்தியமான விவசாய முறைகள் பற்றி அறிய முடியும்.

1980ற்கு முன்பு ஆரிய மேன்மை வாதிகளான சில அறிஞர்களால் சிந்துவெளியில் வாழ்ந்தவர்கள் உணவு உற்பத்தியில் நிறைவு பெறவில்லையென்றும் அவர்கள் வேறு இன மக்களிடம் இருந்தே அதாவது ஆரியரிடமிருந்து உணவினை இறக்குமதி செய்தார்கள் என்று கூறிவந்தார்கள். சிந்துவெளியின் இறுதிக் காலமே ஆரியரின் வருகை இடம்பெற்றது என்பதனை நோக்க வேண்டும். ஆனால் அண்மைய ஆராச்சிகளின் பிரகாரம் சிந்துவெளி உணவுற்பத்தியில் தன்னிறைவுடைய உள்ளூர் உணவுற்பத்தியில் ஈடுபட்டதாக அறிய முடிகிறது. மேஹராவில் வாழ்ந்த மக்கள் உள்ளூர் உற்பத்திகளான கோதுமையும் பார்லியும் அத்தோடு பல பருப்பு வகைகளையும் உற்பத்தி செய்துள்ளார்கள். இரண்டு வரிசை பார்லியில் தொடங்கிய உற்பத்தி ஆறு வரிசையில் செய்தார்களென ஜிம். ஜி. ஷபர் எனும் புதைபொருள் ஆராச்சியாளர் குறிப்பிடுகின்றார். இங்கு நடைபெற்ற விவசாயம் வியப்புத் தருவனவாகவும் அங்கொன்று இங்கொன்றுமல்லாமல் ஒருமுகப்படுத்தப்பட்ட சுதேச விவசாயமாகவும் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

சிந்துவெளி கால உணவுற்பத்தியானது தன்னிறைவுடையதாக இருந்தது. எதுவித உணவுற்பத்தியிலும் ஈடுபடாத நகரத்தில் வாழ்ந்த மக்களான வாணிபத்திலும் கட்டிக் கலையிலும் ஏனைய தொழில்களிலும் ஈடுபட்ட பெருந்தொகையான நகர வாசிகளுக்குத் தேவையான உணவுகளை வழங்கி மிகுதியானவற்றினை வேறு பிரதேசங்களுக்கும் வேறு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்தனர். வானம் பார்த்த பூமியில் மழையினை நம்பியும் ஆற்று நீரையும் அதன் வண்டலையும் நம்பியே விவசாயம் செய்தனர். பாரிய நீர்ப்பாசனங்கள் பற்றி இதுவரை தரவுகள் ஏதும் இல்லை. நீர்பாசனம் பற்றிய தரவுகள் பாரிய வெள்ளப்பெருக்கினால் அழிக்கப்பட்டிருக்கலாம் என்று கருதுகின்றனர். ஆனால் பாரிய நீர்ப்பாசன வசதிகள் இல்லாமல் இவ்வளவு பாரிய மேலதிக உணவுற்பத்தியினை மேற்கொண்டிருக்க முடியாதென்பதே சில ஆராச்சியாளர்களது கருத்தாகும்.

இங்கு அரசர்கள் பற்றிய தகவலோ, அடிமைகள் அல்லது வேறு ஏவல் செய்யும் வேலையாட்கள் பற்றிய எந்தத் தகவலோ எங்கும் கிடைக்கவில்லை. இதன் காரணமாக இங்கு மக்களாட்சி போன்ற ஒரு அமைப்புக்கூட இருந்திருக்கலாம்.

## உணவு

சூடு காட்டிய கோதுமை அப்பம், பார்லி அல்லது அரிசி போன்றனவற்றோடு ஆடு, மாடு, நீர் எருமை, பன்றி மற்றும் மீன் முதலியனவே இவர்களது பிரதான உணவாகும். தூண்டில் பாவித்து மீன்பிடிக்கும் கலையினையும் கற்றிருந்தனர். ஓவ்வொரு நாகரங்களிலும் உணவுக் களஞ்சியங்கள் இருந்தன.

## போக்குவரத்து

போக்குவரத்தினைச் செய்யவும் பொருட்களை ஏற்றியிறக்கவும் எருது, ஒட்டகம், யானை போன்றனவும் இரண்டு சில்லு உள்ள வண்டில்களும் பாவிக்கப்பட்டன. அராபிக்கடலில் போக்குவரத்தும் செய்யப்பட்டிருக்க வேண்டும் இதற்கான முத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் அவைகள் இன்னும் வாசித்தறியப்படவில்லை. இதுபோன்ற முத்திரையொன்று மொசப்பத்தேமியாவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதனால் இவ்விரு பிரதேசங்களுக்கு அப்போதிருந்தே வாணிபம் நடைபெற்றதாகக் குறிப்பிடமுடியும்.

## வர்த்தகம்

சிந்துவெளிப் பொருளாதாரம் வர்த்தகத்தினாலமைந்த ஒரு பொருளாதாரமாகவே அமைந்திருந்தது என்று குறிப்பிட முடியும். இது போக்குவரத்திற்கான தொழில்நுட்பத்தில் தங்கியதாகவே அமைந்திருந்தது. இது தற்போது தென் ஆசியாவில் காணப்படும் மாட்டு வண்டி போல இருந்தன. சிறிய வள்ளங்கள், இவை அடிப்பாகம் தட்டையான அமைப்புக் கொண்ட வள்ளமாக அமைந்திருந்தன. இவை சிந்து நதியில் போக்குவரத்துச் செய்யவும் பயன்படுத்தப்பட்டன. இரண்டாவதான ஆதாரமாக புதைபொருளாராட்சியில் பாரிய கால்வாய் வழிப்போக்குவரத்திற்கு வழிசமைக்கும் தூர்வாரும் உபகரணங்களும் கப்பல் கட்டும் இடமும் கண்டுபிடிகப்பட்டதானது பாரிய நீர்ப்போகுவரத்து நடந்ததற்கான ஆதாரமாகும். சிந்துவின் வர்த்தகம் பொருளாதாரரீதில் தொடர்புபட்ட நாடுகளாக ஆப்கானிஸ்தானம், பாரசீகம், வட - மத்திய இந்தியா மற்றும் மொசப்பத்தேமியா ஆகிய இடங்களாகும்.

## யோகக் கலை

யோகக் கலை பற்றி அன்றே சிந்துவெளி மக்கள் அறிந்திருந்தனர் என்றே குறிப்பிட முடியும். இதற்கு ஆதாரமாக அங்கு கண்டெடுக்கப்பட்ட மேலேயுள்ள முத்திரையினைக் குறிப்பிட முடியும். இதனை பம்மாசனத்தின் ஒரு நிலையென்றோ அல்லது தியானத்தின் நிலையில் இருப்பவரின் நிலையென்றோ கூறமுடியும். (ஒருவர் யோக அல்லது தியான நிலையில் உள்ள முத்திரை. அதற்கு மேலே சிந்துவெளி எழுத்தினைக் காணமுடிகிறது.)

அடுத்த இதழில் சிந்துவெளி எழுத்தினைப் பற்றியும் கலைகளினைப் பற்றியும் நோக்குவோம்.

தொடரும்...

packiyanathan.m@thaiveedu.com

■ ■ ■

**EQAO EXAM Grade 3, 6 & 9**

**(KENNEDY & EGLINTON சந்திப்பிற்கருகில்)**

**Coaching class starts on Mar, 2010**

**Tutoring: Gr. 1 -12**

**. Teaching Math, English & Science . Junior Readers and Magic Math Programs**

**. Weekdays and Weekend Classes**

**416-546-7885**

**Tution Classes**

**(McCowan & Dennison சந்திப்பிற்கருகில்)**

**தமிழ், ஆங்கிலம் (English), கணிதம் (Math), ஓவியம் (Art), விஞ்ஞானம் (Science), வீட்டுவேலை உதவி (Homework Help).**

**இளமழலை முதல் தரம் 12 வரையான மாணவர்களுக்கு.**

**1 to 1 or Group classes**

**905-554-2496, 416-522-3314**

# வீட்டுக்கடன் காப்புறுதி திட்டம்
## Mortgage Life Insurance

**வங்கிக் கடன் காப்புறுதி**

01. வங்கியே உடமைக்காரர்.
02. வங்கியின் அதிகாரத்தில் இருக்கிறது.
03. கடன் தவணைகள் தவறினால் காப்புறுதி செயலிழந்து விடும்.
04. வங்கியே பாத்தியக்காரர்.
05. உங்கள் காப்பு தொகை குறைந்துகொண்டே வரும்.
06. காப்புறுதிக்கு திரும்பவும் விண்ணப்பிக்கவேண்டும்.
07. காப்புறுதி தொகை, கடன் தொகையை தாண்டக்கூடாது.
08. கடனை முற்றிலும் தீர்க்கவேண்டும்.
09. நீட்டவோ மாற்றவோ முடியாது.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை இல்லை.
11. காப்புறுதி எடுத்தவர் இறந்த பிற்பாடே வங்கி அதன் தராதரங்களை முற்றாக ஆராயும்.
12. வங்கி காப்புறுதி மிகவும் கூடிய செலவு.
13. வங்கி காப்புறுதியை எப்பவும் லண்டன் லைஃப் காப்புறுதிக்கு மாற்றலாம்.
14. முடிவு உங்களுடையது, வங்கியுடையது அல்ல.

**லண்டன் லைஃப் காப்புறுதி**

01. காப்புறுதி எடுத்தவரே உடமைக்காரர்.
02. காப்புறுதி எடுத்தவரே அதிகாரம் கொண்டவர்.
03. கடன் தவணைகள் தவறினாலும் காப்புறுதி செயலிழக்காது.
04. உங்கள் பாத்தியக்காரராக யாரையும் நீங்கள் நியமிக்கலாம்.
05. உங்கள் காப்பு தொகை நிரந்திரமானது, காப்புறுதி தவணையும் ஒரே அளவானது.
06. கடன் உதவியவரை மாற்றினாலும் காப்புறுதி தொடரும்.
07. காப்புறுதி தொகையை உங்கள் தேவைப்படியும், வசதிப்படியும் தீர்மானிக்கலாம்
08. உங்கள் உரிமைக்காரர் பணத்தை தக்கவைத்துக்கொண்டு அதன் வருமானத்தில் தவணைகளைக் கட்டலாம்.
09. உங்கள் காப்புறுதியை மீண்டும் புதுப்பிக்கலாம் மாற்றலாம்.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை உண்டு.
11. காப்புறுதிகளின் தராதரம் விண்ணப்ப சமயத்தில், தீர்மானிக்கப்படும்.
12. எங்களுடையது போட்டிகளை எதிர்த்து நிற்கும் வல்லமை கொண்டது.
13. மேற்சொன்ன காரணங்களினால் இதுவே சிறந்தது.

Freedom 55 Financial
A division of London Life Insurance Company



**பாலா பாலசுந்தரம்** B. Eng
சிறந்த விற்பனையாளருக்கான விருது பெற்றவர்
**Office: 416-291-0451 Ext.227**
**Cell: 416-518-9489**
300-2075 Kennedy Rd, Toronto. ON M1T 3V3

**E-mail: bala.balasundaram@freedom55financial.com | Now Representing Manulife, Sunlife & Greatwest Life.**



## வீடு வாங்க, விற்க
## விளம்பரங்களைப் பாருங்கள், படியுங்கள்
## நீங்களும் சிந்தியுங்கள், ஏன் என்னைத் தெரிவுசெய்யவேண்டுமென்று..



HOMELIFE
HIGHER STANDARDS
**Homelife/Future**
Realty inc. Brokerage
*Higher Standard Agents... Higher Results!*

# Vivek Subramaniam
Sales Representative

**Direct: 416 898 4846**

**7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8**
**Bus: 905 201 9977, Fax: 905 201 9229**
Independently Owned and Operated

# Buy or Sell

## Residential, Commercial & Rental

### Sale of Business
Grocery/Super Market



**Harwood Road, Ajax**

Sale Of Business Plus Inventory, Established Business, Mixed Neighbourhood & Busy Location, Grocery, Vegetables, Soft Drinks, Movies & Many More Items, Rent $2400/Month - All Inclusive, Renewable Lease, Average Sales $1000 Daily & $1500 On Weekends, Chattels List Available, Included In Purchase Price

**Price: $40,000**

### Space for Lease
Industrial, Factory, Manufacturing, Warehouse



**Kennedy & Danforth**

Available For Lease, Truck Level Shipping, Close To City At Reasonable Rates, 2nd Floor Level, Approx. 1800Sq.Ft., Vacant, Rental Amount Includes T.M.I.

**Rent: $1,500 per month**

### Sale or Lease
Brand New Commercial Unit



**Markham & 14th**

Brand New 'Newtown Square' Plaza commercial unit for sale or lease, 600 sq.ft with Markham Rd Exposure, Costco, Canadian Tire, Home Depot, Future Shop, Shoppers Drug Mart Nearby, one of the best Unit in the fastest growing community. Ideal to start Your Own Business, minutes To 407, Hwy 7.

**Sale Price: $240,000**

**Lease Price: $1,800**

**per month including TMI**

### House For Sale



**Weston & Major Mackenzie**

Brand new 5 Bedroom with attached washrooms, Stucco, Brick and Stone exterior-4,381 sq. ft, Custom Designed Kitchen with Granite Counter, 10' Ceiling-Ground and 9' Ceiling-2nd Floor, Upgraded 3 1/2" Strip Hardwood thru' out, Oak Stairs with upgraded railing, Double Garage-direct access to home.

**Lot Size: 50 x 105 feet**

**Price: $999,900**

### House For Sale



**Weston & Major Mackenzie**

4 Bed rooms, Detached "Teramo" Model by Fieldgate Homes, Stucco, Stone, & Brick exterior

Hardwood Floors, Gas Fireplace, Parquet- 2nd Level, Fully Fenced, Stamped Concrete-Front & Side Patio, Planter Box in Backyard, Double Garage & Direct Access to Home, California Shutters Through-Out, Granite Countertop, Balcony, 44 Pot Lights Inside & Outside, Finished Basement with Bedroom, Living Room, 3 pc Washroom & Kitchen, Whirlpool Appliances, Stainless Steel: Fridge, Stove, Built-In Dishwasher, Built-In Microwave, Front Load Washer, Dryer, CAC, CVAC, Alarm System, Garage Door Opener & Remote.

**Lot Size: 36 x 86 feet**

**Price: $549,000**

### House For Sale



**Steeles & Staines**

Executive, Excellent 5 Bedroom Fully upgraded, 3,854 sq.ft, Backing onto Ravine, Brick Built, 9' Ceiling,

Upgraded 3 1/2" Strip Cabreuva exotic hardwood for Ground and 2nd Floor, Oak Stairs with upgraded railing, Double Garage-direct access to home, Finished Basement-2 b/r, w/r & kitchen,

Extras: Stainless Steel (2 Fridges & 2 Stoves, B/I Dishwasher), Washer, Dryer, All ELF's, CAC,

CVAC, Humidifier, Electronic Air cleaner, Custom made California Shutters, Around $175,000 worth of upgrades.

**Lot Size: 50 x 89 feet**

**Price: $749,900**



*Rudy Ruthran*

**416-587-5583**

rudy@ruthran.com

COLDWELL BANKER
COLDWELL BANKER EXCEPTIONAL REAL ESTATE SERVICES Brokerage

Each office is independently owned and operated

3107 Sheppard Ave East, Toronto. ON. M1T 3J7
Tel: 416.497.9794, Fax: 416.497.5949



*Logan Velumailum*

**416-410-1620**

vlogan599@yahoo.com

# எங்கள் வேலியடி வேப்பமரம்

- பொ. கனகசபாபதி -



எனக்கு நினைவு தெரிந்த காலத்திலேயே அந்த வேப்பமரம் நன்கு வளர்ந்து எமது வீட்டு வேலிக்கு அருகே அதனை அணைத்தபடி காணப்பட்டது. எவர் எவர்க்கோ வேம்பு பலவகையில் உபயோகம். ஆனால் என்னைப் பொறுத்த மட்டில் அந்த வேப்பம் பிசின் ஒன்று தான் முக்கியம். கடுதாசிக் கொடி ஒட்டுவதற்கு அம்மாவைக் கெஞ்சி மண்டாடி கோதுமை மாப்பசை செய்வித்திடலாம் ஆனால் நாகலிங்க வாத்தியார் வாங்கித்தரும் பழைய புத்தகத்தின் ஒற்றைகளை அழகாக ஒட்டுதற்குக் கோதுமை மாப்பசை சரிவராது.

எங்கடை சிறாப்பர் தமிழ்ப் பள்ளிக் கூடத்தில் மொத்தம் ஐந்து வாத்திமார் படிப்பித்தார்கள். தலைமை வாத்தியார் சங்கானையிலிருந்து வருவார். அவரது உயரத்துடன் அகலம் போட்டி போட்டு வளர்ந்தது. அப்போ, எல்லாம் நமது ஊரினை பேருந்து எட்டிப் பார்க்கவும் மறுத்து விட்டது. அவருக்குச் சைக்கிள் ஓட்டத் தெரியாதோ அல்லது சைக்கிள் ஓடினால் தினசரி அதற்கு அவர் அமரும் ஆசனம் மாற்ற வேண்டி வரும் என்பதாலோ காலையும் மத்தியானமும் மூன்று கட்டை பொடி நடை தான். சின்னத்தையலம்மா ஏழாலை வாசி. பெயருக்கு ஏற்றபடி ஆளும் கொஞ்சம் சின்னன் தான். எங்களுக்கெல்லாம் அடிக்க மாட்டார் ஆனால் மனுசி கிள்ளினால் நகத்தின் ஆழம் நிரவ குறைந்தது ஐந்து நாள் ஆவது எடுக்கும். அவருக்குக் கல்யாணம் ஆகவில்லை ஆகவே அவரது தகப்பனார் தான் காலையில் ஒற்றைத் திருக்கலில் அவரை அழைத்து வருவார். இரண்டரைக்குப் பள்ளிக் கூடம் முடிந்தபின் அவரை அழைத்துப் போவார். திருக்கலில் வைக்கோல் பரவி அதன் மேல் விரித்த பாயில் சின்னத் தையலம்மா உட்கார்ந்திருப்பார். போகும் பொழுது வைக்கோல் இருக்கமாட்டாது. அயர முற்பட்டால் திருக்கலின் கூடாரம் தலையைப் பதம் பார்த்து விடும். ஆகவே சிவனே என்று வீடு போய்ச் சேரும் வரை தையலம்மா கொட்டக் கொட்ட முளித்தபடி தான் இருப்பார். பள்ளிக் கூடத்துக்கு முன் உள்ள சின்னத்தம்பி கடையின் நீளமான வாங்குதான் தையலம்மாவின் அப்பருக்கு தற்காலிக வாசஸ்தலம். கடையின் பக்கத்தில் அவரது வன்னிமாடு வைக்கோலினைச் சுவைக்க இவர் பாலில்லாத் தேத்தண்ணீரையும் காய்ந்த வடையையும் சுவைத்துக் காலத்தை ஓட்டுவார்.

சீமான் சிறாப்பர் பள்ளிக் கூடத்தின் வெளியே வீதியோரத்தில் ஒரு தண்ணீர்த் தொட்டியும், ஆவுரோஞ்சிக் கல்லும், சுமை தாங்கியும் கட்டிவிட்டுள்ளார். யாரும் நல்லவர்கள் தொட்டியில் நீர் நிரப்பி விடுவார்கள் அல்லாவிட்டால் தையலம்மாவின் அப்பா நிரப்புவார். அவரது மாடு நீர் குடித்து ஆசுவாசமாக ஆவுரோஞ்சிக் கல்லில் உடலை ஒருக்கால் தேய்த்துக் கொள்ளும்.

ஆங்கில வாத்தியார் தில்லையம்பலமும் பெரிய தையலம்மாவும், மீசை வாத்தியாரும் உள்ளூர் வாசிகள். தில்லையம்பல வாத்தியார் ஆங்கிலத்துடன் மேல் வகுப்புகளுக்கும் பாடம் படிப்பிப்பவர். மேல் வகுப்பு எனறால் அப்படி ஒன்றும் பெரிதல்ல, நாலாம் ஐந்தாம் வகுப்புகள் தான் அங்கே மேல் வகுப்புக்கள்.

மீசை வாத்தியாரின் பெயர் நாகலிங்கம். வயதில் முதியவர். வெள்ளை வெளேரென்ற முறுக்கு மீசை. அந்த மெலிந்த நெடிய உயரத்துக்கு ஒரு கம்பீரத்தைக் கொடுத்தமையால் ஊரவர்களில் வயதானோர் சட்டம்பியார் எனவும் இளந்தாரிகள் மீசை வாத்தியார் எனவும் பட்டம் சூட்டிவிட்டனர். மீசை வாத்தியார் ஒன்றும் பெரிதாகப் படித்தவர் அல்ல. ஆனால் பாடசாலை முழுப்பொறுப்பும் அவர் கைகளில்தான். ஒழுங்காட்சி, பெற்றோர்களுடன் தொடர்பாடல், தளபாடம் என அத்தனை வேலையும் அவர் கைகளில். தலைமை உபாத்தியாயர் காலை நேரம் எப்படியோ வந்து சேர்ந்து விடுவார். மத்தியானமும் பாடசாலை விட்டதும் அவர் நடையைக்கட்டி விடுவார். ஆகவே மீசை வாத்தியார் தான் பாடசாலை முடிந்ததும் பாடசாலையைப் பூட்டிக் கொண்டு போக வேண்டும். காலையும் வந்து திறந்து நாய்களால் அசுத்தம் செய்யப்பட்ட வகுப்பறைகளை எல்லாம் திட்டித் திட்டி துப்பரவாக்க வேண்டும். எப்படியோ பெண் பிள்ளைகளைப் பிடித்து பாடசாலையைக் கூட்டித் துப்பரவாக்கி விடுவார் வாத்தியார். ஆனால் நாயினால் அசுத்தம் என்றால் அவர்கள் ஓடிவிடுவார்கள். வாத்தியார் 'அழிவான்ரை நாய்' என வாழ்த்தியபடி அப்புறப் படுத்துவார். அப்படிப் பட்ட சந்தர்பங்களில் மாத்திரம் வாத்தியார் மெல்லப் புகையிலைக் காம்பின் ஒரு துண்டினை முறுக்கி எடுத்து வாயுள் போட்டுக் கொள்வார்.

மீசை வாத்தியார் உள்ளூர் அரசியலிலும் தலைகாட்ட ஆசைப்பட்டு கிராமசபைத் தேர்தலில் ஒரு முறை போட்டியிட்டார். அப்போதெல்லாம் வாக்களிப்பவர்கள் புள்ளடி ஒன்றும் போட வேண்டியதில்லை. வேட்பாளர்களுக்கு ஒரு நிறம் கொடுத்திருப்பார்கள். திருவுளச் சீட்டினை கிராமவாசிகள் தாம் விரும்பியவரின் நிறப் பெட்டிக்குள் போட்டால் சரி. வாத்தியாருக்கு மஞ்சள் பெட்டி. அவரை எதிர்த்துப் போட்டியிட்டவர் வெள்ளை வேட்டித் தம்பையா. அவருக்குப் பச்சைப் பெட்டி. வெள்ளை வேட்டித் தம்பையாவின் பிரச்சாரப் பீரங்கி கள்ளுக் கடைக் கதிரன். வாத்தியார் படு தோல்வி. அந்த எளிய.. சனியன்கள் (சாதிப்பேர்) காசுக்கு வோட்டுப் போட்டுட்டுது-கள். ஒரு படித்தவனை அனுப்பினால் ஏதாவது பிரயோசனம் என்று எண்ணினதுகளா? வாத்தியாருக்குத் தன் கல்வி அறிவில் அசாத்திய நம்பிக்கை. இந்தக் குடிகாரனுக்கு வாக்களித்து விட்டுதுகள். அநியாயத்துக்கு அந்தக் கள்ளுக்கடை கதிரன் பயல் வோட்டுப் போடப் போறவன்களுக்கு பச்சைக்குப் போடுங்கள் என்று உணர்த்த வழியில் நின்று பூவரசம் இலையைக் காட்டிக் கொண்டிருக்கிறான் படு பாவி. இவங்களை என்ன செய்யலாம் எனப் புறுபுறுத்தார் வாத்தியார். ஆதற்கு மேல் அவரால் என்ன செய்ய முடியும்? ஆனால் 'தன்வினை தன்னைச் சுடும்' என்பார்களே அதுதான் நடந்தது. அந்த இன மக்களை வாத்தியார் சிறாப்பர் பள்ளிக்கூடத்தை அண்டவே விடவில்லை. ஆகவே அவர்கள் வாத்தியாரை கிராமச் சபையினை அண்ட விடாமல் பார்த்துக் கொண்டார்கள். இன்னும் சொல்வதானால் நாற்பதுகளின் நடுப்பகுதியில் தான் எனது அண்ணர் ஆசிரியரான பின்னர் அந்த இனமக்களுக்குக் கல்வி விமோசனம் கிட்டியது. எனது அண்ணர் காலையில் வீடு வீடாகச் சென்று அவர்களை அழைத்துக் கொண்டு அண்மையில் இருந்த இன்னொரு பாடசாலைக்குச் செல்வார். ஆரம்பத்தில் சிலர் நெளித்தனர். பின்னர் சகித்தனர்.

பள்ளிக் கூடத்தில் மீசைவாத்தியாரின் இன்னொரு பணி வகுப்பேற்றம் முடிந்ததும் பழைய புத்தகங்களுக்கு விலை மதித்துக் கொடுத்தல். பாடசாலையில் வகுப்பேற்றம் முடிந்ததும் ஒவ்வொரு மாணவனும் தனது பழைய வகுப்புக்கான புத்தகத்தினை விற்றுவிட்டு புதிய வகுப்புக்கானதை வாங்க வேண்டும். ஆகவே விலை மதிப்பதற்கு மீசை வாத்தியாரிடம் தான் வருவார்கள்.

மீசை வாத்தியார் தனது நாசனல் சேட்டுப் பொக்கற்றில் இருந்து கண்ணாடிக் கூட்டினைப் பவுத்திரமாக எடுத்துத் திறந்து உள்ளே உள்ள கண்ணாடியை எடுப்பார். கண்ணாடியின் ஒருபக்கக் கொழுவி நூலினால் வரிந்து கட்டப்பட்டிருக்கும். கண்ணாடியைத் திறந்து இரு காதுகளிலும் மாட்டிய பின்னர் புத்தகத்தினை வாத்தியார் மேலும் கீழும் பார்ப்பார். கண்ணினைச் சற்று கீழ்ப்பார்வையாக வைத்துப் பார்த்து விலையை மதித்துச் சொல்லி விடுவார்

அந்த வருடம் நான் இரண்டாம் தரத்தில் இருந்து மூன்றாம் தரத்துக்கு வகுப்பேற்றப்பட்டேன். ஒரு மாணவனின் புத்தகங்களை வாத்தியார் எனக்கு விலை பேசிப் பெற்றுத் தந்தார். சில பக்கங்கள் விட்டுப் போயிருந்தன. "வீட்டுக்குக் கொண்டு போய் பிசினால் ஒட்டி உறை போட்டுப் பாவி" என்றார் வாத்தியார். வீட்டுக்குக் கொண்டு போனேன். பிசின் இல்லை. என்ன செய்யலாம்? வேலியடி வேம்பு, 'நான் இருக்கக் கவலை உனக்கேன்' என்றது. குசினிக்கு முன்னர் கொடுவாக் கத்தி, 'இதோ நான் உதவுவேன்' என்றது. மெள்ள எடுத்துக் கொண்டு வேலிப்பக்கமாய் போனேன். வேப்பமரத்தின் முற்புறத்தின் பட்டை முழுவதையும் கொத்தி நிர்வாணமாக்கி விட்டு நிம்மதியாக வந்தேன். நிறையப் பிசின் எடுத்தால் மற்றைய மாணவர்களுக்கும் 'பந்தா' காட்டலாம் என்ற உற்சாகம். நாளையன்று நிறையப் பிசின் கிடைக்கும் என்ற நம்பிக்கையில். கத்தியும் கையுமாக வந்த என்னை அக்கா என்கிற பாவி கண்டு விட்டா. 'என்ன செய்த நீ' என்றார். சொன்னேன். 'அட பாவி வேம்பின் பட்டையை வெட்டினால் வேம்புக்குக் கூடாதே. அப்பு வரட்டும் இண்டைக்கு இருக்குது' என்றார். காத்திருந்து அப்பு வந்ததும் வத்தியும் வைத்து விட்டாள் அக்கா என்கிற பாவி. அப்புவுக்குத் தோட்டத்தால் வந்த களை. வேம்பினைப் பார்த்தவருக்கு வயிறு எரிந்திருக்க வேண்டும். 'ஏனடா இப்பிடிச் செய்தா நீ' எனக் கையை

தொடர்தல் 80ம் பக்கம்

Century 21
Affiliate Realty Inc. Brokerage
Off: 416.290.1200
Dir: 416.908.6003

3 Bedroom, 3 Washroom
End unit like semi,
Double Garage
7 Years Old
Morningside & Finch
Exclusive

பகீரதன் சகாதேவன்
முழுநேர விற்பனை முகவர்
CALL 416.908.6003 SAVE MONEY

ஓங்கிக் கொண்டுவந்தார். நானா விடுவேன் ‘ஐயோ அம்மா’ என நாலு வீடு கேட்கக் கத்தினேன். நாலு வீட்டுக்குக் கேட்கும் என்றால் அடுப்படியில் இருந்த அம்மாவுக்கா கேட்காது. ‘என்ன என்ன’ என்று கூறிக் கொண்டு வெளியே வந்தா. அப்புவின் உயர்ந்த கை கீழே போய் விட்டது. அம்மாவுக்கு அப்பு கொஞ்சம் மடக்கம். நான் தப்பினேன். உன்ரை செல்லம் செய்ததைப் பார் என்றார் அப்பு ‘அவன் என்ன வேண்டுமென்றா செய்தான்’ என்ற அம்மா அக்காவைப் பார்த்து முறைத்தா. அப்புவுக்கு என்ன செய்யலாம் எனத் தோன்றிற்று நேரே மாட்டடிக்குப் போய்ச் சாணி கொஞ்சம் கொண்டு வந்து வேம்பின் வெட்டுக்காயம் எங்கும் பூசினார்.

‘அப்படியா தம்பி வெட்டுறது’ என்றார் அம்மா. ‘நான் என்ன செய்வது. புதுப் புத்தகமும் வாங்கித் தரமாட்டீர்கள், பழம் புத்தகத்தை ஒட்டிப் பாவிக்கச் சொல்லி வாங்கித் தந்தார் மீசை வாத்தியார் பிசினுக்கு நான் எங்கே போவேன்’ என்றேன். ‘என்னைக் கேட்டிருக்கலாம். இப்படியா பட்டை முழுவதையும் வெட்டுவது. மரத்தின் வேர் உறிஞ்சும் தண்ணீர் இந்தப் பட்டையூடாகத் தானே இலைகளுக்குப் போகும். பட்டையை வெட்டினால் மரம் எப்படி அப்பு வளரும்’ என்றார் அம்மா தயவாக. பின்னாளில் ஸ்கந்தவரோதயாவில் டானியல் ஆசிரியர் தாவர வளர்ச்சிக்கு பட்டையின் உபயோகம் பற்றிச் சொன்னதை அம்மா அந்த வயதிலேயே சொல்லித் தந்து விட்டார். இதனால் தான் பெற்றோரைப் பிள்ளைகளின் முதல் ஆசிரியர்கள் என்கிறார்களோ!

இது இப்படி என்றால் நான் தொழில் பார்த்த நைஜீரியாவிலே வீதியோர வேப்பமரங்கள் எல்லாவற்றிலும் ஒரு குறிப்பிட்ட உயரம் வரை பட்டைகளைக் காணவே முடியாது. மலேரியா நைஜீரியாவின் தேசிய நோய்களில் ஒன்று என்பது அங்கு வசித்தவர்களுக்கு ஞாபகம் இருக்கும். அங்கு உத்தியோகம் பார்க்கச் சென்றவர் ஒருவரையேனும் அது ஆலிங்கனம் செய்யாமல் விட்டதில்லை. கிராமவாசிகளுக்கு வேப்பம் பட்டை அவித்துக் குடித்தால் மலேரியாவை விரட்டலாம் என்ற நம்பிக்கை. ஆகவே வேப்பமரங்கள் ஆள் உயரத்துக்குக் கீழே நிர்வாணமாகத்தான் காட்சி தருகின்றன. இத்தனைக்கும் நைஜீரியாவுக்கு வேப்பமரம் புலம் பெயர்ந்தது ஒரு நூற்றாண்டுக்குள் தான். இஸ்றேயில் விற்பன்னர்கள் ஆலோசனையின் பேரிலே வேப்பமரக் காடுகள் ஏற்படுத்தி உள்ளனர். வேம்பு வேகமாக வளரக் கூடியது, உயரத்துக்கு வளர வல்லது, அதிக நீர் தேவையில்லை என்பதுடன் அங்கே மழைக்காலங்களில் வீசுகின்ற புழுதிக்காற்றினைத் தடுக்க வல்லதாயும் உள்ளமையால் வெற்று நிலங்கள் எல்லாம் வேப்பமரக் காடாகி விட்டன. நானே 50க்கும் மேற்பட்ட வேப்பங் கன்றுகளை எனது பாடசாலை வளாகத்தின் உள்ளே நட்டுள்ளேன்.

அங்கே தொழில் பார்க்கச் சென்ற நம்மவர்களுக்கும் இக் காடுகள் மிகவும் உதவியாய் போய்விட்டது. நகரங்கள் தொலைவில் உள்ளமையால் நண்பர்களைக் காண்பதற்காக நீண்ட தூரம் வீதி வழியாகக் கார்களில் அதிகம் பயணம் செய்வோம். ஒன்றுக்கோ இரண்டுக்கோ போவதற்கு இடைவழியில் வசதிகள் இருப்பதில்லை. ஆகவே வீதி ஓரங்களில் உள்ள இந்த வேப்பங் காடுகள் பெரிதும் கை கொடுத்தன. பயணம் செய்யும் போது இக்காடுகளே எமது சிரமபரிகாரத்துக்கு உதவி வந்தன.

வேம்பு தமிழர்களின் பண்பாட்டுடன் இணைந்தது. தொல்காப்பியம் முதல் அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, ஐங்குறுநூறு, நெடுநல்லாடை, பதிற்றுப் பத்து, பெரும் பாணாற்றுப் படை என அத்தனை சங்க இலக்கியங்களிலுமே வேப்ப மரம், பூ, தளிர், இலை, நிழல் எனத் தமிழர் வாழ்வியல், காதல், வீரம், வழிபாடு, நம்பிக்கை, கலாசாரம் என அத்தனையுடனும் பிணைந்து விட்டதனைக் காண முடிகிறது.

கோடை காலங்களிலே, உக்கிரமாக வெய்யில் அடிக்கின்ற போது ஏற்படுகின்ற தொற்று நோயினை அம்மாள் வருத்தம் என்பார்கள். ஆகவே, இந்த நோயினால் பீடிக்கப் பட்டவரை வேப்பம் இலை பரவி அதன் மேல் படுக்க விடுவார்கள். வீட்டின் முற்புறத்திலும் வேப்பம் இலையினைச் செருகி விடுவார்கள். அது மற்றவர்களுக்கும் இவ் வீட்டில் அம்மாள் நோய் உள்ளவர் என்பதற்கு அறிகுறியாக அமையும்.

ஊரில் பரவலாக இந்நோய் ஏற்பட்டால் ஒரு கலைக் குழுவினர் வீடு வீடாகச் சென்று கரகாட்டம் நடத்துவார்கள். மண்டுமண்டை எனும் குக்கிராமம் சண்டிலிப்பாயின் வடக்கு எல்லையில் உள்ளது. அங்கு வாழ்கின்றவர்கள் பாரம்பரியக் கலையில் கை தேர்ந்தவர்கள். பொதுவாக, சின்னமுத்து, பொக்குளிப்பான் போன்ற நோய்கள் மாரி அம்மன் நோய்கள் என்பார்கள். ஆகவே இக் கலைஞர்கள் வீடு வீடாகச் சென்று உடுக்கடித்துப் பாடி, கரகாட்டம் ஆடுவார்கள். ஆண்கள் தான் ஆடுவார்கள் ஆனால் பெண் போன்று வேடமிட்டிருப்பார்கள்.

“உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரிஅம்மா-
எங்கள் முத்துமாரி
உன்பாதம் சரண்புகுந்தேன் எங்கள் முத்துமாரியம்மா-
எங்கள் முத்துமாரி
கலகத்து அரக்கர் பலர் எங்கள் முத்துமாரியம்மா-
எங்கள் முத்துமாரி
கருத்தினிலே புகுந்து விட்டாய் எங்கள் முத்துமாரியம்மா
எங்கள் முத்துமாரி”

மேலே உள்ள பாரதி பாடல் பொதுவாகப் பாடப்படும் பாடல். தலையில் உள்ள செம்பு நிறைய வேப்பிலை இருக்கும் ஆடுபவரின் இரு கைகளிலும் வேப்பிலை பிடித்தபடி இருக்கும். ஊரவர்கள் தாராளமாக காசோ அல்லது அரிசியோ கொடுப்பார்கள். வார இறுதியில் மாரி அம்மன் கோவிலில் குழுத்தி நடைபெறும். சோறு அவித்து ஊரவர்கள் எல்லோரும் அங்கே போய் உண்பார்கள். அது ஒரு சமூக நிகழ்ச்சியாகி விடும்.

வேப்பம் இலை ஒரு தொற்றுத் தடை மருந்தாக (Disinfectant) உபயோகிக்கப் படுகிறது. வேப்பிலையின் மருத்துவப் பயன்கள் பற்றி எம்மவர்கள் நிறையவே தெரிந்து வைத்திருந்தார்கள். இப்பொழுது வீட்டு மிருகங்கள் முதல் மனிதர்கள் வரையில் பயன் படும் எத்தனையோ மருத்துவப் பொருட்கள் விற்பனைக்கு வந்து விட்டன. அமெரிக்க நிறுவனங்கள் பல தயாரிப்பு காப்புரிமை (Patent) பெறுவதில் இந்திய நிறுவனங்களுடன் போட்டி போடுகின்றன.

Neem பற்பசை இங்கிலாந்திலே நம்மவர்களிடம் அதிகம் பிரபலமானது ஆனால் கனடாவிலே அதன் விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது. கனடிய உடனலத்துக்கான விற்பன்னர் குழு (Canadian Health Authorities) அதன் விற்பனையைத் தடை செய்துள்ளது. அப் பற்பசையினில் அளவுக்கதிகமான di ethylene glycol ( DEG) மற்றும் ஊறு விளைவிக்கக் கூடிய பற்றீரியாக்களும் உள்ளன என்பது அவர்களின் வாதம்.

அது போகட்டும். நான் ஒரு விசயம் சொல்லப் போகிறேன். அதனை யாருக்கும் சொல்லி விடாதீர்கள். பதின்மவயது இளைஞர்களுக்கு அதீத கற்பனைகள் தோன்றும் விசித்திரமான வயது என உளவியல் அறிஞர்கள் கூறுவார்கள். எனக்கும் அப்போது ஒரு கனவு. விசித்திரமான கனவு. நான் பெரியவனாக வந்ததும் ஒர் அனாதை ஆச்சிரமம் நடத்த வேண்டும் என்பதே எனது கனவு. அதனை நிறைவேற்றுதற்கு எனக்கு ஒரு காணி வேண்டும். எங்களுக்கு ஒரு வடலித் தோப்பு இருந்தது. அது போதும் அடுத்து நான் அதனை நடத்துவதாயின் கல்யாணம் செய்யாமல் இருக்க வேண்டும். எங்கோ வாசித்த செய்தி கை கொடுத்தது. வேப்பம் தளிர் சாப்பிட்டு வந்தால் பாலியல் எண்ணங்கள் ஏற்படமாட்டாது என்ற செய்தி என்னைக் கவர சிறிது காலம் வீட்டில் ஒருவருக்கும் தெரியாமல் வேப்பம் தளிர் உண்டு வந்தேன். இளமைக் கனவுகள் போன்று சிறிது காலத்தின் பின்னர் எல்லாமே போய் விட்டன. சிரிக்காதீர்கள். நீங்கள் உடனே இதை நாலு பேர்களுக்காவது சற்று ஆலாபனையுடன் சொல்வீர்கள் என்ற நம்பிக்கை உண்டு. யாழ்ப்பாணத்தானாவது இரகசியம் பேணுவதாவது! அண்மையில் நடைபெற்ற ஆராய்ச்சிகளின் படி எலிகளுக்கு வேம்பம் இலைச் சாறு கொடுக்கப் பட்டால் இனப் பெருக்கத் திறன் குறைவதாகக் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. அட தொடர்ந்து எடுத்திருக்கலாமா?

வேம்பின் தாவரவியல் பெயர் Azadirachta indica என்பது. அதிக வேகமாக வளரக்கூடிய தாவரங்களிலே வேம்பு முதன்மையானது என்பது தாவரவியல் அறிஞர்களுடைய கண்டு பிடிப்பு. இது உண்மையாக இருக்க வேண்டும் என்பதற்கு எமது வேலியடி வேம்பு நல்ல உதாரணம். பெண் வளர்த்தியோ பீர்க்கங்காய் வளர்த்தியோ என்பார்கள் அதனைப் பொய்யாக்கி விட்டது நம் வேம்பு. கர்ப்பிணிப் பெண்ணின் வயிறுபோல் புடைத்து, எமது வேலியையும் தாண்டிப் பக்கத்து செல்லுவின் வீட்டினையும் எட்டிப் பார்த்ததால் வந்தது ஒரு வினை. செல்லுவின் காணி எங்களது வளவுக்கு தெற்காலே உள்ளது. அளவில் சிறிது. ஒரு பரப்பு அல்லது சற்று மேலாக இருக்கலாம். செல்லு மாங்குளத்தில் புகையிரதத் துறையிலே போர்ட்ராக வேலை செய்தார். இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை வீடு வருவார். அவர்களது சிறிய வீட்டில் அவரது மனைவியும் இரண்டு பெண்பிள்ளைகளும் தான். செல்லு கொஞ்சம் சாந்த சுபாவம். மனுசி அதற்கு நேர்மாறு. வாய் கொஞ்சம் நீளம். குரல் ஓங்கி ஒலிக்கும். ‘வாய்காரச் செல்லம்மா’ என்று தான் ஊரவர்கள் அவரைச் செல்லமாக அழைப்பார்கள்.

இரண்டு வளவுகளுக்கும் இடையே உள்ள வேலியை நாங்கள் தான் அடைப்பது வழக்கம் ஆனால் ஒவ்வொரு தடவையும் கதியால் நடுகையில் அந்த மனுசி பிரச்சினை ஏற்படுத்தாமல் விட மாட்டார். தங்களது காணியை நாம் சிறுகச் சிறுக ஆக்கிரமிப்பதாக அவருக்கு ஒரு மனப் பிராந்தி. அன்று வேலி அடைப்பதற்கான கதியால் நட்டுக் கொண்டிருந்தார் அப்புவின் உதவியாளரான நாகமணி. திடீரென உள்ளே அவசர அவசரமாக வந்தார். ‘நான் என்ன செய்யட்டும். அந்த மனுசி எல்லாக் கதியாலையும் பிடுங்கிப் கீழே போட்டுட்டு நிக்குது’ என்றார். என்னப்பா விசயம் என்று கேட்டபடி பார்க்கப் போன அப்பு ருத்திர மூர்த்தியாக நின்ற செல்லம்மாவைப் பார்த்ததும் கதிகலங்கிப் போனார் ‘என்ன நினைக்கிறியள் நான் ஒரு பொம்பிளை எண்டு ஏமாத்தப் பார்க்கிறியளா. கதியாலை அந்தப் பரதேசி சாய்த்துச் சாய்த்து நடுகிறான். வேப்பமரத்தை உங்களின்ரை காணிக்குள் முற்றாகவே கொண்டு வாற எண்ணத்தில் செய்யிறியள் இது அடாத்து. நான் விட மாட்டேன்’ எனப் பொரிந்து தள்ளிவிட்டு முச்சிரைத்தபடி நின்றார். அப்புவுக்கோ என்ன செய்வது என்று தெரியவில்லை. வேறு வழி இல்லை மீசை வாத்தியார் தான் தஞ்சம். அவரை அழைத்து வந்து மத்தியஸ்தம் செய்யச் சொன்னார் அப்பு. மீசை வாத்தியர் ஒரு கயிறினை நேராகக் கட்டினார். நமது வேம்பு ஏறக்குறைய கயிற்றுக்கு அப்பால் அரைவாசி நின்றது. ஆகவே ‘முடி அடைக்க விட மாட்டேன்’ என்றார் செல்லம்மா. வாத்தியார் தீர்ப்பு எங்களுக்குப் பாதகம் தான். ஆனால் அப்பு ஒப்புக் கொணடார். அதாவது வேலியை வேம்புக்கு ஒரு புறத்தில் நிறுத்தி விட்டு மறு புறத்தில் மீண்டும். ஆரம்பிப்பது.

அம்மாவும் செல்லம்மாவுக்கு எதிர்ப் பாட்டுப் பாடும் ஆற்றல் உள்ளவர் ஆனால் அப்பு அடக்கி வாசிக்கச் சொல்லி விட்டார். அம்மாவுக்குத் தோன்றிய மாற்று வழி வேம்பினைத் தறித்து விடுவது. புதிதாகக் கட்டப்படும் வீட்டிற்குக் கதவு, ஜன்னல் செய்யலாம் என்பது அம்மாவின் வாதம். இங்கே செல்லம்மா மீண்டும் புரட்சி செய்தார். பெறுமானத்தில் அரைவாசி தனக்குத் தந்தே ஆக வேண்டும் என்றார். அம்மா அதற்கு முற்றாகவே எதிர்ப்புத் தெரிவித்தார். ஆபத்பாந்தவனாக வந்தார் மீசை வாத்தியார். அப்புவைத் தனியே அழைத்துச் சென்று, ‘பொன்னு இது வான்பயிர் செய்பயிர் அல்ல. ஆகவே அவர் கேட்பதில் நியாயம் உள்ளது மூன்றில் ஒரு பகுதி விலையைக் கொடுத்துப் பிரச்சினையைத் தீர்த்து விடு’ என்றார் வாத்தியார். அப்போதைய பிரச்சினை அம்மாவின் எதிர்ப்புக்கிடையே வாத்தியார் மத்தியஸ்தத்தின் படி தீர்க்கப்பட்டது. வேம்பு தறி பட்டது. இப்போ எல்லையில் வேம்பு இல்லை. ஆனால் அதன் வேரில் இருந்து மீண்டும் இரண்டு கன்றுகள் இப்போ முளைத்து நிற்கின்றன ஒன்று அவர்கள் பக்கமாக மற்றையது எங்கள் பக்கமாக.



kanagasabapathy.p@thaiveedu.com

TORONTO BUSINESS COLLEGE
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



COMPUTERIZED ACCOUNTING DIPLOMA
● EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள் ✓
● 3 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள் ✓
● 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள் ✓
அரசாங்க நிதி உதவியில் இலவசமாகக் கற்கலாம்
DIPLOMA முடித்தவர்கள்
ACCOUNTS CLERK — PAYROLL CLERK
ACCOUNTS RECEIVABLE — ACCOUNTS PAYABLE
ACCOUNTS ASSISTANT — BOOK KEEPER
போன்ற பதவிகளைப் பெற்று
உங்கள் எதிர்காலம் மினிர்வதைக் காண்பீர்
INSTRUCTORS
★ PUSHPA ★ SP ★ RAM
CERTIFICATE COURSES
Buy One Get One Free
WINDOWS, KEY BOARDING, DATA ENTRY, WORD, EXCEL, POWER POINT
ACCESS, OUTLOOKQUICK BOOKS, SIMPLY ACCOUNTING, ACCPAC
DAY, EVENING, WEEK ENDS
416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208 ( SHEPPARD & BRIMLEY )
SCARBOROUGH
OACC PROUD MEMBER
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)

# கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் நடாத்திய விருது வழங்கும் வைபவம் - Chamber Nite 2010


வர்த்தக சம்மேளனத் தலைவர் கென் கிருபா உரையாற்றுகையில்


பிரதம விருந்தினர் ஜோன் ரோறி உரையாற்றுகையில்


முன்னாள் தலைவர் லோகன் வேலும்மயிலும் உரையாற்றுகையில்


சம்மேளனத்தின் உப தலைவர் சிறிதரன் துரைராஜா உரையாற்றுகையில்


விருது வழங்கும் நிகழ்வை தொகுத்து வழங்கிய உமேஸ் வல்லிபுரம்


நிகழ்வினை தொகுத்து வழங்கிய மஞ்சுளா செல்வராஜா


முதன்மை வர்த்தக விருதினைப் பெற்றுக்கொள்ளும் சஞ்ஜே கோனேஸ்வாலும் அவரது சகோதரர்களோடு றோயல் வங்கி அதிகாரிகளும் சம்மேளனத் தலைவரும்


முதன்மை சந்தைப் படுத்தலுக்கான விருதினைப் பெற்றுக்கொள்ளும் மெலனி டேவிட்டோடு ரி.டி.வங்கி அதிகாரிகளும் சம்மேளனத் தலைவரும்


முதன்மை பெண் வர்த்தக விருதினைப் பெற்றுக்கொள்ளும் ஹில் பத்மநாதனோடு அவரது கணவரும் ஸ்கோச வங்கி அதிகாரியும் சம்மேளனத் தலைவரும்


முதன்மை நிபுணத்துவ விருதினைப் பெற்றுக்கொள்ளும் பேராசிரியர் செல்வா கனகநாயகத்தோடு இன்டஸ்ரியல் எலயன்ஸ் அதிகாரிகளும் சம்மேளனத் தலைவரும்


முதன்மை இளம் வர்த்தகர் விருதினைப் பெற்றுக்கொள்ளும் துசானி ஜெயசேகரன் தம்பதியினரோடு இன்டஸ்ரியல் எலயன்ஸ் அதிகாரிகளும் சம்மேளனத் தலைவரும்


முதன்மை சமூக சேவைக்கான விருதினைப் பெற்றுக்கொள்ளும் தேவி அரசநாயகம், ரவி சிறிதரன் ஆகியோரோடு ஜோன் ரோறியும் கரி ஆனந்தசங்கரியும் சம்மேளனத் தலைவரும்


முதன்மை சந்தைப் படுத்தலுக்கான விருதினைப் பெற்றுக்கொண்ட மெலனி டேவிட்டோடு அவரது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் அவரது அலுவலக உத்தியோகத்தர்கள்


கலை நிகழ்ச்சியை வழங்கிய ஸ்காபுறோ பல்கலைக்கழக தமிழ் மாணவர்களின் அஸாசின்ஸ்' நடனக்குழுவினர்



நிகழ்வினை திறம்பட நடாத்தி முடித்த வர்த்தக சம்மேளனத்தின் நிர்வாக சபை உறுப்பினர்கள். லோகன் வேலும்மயிலும், கரி ஆனந்தசங்கரி, சிறிதரன் துரைராஜா, கல்யாணி நாதன், கென் கிருபா, சின்னத்துரை ஜெயகுமார், சாம் திரு, பிலிப் சபாபதிப்பிள்ளை, சாந்தா பஞ்சலிங்கம், ரவி கனகசபை, மைக் அகிலன் ஆகியோர்.

இடம்: றோயல் யோர்க் ஹோட்டல், ரொறன்ரோ
திகதி: ஏப்ரல் 10, 2010

Photos: Gana Arumugam
ninaivukal.com

# வாத்தியார் வீட்டிலிருந்து வன்கூவருக்கு... 07

K.S. பாலச்சந்திரன்

# அவர் சிரித்துக்கொண்டே அழுதார்

1995ல் எனது அமெரிக்கப்பயணத்தின் ஒரு புள்ளியாக சியாற்றில் நகரில் எனது நிகழ்ச்சிக்கு அழைப்பு வந்திருந்தது. எனது நண்பர் ஒருவர் நான் அமெரிக்காவெங்கும் கலைப் பயணம் மேற்கொண்டிருப்பதாக இணையத்தில் செய்தி ஒன்றை ஏற்றிவிட அதைப்பார்த்துவிட்டு, பல இடங்களில் இருந்தும் அழைப்புகள் வந்தன. அதில் ஒன்றுதான், அமெரிக்காவின் மேல்விளிம்பிலே கனடாவின் எல்லையின் அருகிலே (100 மைல் தொலைவுதான்) இருக்கின்ற நகரமான சியாற்றில்.

கணனி உலகின் ஏகபோக ஆட்சியாளர்களாக விளங்கிய (கவனிக்கவும் - விளங்கிய) மைக்ரோசொப்ற் நிறுவனத்தின் தலைமை நிறுவனம் அங்கிருந்து 18 மைல் தொலைவிலுள்ள Redmond நகரில்தான் இருக்கிறது என்பதோடு, அதன் அதிபரும் உலகின் பெரும் பணக்காரர் வரிசையில் அடிக்கடி முதலாம், இரண்டாம் இடங்களில் மாறி, மாறி சஞ்சாரம் செய்பவருமான பில்கேற்ஸ் வசிக்கும் இடம் என்பதாலும், சியாற்றில் எனக்கு கவர்ச்சியான இடமாகத் தெரிந்தது.

அமெரிக்காவில் அதிகம் பட்டதாரிகள் உள்ள நகரமான சியாற்றிலில் உள்ள பல்கலைக் கழகங்களில் படிக்கும் பல நம்நாட்டைச் சேர்ந்த மாணவர்களைச் சந்தித்தேன். அவர்கள் புத்தகப் பூச்சிகளாக இருந்துவிடாமல், பலதுறைகளைப்பற்றியும் தங்கள் அறிவை வளர்த்துக்கொண்டவர்களாக இருந்தார்கள். Yahoo என்ற சர்வதேச இணையத்தொடர்புக்கான குழுமம் அந்த ஆண்டில்தான் (1995 ஜனவரியில்) நிறுவப்பட்டிருந்தது. அதனோடு எனக்கு பரிச்சியம் செய்து வைத்தவர்கள் இந்த மாணவர்கள்தான். கணனி என்றால் சிக்கலான கணக்குகளுக்கு விடைகாணும் இயந்திரம் என்ற எண்ணத்துடன் வந்த எனக்கு இணையத்தின் அறிமுகம் புதிய உலகத்தையே விரித்து வைத்தது.

இசை, இலக்கியம், சினிமா என்று எல்லாவற்றிலும் அந்த மாணவர்களின் ரசனை மாறுபட்டதாகவிருந்தது. மேற்கத்திய இசையும், கீழைத்தேய இசையும் சங்கமிக்கும் Fusion என்ற இசைவடிவத்தை அவர்கள் மிகவும் ரசித்துக்கேட்டார்கள். புரிந்தும், புரியாமலும் நானும் அவர்களோடு அந்த இசையைக் கேட்க ஆரம்பித்தேன்.

அப்படிக்கேட்ட சிடி ஒன்றில் இருந்த ஒரு இசைப்பகுதியின் பெயர் என்னை அளவுக்கதிகமாகவே ஆச்சரியப்படவைத்தது. அதன் பெயர் “யாழ்ப்பாணத்தின் நினைவுகள்” (Memories of Jaffna). அந்தப்பெயரை வாசித்ததும் என்மனதில் எழுந்த மகிழ்ச்சி அளவற்றது. எல்.சுப்பிரமணியம் என்ற சர்வதேசப்புகழ்பெற்ற இசைக்கலைஞனின் இசைக்கு யாழ்ப்பாணம் எப்படி தொடர்புபட்டது என்று அறிய விரும்பினேன். பதில் கிடைத்தது. இணையத்தில்தான்.

மேற்கும், கிழக்கும் இசையில் சங்கமிக்கும் நிகழ்ச்சிகள் மூலம் உலகெங்கும் ரசிகர்களைப் பெற்றவர்கள் - எல்.சுப்பிரமணியம், எல்.சங்கர் என்ற சகோதரர்கள். இவர்கள் தென்னிந்தியாவில் பிறந்தாலும், சிறிய வயதிலேயே, தந்தையாரான பிரபல வயலின் வித்வான் லட்சுமிநாராயணன் சங்கீத ஆசிரியராக பணியாற்ற யாழ்ப்பாணத்திற்கு செல்ல, குடும்பத்தாரோடு அங்கு போய்விட்டார்கள். அவர்களின் இளமைக்காலம் முழுவதும் அங்குதான் கழிந்தது. அரங்கேற்றம்கூட யாழ்ப்பாணத்துக் கோவில் ஒன்றில்தான் நடந்தது.

“யாழ்ப்பாணத்தின் நினைவுகள்” பற்றி மணி (அதுதான் ரசிகர்கள் அவருக்கு வைத்த செல்லப்பெயர்) இவ்வாறு கூறுகிறார்.

“நாங்கள் இலங்கையில் தமிழர்கள் வாழும் யாழ்ப்பாணத்தில் பலஆண்டுகள் வாழ்ந்தோம். கலாரசனையும், பாரம்பரியமும் விளங்கும் அழகான இடம். அங்குதான் இசைத்துறையில் நான் காலடி எடுத்துவைத்தேன். நானும் என் தந்தையாரும், உடன்பிறந்தவர்களும் கோவில்களில் நீண்டநேர இசைக்கச்சேரிகள் செய்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது”

எங்கள் மண்ணோடு ஏதோவகையில் தொடர்பு கொண்ட ஒரு புகழ்பெற்ற கலைஞனைப் பற்றி தெரிந்துகொள்ள அமெரிக்காவின் ஒரு மூலையில் உள்ள சியாற்றிலுக்கு வரவேண்டியிருந்திருக்கிறது. என்று நினைத்துக்கொண்டேன்.

இனி எனது நிகழ்ச்சிக்கு வருவோம். எங்கே நடந்தது என்றறிந்தால் ஆச்சர்யப்படுவீர்கள். நான் முன்னர் குறிப்பிட்ட உலகப்பெரும் பணக்காரரான பில்கேற்சின் மைக்றோசொப்ற் நிறுவனத்தின் தலைமையகத்தில், பணியாளர்கள் ஒன்றுகூடும் மண்டபத்தில்தான் நடந்தது. அங்கு வேலைசெய்யும் நம்நாட்டு இளைஞர்களின் உதவியினால் இது சாத்தியமாகியது என்றார்கள்.

பார்வையாளர்கள் 50 பேருக்குள்தான் இருக்கும். இத்தனைக்கும் வெகுதொலைவில் இருந்தெல்லாம் வந்திருந்தார்கள். சியாற்றில் இருக்கும் வாஷிங்டன் மாநிலத்தின் (வெள்ளை மாளிகை இருக்கும் வாஷிங்டன் டி.சி அல்ல. அது இங்கிருந்து 2,800 மைல் தொலைவில் இருக்கிறது) உத்தியோகபூர்வ தலைநகரமான ஒலிம்பியாவிலிருந்துகூட ஒரு தம்பதியினர் வந்திருந்தார்கள்.




என் நிகழ்ச்சி ஆரம்பித்தது. தேடல் அறிவின் அத்திவாரத்தையே புரட்டிப்போட்ட ஒரு நிறுவனத்தின் தலைமையகத்தில், பருத்தித்துறையிலிருந்து, யாழ்ப்பாணம் செல்லும் 750ம் இலக்க பஸ் செல்லக்கூடும் என்று யார் எதிர்பார்த்தார்கள். ஆனால் சென்றது. பார்வையாளர்களுக்கு அது மறந்துபோன சங்கதியாக இருக்கும் என்று ஆரம்பத்தில் நான் நினைத்தது என்னவோ உண்மைதான். ஆனால் அவர்கள் மறக்கவில்லை. என்னோடு மனமும் முகமும் நிறைந்த சிரிப்போடு அவர்களும் பயணித்தார்கள்.

பகல்பொழுதில்தான் நிகழ்ச்சி நடந்ததினால் எல்லோருடைய முகபாவங்களையும் என்னால் அவதானிக்கமுடிந்தது. எல்லோரும் வாய் கொள்ளாச்சிரிப்புகளுடன் இருந்தார்கள்.

ஒரேயொருவர் சிரிக்கமுனைந்தாலும், அடிக்கடி கண்களை துடைத்தார். அவரை அடிக்கடி பார்த்துக்கொண்டேன். அவர் கலங்குவது தெளிவாகத் தெரிந்தது.

நிகழ்ச்சி முடிந்தபின் எல்லோரும் என்னைச் சுற்றிநின்று பலதும், பத்தும் கதைத்தார்கள். கிடைத்த ஒரு இடைவெளியில் ‘அவர்’ அருகில் சென்று, அவர் கலங்கிய காரணத்தை மெதுவாகவே கேட்டேன். அவர் பதில் சொன்னார்.

அவர் யாழ்ப்பாணநகருக்குள்ளேயே கண்டி றோட் என்ற பிரதானவீதிப்பகுதியில் வாழ்ந்தவர். அமெரிக்காவிற்கு வந்து வெகுநாட்களாகிவிட்டன. அமெரிக்கப் பெண்ணைத் திருமணம் செய்து வளர்ந்த பிள்ளைகளும் இருக்கிறார்கள். வீட்டில் தமிழ்பேசும் அல்லது கேட்கும் வாய்ப்பு அறவேயில்லை. தமிழ் முகத்தைப்பார்க்கவே வெகுதூரம் வரவேண்டும்.

“நீண்டநாட்களுக்குப்பிறகு மீண்டும். ஊரில் வாழ்ந்த ஒரு அனுபவத்தை எனக்கு தந்தீர்கள். அதனால்தான் தன்னிச்சையாக என் கண்கள் கலங்கின” என்று சொன்னார். அவர் நிலை எனக்கு புரிந்தது. அதற்குமேல் நான் ஒன்றும் பேசவில்லை.

நிகழ்ச்சி முடிந்தபின்னரும் சில நாட்கள் சியாற்றிலில் தங்கினேன். நான் தங்கியிருந்த வீட்டில் மாடியில் எனது அறை. ஜன்னலைத் திறந்தால் முற்றத்தில் நிற்கும் பெரிய மரம். கொத்துக்கொத்தாக இலைகள், பார்க்க ரம்மியமாக இருக்கும். ஒரு நாள் காலை ஜன்னலைத் திறந்தேன். மரத்தின் அத்தனை இலைகளும் யாரோ ராட்சதன் பற்றி உலுக்கியது போல நிலத்தில் விழுந்து கிடந்தன. ஒரு இலைகூட மரத்தில் இல்லை. Fall (இலையுதிர்காலம்) என்று சொன்னார் வீட்டுக்கார அன்பர். அந்த ஆங்கிலச்சொல்தான் எனக்கு சரியாகப்பட்டது. ஒரே இரவில் எத்தகையதோர் வீழ்ச்சி!

கடைசிநாள் வந்தது. அன்றுமாலை றெக்சாஸ் புறப்படப்போகிறேன். சிலமணித்தியாலங்களே இருக்கும்போது அன்பர் ஒருவர் கேட்டார்.


“அண்ணா..உங்களுக்கு புறூஸ் லீயை பிடிக்குமா?”

“இது என்ன கேள்வி. நான் யாழ்ப்பாணம் றீகல் தியேட்டரிலும், கொழும்பு சவோய் தியேட்டரிலும் அவரின் படங்கள் எத்தனை தரம் பார்த்திருப்பேன்.”

நான் சொல்லிமுடிக்க அவர் பக்குவமாகச் சொன்னார். “புறூஸ் லீ இங்குதான் வாழ்ந்தவர். அவரையும் அவரது மகனையும் அடக்கம் பண்ணின இடம் அவ்வளவு தூரமில்லை. போகலாம்”

கார் பறந்தது. கடைசி, கடைசியாக லேக்வியூ மயானத்தின் கேற் தெரிந்தது. எங்கள் கார் அருகில் செல்ல கேற் மெதுவாக மூடப்படுவது தெரிந்தது. என்னோடு வந்தவர்கள் அவசரமாக இறங்கி ஓடினார்கள். காவலாளிக்கு என்னைக்காட்டி ஏதோவெல்லாம் சொன்னார்கள். அவர் தலையாட்டினார். ஆறுமணியாகிவிட்டது. முடியவேமுடியாது என்று கையை விரித்துவிட்டார்.

நான் என் அபிமான நடிகரின் அடக்கஸ்தலத்தை பார்க்காமலே சியாற்றிலை விட்டுப் புறப்பட்டேன்.



ksbala@thaiveedu.com

www.thaiveedu.com



தளம் எல்லாம் தளமல்ல
iwishtomove.com மாத்திரமே
உங்கள் வீடு வாங்குதல், விற்றலுக்கான இணையத்தளம்
ITS FAMOUS FOR HOME BUYERS AND SELLERS
www.iwishtomove.com
NEW LISTINGS EVERYDAY
Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
Fax: 905.471.7441
RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated

# கடந்த மாதத்தில்... நினைவில் நிற்கும் நிகழ்வுகள் சில...



New Jasmine Banquet Hall இல் இடம்பெற்ற Juanita Nathan - Public School Board Trustee Candidate - Fundraising Dinner நிகழ்வில் (Apr 23, 2010)



நீதன் சான் ஆதரவாளர்கள் Baba Banquet Hallஇல் நடத்திய 'ஒற்றுமையே பலம்' பொதுக்கூட்டத்தில் (29.04. 2010)



கனடா தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் 12வது ஆண்டு விருது விழா 2010இல் (Apr 10, 10)



விளம்பரம் பத்திரிகை ஆதரவில் 'சொற்கோவை வெளியீடும் செல்வா இலங்கையன் நினைவு நாளும்' நிகழ்வில் (Apr 18, 10)



நாற்றுமேடை நிகழ்வில் (14th Avenue / McCowan)



Canadian Tamil Graduate Association நிகழ்வில் (Apr 16, 10)



Scarborough Civic Centreஇல் 'உயிர்நிழல்' கலைச்செல்வனின் 5வது ஆண்டு நினைவு நிகழ்வில் (April 17, 2010) Photo by: Ramanan



Deepan Vigneswaran -School Board Trustee Candidate- Fundraising Dinner நிகழ்வில்



ரொறன்ரோவில் நடைபெற்ற 'ஆய்த எழுத்து' பத்திரிகை வெளியீட்டு விழாவில். (Apr 04, 2010)



கீல் / பிஞ்ச் வளாகம் - நாற்றுமேடை நிகழ்வில் (Apr 10, 10) Photo by: Kiruba



பாரதி கலைக்கோவிலின் 'சமர்ப்பணம்' - திருமதி பவதாரணி மதிவாசன் அவர்களின் நினைவாக Princess Margaret Hospital - புற்றுநோய் மருத்துவமனைக்கு நிதி சேர்க்கும் நிகழ்வில் (Apr 02, 10)



கீல் / பிஞ்ச் வளாகம் - நாற்றுமேடை நிகழ்வில் (Apr 10, 10)

நிழற்படங்கள்: தாய்வீடு பத்திரிகைக்காக கணா ஆறுமுகம் - www.ninaivukal.com

உங்கள் விழாக்களின் படங்களும் இங்கு இடம்பெறவேண்டுமாயின், விழா பற்றிய விபரங்கள் மற்றும் தொடர்பிலக்கங்களுடன் events@thaiveedu.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.


2240 Markham Road (at Finch), Scarborough
www.formulahonda.com
Formula Honda
Where You're Treated like Family.
Steeles
Finch
McCowan
401
ராஜா தர்மலிங்கம்
Rajah Tharmalingam
Dir: 647-833-4998
All are HONDA Certified Used Vehicles
2009 HONDA CIVIC
SEDAN, 4 DOOR
$17,995 27,460 kms
2006 HONDA ACCORD SE
SEDAN, 4 DOOR
$16,988 68,938 kms
2007 HONDA CIVIC EX
SEDAN, 4 DOOR
$17,995 58,600 kms
2006 ACURA RSX
SPORT, COUPE, 2 DOOR
69,900 kms
2008 HONDA CIVIC LX
SEDAN, 4 DOOR
$17,500 40,551 kms
2008 HONDA ACCORD EX
SEDAN,4 DOOR
$20,500 84,650 kms
2005 HONDA ACCORD EX-L
COUPE, 2 DOOR
$14,995 61,240 kms
2007 HONDA ACCORD EX-L
SEDAN, 4 DOOR
$20,995 67,900 kms
2005 HONDA CIVIC
VALUE COUPE, 2 DOOR
$10,995 78,900 kms
2007 HONDA CIVIC
4 DOOR, SEDAN
$15,995 96,196 mks
2010 HONDA CR-V EX
SPORT, UTILITY, 5 DOOR, SUV
16,359 kms
2007 HONDA CR-V EX
SPORT, UTILITY, 4 DOOR, SUV
52,700 kms
2005 HONDA CR-V
SPORT UTILITY, 4 DOOR, SUV
76,900 kms
2006 HONDA ODYSSEY EX
MINIVAN, 4 DOOR
$20,780 96,850 kms
2005 HONDA PILOT
4 DOOR
$21,995 93,625 kms
JUST ANNOUNCED
Purchase Financing
FOR 5 YEARS
0.9%
on all 2010 Honda Civic, Accord, CR-V models
NEW ANNOUNCEMENT
2010 ODYSSEY (VAN) 0.9% LEASE OR FINANCE
2010 PILOT $5000.00 OFF ON CASH PURCHASE
OR FINANCE 0.9%
PLUS New LOWER Lease Rates!
on select new 2010 Hondas
Great News For
Honda Lovers!
Carryup before
0.9% runout


பேரழிவினைக் கொண்டுவரும்
நீரழிவு நோயினை
இரண்டே இரண்டு மாதங்களில்
முற்றும் முழுதாக கட்டுப்படுத்த
முடியும்!
ஊளைச் சதை பெருகுவதை
தடுக்கிறது!
வாத வலியை நீக்குகிறது!
உடலுக்கு புதுத்தென்பைக்
கொடுக்கிறது!
Diabina
HERBAL DRINK
Gluteala
HERBAL DRINK
டயபீனா தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குளுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குளுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் களுக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.
க்லூட்டியலா பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊளைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லூட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.
இயற்கை மூலிகையின் உதவியுடன்
உங்கள் கேசத்தை பராமரியுங்கள்!
The ERVAMATIN™ HAIR LOTION
உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமயிர் வளரவும் மிக உன்னதமாக தொழில் புரிகிறது எவமாட்டின் மூலிகை ஓடதம்! உலகெங்கும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு. இப்போது எவமாட்டின் சாம்புவும் கிடைக்கிறது.
Ervamatin
POWER
Loção Capilar Natural
The ERVAMATIN HAIR LOTION
provides effective and fast therapy for hair loss and its treatment ensures excellent therapeutic results. Recommended as a treatment for hair loss, hair regeneration, dandruff, alopecia, baldness, fragile and dry hair.
Dreamron
HENNA
Treated Natural Henna
இயற்கை மூலிகையிலான
தலை முடி மை
இயற்கை மூலிகையான மருதாண்டி கொண்டு செய்யப்படும் இவ் மை உங்கள் தலை முடியையும் நன்கு பராமரிக்கிறது.
SABONA
& Gift
Amazon
Health Care
BBB
ACCREDITED BUSINESS
Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)
Send gifts to your loved ones in Sri Lanka on their birthday, anniversary and other special occasions. Choose from a range of flowers, cakes, food items, groceries, baby items, computers and many more.
www.egiftsender.com

# கலாபன் கதை 11



# இருந்தால் மனைவி! போனால் பரத்தை!

- தேவகாந்தன் -

ஓவியம்: கருணா

1985இல் வீடு திரும்பிய கலாபன் மறுபடி கப்பலெடுப்பதற்கு இரண்டு வருடங்கள் ஆகிவிட்டிருந்தன. ஒரு புதிய கார் வாங்கி, அதை யாழ்ப்பாணம் முழுக்க முழுவேகத்தில் ஓடித்திரிந்து, ஒருமுறை பருத்தித்துறை செல்லும் வழியில் ஒரு மினிவானுடன் விபத்துக்குள்ளாகி, இரண்டு மாதங்களாக கராஜ்ஜுக்கு அலைந்து திருத்தியெடுத்து, அடுத்த ஆறாவது மாதம் வந்த விலைக்கு அதை விற்று என்று பல சீரழிவுகளையும் அனுபவித்த பின்னர்தான் அதுவும் முடிந்திருந்தது.

கலாபன் எங்கோ அடிபட்டிருந்தான் என்பதை சிலகாலமாகவே நான் புரிந்துகொண்டிருந்தேன். மெல்லவோ விழுங்கவோ முடியாத ஓர் மன வலியின் விளைவே அந்த அவனது வரம்பு மீறிய குடியென்று ஊகிக்க பெரிய அனுபவமொன்றும் வேண்டியிருக்கவில்லை. ஆனாலும் வெளிப்படப் பேசி அவனை ஆறுதல்படுத்த அந்த ஊகத்தில் தெரிந்த காரணம்மட்டும் போதுமாயிருக்கவில்லை.

மனமென்பதுதான் என்ன? உடலின் எந்தவிதமான உறுப்பாக இல்லாதும், உணர்வுகளின் ஊற்றாய் முழு மனித வாழ்வியக்கத்துக்குக் காரணமாயுமிருக்கிற ஒரு புள்ளிதானே! அது பலருக்கு நீராலானதாய் அமைந்திருப்பது விந்தைகளின் உச்சம். நீர் சிறிய காற்றினலைவுக்கும் சலனமாகிவிடுகிறது. மனிதனும்தான் அப்படி. சின்னச் சின்னக் கோபங்கள், சின்னச் சின்ன ஜமிச்சங்கள், சின்னச் சின்ன அடிபிடிகள், சின்னச் சின்னச் சண்டைகள், சின்னச் சின்னக் கொலைகள்... அந்த அசைவியக்கத்தின் விளைச்சல் ஆகுபவை. கலாபனின் மனம் எவ்வாறு சலனப்பட்டது? காட்சியினாலுமல்ல. வதந்திகளாலும்கூட அல்ல. வெறும் ஊகங்களைமட்டும் வைத்துக்கொண்டு நிம்மதியற்றவனாகி தன்னையே அழித்துக்கொண்டிருந்தான் அவன்.

கலாபன் கப்பலிலிருந்து வந்து ஊரிலே நின்ற போதுதான் எனக்குத் திருமணமானது. மனைவியை ஊரிலே விட்டுவிட்டு நான் மட்டும் வேலைக்காக திருகோணமலைக்குச் சென்று வந்துகொண்டிருந்தேன். அதனால் என் வடபகுதி வருகை மாதத்துக்கு இரண்டு மூன்று தடவைகள் தவறாமலே இருந்துகொண்டிருந்தது.

விபத்துக்குள்ளான பொழுதில் கலாபனின் காரில் நானும்தான் இருந்திருந்தேன். நல்ல வேளையாக காயம் எதுவும் ஏற்படவில்லை. யாருக்குமே ஏற்படவில்லை. எனினும் கலாபன் குடித்துவிட்டு ஓடியிருப்பான், அதுதான் விபத்து நேர்ந்திருக்கிறது, அவன் தன்னையும் அழித்து என்னையும் அழித்துவிடுவானென்று வீட்டிலே அம்மாவும் கமலியும் ஒரே ஒப்பாரி. அதனால் சிறிதுகாலம் அவனைப் பார்த்தால் பேசுவதை மட்டும் வைத்துக்கொண்டு கூடியலைவதை நிறுத்தியிருந்தேன்.

இவ்வாறான நிலைமையில்தான் ஒருநாள் கலாபனின் மனைவி பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு தாய்வீடு போய்விட்டாள் என்ற செய்தி தெரியவந்தது. அவன் அடித்துத் துரத்தினானோ, அல்லது அவளேதான் இவனோடு வாழ்ந்ததுபோதுமென்று கோபித்துக்கொண்டு போனாளோ தெரியாது. குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு அழுதபடி அவள் சென்றதைக் கண்டதாக கமலி சொன்னாள்.

இரண்டு மூன்று மாதங்களாகியும் அவள் திரும்பிவரவில்லை. இவனும் போய்க் கூப்பிடவில்லை. ஒருநாள் சந்தித்தவேளை இவனைப் போய்க் கூட்டிவந்தாலென்ன என்று கேட்டுப் பார்த்தேன். போனவளுக்கு வாற பாதை தெரியும்தானேயென்று தட்டிக்கழித்துவிட்டான். பிள்ளைகளைக்கூட யோசிக்கவில்லை. கடைசியில் இவன்தான் போய்க் கூட்டிவந்தான். அவனது கடைக்குட்டி பிறந்தது அதற்கும் பிறகுதான்.

கலாபன் இனி கப்பலே எடுக்கமாட்டான் என்றுதான் அக்கம்பக்கத்தில் பேசிக்கொண்டிருந்தார்கள். அம்மாகூட சொன்னாள், காசுமில்லை, இப்பிடி நிறைகுடிகாறனாயும் திரிஞ்சு கொண்டிருக்கிறான், இவனெங்கை இனி கப்பலெடுக்கிறதென்று. தண்ணியிலை உழைச்ச காசு, தண்ணியிலைதான் போகும் என்று ஊரிலே சொல்வார்கள். அதற்கு கலாபன் அச்சொட்டான எடுத்துக்காட்டாயிருந்தான்.

ஆனால் திடீரென்று ஒருநாள் கொழும்பு போவதாகச் சொல்லிக்கொண்டு சென்றுவிட்டானாம் கலாபன். ஊர் வந்தபோது கமலி சொன்னாள். நல்லதுதான், ஆனாலும் விரைவில் ஏதாவது கப்பலில் ஏறவேண்டுமே என்று நான் நினைத்துக்கொண்டேன்.

ஒரு மாதமாகவில்லை, எனது திருகோணமலை முகவரிக்கு கலாபனிடமிருந்து கடிதம் வந்தது. கலாபன் கப்பலேறிவிட்டான்.

0

மூன்றாவது கப்பல் பொறியாளனாகவே சேர முடிந்திருப்பினும், சம்பளமொன்றும் முந்திய கப்பல் கொம்பனியினதுபோல் இருக்கவில்லை. எம்.வி.இப்கோ-1 என்ற அந்தக் கப்பல் தென்னாசியாவிலும், தூர கிழக்கிலும், அராபியக் கடலிலும், பர்ஸிய வளைகுடாவிலுமாக மாறிமாறி அலைந்துகொண்டிருந்தது. செலவுசெய்ய நிறைய பணமும் இருக்கவில்லை, செலவழிக்கக்கூடிய இடங்களுக்கு கப்பலும் செல்லவில்லை.

கலாபன் கப்பலில் சேர்ந்து ஆறு மாதங்களாகியிருந்தன. துபாயென்றும் கராச்சியென்றும் சவூதி அரேபியாவென்றும் குஜராத் மாநிலத்தின் கண்டிலா என்றுமாய் ஒரே வெப்ப வலயப் பிரதேசங்களில் கப்பல் பயணமாகிக் கொண்டிருந்ததில், உடம்புகள் கொதியேறியிருந்தன. காமம் ஒரு சுமைபோல அமுக்கிக் கொண்டிருந்தது ஒவ்வொருவர் பேச்சிலும் மூச்சிலும் தெரிந்தது.

ஓர் ஆனி மாதத்தில் சவூதிஅரேபியாவின் றியாட் துறைமுகத்திலிருந்து கப்பல் புறப்பட்டபோது தூரகிழக்குக்கு, அனேகமாக சிங்கப்பூருக்கு, என்றுதான் எல்லோரும் எண்ணிக்கொண்டிருந்தார்கள். யாருக்கும் அந்தப் பயணம் பிடித்திருக்கவில்லை.

தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்று கப்பலை ஊதிப் பறக்கவைத்துவிடும்போல் இருந்தது. திடீரென தெரியவந்தது கப்பல் தாய்லாந்தின் பாங்கொக் துறைமுகத்துக்குச் செல்கிறதாக. ஐந்து மாதங்களுக்கு முன்னர் அதே கப்பல் பாங்கொக் சென்றிருந்தபோது, ஒரு கிழமையாக கப்பலில் மிதந்த சந்தோஷத்தின் சங்கீதம் அப்போதே கேட்கத் துவங்கி விட்டது பலருக்கும். அத்தனைக்கு தாய்லாந்து அழகிய பெண்களின் வாசஸ்தலமாக இருந்தது.

சரீர சுகங்களுக்கு உலகத்துக்கே தலை நகராய் இருக்கக்கூடியது அது. ஆசியாவின் பாவத் தலைநகர் என்றும் அதற்கு ஒரு பெயர் இருக்கிறது. தாய்லாந்தே சரீர சுகங்களின் அபரிமிதத்தில் தன் வாழ்வனுபவங்களைக் காலகாலமாய்க் கொண்டிருந்த ஒரு நாடுதான். ஆனாலும் அதன் காம உழற்சி வியட்நாம் போரின் பின்னணியில் உருவானதுதான். வியட்நாம் போரில் நேரடியாகவே ஈடுபட்டிருந்த அமெரிக்கப் படைகளின் ஏழு தளங்கள் தாய்லாந்தில் இருந்திருக்கின்றன. படைத் தளங்களின் அருகில் அவர்களது சரீர தேவைகளுக்காக உருவாகிய இடம்தான் பாரங் என்னும் விலைமாதர் தரிப்பிடங்கள்.

1970களில் அமெரிக்கப் படைகள் தாய்லாந்தை விட்டகன்றிருந்தாலும், விபச்சாரத் தொழில் அழியாது நிலைபெற்று இருந்தது மட்டுமில்லை, மேலும் மேலுமாய்ப் பெருகவே ஆரம்பித்து விட்டது. தாய்லாந்து செல்வம் கொழிக்கும் நாடுதான். அங்கேதான் வறியவர்களும் அதிகமாக இருந்தார்கள். குறிப்பாக வடக்கு, வடகிழக்கு தாய்லாந்தில் வறுமையின் அழுங்குப் பிடி அதிகம். நுளம்புக்காக வீட்டைவிட்டு ஓடுபவர்கள் அந்தப் பகுதியிலே இருந்தார்கள். முடியின் அதிகாரத்தில் இருந்த தாய்லாந்து, எந்தெந்தத் துறைகளிலோ கட்டுப்பாடுகளை விதித்திருந்தாலும், அங்கே கட்டற்று இருந்தவை உணவு, மது, விபச்சாரம் ஆகியனதான். இவை அங்கே மலிவாகவும் பெருவாரியாகவும் இருந்தவளவுக்கு உலகின் வேறெந்த நாட்டிலுமே இருந்துவிட முடியாதென்று கலாபனே அதிசயப்பட்டிருக்கிறான்.

1960களிலிருந்து விபச்சாரம் சட்டரீதியாகத் தடைசெய்யப்பட்டிருந்தபோதும், அது வாழ்வியல் நீரோட்டத்தில் கலந்து தடையின்றி ஓடிக்கொண்டே இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். அங்கேதான் கலாபனுக்கு சென்ற தடைவையில் லேக் என்ற பெண் கிடைத்திருந்தாள். தாய் மொழியில் லேக் என்பதற்கு 'சின்ன' என்று அர்த்தமாகுமாம். அவள்தான் சொல்லியிருந்தாள். கப்பல் அந்தமான் கடலுக்குள்ளாகச் சென்று தாய்லாந்தின் ஓர் ஆற்றில் புகுந்து துறைமுகத்தைநோக்கிச் சென்றுகொண்டிருக்கையில், இளநீர் விற்பதற்காக வருவதுபோல் சிறிய படகில் இளநீர்க் குலைகள் சகிதமாக கப்பலைத் துரத்தியபடி வாடிக்கையாளர் பிடிக்கவந்த இரண்டு மூன்று பெண்களில் அந்த லேக் காணப்பட்டாள். இளநீரைச் சீவி அவனைநோக்கி நீட்டிய தினுசிலேயே கலாபனுக்கு அவள்மீது பிரியமாகிப்போனது. கப்பல் தாய்லாந்தைவிட்டு நீங்கும்வரை அவள் கலாபனுடன் அவனது அறையிலேயேதான் தங்கியிருந்தாள்.

சிறியதானாலும் அந்த நடுத்தரப் பழைய கப்பலின் எந்திர அறையில் எப்போதும் திருத்த வேலைகள் இருந்துகொண்டே இருந்தன. அது ஓரளவு சுகங்கள்பற்றிய நினைவுகளை கலாபன் மனத்தில் அறுக்கவே செய்துகொண்டிருந்தன. மறுபடி தாய்லாந்துப் பயணம் என்றதும் சுக நினைப்புகள் மனத்தில் சுரக்கத் தொடங்கிவிட்டன. ஆனாலும் முந்திய பயணத்தில் ஏறக்குறைய ஆறுநாட்கள் அதே அறையிலேயே தங்கியிருந்து அறையைச் சுத்தப்படுத்தி, அவனது ஊத்தை உடுப்புகளைத் தோய்த்து, அவற்றைக் காயவைத்து மடித்து, அவனது உணவினை எடுத்துவைத்து, அருகேயிருந்து சாப்பிட வைத்து, அவன் அதிகமாகக் குடித்து மயங்கிக் கிடந்த வேளைகளில் தாதியாய்ப் பராமரித்து, காதலையும் காமத்தையும் தாராளமாய் வழங்கியிருந்தும், அதுவரை பிரிவுகளை ஒரு வேதனையாய் உணரவைத்த எந்தப் பெண்ணும்போல் அவனது நினைவுகளில் தெறித்து ஆசைகளைக் கிளர வைக்காதிருந்த அந்தப்பெண் லேக் அப்போது நினைவுகளில் வரத்தொடங்கினாள்.

ஆனாலும் போனதடவை அவர்கள் சென்றது, தாய்லாந்தில் பாங்கொக்கிற்குத் தொலைவி

# கலாபன் கதை 11

லுள்ள தென்பகுதித் துறைமுகமொன்று. அதன் பேர்கூட அவனுக்கு ஞாபகமில்லை. இப்போதோ கப்பல் பாங்கொக்கிற்குச் செல்கிறது. பாங்கொக், தாய்லாந்தின் தலைநகர்த் துறை முகம். முந்தியதைவிட அங்கே பார்க்கவும், ரசிக்கவும், அனுபவிக்கவும் நிறைய இருக்கின்றன. முந்திய தாய்ப் பெண்ணைவிட அழகான, இன்னும் சரசங்கள் தெரிந்த ஒரு பெண்ணை அவன் கண்டடையவும் கூடும். கலாபன் கட்டிலில் படுத்திருந்தபடி சுவரைத் திரும்பி ஒரு பார்வையெறிந்தான். சுவரில் பிளேபோய் ப்ளோ-அப் நிர்வாணப் பெண் இருட்டில் இச்சைதெறிக்க அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

வெகுநேரமாகியது அன்று கலாபனுக்குத் தூக்கம் பிடிக்க.

எதிர்பாராதவிதமாக தாய்லாந்து வளைகுடாவுள் கப்பல் புகுவதன் முன்னர் எந்திரக் கோளாறு ஏற்பட்டு, அலையாடும் கடலில் ஆடியபடியே நங்கூரமிட்டு நின்றிருந்து, திருத்த வேலைகள் முடித்து மறுபடி புறப்பட ஒருநாள் முடிந்துவிட்டது.

மொத்தமாக காலநிலை, எந்திரக் கோளாறுகளால் தாய்லாந்தை அடையவேண்டிய கப்பல் மூன்று நாட்கள் தாமதம்.

ஒரு மதிய உணவு வேளை முடிந்திருந்த தருணத்தில் கப்பல் பாங்கொக் துறைமுகத்தை அடைந்தது. அந்த நேரம் எந்திர அறைக்குப் பொறுப்பாக இருந்த கலாபன் மேலே வந்தபொழுது மாலை இரண்டரை மணி. 8-12 மணி நேர வேலை முடிந்திருந்த இந்தோனிஷிய நண்பன் சுனாரின் அறையில் சிறிதுநேரம் சம்பாஷணையிலும், சிறிது மது அருந்துகையிலுமாகக் கழித்துவிட்டு, அவன் மேலே தனது அறைக்கு வந்தான்.

கப்பல்களில் பெண்களை அறைகளுள் அனுமதிக்க சில கப்ரின்கள் அனுமதிப்பதில்லை. அவன் வேலைசெய்த இரண்டு கப்பல்களில் அவ்வாறான தடை இருந்தது. அதே எம்.வி. இப்கோ-1 கப்பலிலும் அவ்வாறான தடை இருந்ததாக அவன் அறிந்திருக்கிறான். பெண்களை உள்ளே விடவில்லையென்றதும் வேலைசெய்ய வந்த துறைமுகத் தொழிலாளர்கள் சரக்கேற்றுவற்கு பெரிய இழுபறி செய்தனர் என்றும், பின்னர் பெண்கள் உள்ளே அறைகளுக்குச் செல்லலாம் என கப்ரின் அனுமதி வழங்கியபின்தான் அவர்கள் வேலை செய்யத் தொடங்கினார்களென்றும், முந்திய தடவை தாய்லாந்து வந்திருந்தவேளை ஒரு தாய்க்காரன் சொல்லி கலாபன் அறிந்திருந்தான்.

அவன் வந்தபோது அவனது அறைக்கு முன்னால் குந்தியிருந்தாள் ஒரு நடுத்தர வயது மாது. அவளருகே கப்பலைப் பராக்குப் பார்த்தபடி சிகரெட் புகைத்தவண்ணம் ஓர் இளம்பெண் நின்றிருந்தாள். கலாபனுக்கு காரணம் புரிந்தது. ஆனாலும் அவனுக்கு உடனடியான தேர்வில் ஆர்வம் இருக்கவில்லை. அதனால் அப்படியே சாப்பாட்டுக் கூடத்துக்குச் சென்றுவிட்டான். திரும்பிவந்த வேளை அவர்கள் இல்லை. யாருடனாவது போய் ஒட்டிக்கொள்ளட்டும். அவனுக்கு தேர்வு முக்கியம். அதுவும் பாங்கொக்கிலேயே தேர்வு இல்லாவிட்டால் எப்படி?

குளித்து வெளிக்கிட்டு தரைமட்டத் தளத்துக்கு அவன் வந்தபோது சரக்கு ஏற்றும் தொழிலாளர் சம்பந்தப்பட்ட முகவர்கள், ஓரிரு பொலிஸ்காரர், பிரைட் றைஸ், சூப் போன்ற உணவு வகை தயாரித்து விற்கும் வியாபாரிகள், சில பெண்கள் என ஒரு கூட்டமே நிறைந்திருந்தது வாசலில். துறைமுக மேடையில் ராக்சிகள் வருவதும் போவதுமாய் இருந்தன.

கலாபன் சிகரெட் எடுத்துப் புகைத்துக்கொண்டு வேடிக்கை பார்த்தபடி நின்றிருந்தான். அப்போது அக் கூட்டத்தில் நின்றிருந்த ஓராள் அவனிடம் வந்து மிகவும் தண்மையாக அவனுக்கு மசாஜ் செய்துகொள்ள விருப்பமாய் இருக்கிறதா என்று கேட்டு தாய் மசாஜ்ஜின் பெருமைகளை மிக இயல்பான ஆங்கிலத்தில் சொல்ல ஆரம்பித்தான்.

கலாபன் கேள்வியில் அறிந்திருக்கிறான். தாய் மசாஜ் என்பது மற்றைய மசாஜ்களைவிட தனித்துவமானது. அது இந்திய ஆயர்வேத மருத்துவ முறையை ஒட்டிய ஓர் உடல் உளைவுத் தளர்ச்சி முறை. எந்தவொரு உடல் தளர்ச்சியும், மனஇறுக்கமும் உடலின் சில பாகங்களில் ஏற்படும் சக்தித் தடைகளின் விளைவெனக் கருதியமை, அந்த மருத்துவ முறையின் விசேஷம். அதை நீக்கும் முறையை ஆங்கிலத்தில் Acu-pressure style என்று சொல்வார்கள். பாதம், குதி, முழங்கால், முழங்கை, கைகளாகிய அங்கங்களால் அந்தந்த இடங்களில் அழுத்தத்தை ஏற்படுத்தி சக்தித் தடையை நீக்குவது தாய்லாந்துக்கான தனித்துவமான முறை.

கலாபனின் மெல்லி போதை அந்த மசாஜ்ஜை செய்துபார்த்தால் என்ன என எண்ணவைத்தது.

அமுலிலிருந்த விபச்சார தடைச் சட்டம் காரணமாக, விலைமாதர் மசாஜ் செய்பவர், இளநீர் விற்பவர் போர்வையில் வருவர் என்று தெரிந்திருந்தாலும், அவன் அதற்குச் சம்மதித்தது உண்மையில் ஒரு தாய் மசாஜ்ஜை அனுபவிப்பதற்காகத்தான்.

அவன் சம்மதித்தாலும், அதற்கு அது நேரமல்லவென்றும், எட்டு மணிக்கு மேலே பார்க்கலாமென்றும் சொல்லிவிட்டான். அதற்கு அந்த தாய்மனிதன் இலங்கையில் கிராமியச் சிங்களப் பெண்கள் உடுத்தும் மாதிரியில் சாரம் கட்டி ஒரு சட்டையும் அணிந்திருந்த ஒரு பெண்ணைச் சுட்டிக்காட்டி, அவள் அவனது அறைக்கு வருவாள் என்றுவிட்டுப் போய்விட்டான். அங்கிருந்தே அவன் ஜாடை காட்டிய மாதிரியில் நீ செல்ல வேண்டிய மனிதன் இவன்தான் என அவளுக்கு அவன் உணர்த்தியதை கலாபனால் தெரிய முடிந்திருந்தது.

கலாபன் அந்தப் பெண்ணைப் பார்த்தான். உயர்ந்து வளர்ந்திருந்தாள் அவள். தாய்க்காரரில் மாநிறமானவர்களும் உண்டு. லேக் அந்த நிறம்தான். ஆனால் அவள் வெண் மஞ்சளாக இருந்தாள். அவளது உடல்வாகே காமத்தின் அம்சங்களை இவைதானெனச் சொல்லிக்கொண்டிருந்தது. ஆனாலும் அந்த விநாடிவரை மசாஜ்பற்றிய விருப்பம்தவிர வேறு எதுவும் இயல்புக்கு மாறாகவே அவனிடம் விளைந்திருக்கவில்லை.

“ நம்புகிறவனுக்காகவே
வாழ அவர்கள் தயாராகிறார்கள்.
நம்பிக்கைகள் தகர்கிறபோது
அவர்கள் எப்படியும்
வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுவிடுகிறார்கள்.
நம்பியவன் கைகொடுக்கும்வரை
அவள் மனைவிதான்.
கைவிடும்போதுதான் பரத்தையாகிறாள். ”

எட்டு மணிக்கு சுனார் வேலைக்குத் தயாராகி கீழே செல்லும்வரை அவனது அறையிலேயே இருந்து குடியும், கசெற் கேட்புகையுமாக நேரத்தைக் கடத்திய கலாபன் அறைக்கு வர, அவனையே எதிர்பார்த்துக்கொண்டு நின்றிருந்தவள்போல அந்த உயர்ந்த பெண் படிக்கட்டோரமிருந்து அவனைநோக்கி வந்தாள்.

அவன் உள்ளே கூட்டிச் சென்றான் அவளை. தாய் மசாஜ் என்பது தனித்துவமானது என்று அறிந்திருந்தவகையில் அந்த உயர்ந்த மேனியின் அழகிய கால் கை பகுதிகள் அவனது உடலெங்கும் பதியப்போகும் ஒருவித கிளுகிளுப்போடு உடையைக் களைந்துவிட்டு அவள் சுட்டிக்காட்டியபடி கீழே படுத்தான் அவன்.

அவள் முதலில் தன் கைகளை சவர்க்காரம் போட்டுக் கழுவினாள். பின் அரை நிர்வாணம் ஆனாள். பிறகு தன் பையிலிருந்த போத்தல்களை எடுத்து, தன் கைநிறைய அவைகளைக் கலந்து அவனது மேனியெங்கும் பூசினாள். மேலே அவளது சிட்சை ஆரம்பித்தது. கால்களா அவை! அவை வாளிப்பில் செய்து இன்பத் தேன் தடவியவையாய் இருந்தன கலாபனுக்கு.

அவனது உடல் காலகாலமாய்த் தேக்கிவைத்திருந்த நோவு, இறுக்கம், பிடிப்பு எல்லாமே ஒவ்வொன்றாய்க் கழன்று ஓடிக்கொண்டிருந்தன.

அது உண்மையிலேயே ஒரு சுகமான தருணம்தான். உடம்பு காற்றாகி மேலே மேலேயென எழும்புவதுபோன்ற உணர்கை. திடீரென அவளது கை ஓர் உயிர்நிலையத்தில் புரள ஆரம்பித்தது. திடுக்கிட்டு நிலைமையை உணர்ந்துகொண்டாலும் அந்தச் சுகத்தைத் தடுக்கும் சக்தியற்றுப் போனான் கலாபன்.

உயிர் உருகிக்கொண்டிருந்தது.

அப்போது தட... தடவென்று தட்டப்பட்டது கதவு. திடுக்கிட்டு பிரக்ஞைக்கு மீண்ட கலாபன், யாராயிருக்கலாமென்று ஓர் எரிச்சலோடேயே எண்ணிக்கொண்டு, துவாயை எடுத்துக் கட்டியபடி வந்து கதவைத் திறந்தான்.

ஒரு பெண் நின்றுகொண்டிருந்தாள்.

அடையாளம் காண்பதற்கே சிறிது நேரமாகிப்போனது அவனுக்கு. கலாபன் அதிர்ந்து போனான்.

மிக அழகாக, மிக இயல்பாக, அவனைக் காணமுடிந்த ஆனந்தம் மிளிரச் சிரித்தபடி நின்றுகொண்டிருந்தது லேக். அவன் முந்தியமுறை தாய்லாந்து வந்திருந்தபோது ஆறு நாட்கள் அவனது மனைவி, தாசி, வேலைக்காரியென எல்லாமுமாக இருந்த அதே பெண்.

உள்ளை மறைப்பதுபோல் வாசலிலேயே கலாபன் நின்றுகொண்டிருந்தாலும், இடுக்கனூடாக உள்ளே ஒரு பெண் இருப்பதைக் கண்டுகொண்டாள் லேக். அவளது புன்சிரிப்பெல்லாம் மறைந்தன. தான் கைவிடப்பட்டு திக்கற்ற ஒரு வெளியில் நிற்பதான கலக்கம் சூழப்பெற்றாள். மெல்லமெல்ல அவளது கண்கள் சிவக்கத் தொடங்கின. உடம்பு பதறியது. மறுகணம் அவனை மோதி விலக்கிக்கொண்டு உள்ளே பாய்ந்தாள் லேக்.

‘யார் நீ? இங்கே என்ன செய்கிறாய்?’ அலறினாள் அவள்.

தாய் மொழியானாலும், அவள் கொண்டிருந்த உணர்வுகளின்மூலம் அர்த்தத்தைப் புரிய முடிந்திருந்தது கலாபனால்.

லேக் பாய்ந்துவந்த மாதிரியில் திடுக்கிட்டுப் போனாள் அந்தப் பெண். ‘நீ யார்? நீயெல்லாம் இதைப்பற்றி ஏன் கேட்கவேண்டும்?’ என்று ஒரு போட்டி வியாபாரியாகக் கேட்கக்கூடிய கேள்விகளையே அவள் மறந்துபோனாள். பயமெழுந்திருந்தது. ஏதோ அவனது சொந்த மனைவி ஒரு தவறு நடக்கவிருந்த சமயத்தில் வீட்டில் நுழைந்துவிட்டதுபோல் அவள் ஆடிப்போய் விறுவிறென களைந்த ஆடைகளை அணிந்தவாறு நின்று, ‘நான்…நான் மசாஜ்செய்கிற பெண். கூப்பிட்டார், வந்தேன்’ என்றாள்.

‘மசாஜ்ஜா?’ ஏளனமாகச் சிரித்தாள் லேக். ‘இவனுக்கு வேண்டிய மசாஜ்ஜுக்கு நான் இருக்கிறேன். நீ போ வெளியே. இப்போதே. நில்! உனக்குச் சேரவேண்டியது இதுதானே? இந்தா’ என்றபடி, தன் கைப்பையைத் திறந்து ஐந்து டொலர் நோட்டொன்றை எடுத்து அவளது கையைப் பிடித்து திணித்தாள்.

ஐந்து அமெரிக்க டொலர் நோட்டு! கலாபன் திகைத்தான். அது லேக்கிடம் வந்தவாறை அவனால் யூகிக்க முடிந்தது. அவள் நேற்றோ, முன்தினமோ, அல்லது அன்றைக்கேகூட அந்தக் காசுக்காக ஒரு கப்பல்காரனிடம் தேகம் விற்றிருக்கமுடியும். ஆனாலும் அவனது அறையில் ஒரு பெண்ணைக் கண்டதில் என்ன உக்கிரம்! என்ன தார்மீகக் கோபம்! அவன் அவளுடன் உடலுறவுகொண்டால்கூட இவள் யார் அதைக் கேட்க? சொந்த மனைவியைப் போல என்ன பாத்தியதை? ஆனாலும் இவளில் ஒரு மெய்ம்மை இருக்கிறது.’ எண்ணி முடித்து கலாபன் நிமிர்ந்தபோது, மசாஜ் செய்வதாக வந்த பெண் அங்கே இல்லை.

கைப்பையை மேசைமேல் போட்டபின், அருகேயிருந்த அவனது பைக்கற்றிலிருந்து ஒரு சிகரெட்டை உருவியெடுத்து மூட்டியபடி குண்டிபொறுக்கச் சாய்ந்து நின்றபடி அவனைநோக்கித் திரும்பினாள் லேக்.

கலாபன் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

அவள் களைத்திருந்தது தெரிந்தது. நீண்ட தூரம் பிரயாணம் செய்திருப்பவள்போல் தோன்றினாள். அவளது ஊர் வட தாய்லாந்தில் இருந்தது. ஒருவேளை அங்கேயிருந்துகூட வந்திருக்கலாம்.

தொடர்தல் 90ம் பக்கம்

நிகழ்வுகளைப் பார்ப்பதற்கும் உங்கள் நிகழ்வுகளைப் பதிவதற்கும்
www.inayam.net

## அ. முத்துலிங்கம்

**கலாநிதி செவாலியர் அடைக்கலமுத்து ஐயா அவர்கள் சில வருடங்களுக்கு முன்னர் ரொறொன்ரோ வந்திருந்தபோது அவரைச் சென்று சந்தித்தேன். அந்தச் சந்திப்பு எனக்கு மறக்க முடியாத ஒன்றாக அமைந்தது. அதைத் தொடர்ந்து ஐயா எழுதிய 'இந்த வேலிக்கு கதியால் போட்டவர்கள்' நூலினை படித்து அனுபவித்தேன். சென்ற மாதம் அவர் இறந்துபோனது தமிழுக்கு பெரும் இழப்பு. அவர் ஞாபகமாக இந்தப் பதிவு.**

# விட்டுப்போச்சுது



ஓவியம்: கருணா

அடைக்கலமுத்து ஐயாவை சந்தித்தபோது அவர் முந்தைய யாழ்ப்பாணத்தை அப்படியே என் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்தினார். அவர் படித்த பள்ளிக்கூடத்தில் அவரைப் படிப்பித்த ஆசிரியர்களில் சிலர் மோசமானவர்கள். எடுத்தவுடன் அடித்துவிட்டுத்தான் விசாரிப்பார்கள். யார் முதலில் முறைப்பாடு கொடுக்கிறாரோ அவர் பக்கமே தீர்ப்பு இருக்கும். அடைக்கலமுத்து கெட்டிக்காரன் என்றபடியால் அவருக்கு படிப்பு விசயத்தில் அடி கிடைத்ததில்லை, ஆனால் அவருடன் படிக்கும் மாணவர்களின் சதியில் சிலசமயம் மாட்டுப்பட்டு அடி வாங்குவார். முதல் முறை அடி விழுந்தபோது தாங்கிக் கொண்டார் இரண்டாவது முறை பள்ளிக்கூடத்தை விட்டே ஓடவேண்டி நேர்ந்தது.

சண்முகம் இவருடன் படித்த மாணவன். தினமும் வண்டிலில் மணல் ஏற்றிப் பறித்துவிட்டு வருவதால் நேரம் பிந்தியே வருவான். ஆனால் புத்திசாலி, ஒவ்வொரு நாளும் புதிதாக ஏதாவது சாட்டு தயாரித்து ஆசிரியரை சமாளிப்பான். அவனுடைய பட்டப் பெயர் 'சாலக்கார சண்முகம்.' அவனுக்கு புகையிலை போடும் பழக்கம் இருந்தது. ஆசிரியர் அவனுடைய மடியை அடிக்கடி சோதித்துப் பார்ப்பதால் அடைக்கலமுத்துவிடம் புகையிலையைக் கொடுத்து பத்திரமாக வைத்திருப்பது அவன் வழக்கம்.

ஒரு நாள் சாலக்கார சண்முகம் வீட்டுக் கணக்கு போடவில்லை. ஆசிரியர் அவனை அடிக்கப்போகிற சமயம் அவரை திசை திருப்புவதற்காக அடைக்கலமுத்து மடியில் புகையிலை ஒளித்து வைத்திருக்கும் விசயத்தைச் சொல்லி விடுகிறான். ஆசிரியர் அடைக்கலமுத்துவின் மடியை சோதித்துப் பார்த்து நல்ல அடி கொடுக்கிறார். அந்தச் சம்பவத்துக்கு பிறகு அடைக்கலமுத்து எச்சரிக்கையாக இருக்க பழகிக்கொண்டார். அப்படியும் விதி வசத்தால் இரண்டாவது தடவையும் ஒரு சதியில் மாட்டினார். அது அவருடைய வாழ்க்கையையே மாற்றியது.

அடைக்கலமுத்து கணிதத்தில் வலு கெட்டிக்காரர். விஞ்ஞானியாகவேண்டும் என்று நினைத்தார். இவரோடு படித்த சிவராசனுக்கு கணக்கு ஓடாது. ஒவ்வொரு நாளும் இவர் கொண்டுவரும் வீட்டுக் கணக்கை கொப்பியடித்து சிவராசனும் தப்பிக்கொண்டு வந்தான். ஒரு நாள் ஆசிரியர் வகுப்பில் முதல் கெட்டிக்காரன் அடைக்கலமுத்து என்றும் இரண்டாவது கெட்டிக்காரன் சிவராசன் என்றும் சொல்லிவிட்டார்.

அன்றிலிருந்து அடைக்கலமுத்து சிவராசனுக்கு கொப்பி காட்ட மறுத்தார். சிவராசனுக்கு கறுவம், எப்படியும் அடைக்கலமுத்துவை பழி வாங்க நினைத்தான். ஒரு நாள் அடைக்கலமுத்துவை ஆசிரியர் அழைத்து ஒரு சதம் காசு கொடுத்து அதற்கு இரண்டு சூப்புத்தடி வாங்கிவரும்படி பணித்தார். அடைக்கலமுத்து திரும்பி வரும் வழியில் ஒரு சூப்புத்தடியை நக்கிப் பார்த்து, துடைத்துவிட்டு ஆசிரியரிடம் கொடுத்தார். சிவராசன் அடைக்கலமுத்து நக்கியதைக் கண்டுபிடித்து அதை ஆசிரியரிடம் சொல்லிவிட்டான். அன்று அடைக்கலமுத்துவுக்கு கிடைத்த அடியில் சதை உரிந்து பள்ளிக்கூடம் போவதையே நிறுத்திவிட்டார். தகப்பன் எவ்வளவு வற்புறுத்தியும் அசையவில்லை. கடைசியில் அடைக்கலமுத்துவின் விருப்பப்படி அவரை ஒரு தமிழ் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார்.

உலகம் ஒரு தமிழறிஞரைப் பெற்றது விஞ்ஞானியை இழந்தது.

ஈழத்திலே வாழ்ந்த தமிழறிஞர் பண்டிதமணி கணபதிப்பிள்ளையைப் பற்றி அடைக்கலமுத்து தன் நூலிலே சொல்கிறார். அவரிடம்தான் அடைக்கலமுத்து தமிழ் படித்தவர். அன்று அவருக்கு முதல் நாள், முதல் வகுப்பு. பண்டிதமணியிடம் கலிங்கத்துப் பரணி பாடலை விளக்கம் கேட்டது தன் வாழ்நாளில் முக்கியமான நிகழ்வு என்று கூறுகிறார், அடைக்கலமுத்து.

பணம் இல்லாதவனுக்கு திடீரென்று பெரும் திரவியம் கிடைத்தால் என்ன செய்வான். ஆருமில்லாத நேரம், அங்குமிங்கும் பார்த்துவிட்டு பணத்தை எண்ணிப்பார்த்து திரும்பவும் பூட்டிவைப்பான்.

கணவன் அவளுடைய முலையிலே பதித்த கைவிரல் நக அடையாளம் நாணயக் குத்தி போல பதிந்து கிடக்கிறது. ஒருதரும் காணாத இடத்திலே போய் மெல்லத் தாவணியைக் கழற்றி நெஞ்சிலே பதிந்திருக்கும் அடையாளத்தை பார்ப்பாள். அது முந்திப் பிந்தி பணத்தைக் காணாதவர் கண்டதுபோல சந்தோசமாயிருக்கும். அது அழியக்கூடாது என்று நினைத்து அவசர அவசரமாக சீலையினாலே மூடிவைப்பாள்.

முலைமீது கொழுநர் கைநகம் மேவு குறியை
முன் செல்வம் இல்லாதவர் பெற்ற நிதிபோல்
கலைமீது எடா(து) யாரும் இல்லாத இடத்தே
கண்ணுற்று நெஞ்சகம் களிப்பீர்கள் - திறமின்

எப்பொழுது கலிங்கத்துப் பரணியை கையிலே எடுத்தாலும் தனக்கு பண்டிதமணியின் ஞாபகம் வராமல் போகாது என்று கூறுகிறார் அடைக்கலமுத்து.

பாலசுப்பிரமணியம் என்ற பெயரை இளமுருகன் என்று மாற்றிய புலவர்மணி ஈழத்திலே வாழ்ந்தார். தனித்தமிழ் ஆர்வத்தினால் தன்னுடைய பெயரை மாத்திரமில்லாமல் 'நாராயணன்' என்ற தன்னுடைய வேலைக்காரனுடைய பெயரையும் 'நடுவிலான்' என்று மாற்றியவர். இவர் அடைக்கலமுத்துவின் குரு. ஒருநாள் நடுவானத்தை நோக்கி சூரியன் ஏறிக்கொண்டிருந்தான். இவருடைய குரு களைப்போடு வீதியிலே பேருந்துக்காக காத்து நின்றார். அடைக்கலமுத்து அவசர அவசரமாக அவருக்கு தன்னுடைய மகன் மூலம் பால், பழம், கசுக்கொட்டை, முந்திரியவத்தல் போன்றவற்றை அனுப்பிவைத்தார். குரு நெகிழ்ந்துபோனார். உடனேயே பக்கத்திலே சுருட்டி வைத்திருந்த வீரகேசரிப் பேப்பரின் விளிம்பிலே ஒரு வெண்பா எழுதி அனுப்பினார். அதன் பொருள் இதுதான்.

முன்னொரு காலத்திலே அவ்வை விநாயகரிடம் நாலு தந்து மூன்றைக் கேட்டாள். அதாவது பால், தேன், பாகு, பருப்பு இவற்றைக் கொடுத்து அதற்கு பிரதியுபகாரமாக சங்கத் தமிழ் மூன்றையும் கேட்டாள். முருகனிடம் கேட்கவில்லை, கேட்டால் அது கிடைக்காதென்று அவளுக்கு தெரியும். அப்படியிருக்க, நீரோ இளமுருகனான எனக்கு நாலு தந்து என்ன பயன்? ஒன்றும் பிரயோசனமில்லை, என்றாலும் நல்லாயிரும்.

நாலு கொடுத்தவ்வை மூன்று வரங்கேட்டாள்
வேலவற் கீந்திட்டால் வீணென்றே - மேலும்
இளமுருகற் கீந்தால் என்ன பயன், என்னமுதே
வளம் பெருகி நீடுழி வாழ்.

புத்தகத்தில் ஓர் இடத்தில் அடைக்கலமுத்து யாழ்ப்பாணத்துக்கு கல்கி ஆசிரியர் வந்து போனதை பற்றியும் குறிப்பிடுகிறார். கூட்டத்தில் ஒருவர் கல்கியிடம் ஒரு கேள்வி கேட்கிறார். 'வடக்கே இந்தியும், தெற்கே சிங்களமும் நசிக்கும்போது தமிழின் எதிர்காலம் என்ன?' கல்கியின் பதில் இப்படி இருந்தது.

'எனக்கு நன்கு அறிமுகமான ஒரு நண்பர் இருக்கிறார். அவர் ஒரு சிவபக்தர். தனது அருமை மகனுக்கு மிக நீளமான ஒரு பெயரை வைத்திருந்தார். சிவநாராயண பழனிவேல். இவ்வளவு நீண்ட பெயரை ஏன் வைத்தீர்கள் எனக் கேட்டேன். நாராயணனை, இந்தப் பக்கம் சிவனும் அந்தப் பக்கம் பழனிவேலனும் நசுக்கவேண்டும். அதற்காகத்தான் இந்தப் பெயரைத் தெரிந்துகொண்டேன் என்றார். எப்படி நசுக்கினும் நாராயணன் நசுங்கிவிடப் போவதில்லை. தமிழ் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக எத்தனையோ இடர்ப்பாடுகளிலே தழைத்திருக்கிறது. அதற்கு ஆபத்து வந்துவிடாது.' ஐம்பது வருடங்களுக்கு முன்னர் கல்கி கூறிய பதில் இன்றைக்கும் பொருத்தமானதாகத்தான் இருக்கிறது என்றார் அடைக்கலமுத்து.

பேராசிரியர் செல்வநாயகத்திடம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அடைக்கலமுத்து இலக்கிய நலனாய்தல் படித்தார். அந்தக் காலத்தில் ரா.பி.சேதுப்பிள்ளைபோல எழுதுவது ஃபாஷனாக இருந்தது. 'நாடு நீங்கிக் காடு புகச் சென்ற கோதையாகிய சீதை' என்று யாராவது எழுதினால் அது என்ன 'கோதையாகிய சீதை' என்று பேராசிரியர் கிண்டல் செய்வார். 'ஓசை செவியில் கேட்டு' என்று எழுதினால் போச்சு, குறுக்காக வெட்டிவிட்டு 'ஓசை வேறு எங்கே கேட்கும், கண்ணிலா?' என்று புன்னகைப்பார். ஒரு நாள் வகுப்பில் பாரதியாருடைய 'திக்குத் தெரியாத காட்டில்' பாடல் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது அடைக்கலமுத்து எழுந்து நின்று பாரதியார் நினைத்த கருத்துக்கு பாடல் வரிகள் ஒத்துப்போகவில்லை என்றார். வகுப்பில் ஒரே அமைதி. 'எப்படிச் சொல்கிறீர்கள்?' என்றார் பேராசிரியர்.

'திக்குத் தெரியாத காட்டில் கண்ணனைக் காணத் தவிக்கிறாள் காதலி. அவனைத் தேடித் தேடி அலைகிறாள். ஆனால் அவளுக்கு என்ன தெரிகிறது? மிக்க நலமுடைய மரங்கள், விந்தைச் சுவையுள்ள கனிகள், மலைகள், நதிகள், நெஞ்சில் கனல் மணக்கும் பூக்கள், நீளக் கிடக்கும் இலைக் கடல்கள், சுனைகள், முட்கள், புதர்கள். இவற்றிலே அவள் மனதைப் பறிகொடுக்கிறாள், ஒரு சுற்றுலாப் பயணிபோல. கண்ணன் தோன்றுவானா? இதுதான் கண்ணனைக் கண்டடையும் முறையா?' பேராசிரியர் மடிப்புச் சால்வையை இழுத்துப் போட்டபடி அடைக்கலமுத்துவை அன்று பாராட்டினார்.

புலவர்களையும், பேராசிரியர்களையும் மட்டுமல்லாமல் தன் இளவயது நண்பர்களைப் பற்றிய குறிப்புகளையும் அடைக்கலமுத்து தருகிறார். இவரோடு படித்த கேசவன் ஏழைக் குடும்பத்தை சேர்ந்தவன். அவனுக்கு படிப்பு ஏறாதபடியால் ஒரு சாப்பாட்டுக் கடையில் வேலை பார்த்தான். இவர் தன் நண்பனை பார்க்கப் போனபோது அவன் அளவில்லா மகிழ்ச்சியில் குதித்தான். அதுவே கேடாகவும் அமைந்துவிட்டது.

அன்று அவனுக்கு வேலை முடிந்ததும் இரு வரும் திரைப்படம் பார்க்கப் போவதென்று தீர்மானித்தார்கள். அவன் அவசர அவசரமாக தோசை மாவை அரைத்து அண்டாவில் கலக்கி வைத்துவிட்டு இரண்டாவது ஆட்டத்துக்கு புறப்பட்டான். அவசரத்தில் வந்தவன் அண்டாவை மூட மறந்துவிட்டான். அடுத்த நாள் காலை தோசை சாப்பிடுவதற்கு ஒருவர் கடை திறந்ததும் வந்து சேர்ந்தார். அவர் தோசையை பிய்த்து வாயில் வைத்தால் மயிர் மயிராக வருகிறது. 'என்ன முதலாளி தோசைக்கு மசிர் இருக்கா?' என்றார். பார்த்தால் தோசைப் பானைக்குள் இரவு ஒரு பூனை விழுந்துபோய் கிடந்தது. கேசவனுக்கு வேலை போய்விட்டது. இருந்த ஒரு வேலையையும் தொலைத்த கேசவன் ஆடிப்போகவில்லை, 'மசிர் வேலை' என்றான்.

தொடர்தல் 90ம் பக்கம்

89ம் பக்க தொடர்தல்

ஒரு காலத்தில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் யாழ்ப்பாணத்துக்கு குட்டி ராசா போல இருந்தார். காங்கிரஸ் கட்சியின் தலைவர். அடைக்கல முத்து காங்கிரஸ் கட்சி கூட்டங்களில் எல்லாம் பேசுவார். இருவரும் ஒருவர்மேல் ஒருவர் பெருமதிப்பு வைத்திருந்தார்கள். ஜீ.ஜீ ஒரு புகழ்பெற்ற நியாயதுரந்தர். (பயப்பட வேண்டாம், இந்தக் காலத்து தமிழில் 'வழக்கறிஞர்'.) இவர் வாதாடி வென்ற வழக்குகள் பற்றி ஒரு புத்தகம் எழுதலாம். அதிலே இலங்கை முழுக்க பேசிய வழக்கு என்று ஒன்று இருந்தால் அது 'யானை மார்க் தீப்பெட்டி' வழக்குத்தான்.

ஒரு கடைக்காரரை, தீப்பெட்டி அரைச் சதம் கூட்டி விற்றார் என்று பொலீஸ் பிடித்துவிட்டது. அரசாங்க தரப்பு வழக்கறிஞர், கடைக்காரர் 'ஒரு யானைப்பெட்டியை' அரசாங்கம் நிர்ணயித்த விலையிலும் பார்க்க அதிக விலையில் விற்றுவிட்டதாக குற்றம் சாட்டினார். ஜீ.ஜீ. பொன்னம்பலம் நீதவானுக்கு தீப்பெட்டியை தூக்கி காட்டி அதில் இரண்டு யானைகள் படம் போட்டிருப்பதாகவும், அது 'ஒரு யானைப்பெட்டி' அல்ல என்றும் வாதாடி வழக்கை வென்றுவிட்டார்.

இப்படி பல ருசிகரமான தகவல்கள் கிடைத்தாலும் இது வெறும் சம்பவங்களின் தொகுப்பு அல்ல அதைச் சொன்னவிதம் இலக்கியத் தரமாக அமைந்திருந்தது. வர்ணனைகளும், உவமைகளும் வாசிப்பு இன்பத்தைக் கூட்டின. உதாரணத்துக்கு சில.

'சூரிய உதயத்தை எதிர்பார்க்கும் இரா காவல்காரனைப்போல...'
'இனிப்பு போத்தல்களின் மேலால் முதலாளியின் முகம் தெரிந்தது.'
'என் இருதயத்தின் எல்லா அறைகளிலும் விளக்குகள் எரிந்தன.'
'கமக்கட்டுக்கு மேலே தொங்கிய சட்டையோடு வந்த மகளை...'
'எழுதி இலேசாக அழிந்த கரும்பலகைபோல தலைமயிர் நரையும், கருமையும் கலந்திருக்கிறது.'

நான் புத்தகத்தை வாசித்து முடித்ததும் லண்டனில் இருக்கும் அடைக்கலமுத்து ஐயாவை தொலைபேசியில் அழைத்து என் பாராட்டைத் தெரிவித்துவிட்டு 'என்ன ஐயா, இப்படிச் செய்துவிட்டீர்கள்?' என்றேன். அவர் 'ஏன்?, ஏன்?' என்றார். 'நீங்கள் என்னிடம் சொன்ன சுவையான சம்பவங்கள் சில விட்டுப் போச்சுதே?' அவர் 'அப்படியா, என்ன?' என்றார். நான் ஒன்றுக்கு மேல் ஒன்றாகச் சொன்னேன். 'இவை உங்கள் வாழ்க்கையையே மாற்றிய சம்பவங்கள், மிக முக்கியமானவை' என்றேன். சிறிது நேர மௌனத்திற்கு பிறகு சன்னமான குரலில் 'விட்டுப்போச்சுது' என்றார் துயரத்தோடு.

மார்க்கோ போலா என்பவர் தான் சீனாவுக்கு போய் வந்த வரலாற்றை பெரிய புத்தகமாக எழுதினார். இறக்கும்போது தான் பார்த்ததில் பாதியைத்தான் எழுதியதாகக் கூறினார். மீதி விட்டுப்போச்சுது. ஜெயமோகன் சமீபத்தில் சு.ராவைப் பற்றி ஒரு புத்தகம் எழுதினார். அது எழுதி வெளிவந்த சில நாட்களில் பேசும்போது பல சம்பவங்கள் விடுபட்டுவிட்டதாக அவரே என்னிடம் சொன்னார்.

நான் அடைக்கலமுத்து ஐயாவை சமாதானப் படுத்தினேன். 'இது எழுத்தாளர் எல்லோருக்கும் நடப்பதுதான். ஐயா, யோசிக்காதையுங்கோ. விடுபட்ட எல்லா சம்பவங்களையும் தொகுத்து இன்னொரு புத்தகமாகப் போடலாம்' என்றேன்.

அவர் சிரித்தார். அந்த 85 வயது சிரிப்பு அட்லாண்டிக் சமுத்திரத்தை கடந்து என்னிடம் வந்தது.



muththulingam.a@thaiveedu.com

88ம் பக்க தொடர்தல்

அவளது கண்கள் கலங்கி வந்துகொண்டிருந்தன.

ஏய், அழுதுவிடாதே! எதற்காக இப்போது அழ ஆரம்பிக்கிறாய்? எனக் கேட்க நினைத்தான் அவன். ஆனாலும் ஏதோ தடையில் வார்த்தைகள் வறிதாகி நின்றுகொண்டிருந்தான்.

'போனமுறை வந்திருந்தபோது, நீ அடுத்த மாதம் மறுபடி வருவேன் என்றுவிட்டுப் போயிருந்தாய்?'

அவன் தலையை மட்டும் ஆட்டினான். காமம் எகிறும் தருணத்தில் காதல்மாதிரி ஒரு வார்த்தை! அவன் சொன்னான்தான்.

'அதை நம்பிக்கொண்டு நீ வேலைசெய்யிற கப்பல் துறைமுகத்துக்கு வாற தகவலை அறிய துறைமுகக் கப்பல் பட்டியல்களைப் பார்த்தபடி ஒரு மாதம் வீட்டிலே காத்திருந்தேன். நீ வரவில்லை. அதற்கு அடுத்த மாதமும் காத்திருந்தேன். கடைசியில் பிள்ளை பசித்து அழ ஆரம்பித்த பிறகுதான், நமக்கு இதுதான் விதிபோலும் என்றுவிட்டு பழையபடி தொழிலுக்குச் செல்ல ஆரம்பித்தேன்.'

அவளது தொண்டைக் குழியிலிருந்து ஒரு பசியின் குரல் எழுந்துகொண்டிருப்பதை அவன் உணர்ந்துகொண்டிருந்தான்.

அவள் அந்த மண்ணின் பூர்வீக புத்திரி. அங்கே சீனர்கள் உண்டு. மொன் எனப்படும் மொங்கோலிய இனத்தவர் உண்டு. இன்னும் பல்வேறு இனக் குழுக்கள் உண்டு. ஆனால் அவள் தாய்லாந்து மண்ணின் பூர்வீகி. இருந்தும் காலகாலமாகவும் வறுமையிலும், பசியிலுமே வாழ்ந்தவள். அதனால்தான் மிங் நொய் என்று தாய் மொழியில் சொல்லப்படும் வைப்பாட்டியாக ஒன்பது வயதிலேயே ஒரு பணக்காரக் கிழவனுக்கு அடிமையானவள். அவள் தன் இருபதாம் வயதில்தான் அந்த வளையிலிருந்து விடுபட்டாள். பின்னால் காதலனென்று சுற்றிவந்தவனுக்கு அவள் கொண்ட கர்ப்பம் தான் அப்போது அவள் காக்க இருந்த உறவு. அவளே எல்லாம் அந்த ஆறு நாள் வாழ்க்கையின்போது சொல்லியிருக்கிறாள்.

நம்புகிறவனுக்காகவே வாழ அவர்கள் தயாராகிறார்கள். நம்பிக்கைகள் தகர்கிறபோது அவர்கள் எப்படியும் வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுவிடுகிறார்கள். நம்பியவன் கைகொடுக்கும்வரை அவள் மனைவிதான். கைவிடும்போதுதான் பரத்தையாகிறாள்.

கலாபன் கணவனாக இல்லாதபோதும் அவள் மனைவியாக வாழத்தான் செய்திருக்கிறாள். அவன் இல்லாதபோதுதான் அவள் பரத்தையாகினாள்.

பரத்தைமை உணர்ச்சிகளின் வெளிப்பாட்டுக் களமல்ல. வாழ்வின் ஆதாரம் பலருக்கும் அதிலிருந்துதான் பிறக்கிறது. வறுமையின் நிறம் சிகப்பு என்கிறார்கள். அப்படியானால் வறுமையின் வடிவம் என்ன? பெண்தானா?

அவள் தாய் உச்சரிப்பில் ஆங்கில வார்த்தைகளைத் தெளித்துக்கொண்டிருந்தாள். வார்த்தைகளற்றும் இனி அவளை அவனால் தெரிந்துகொள்ள முடியும்.

திடீரென மழை பெய்ய ஆரம்பித்தது வெளியே. மறுநாள் சாமான் ஏற்றல் சந்தேகம்தான். மழைக் காலம்தான் அது. மழைதான் பிந்தி வந்திருக்கிறது. பத்து நாளில் முடியவேண்டிய சாமான் ஏற்றும் வேலைக்கு இனி இருபது நாளாகலாம். அந்த இருபது நாளில் அவனுக்கு ஒரு மனைவி, அவளுக்கு ஒரு கணவன்.

வாழ்க்கை அங்கே இருக்கும், அதன் பின்னணியில் ஒரு கருமை படிந்திருந்தபோதும்.

காலம் நகர்ந்துகொண்டிருக்கிறது. விதி, மாற்றுவானற்ற இறுமாப்பில் சிரித்தபடி.



devakanthan@thaiveedu.com



## காதல் வாழ்க்கை - 17

# மயக்குறு மக்கள்

வி. கந்தவனம்

புதுமணத் தம்பதிகளைப் ‘பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க!’ என்று வாழ்த்துவது தமிழ் மக்கள் மரபு. வாழ்க்கையிலே அடைய வேண்டிய பேறுகள் பதினாறு.

அவை:

- கல்வி,
- தொழில்,
- செல்வம்,
- வலிமை,
- புத்தி,
- சித்தி,
- புகழ்,
- நன்மக்கள்,
- இன்பம்,
- நல்வினை,
- அழகு,
- பெருமை,
- பெரியோர் துணை,
- பணிவு,
- நோயின்மை,
- நீண்ட ஆயுள் என்பன.

இவற்றுள் தலையாயது நன்மக்கட் பேறு. தம்பதிகள் அடையக்கூடியவற்றுள் நல்ல மக்களைப் பெறுவதைப் போன்று பேறு வேறொன்றில்லை என்பது வள்ளுவர் வாக்கு. பெற்ற குழந்தைகள் தமது சிறிய கைகளால் அளைந்து, பிசைந்த உணவு பெற்றோருக்கு அமிழ்தினும் இனிதாக இருக்கும். மக்களைப் பார்த்தல் கண்களுக்கு விருந்து. அவர்களின் மெய் தீண்டல் உடற்கு இன்பம், சொற் கேட்டல் செவிக்கு இன்பம்.

குழல் இனிது யாழ் இனிது என்பர்தம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்

(குறல்: 7: 6)

என்பது திருக்குறள். குழந்தை இன்பம் குடும்பத்தைக் குதூலிக்க வைக்கும் இன்பம். இத்தகைய அரிய இன்பத்தைப் பாண்டியன் அறிவுடை நம்பி என்னும் அரசன் விவரிக்கும் விதம் அவனது அனுபவத்தை அள்ளித் தருவதாக உள்ளது.

படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுநகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழு நாளே.

(புறம் 188)

‘இல்வாழ்க்கையைப் பலவகைச் சிறப்புக்களுடனே நடத்தி, வருவோரை ஓம்பி, அவரோடு இருந்து உண்ணும் செல்வத்தை உடையோராயினும், அம் மகிழ்ச்சிகளிடையே, குறுகக் குறுக நடந்தும் சிறுகையை நீட்டியும் பாத்திர உணவைத் தரையிலே சிந்தியும் சிந்திய கையால் மேனியிலே தொட்டு வாயாற் கவ்வியும் கையால் துழாவியும் நெய்ச்சோற்றை உடம்பிலே சிதறியும் மெய்மறக்கச் செய்யும் இன்பத்தை அளிக்கும் புதல்வரை இல்லாதார்க்கு இவ்வுலக வாழ்விற் பயனாவது ஒன்றுமில்லை.’

பதினாறு பேறுகளில் நன்மக்கட்பேறே சிறந்தது என்று வலியுறுத்துவதுபோல அமைந்துள்ளது பாண்டியன் அறிவுடை நம்பியின் கூற்று. குழந்தைச் செல்வத்துக்கு இணையான செல்வம் வேறோன்றில்லை என்பது தமிழர் தத்துவம்.



ஓவியம்: மு.சு. சிவகுமாரன்

குழந்தை இன்பத்தில் கணவனும் மனைவியும் திளைத்த சம்பவங்கள் பலவற்றைச் சங்க இலக்கியங்களிற் படித்து இன்புறலாம். இசைக் கலைஞரைப் பாணர் என்று சங்க காலத்தில் அழைத்தனர். ஒருநாள் பாணன் ஒருவன் தனது மகனை மடியில் வைத்துக் கொண்டு கொஞ்சி மகிழ்ந்தான். அந்த மகிழ்ச்சியில் அவனுக்குப் பாடவேண்டும் போல இருந்தது. முல்லைப் பண்ணை பாடினான். அவனது பாடலை இரசித்தவாறே மனைவி முல்லைப் பூக்களைக் கொய்வதில் ஈடுபட்டிருந்தாள். கொய்த மலர்களை மாலையாகக் கட்டினாள். கட்டிய மாலையில் ஒரு துண்டைக் கணவனின் மடியில் இருந்த குழந்தையின் தலையில் சூட்டினாள். கணவன் இந்தக் காட்சியைக் கண்டு உள்ளார மகிழ்ந்தான்.

(ஐங்குறுநூறு 408).

குழந்தை இன்பச் சிறப்பைக் காண நாம் சங்க காலத்துக்குச் செல்ல வேண்டுமா, என்ன? இக்காலத் தாய் ஒருத்தியின் இன்பப் பாடல் ஒன்று இதோ:

ஆய கலையே அன்பு மகனே
அம்மாவைக் கொஞ்சடா கொஞ்சு
கோயிற் சிலையே கோப்பெரு வேந்தே
கொஞ்சடா அம்மாவை கொஞ்சு!

நான்பெற்ற செல்வம் நாடரும் செல்வம்
நாளைய நம்பிக்கைச் செல்வம்
வான்மதி வந்து மடியிற் சிரிக்கும்
மாதவ மாணிக்கச் செல்வம்!

தாமரை மேனி சாகச மானி
தாரணி ஆளப் பிறந்தான்
தேமது ரந்தான் செந்தமி ழன்தான்
சிங்கார வேலன் இவன்தான்!

(ஆய கலையே...)

அம்பொன் மணியே ஆயிரம் முத்தே
ஆரமுதக் கடல் அன்பே
கம்பன் கவியே கற்பகப் பூவே
காதல் கனிந்த கொழுந்தே !

ஆகாய ஆறோ அக்கினிக் குஞ்சோ
யாரிவன் ஆற்றலைக் கண்டார்
தாகத்தைத் தீர்ப்பான் தமிழரைக் காப்பான்
சந்ததிக்குப் புகழ் சேர்ப்பான் !

(ஆய கலையே..)

கண்களைப் பார்பார் கண்ணனைப் போல்வான்
கைகளைப் பாரிவன் பாரி
விண்ணில் நடக்கும் கால்களைப் பார்பார்
விந்தைகள் செய்யப் பிறந்தான் !

கரிகாலன் தானோ தமிழ் மக்கள் நாளும்
கண்ணெனப் போற்றும் தலைவன்
பிரபாகரனோ தமிழீழந் தன்னைப்
பெற்றுத் தரப் பிறந்தானோ!

ஒளியைப் பரப்பி உலகை விளக்க
உதிக்கின்ற சூரியன் போலே
எழுக எழுக வாழ்வு சிறக்க
எடுத்தடி வையடா மகனே!

கண்டுகண் டுள்ளக் காலம் முழுதும்
காவடி ஆடலாம் கண்ணே
குண்டுப் பெடியா கோமள வாயால்
கொஞ்சு கொஞ்சு கொஞ்சு கொஞ்சு!

(ஆய கலையே...)

(வி. கந்தவனம்: ஓ கனடா!)



kandavanam.v@thaiveedu.com


**ABC Private Tutoring & Homework Help**

**French -** For grade 4 to grade 10 By a native French speaking teacher from France **Math -** For grade 5 to grade 12 In English or French medium

Intersection

**Victoria park & Ellesmere**

**Mr. Shanthakumar**

**647 262 9430**

**Tutoring**

**Grade 1-7: English, Math, Science & Social science Grade 8- 11: English & Math**

**ஜீவா**

**B.A (Hons), M.Sc, Ph.D**

**(Kennedy & Ellesmere அருகாமையில்)**

**647 291 1357**

**www.inayam.net**

# வீடு, வியாபாரம், காணி

## வாங்க விற்க அழையுங்கள்!

**Mortgage 2.19% ..Refinance also.**

**416- 490-7653**










Century 21

Brokerage*
AFFILIATE REALTY INC.
80 CORPORATE DR. TORONTO,
ONT. M1H 3G5
416-290-1200
**416-894-1187**



email: rpushpakanthan@trebnet.com

## NEED MORE HOMES FOR BUYERS
## selling commission only 1.25%

# sell your home in 72 Hrs*

**EXPERIENCE! COMMITMENT! RESULTS!**

## Pat Pushpakanthan
**Real Estate BROKER**

CENTURION AWARDS 6 yrs
Top producer 7 years
Masters Hall of Fame 07

## OPEN HOUSE
## Friday sat, sun

Ellesmere/B'mount




2bm 2wsrm newer tridel
**0% Downpayment**
Available
Only pay 958/- /mo mortgage call for detail
Security, executive living

Markham



9' Ceilings, Upgraded Gourmet Kitchen With Granite Countertop, Gleaming Oak Floors On Main, Stairs

**Nielson/ melevin**
2 BM /2wsrm CONDO APT FR SALE




**$153 900**

0% down pymnt
**670/- mo pymnt** mortgage call fr detail



**25 Acre Lot**
Warden/Stouffville

Scarborough



4 bm/wsrm $444000, bsmnt finished

Mccowan/ 16 th ave





Excellent area best high school Well kept 4 bdrm/2 garage

Harwood...ajax





Excellent location 3 bm/ 3 wsrm close to 401, school, shoping

East scaborough



3 bm / 3 wsrm closed to uft

East scaborough



Excellent area interlock driveway Well kept 5 bdrm/5 wsrm finished bsmnt $50000 spent..

Ellesmere/m.vale



Great Location! Custom Interior Design,Extra Hude Corner Lot,Lots Of Upgrades,Balcony,Hardwood Floors,Granite Kit Counter Top,Int & Ext Pot Lights,Top Custom Kit Appliances,Upgraded Cabinets,4Arched Headers,Whirlpool Tub 6Jets,Oak Stairs With Railing,Over $60K In Upgrades,T

## Brand new homes call me for detail



**Starts from Upper 300 000.....**





## Condo for sale.. newer also

2bm 2 wm in Scar 139000/-
2bm 2 wm in Scar 147000/-
Studio newer in Scar 169000/-
1 bm 1 wm in Scar 185 000/-
1+1 newer in Scar 229 000/-

**Monthly payment start from $670/- /month***

**Business**
**Bar for sale**
**Be your own boss**
4 bar available

## Cafetaria
Location ! Location ! Open 7- 4:30 pm only
Rent is less .....high income
Located in High rise building
**3 cafeteria available**

*some condition applies ** not intended to solicit to the buyers under contract *Each office independently owned and operated ** not intended to solicit property currently listed for sale *individual performance**Also available

## இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர் - 11

# ஆழத்து முத்துக்கள்

நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.

இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக்காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

*K.S.* பாலச்சந்திரன்

# மெல்லிசை - திரையிசைப் பாடகர் முத்தழகு

'ஒஹோ என் ஆசை ராதா....'
'எண்ணங்களாலே... இறைவன் தானே....'

போன்ற இலங்கைத்திரைப்படப் பாடல்களை பாடி, எங்களை கிறங்கவைத்தவர் வி.முத்தழகு.

இவை போன்ற பலபாடல்கள் இவரை புகழின் உச்சத்திற்கு கொண்டு சென்றது. இலங்கை மெல்லிசை - திரையிசை பாடல் உலகில் நன்கு அறியப்பட்ட பெயர் வி. முத்தழகு.

பம்பலப்பிட்டி சென்ற் மேரீஸ் கல்லூரியில் படிக்கும் இளமைக்காலத்திலேயே கண்டசாலா-வின் பாடல்களை சகமாணவர்களுக்காக பாடி மகிழ்வித்தவர், வி.முத்தழகு.

இலங்கை வானொலியில் மெல்லிசை பாடு-வதற்கு கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்-கள் கோரப்பட்ட போது. தான் முதல் ஆளாக விண்ணப்பம் அனுப்பியதாகக்கூறும் வி.முத்தழகு தேர்வுபெற்றபின் 1971ல் தனது முதலாவது மெல்லிசைப்பாடலை இலங்கை வானொலியில் பாடும் சந்தர்ப்பத்தை பெற்றார். க. கணபதிப்பிள்ளை பாடல் எழுத ஆர். முத்துசாமி இசையமைத்தார். அன்னை பராசக்தி... என்ற பாடல் தான் அது.

தொடர்ந்து நம் நாட்டில் தயாரிக்கப்பட்ட பல தமிழ், சிங்கள திரைப்படங்களில் ஏராளமான பாடல்களை பாடியிருக்கிறார். 'புதிய காற்று' திரைப்படம் இவரை உலகத் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்தியது. இந்தத்திரைப்படத்தில் இவர் முதலில் பாடிய 'ஓகோ என்னாசை ராதா' பாடல் பதிவுபற்றி இவ்வாறு கூறுகிறார்.

ஈழத்து ரத்தினம் எழுதிய பாடலுக்கு டி.எப். லத்தீப் இசையமைக்க நான் பாடினேன். முதல் ரெக்காடிங்கில் புதிய காற்று படத்தின் இரண்டாவது நாயகனுக்காகத்தான் பாடினேன். அந்தப் பாடலை கேட்ட வி.பி. கணேசன் தனக்கு எனது குரலில் ஒரு பாடல் வேண்டும் என்று கேட்க அவருக்காகவும் ஒரு பாடலை பாடினேன்.'

இலங்கை தமிழ் இசை உலகில் வேறு எவரும் செய்யாத வகையில் 'சப்தஸ்வரம்' என்ற தனி நபர் இசை நிகழ்ச்சியைப் பலமுறை மேடையேற்றியவர். 1974ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டுவரையுள்ள 30 வருட காலத்தில் 'சப்தஸ்வரம்' நிகழ்ச்சியை 15 முறை மேடையேற்றிவிட்டார். மெல்லிசைப் பாடகராக கலை உலகிற்கு வந்த வி. முத்தழகு, மறைந்த தென்னிந்தியப் பாடகர் ஏ. எம். ராஜாவின் குரலை ஞாபகப்படுத்தும் நம் நாட்டுப் பாடகர். சிங்களம், தமிழ், ஹிந்தி, உருது, மலையாளம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பாடியிருக்கிறார். மெல்லிசைப் பாடல்கள், மேடை நிகழ்ச்சிகள், திரைப்படப் பாடல்கள் என எவற்றையும் அவர் விட்டு வைக்கவில்லை.

இலங்கையில் உருவான தமிழ்ப் படங்களில் இவர்தான் அதிகமாகப் பாடியிருக்கிறார் என்று கூறிவிடலாம். 10க்கு மேற்பட்ட சிங்களப் படங் களிலும் பாடியிருக்கிறார். கலாவதி, சுஜாதா,



வனஜா, ஜெகதேவி, சந்திரிகா, லதா வல்-பொல போன்ற நம் நாட்டுப் பாடங்களுடன் மட்டுமின்றி ஜிக்கி, ஜமுனா ராணி, சுசிலா போன்ற தென்னிந்திய சினிமாப் பாடகிகளுடன் சேர்ந்து பாடியிருக்கிறார்.

'சப்த ஸ்வரம்' தமிழ் நிகழ்ச்சியைப் போல் 'காதல் மொட்டுகள் மலர்கின்றன' என்ற தலைப்பில் தனி நபர் சிங்கள நிகழ்ச்சியை 10 முறைக்கு மேல் நடத்தியிருக்கிறார்.

கொழும்பு, பம்பலப்பிட்டி சென். மேரிஸ் வித்தி-யாலயத்தில் முத்தழகு கல்வி பயின்றார். 1963இல் அப்பாடசாலையின் சிங்களப் பிரிவில் மெல்லிசைப் பாடல் போட்டி ஒன்று நடை-பெற்றது. அப்போட்டியில் இவருக்கு இரண்-டாவது பரிசு கிடைத்தது. இச்சம்பவத்தின் பின் இசையே அவரது வாழ்க்கையாகவும் தொழிலாகவும் மாறியது.

அதே ஆண்டில் பாகிஸ்தானில் லாகூர் பல்-கலைக்கழகத்தில் இசை நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. சாரண இயக்கத்தில் அங்கு சென்ற முத்தழகு இந்த இசை நிகழ்ச்சியில் பாடினார். உருது மொழியிலும் சிங்கள மொழியிலும் பாடினார். தனது தாய்மொழியான தமிழில் பாடவும் மறக்கவில்லை. அந்த இளம் வயதிலேயே தான் ஒரு சினிமாப் பின்னணிப் பாடகராக வரவேண்டும் என்று கனவு கண்டாராம். அந்தக் கனவு 'புதிய காற்று' திரைப்படம் மூலம் நனவாகியது.

ஏ. எம். ராஜாவை மானசீகக் குருவாக கருதும் வி. முத்தழகு பிரபலம் பெற்றது 'புதிய காற்று' திரைப்படம் மூலம் என்றாலும் அதற்கு முன்பே அவர் தமிழில் மெல்லிசைப் பாடல்களைப் பாடிவிட்டார். தமிழில் மெல்லிசைப் பாடல்-களை பாடுவதற்கு முன்பு சிங்களத்திலும் பல மெல்லிசைப் பாடல்களை பாடிவிட்டார்.

1989ஆம் ஆண்டு பாடகி லதா வல்பொலவுடன் சேர்ந்து சைப்பிரஸ், லெபனான் போன்ற நாடுகளுக்கு சென்று இசைக் கச்சேரி செய்து விட்டு வந்தார். அடுத்து ஐரோப்பிய நாடுக-ளுக்கு செல்லும் வாய்ப்பு பாடகர் அபயவர்த்ன பாலசூரியவினால் வழங்கப்பட்டது.

முதன் முதலில் 'புதிய காற்று' படத்தில் பாடும் வாய்ப்பை வி.பி. கணேசன் இவருக்கு வழங்-கினார். அதைத் தொடர்ந்து 'கோமாளிகள்', 'ஏமாளிகள்', 'நான் உங்கள் தோழன்', 'தென்றலும் புயலும்', 'வாடைக்காற்று' 'தெய்-வம் தந்த வீடு', 'அநுராகம்', 'எங்களில் ஒருவன்', 'நெஞ்சுக்கு நீதி', 'அவள் ஒரு ஜீவநதி', 'நாடு போற்ற வாழ்க', 'சர்மிளாவின் இதயராகம்' போன்ற படங்களில் பாடினார்.

'புதிய காற்று' 1975ஆம் ஆண்டு திரைக்கு வந்தது. 'சர்மிளாவின் இதயராகம்' 1993ஆம் ஆண்டு திரைக்கு வந்தது. கிட்டத்தட்ட 20 வருட இடைக்காலத்தில் உருவான சகல தமிழ்ப் படங்களிலும் முத்தழகு பின்னணிப் பாடியிருக்கிறார் என்பது அவரது திறமைக்கு எடுத்துக் காட்டாகும்.

யசபாலித நாணயக்கார தயாரித்த 'அநுராகம்' என்ற படத்தின் இசையமைப்பாளர் சரத் தஸநாயக்க ஆவார். இவர் இசையமைத்து முத்தழகு பாடிய "எண்ணங்களாலே இறைவன் தானே" என்ற பாடல் மிகவும் பிரபலம் பெற்ற பாடலாக விளங்கியது. இப்படத்தை தயாரித்த யசபாலித்த நாணயக்காரவே முத்தழகுவுக்கு சிங்களச் சினிமாவில் பாடும் முதல் வாய்ப்பை வழங்கினார். 'அஞ்சானா' என்ற படத்தில் விஜயகுமாரதுங்கவுக்கு பின்னணி பாடும் வாய்ப்பே அது. தமிழில் 'நாடு போற்ற வாழ்க' என்ற பெயரில் வெளிவந்த படமே, சம-காலத்தில் 'அஞ்சானா' என சிங்களத்தில் தயாரிக்கப்பட்டது. இரண்டு மொழிப்படங்க-ளிலும் முத்தழகு பின்னணி பாடினார்.

தென்னிலங்கையில் நடைபெறும் இசை நிகழ்ச்சிகளில் ஓரிரு தமிழ்ப் பாடல்கள் இடம் பெறும். அந்தப் பாடலை பாடுபவராக நிச்சயம் முத்தழகுவே வந்து நிற்பார். பேராதெனிய-வில் பிறந்த முத்தழகு சிறு வயதிலேயே கொழும்புக்கு வந்துவிட்டார். 1953ஆம் ஆண்டு முதல் இன்று வரை 5000க்கும் மேற்பட்ட பாடல்களை பாடிவிட்டார்.

கர்நாடக இசைக்கு ஏ.எஸ். நாராயணனும் இந்துஸ்தான் இசைக்கு எம்.எஸ். செல்வராஜா-வும் தனது வழிகாட்டிகள் என்று கூறுகிறார். இவரது திறமைக்கு 1995ஆம் ஆண்டு சிறந்த பாடகருக்கான ஜனாதிபதி விருதும் 2002ஆம் ஆண்டு தேசிய பாடகருக்கான 'கலாபூஷணம்' விருதும் கிடைத்தது.

1987ஆம் ஆண்டு இந்து கலாசார அமைச்சு இவருக்கு 'மெல்லிசைச் செல்வன்' என்ற பட்டத்தை வழங்கியது. 'இன்னிசை மணி', 'கலை மணி' என்பனவும் முத்தழகுவுக்கு கிடைத்த மேலும் சில பட்டங்களாகும். 1995ஆம் ஆண்டை முத்தழகுவால் இலகுவில் மறக்க முடியாது. அப்போதுதான் இவர் 10 தமிழ் படங்களில் பாடிய 15 பாடல்கள், ஐரோப்பிய உலக இசைச் செயலகம் வருடா வருடம் வெளியிடும் சி.டி. இசைத்தட்டில் வெளியாகி உலகத்தின் பல தமிழ் வானொலி நிலையங்களிலும் ஒலிபரப்பாகியது.

1970 - 1980 காலப் பகுதியில், இலங்கை வானொலியின் புகழ்பெற்ற ஒரு மெல்லிசைப் பாடகராக முத்தழகு விளங்கினார். இன்று வரை இலங்கையின் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் பாடிவரும் அவருக்கு 'தேசியப் பாடகர்' என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. 'மெல்லிசையை மக்கள் மயப்படுத்த வேண்டுமென்பது தன் கனவு' என்று கூறுகிறார் முத்தழகு.

'இலங்கையில் திரை இசை' என்ற தலை-யங்கத்தில் யாராவது சரித்திரம் எழுத முனைந்தால் 1975 முதல் 1983ஆம் ஆண்டு காலப்பகுதியை 'திரை இசையின் செழிப்பான ஆண்டு' என்று எழுத வேண்டி வரும். அதில் பாடகர் முத்தழகுவின் பெயர் இடம்பெறாமல் அந்த அத்தியாயம் நிறைவு பெறாது.

(நன்றி: கலைகேசரி (இணையம்)

■ ■ ■

தொடர்தல் 97ம் பக்கம்



# குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி



**RESP SPECIAL!**
இம்மாதம் RESP செய்பவர்களுக்கு
3 விசேட சலுகைகள் உண்டு!
- Start from $25

INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
RBC Insurance
Canada Life
Manulife Financial

**தனா மாணிக்கவாசகர்**
*Broker*

## Life Insurance
**Critical Illness Insurance**

Home Equity Line of Credit
## Disability Insurance
## Mortgage Insurance



RRSP - Start from $25
Loan approval within 24hrs - Bad credit no problem
RESP - Start from $25
(20%-40% Government Grant + 15% Company Bonus)

**INSURANCE SERVICE INC.**
**Cell: 416-728-5772**
Business: 416-290-1200

# THINKING OF BUYING OR SELLING
**DUFFERIN & EGLINTON DISCOUNT VARIETY STORE WITH LOTTO**








**$99,000**

| $299,900 | $369,900 | $69,900 | $389,900 | $469,000 | $469,000 |
|---|---|---|---|---|---|
|  |  |  |  |  |  |
| Sheppard/Morningside 3+2 Bedrooms, 2 Washrooms | Markham/Lawrence 3+2 Bedrooms, 2 washrooms | Island Rd. & Hwy 401 | Middlefield/Denison 3+2 Bedrooms, 3 Washrooms | Gore Road/ Ebenezer 4+2 Bedrooms, 4 Washrooms | Morningside/Sheppard 4+2 Bedrooms, 4 Washrooms |

**Also Contact in Regards to Investing in Newly Built**
**HOMES - CONDOS COMMERICAL**



**HomeLife/Future Realty Inc.,**
Brokerage*
205-7 Eastvala Drive, Markham Road, Ontario L3S 4N8
B: 905.201.9977 F: 905.201.9229

**Raja V.S. Rajagopal**
Sales Representative
**Dir : 416.727.8647**
Email : sinnahrajagopal@gmail.com
www.sinnarajagopal.com

*Independently Owned and Operated, REALTOR


மனம் விரும்பியது போல்
வீடு வாங்க, விற்க அழையுங்கள்
The Gore Rd/ Hwy 7
Sold
$1,100,000
Detached 2- Storey,
4+2 Bedrooms,
5 Washrooms
Veterans/Touchette (Barrie)
For Sale
$279,000
Detached 2-Storey, 3 Bedrooms, 4 Washrooms
Warden/407
For Sale
$299,000
Condo Apt., 1+1 Bedrooms, 2 Washrooms
Gore/Ebenezer
For Sale
$339,000
Att/Row/Twnhouse 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
Castlemore Blvd / Goreway Dr.
For Sale
$374,905
Semi-Detached 2-Storey, 4 Bedrooms, 3 Washrooms
Mcvean / Castlemore
For Sale
$479,900
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms
The Gore/Ebenezer
For Sale
$699,900
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms
Mcvean/Hunts Point
For Sale
$479,900
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms
Castlemore/ Mcvean
For Sale
$529,900
Detached 2-Storey, 4 Washrooms, 4 Bedrooms
Brisdale/Sandalwood
Sold
$370,000
Detached 2-Storey
Bovaird/Worthington
Sold
$428,000
Detached 2-Storey
Cottrelle /Gore
Sold
$469,000
Detached 2-Storey
The Gore/Ebenezer
Sold
$535,000
Detached Bangalow
The Gore/Ebenezer
Sold
$680,000
Detached 2-Storey
Bellamy / Lawrence
Sold
$358,000
Detached Bungalow, 3+2 Bedrooms, 3 Washrooms
Markham Rd/14th Ave
Sold
$393,000
Link 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
Markham/14th Ave
Sold
$$421,000
Link 2 Storey, 3+2 Bedrooms, 4 Washrooms
Hwy 10/Bovaird
Sold
$272,750
Semi-Detached 2 Storey
Vankirk / Mayfield
Sold
$363,500
Detached 2-Storey
-digi Media-
Call before you list, See the Difference!!!
TOP PRODUCER - 2009
Ruby Thambiah
Sales Representative
Dir: 416-999-5337
Tel: 905-201-9977
Fax: 905-201-9229
rubysri@hotmail.com
www.buyandsellwithruby.com
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future
Realty Inc. Brokerage
Independently Owned and Operated
205-7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8

# நாடகக் கலைஞன் பிரான்சிஸ் ஜெனம்

1968ஆம் ஆண்டு. அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலைய திறந்தவெளி அரங்கு. அப்போது எனக்குப் பாதி நாடகத்தில் பாயில் அல்லது மண்ணில் படுத்து உருளும் வயது. "கர்ணன்" நாடகம் மேடையேறியது. அடுத்த நாள் ஊரெங்கும் இருவரைப் பற்றியே பேச்சாக இருந்தது. ஒன்று, இறுதிக் காட்சியில் மேடையில் இழுக்கப்பட்ட தேர் செய்த சிற்பக் கலைஞர் மணியம் மாஸ்டர். மற்றது, குந்திதேவியாக நடித்த பிரான்சிஸ் ஜெனம் அவர்கள்.

பொன்னிறம், பெண்ணிற்குரிய நளினம், குரல். அற்புதமாக அந்தப் பாத்திரமாகவே மாறியிருந்தார்.

1978ஆம் ஆண்டு. யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் தாசீசியஸ் அவர்களின் இயக்கத்தில் "கந்தன் கருணை" என்ற நாட்டுக்கூத்துவகை ஆடல் பாடல் நாடகம் மேடையேறியது. சாதிக் கொடுமை, ஆலையப் பிரவேசம் பற்றிய நாடகம். அதில் நாரதரும் முருகனும் ஆடுகின்ற (கூத்து வகை) ஒரு காட்சிவரும். அன்று அந்தக் காட்சியைப் பார்த்தவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் மறக்கமுடியாத வகையில் அது அமைந்திருந்தது. அதில் நாரதராக ஆடியவர் எங்கள் கலைஞர் ஜெனம் அவர்கள்.

1980ஆம் ஆண்டு கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் இரு காட்சிகளாக யாழ். நாடக அரங்கக் கல்லூரியினரின் "கூடி விளையாடு பாப்பா" என்ற நாடகம் இடம் பெற்றது. வேலையில் பொய் சொல்லிவிட்டு மாணவர்களுக்கான பகல் மேடையேற்றத்தின் போது நானும் ஒருவனாக அமர்ந்து கொண்டேன். மேடையில் பன்றி முகமூடியை அணிந்து இனிமையான பாடல்களை ஆடிப்பாடி, சபையோரையும் பாட வைத்த அந்தக் கலைஞரை மிக இலகுவாக நான் அடையாளம் கண்டு கொண்டேன். நாடகக் கலைஞன் பிரான்சிஸ் ஜெனம்.

நான் பார்த்த இந்த மூன்று மேடையேற்றங்களையும் எழுதுவதற்குக் காரணம், ஒரு கலைஞனின் வளர்ச்சியைச் சொல்வதற்குத் தான். அந்நாட்களில் எமது ஊர்கள் எங்கும் சர்வ சாதாரணமாக சமூக, சரித்திர, இதிகாச, புராண நாடகங்கள் மேடையேறின. கர்ணன் நாடகமும், இவ்வகையானதே. எமது பாரம்பரிய கலைவடிவமான நாட்டுக்கூத்துகள் அருகிவந்த அக் கால கட்டத்தில் 'கந்தன் கருணை' ஆட்டமும் பாட்டும் கூடிய ஒரு புது வடிவமாக இருந்தது. இதிலிருந்து 'கூடி விளையாடு பாப்பா' கொஞ்சம் நவீனமயப்படுத்தப்பட்டு மேடையேறியது. இவ்வாறு வெவ்வேறு காலகட்டத்தில் வேறுவேறான நாடக வடிவங்களில் தன்னை இணைத்துக் கொண்டதன் மூலம் இவரது நாடகத்தின் மீதான ஆர்வத்தையும், வளர்ச்சியையும் இலகுவில் புரிந்து கொள்ளமுடியும்.

இனி, பிரான்சிஸ் ஜெனம் அவர்களைப் பற்றிய சில குறிப்புகளைப் பார்ப்போம்.

யாழ் சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஆரம்பக் கல்வியை சில்லாலை ரோமன் கத்தோலிக்கப் பாடசாலை, மாதகல் சென்ற் யோசப் பாடசாலை ஆகியவற்றிலும் உயர் வகுப்பினை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பயின்றார். இவர் ஐந்தாம் வகுப்புப் படிக்கும் போது பாடசாலையில் மேடையேறிய "யூடித்" என்ற சமய நாடகத்தில் யூடித் பாத்திரம் ஏற்று நடித்தது ஊரில் சிறு அதிர்வலைகளை ஏற்படுத்தியது. விளானைச் சேர்ந்த சின்ன செல்வராசா என்பவர் இந்நாடகத்தைப் பழக்கியிருந்தார். அன்றிலிருந்து பெண் வேடம் என்றால் ஜெனம் என்றளவுக்கு நிலைமை இருந்தது.

பின்னர் கொய்யாத்தோட்டத்திற்கு இவர்கள் குடிபெயர்ந்தபோது கொய்யாத்தோட்டம்



பி.எஸ். கலாமன்றத்தில் இணைந்து அதிஷ்டப் பரிசு, அலையும் நெஞ்சு, அவசரப்படாதே போன்ற சமூக நாடகங்களில் நடித்திருந்தார்.

இதன் பிறகு அவர் அரியாலையில் குடியேறி இருந்தார். இந்நாட்களில் அரியாலை நாடக மன்றத்தினரின் பூம்புகார் நாடகத்தில் கண்ணகியாக, சம்பூர்ண இராமயணத்தில் இலட்சுமணனாக, கர்ணனில் குந்திதேவியாக நடித்திருந்தார். இதே கால கட்டத்தில் யாழ் திருமறைக் கலாமன்றத்தில் தன்னை இணைத்துக் கொண்டு திருப்பாடுகளின் காட்சி, அளவுகோல், நெஞ்சக்கனைகள் போன்ற சமய நாடகங்களில் பங்கு கொண்டார்.

1978இல் ஆரம்பிக்கப்பட்ட யாழ். நாடக அரங்கக் கல்லூரியில் நாடகப் பயிற்சி பெற்ற ஜெனம் அவர்கள் கல்லூரியின் நாடகங்களில் பங்கு கொண்டதன் மூலம் ஒரு புதிய பரிமாணத்தைத் தொட்டார். ஆரம்பநாட்களில் பெரும்பாலும் பெண்வேடம் போட்டு வந்த இந்தக் கலைஞனின் அபரீதமான வளர்ச்சியை நாடக அரங்கக் கல்லூரி நாடகங்களில் அவர் ஏற்ற பாத்திரங்கள் சொல்லின.

நாடக அரங்கக் கல்லூரி தயாரித்த மகாகவியின் 'கோடை'யில் மாணிக்கமாக, மௌனகுருவின் 'சங்காரம்' நாடகத்தில் வர்க்க அரக்கனாக, நா. சுந்தரலிங்கத்தின் "அபசுரம்" இல் அருளராக, குழந்தை ம. சண்முகலிங்கத்தின் நாடகங்களான 'கூடி விளையாடு பாப்பா"வில் பன்றியாக, "எந்தையும் தாயும்" இல் பெரியைய்யாவாக இவர் நடித்த பாத்திரங்கள் நினைவில் நிற்பவை.

மேலும் நாடக அரங்கக் கல்லூரி தயாரித்த சொக்கனின் 'தெய்வப்பாவை'யில் அப்பர் சுவாமிகளாகத் தோன்றி அனைவரையும் அதிரவைத்தார். கல்லூரியின் 'அவள் ஏன் கலங்குகிறாள்' என்ற நாடகத்தில் ஆனந்தராணி பாலேந்திராவுடன் இயைந்து நடித்த பாத்திரம் இங்கு குறிப்பிடப்படவேண்டிய ஒன்று.

இவை எல்லாவற்றின் உச்சமாக, 1980ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற நாடகப்போட்டியில் இவர் சம்மாட்டியராக பிரதான பாத்திரம் ஏற்று நடித்த யாழ்.நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில் தாசீசியல் அவர்களின் நெறியாள்கையில் மேடையேற்றப்பட்ட "பொறுத்தது போதும்" என்ற நாடகம் முதற்பரிசு பெற்றதோடு, சிறந்த நடிகருக்கான ஜனாதிபதி விருது கலைஞர் பிரான்சிஸ் ஜெனம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இவர் நடிப்புக்கு அப்பால் பல நாடகங்களை நெறியாள்கை செய்தும் உள்ளார். சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்காக குழந்தை சண்முகலிங்கத்தின் "புழுவாய் மரமாகி" "தாயுமாய் நாயுமானார்" நாடகங்களையும், வேம்படி மகளிர் கல்லூரிக்காக சங்கிலியன் கூத்து, மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி, புனித பொஸ்கோ பாடசாலை, புனித ஆசீர்வாதப்பர் ஆரம்பப் பாடசாலை மேடையேற்றிய நாடகங்களுக்கும் நெறியாள்கை செய்துள்ளார்.

பிரான்சிஸ் ஜெனம் அவர்கள் ஈழத்து நாடக உலகுக்கு ஆற்றிய பணிக்காக மட்டக்களப்புப் பல்கலைக்கழகம் 'கலைக்கோலங்கள்' விழாவிலும், கொழும்புப் பல்கலைக்கழகம் 'வசந்தத்தை நோக்கி' விழாவிலும், 2009இல் பேராதனைப் பல்கலைக்கழகமும் இவரைக் கௌரவித்துப் பெருமை சேர்த்துள்ளனர்.

ஆரோக்கியமான நாடகங்களின் தேவை பற்றி ஆதங்கப்படும் ஜெனம் அவர்கள் கலையரசு சொர்ணலிங்கம், விதானை செல்வரத்தினம், எஸ்.ரி. அரசு, குழந்தை சண்முகலிங்கம், தாசீசியஸ், மௌனகுரு போன்ற நாடகக் கலைஞர்களுடன் பழகியதை நெஞ்சம் நிறைந்த இனிய நாட்களாக நினைவு கொள்கிறார்.



ப.ஸ்ரீஸ்கந்தன்

தற்போது கொழும்பில் வாழ்ந்து வரும் இந்த மாபெரும் கலைஞனின் நாடகம் பற்றிய பார்வை விசாலமானது. இவர் நடித்த பாத்திரங்கள், பாடிய பாடல்கள், ஆடிய நடனங்கள் என்றும் ஒளி வீசுபவை.

sriskandan@thaiveedu.com

■ ■ ■

ஒவ்வொரு கிராமத்திலும் பல கலைஞர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். அந்தந்தக் கிராமத்தின் வளற்சிப் பணிகளிலும் முன்னேற்றத்திலும் இவர்களின் பங்கு அழப்பரியது. ஆனால் சந்தர்ப்பம் சூழ்நிலை அவர்களை உலகறியத் தவறிவிட்டது. கலைஞர்கள் நாட்டின் விடியலுக்காய் உழைப்பவர்கள். எங்கள் கிராமத்தின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாய் வாழ்ந்தவர்கள். எம் ஈழத்துக் கலைஞர்களை நாம் கௌரவிப்போம், நினைவுகூர்வோம், உலகறியச் செய்வோம்.

உங்கள் கிராமத்தின் ஒவ்வொரு கலைஞர் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

தமிழன் வழிகாட்டி வழங்கும்

**வர்த்தகச் சோலை - 2010**


**யூன் 26, 27**

**வழமைபோல கீல் அன் செப்பேட் சந்திப்பில் அமைந்துள்ள டவுன்ஸ்வியூ பாக் மண்டபத்தில் எதிர்வரும் யூன் 26,27ம் திகதிகளில் நடைபெற உள்ளது. வர்த்தகச் சாவடிகளை பதிவு செய்ய விரும்புவோர்,**

**நிகழ்ச்சிகளில் பற்குபற்ற விரும்புவோர் ஆதவன் பப்பிளிகேசனுடன் தொடர்பு கொள்ளலாம்**

**416 615 4646**

**கனடிய தமிழ் வழக்கறிஞர்**



The Law Office of
**Raphael Maharaja**
**Barrister & Solicitor**

Tel: 416-847-7077
416-847-7093 (Injury Claims)
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave, East, Unit 219
Toronto, Ontario, M1S 0C2 (Middlefield & Finch)

www.maharajalaw.com

# கொடிய நோய்களுக்கான காப்புறுதி (Critical Illness Insurance)



சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -

ஒருவர் கொடிய நோய்கள் ஏதாவது ஒன்றி-னால் பாதிக்கப்பட்டு, பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்படாமல் இருப்பதற்காகச் செய்யக்-கூடிய முன்னேற்பாடுகளில் ஒன்றுதான் கொடிய நோய்களுக்கான காப்புறுதித்திட்ட-மாகும். கொடிய நோய்கள் ஏற்படுவதற்கு முன்பு மட்டுமே இத்திட்டத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும். கொடிய நோய் ஏற்பட்டு 30 நாட்களுக்குப் பின்பு மரணமடையாது இருந்தால் இந்தக் காப்புறுதியின் பயனை அனுபவிக்க முடியும்.

ஆயுட் காப்புறுதியைப் பொறுத்தவரைக்கும் ஒருவர் இறந்தால் மட்டுமே பணம் கிடைக்கும் இங்கு மாறாக, உயிருடன் இருந்தால் மட்டு மே காப்புறுதிப் பணம் கிடைக்கும். நாங்கள் இறந்தபின்பு பணம் எதற்கு என்று நினைப்-பவர்கள் இருக்கும்போதே அனுபவிப்பதற்கு இந்தக் காப்புறுதித் திட்டம் மிகவும் உகந்தது. அத்துடன் இந்தக் கொடிய நோய்களுக்கான காப்புறுதித் திட்டத்தில் உள்ள முக்கிய அம்சம் என்னவென்றால், ஒருவருக்கு கொடிய நோய்கள் ஏதும் ஏற்படாவிட்டால் கட்டிய பணம் முழுவதையும் திருப்பிப் பெற முடியும்.

ஆயுட்காப்புறுதியின் பணம் ஆயுட்காப்புறுதி பெற்றுக்கொண்டவருக்கு கிடைப்பதில்லை. மாறாக அவர்களை நம்பி இருப்பவர்களுக்கு அல்லது அவர்களின் அன்புக்குரியவர்களுக்கு மட்டுமே கிடைக்கும். கொடிய நோய்களுக்-கான காப்புறுதியின் பணம் நாங்கள் நோய்-களால் பாதிக்கப்பட்டால் எங்களுக்கு கிடைக்-கும். கொடிய நோய் ஏற்படாவிட்டாலும் கட்டிய பணம் முழுவதும் மீளத் திருப்பிப் பெற-முடியும்.

நோயால் பாதிக்கப்பட்டு 30 நாட்களுக்கு முன்பு மரணமடைந்தால் நாங்கள் குறிப்-பிட்ட நபருக்கு கட்டிய பணம் முழுவதும் கிடைக்கக் கூடிய திட்டங்களும் உள்ளது.

அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்க-ளின்படி கனடிய மக்களின் ஆயுட்காலம் அதிகரித்துள்ளது. அதேவேளை அதிகமான-வர்கள் கொடிய நோய்களால் பாதிக்கப்படு-கின்றனர். அத்துடன் கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் எல்லோரும் உடனடி-யாக இறந்துவிடுவதில்லை. மிகவும் சிறந்த மருத்துவ வசதிகள் இங்கு இருப்பதால் கொடிய நோய்களால் பாதிக்கப்பட்ட பலரும் தப்பித்து பல காலம் தொடர்ந்து வாழ்கின்றனர். ஆனால் இப்படிக் கொடிய நோய்களினால் பாதிக்கப்பட்டு பின்னர் உயிருடன் இருப்ப-வர்களால் வழமைபோல் அவர்களின் தொழில்-களைச்செய்து பணம் சம்பாதிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. இப்படியான நிலை-யில்தான் இந்த கொடிய நோய்களுக்கான காப்புறுதித் திட்டம் மிகவும் அனுசரணை-யாக இருக்கும். கொடிய நோய்களால் தாக்கப்பட்டு அதனால் ஏற்படும் பொருளா-தார நெருக்கடிகளால் மேலும் பாதிக்கப்பட வேண்டி இருக்கும். பொருளாதார நெருக்கடி இல்லாமல் இருந்தால் அவர் தனது உடல் நலத்தில் கூடிய கவனம் செலுத்தி விரைவில் குணமடைய முடியும். அத்துடன் பணம் இருந்தால் விசேட சிகிச்சைகள் மற்றும் சிறந்த மருத்துவ வசதிகள் பெற்றுக்கொள்வது இலகு-வாக இருக்கும்.

Heart and Stroke Foundation of Canada, Canadian Cancer Society என்பவற்றால் எடுக்கப்பட்ட சில புள்ளிவிபரங்கள்.

- 1/4பங்கு கனடிய மக்கள் ஏதாவது ஒரு இருதய நோய்களால் பாதிக்கப்படுகின்ற-னர். இவர்களில் 50% விகிதமானவர்கள் 65 வயதுக்கு உட்பட்டவர்கள்.
- மாரடைப்பு நோயால் பாதிக்கப்பட்டவர்-களில் 82% விகிதமானவர்கள் குணம-டைந்து தொடர்ந்து வாழ்கின்றார்கள்.
- 1/3 பங்கு கனடிய மக்கள் புற்று நோய்-களால் பாதிக்கப்படுகின்றனர்.
- 1/9 பங்கு பெண்கள் மார்பகப்புற்று நோ-யால் பாதிக்கப்படுகின்றனர்.
- 1/20 பங்கு மக்கள் (பக்கவாத) Stroke நோயால் பாதிக்கப்படுகின்றனர். வருடாந்தம் கிட்டத்தட்ட 50,000 மக்கள் இந்தநோயால் பாதிக்கப்படுகின்றனர். இவர்களில் 75% விகிதமானவர்கள் மரணமடையாது தப்பு-கின்றார்கள்.
- 50,000க்கும் அதிகமானவர்கள் Multiple Selerosis எனப்படும் நரம்புகள் சம்பந்த-மான நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

> “மிகவும் சிறந்த மருத்துவ வசதிகளைப் பெறக்கூடிய வாய்ப்பு எமக்கு இருப்பதால் கொடிய நோய்களால் பாதிக்கப்பட்ட பலரும் தப்பித்து பல காலம் தொடர்ந்து வாழ்கின்றனர்.”

இப்படியான 25 விதமான கொடிய நோய்க-ளுக்கு ஆயுட்காப்புறுதி நிறுவனங்கள், காப் புறுதி செய்வதன் மூலம் பணம் பெறக்கூடிய வசதிகளை செய்துள்ளனர். கொடிய நோய்-களுக்கான காப்புறுதித் திட்டம் நிறுவனத்-திற்கு நிறுவனம் மாறுபடுவதுடன் நோய்க-ளுக்கான வரைவிலக்கணங்களும் வேறுபடும். அத்துடன் பலவிதமான கட்டுப்பாடுகளுடனும் திட்டங்கள் வடிவமைக்கப் பட்டிருக்கும்.

சில உதாரணங்களைப் பார்ப்போம்.

- பணத்தைத் திரும்பப் பெறக்கூடிய திட்டம்
- ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் பெறக்கூடிய திட்டம்
- ஆயுட்காப்புறுதியுடன் இணைத்துக் கொள்-ளக்கூடிய திட்டம்

இப்படி ஒவ்வொரு காப்புறுதி நிறுவனமும் பல வகையான திட்டங்களை விற்பனை செய்கின்றார்கள்.

திட்டத்திற்கு திட்டம் மாதாந்தக் கட்டணம் வேறுபடும். கொடிய நோய்களின் எண்ணிக்கை கூடிய திட்டங்களின் மாதாந்தக் கட்டணம் அதிகமாக இருக்கும். குறிப்பாக 25 கொடிய நோய்களுக்கு பாதுகாப்பு கொடுக்கும் திட்டம் சிறந்தது. சில நிறுவனங்கள் 4 அல்லது 15 கொடிய நோய்களுக்கு மட்டுமே பாதுகாப்பு வழங்கும்.

கொடிய நோய்களுக்கான காப்புறுதித் திட்டங்-கள் பெற்றுக்கொள்ளும்போது ஆயுட்காப்புறுதி நிறுவனங்களால் குறிப்பிடப்பட்டள்ள கொடிய நோய்கள் ஏற்பட்டால் மட்டுமே காப்புறுதி மீளப்பெற முடியும். ஆயுட்காப்புறுதி பெற்றுக் கொள்வது போலவே கொடிய நோய்களுக்-கான காப்புறுதி பெறுவதற்கு முன்பு மருத்துவ பரிசோதனைகள் செய்து அதன் பின்பு தான் காப்புறுதி பெற தகுதி உடையவர்களா என்-பதைத் தீர்மானிப்பார்கள்.

ஒரு சில நோய்கள் இருந்தாலும் ஆயுட் காப்புறுதி பெறமுடியும். ஆனால் கொடிய நோய்களுக்கான காப்புறுதி பெற்றுக்கொள் வதற்கு முன்பு நோய்கள் எதுவுமே வந்தி-ருக்கக் கூடாது. காரணம் ஆயுட்காப்புறுதி ஒருவர் மரணமடைந்தால் மட்டுமே பணம் பெறமுடியும். கொடிய நோய்களுக்கான காப்புறுதியில் ஒருவருக்கு நோய் ஏற்பட்டு 30 நாட்களால் காப்புறுதி தொகை பெற-முடியும். அதனால் ஒருவருக்கு நோய்கள் வருவதற்கான அறிகுறிகள் இருந்தாலே கொடிய நோய்களுக்கான காப்புறுதி பெற முடியாது. அத்துடன் குடும்ப அங்கத்தவர்க-ளின் மருத்துவ தகவல்கள் மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் ஆயுட்காலம் அவர்களின் நோய்கள் அல்லது மருத்துவ வரலாறு போன்றவற்றை கருத்தில் கொண்டுதான் அவர் கள் காப்புறுதி பெறத் தகுதி உடையவர்-களா? என்பதை தீர்மானிப்பார்கள். குடும்பத்-தினரின் மருத்துவ வரலாறு என்று பார்க்கும் போது அப்பா, அம்மா சகோதரர்கள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படுவார்கள். கொடிய நோய்களுக்கான காப்புறுதித் திட்டம் ஆயுட் காப்புறுதி திட்டம் போல் பல காலங்களுக்கு முன்பு இருக்கவில்லை.

1983ஆம் ஆண்டு Marius Barnard என அழைக்கப்படும் தென் ஆபிரிக்க நாட்டை சேர்ந்த மருத்துவரும் அவரது சகோதரர் இருதய சத்திரசிகிச்சை நிபுணர் Christian Barnard என்பவரும் சேர்ந்து உருவாக்கிய திட்டமே இன்று கொடிய நோய்களுக்கான ஆயுட்காப்புறுதி திட்டமாகும்.

இவர்களின் பெற்றோர்கள் நோயால் பாதிக்-கப்பட்ட வேளையில் அவர்கள் வாழ்வதற்காக பணத்திற்காக வேலை செய்யவேண்டிய தேவை இருந்தது. இந்த நிலை பிறருக்கும் ஏற்படும் போது ஒரு பணநெருக்கடியை தீர்ப்பதற்கான திட்டம் ஒன்று இருந்தால் சிறந்தது என்பதை உணர்ந்து இந்த கொடிய நோய்களுக்கான காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்தினார் கள்.

## ஆயுட்காப்புறுதி நிறுவனங்க-ளால் குறிப்பிடப்பட்டுள்ள கொ டிய நோய்கள் பின்வருமாறு.

- புற்றுநோய் - Cancer
- மூளைத் தசை இயக்கம் பாதிப்படைதல் - Storke.
- இதயத் தசையிறுக்கம் - Heart Attcak.
- இதய நாடிகளின் பாதை மாற்று அறுவைச் சிசிச்சை - Coronary artery Surgery.
- சிறு நீரகம் பழுதடைதல் Kidney failure.
- பிரதான உறுப்பு பழுதடைதல் - major organ transplant
- இருதய பெருநாடி அறுவைச் சிகிச்சை - Aortic Surgery
- நினைவிழந்து போதல் - Coma
- பாரிச வாதம் - Paralysis
- கண்பார்வை இழத்தல் - Blindness
- காது கேளாமை - Deafness
- வாய் பேசாமை - Loss of Speech
- பெரிய தீக்காயங்கள் - Severe Burns
- உயிராபத்தற்ற மூளைக்கட்டி - Brain Tumour
- தொழில் சார் விபத்துக்காயங்கள் - Occupational Injury HIV
- இயக்க நரம்புசார் நோய் - Mator Neuron Disease
- ஞாபக மறதி - Alzheimer’s Disease
- உடல் நடுக்கம் - Parkinson’s Disease
- சுபமாக இயங்க முடியாத நிலை - Loss of Independent Existence
- இருதய வால்வு மாற்றம் - Heart valve Replacement
- Multiple Sclerosis
- Aplastic Anemia
- மூளைக்காய்ச்சல் - Bacterial Meningitis
- Major organ failure on waiting list
- உடல் அவயங்களை இழத்தல் - Loss of limbs (dismemberment)

**உசாத்துணை:**
http://www.heartandstroke.com/
http://www.cancer.ca/

sritharan.t@thaiveedu.com


■ ■ ■

இறுக்கமான சூழலில் இலகுவான தீர்வு

• நிரந்தர ஆயுட் காப்புறுதி
• கொடிய நோய்களுக்கான காப்புறுதி
• ஈட்டுக்கடன் காப்புறுதி
• வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி
• RRSP • RESP

சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர்
Member of Million Dollar Round Table | MDRT The Premier Association of Financial Professionals®

416.918.9771
759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407
info@life100.ca



RBC Insurance · Industrial Alliance Insurance and Financial Services Inc. · Unity Life of Canada · Canada Life

# ஆயுட்காப்புறுதிகளும் சேமிப்புத்திட்டங்களும்

## LIFE INSURANCE & RESP

**$46 x 12 x 20 = $100,000**

**$119 x 12 x 20 = $500,000**

### உங்களுக்கான இந்தக் கணக்கைத் தெரிந்துகொள்ள...

- $ 200,000 வரை மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை
- ஆயுட்காலம் வரை மாதாந்தக் கட்டணத்தில் மாற்றமில்லை
- உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்

**Critical Illness Insurance**

25விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2மில்லியன் வரை பெறக்கூடிய காப்புறுதித் திட்டம் நோய் ஏற்படாவிடில் கட்டியபணம் முழுவதும் மீளப்பெறமுடியும்

**Universal Life Insurance**

ஆயுட்காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதி

**RESP**

குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்
20-40 வீதமான அரச மானியத்துடன்
15 வீத போனஸ்

**Mortgage Insurance**

அடமானக் கடனுக்கான காப்புறுதி வங்கியில் பெற்றுக்கொள்வதை விட ஆயுட்காப்புறுதி நிறுவனத்தில் பெற்றுக் கொள்வது சிறந்தது. மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

- ஸ்ரீ Media -

TOPGUN AWARD WINNER 2008, 2009, MDRT QUALIFIER 2007, 2008, 2009

## சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407



Assumption Life · INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Unity Life of Canada · Canada Life · RBC Financial Group · LILAND INSURANCE INC.

இறுக்கமான சூழலில் ஓர் இலகுவான தீர்வு

NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
LIC: M08002487
CENTUM
Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

ACCESS LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION
INJURED?
Car Accident (MVA) Claims
Work Accident (WSIB) Claims
Bankruptcy
416-733-8880

வீடு வாங்கவும், விற்கவும்.......
Ramanan Ramachandran
Real Estate Broker
Office: 416.298.3200
Cell: 416.670.6467
I ❤ Referrals
HomeLife Today Realty Ltd., Brokerage
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6
HOMELIFE
HIGHER STANDARDS
*INDEPENDENTLY OWNED AND OPERATED

பெருக்க மரம் நெடுந்தீவு - 1,000 வயதுக்கு மேற்பட்டதாகக் கருதப்படும் யாழ் மாவட்டத்திலேயே அதிக சுற்றளவைக் கொன்ட மரம்.



போத்துக்கேயரின் கோட்டை (நெடுந்தீவு)





இம்மாதப் புகைப்படக் கலைஞர்

**ஐங்கரன் குலசேகரம்**

ரொறன்ரோவில் வசிக்கும் அடமானக்கடன் முகவரான இவர் தனது விடுமுறைப் பொழுதில் எடுத்த படங்களுள் சில...

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

Accident? Injured? NO Benefit Paid?
NO FEE until we settle your claims
Or Its FREE 416-857-1780
Call Now! No Obligation
Mohan Subramaniyam
Licensed Paralegal
Protect Your Legal Rights

# நாடுகடந்த தமிழீழ அரசின் தேர்தல் முடிவுகள்

கனடாவில் இம்மாதம் இரண்டாம் திகதி நடந்து முடிந்திருக்கும் நாடுகடந்த தமிழீழ அரசின் கனடியப் பிரதிநிதிகளுக்கான தேர்தல் முடிவுகள் வெளியாகியிருக்கின்றன.
மாவட்ட ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் விவரத்தை இங்கு தருகிறோம்.


தேர்தல் மாவட்டம் - 1

**மத்திய ரொரன்டோ பெரும்பகுதி**


Downtown, York, Beaches, Toronto North, Downsview, Willowdale Woodsbridge, Concord, Maple, Thornhill, Markham, Unionville, Stouffville, Richmond Hill, Oakridges, Aurora, New Market, Ontario மாகாணத்தின் வட பகுதி.



ஜோ அன்ரனி - 3388



பொன் பாலராஜன் - 3777



எம்.கே. ஈழவேந்தன் - 4161



தாரணி பிரபாகரன் - 4967




திரு எஸ். திருச்செல்வம் - 4936

தேர்தல் மாவட்டம் - 2

**கிழக்கு ஒன்ராரியோ**

Scarborough, Pickering, Ajax, Whitby, Oshawa உள்பட ஒன்ராறியோ மாகாணத்தின் கிழக்குப் பகுதி Cornwall வரை.



ஈசன் குலசேகரம் - 7810




வனிதா ராஜேந்திரம் - 8451



சுரேஷ் ரட்ணபாலன் - 6109



வரன் வைத்திலிங்கம் - 6523



மரியாம்பிள்ளை அன்ஜலோ யோகந்திரன் - 6478


தேர்தல் மாவட்டம் - 3

**மேற்கு ஒன்ராறியோ**


Etobicoke, Rexdale, Brampton, Mississauga முதல் ஒன்ராறியோ மாநிலத்தின் மேற்குப் பகுதி முழுவதும்.



சுரேன் மகேந்திரன் - 5002




பாலன் ரட்ணராஜா - 4844



சாம் சங்கரசிவம் - 4997



ஐயம்பிள்ளை (ஷான்) சண்முகநாதன் - 5049



ராம் சிவலிங்கம் - 4993

தேர்தல் மாவட்டம் - 4

**கிழக்கு கனடா**

ஒன்ராறியோ மாநிலத்தின் Cornwall, Ottawa பகுதியும். Quebec, Newfoundland, Newbrunswick, NovaScotia - ஒன்ராறியோ மாநிலத்திற்கு கிழக்கே உள்ள மாநிலங்கள்.

கந்தையா தெய்வேந்திரன் - 2690



மஹாராஜா (நந்தன்) நந்தகுமார் - 2818



நிருதன் நாகலிங்கம் - 2794



லக்சன் சிவப்பிரகாசபிள்ளை - 3221

**கோன்வால், ஒட்டாவா**



புவனேந்திரா நடராஜா - 2557

தேர்தல் மாவட்டம் - 5

**மேற்கு கனடா**

Ontario மாகாணத்திற்கு மேற்கே உள்ள மாகாணங்கள். இவற்றில் British Columbia, Alberta+ NorthWest Territories, Saskatchewan, Manitoba

Mokanasingham Markandu
Sothinathan Sumughan
Nagendra Katpana
Muthukumarasamy Ratna
Sivasothy Jeyamathy